பிரிவோம் சந்திப்போம்

என். சீதாலெட்சுமி



பூச்சரம்



1

“ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குகா சரணம் சரணம்

குருகுகா சரணம் குருபரா சரணம்
சரணம் அடைந்திட்டேன் கந்தா சரணம்
தனித் தானறிந்து நான் தன்மயமாகிடவே
ஸ்கந்தகிரி குருநாதா தந்திடுவீர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்”

தொலைக்காட்சியில் ஸ்கந்த குரு கவசம் ஓடிக் கொண்டிருக்க, பத்மாசினி வீட்டு வாசலைப் பெருக்கி, தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தார்.

அவர்கள் வீடிருப்பது, ஓர் அமைதியான குடியிருப்பு வளாகத்தில்.

தனக்கு கொடுக்கப்பட்ட வரதட்சணையையும், கண வனின் கையிருப்பையும் போட்டு, அரை கிரௌண்ட் இடம் வாங்கி. அதில் சின்னதாய் ஓர் வீட்டைக் கட்டிக் கொண்டு, அவர்கள் இந்த ஏரியாவிற்கு வந்து ஆண்டு

கள் எட்டாகிவிட்டன! இந்த வீட்டிற்கு... அம்முவின் வயது!

''என் பொண்ணு பிறந்த நேரம்... நா வீடு கட்டிட் டேன்...'' என்று முகம் முழுக்கப் பூரிப்புடன், கணவன் பேசியது இன்றும் பத்மாவின் முகத்தில் ஓர் புன்னகையை வரவழைத்தது!

அதன் பின், நடந்த ஓரோர் நல்ல காரியத்துக்கும் அம்முவே பொறுப்பாகிப் போனபோது, தன் கணவன் தன் பெண் மீது வைத்திருக்கும் பாசத்தைப் பார்த்து, பத்மாவுக்கே சில சமயம் பொறாமை வருவதுண்டு!

அவருக்குக் கிடைத்த பதவியுயர்வு, பழைய வண் டியை மாற்றி விட்டுப் புது ஸ்கூட்டர் வாங்கியது. பல நாட்களாய் அவருடன் சண்டை போட்டுப் பேசாதிருந்த அவரது தங்கை கணவர் பேசியது, ஏன்... அம்முவின் இளவல் கண்ணன் பிறந்தது எல்லாமே அம்மு பிறந்த ராசி தான் என்பார் அவர்!

ஓர் மகாராணி போல் பெண்ணை அவர் கொண்டாடு வதை எண்ணி... எண்ணி ரசித்தபடியே, வாசல் கோலத்தைப் பூர்த்தி செய்துவிட்டு, நிமிர்ந்து பத்மாவின் கையில் பால் பாக்கெட்டுகளை வைத்தான் பால்காரன்.

''என்ன மணி... அதுக்குள்ளே வந்துட்டே...'' என்ற படியே, கதவருகே இருந்த குழாயில் பால் பாக்கெட்டை கழுவிக் கொண்டே அவர் கேட்கவும்,

''உன்னைய மாதிரி எல்லாரும் இருந்துட்டா நல்லா இருக்குமேக்கா... இதோ... அந்த மொனை (முனை) வீட்டில இருக்கே ஒரு அம்மா... அப்பா... ஆறு மணிக்கு

ஒரு அஞ்சு நிமிட்டு (நிமிஷம் + மினிட்) லேட்டா வந்தா கூட பேஜார் பண்ணுதுக்கா! சரியான பஜாரி பொம்பள!'' என்றான் பால்காரன். எதிர்த்த வீட்டுக் கதவில் மாட்டி யிருந்த பையில் பால் பாக்கெட்டைப் போட்டபடியே.

''சீக்கிரமா பால் போட்டுட்டு போனா... நீயும் ஸ்கூலுக்கு சீக்கிரம் போலாம் இல்ல... அப்படி நினைச்சுக்கோ! ஏன் அலுத்துக்கிற?'' என்று பத்மா கூறவும்,

''நா இப்படி யோசிக்கவே இல்லக்கா...'' என்று மலர்ந்த அந்தச் சிறுவன்,

''ஆமாக்கா... இன்னைக்கு இஸ்ஸ்கூல்-ல படம் வரையுற போட்டி வேற இருக்குது... நா போறேன்...'' என்று சிட்டாய்ப் பறந்தான்.

அவனை வாஞ்சையாய்ப் பார்த்தபடியே, வாசல் கதவை அடைத்துவிட்டு, வீட்டினுள் திரும்பிய பத்மாவை, வாசல்நிலையில் சாய்ந்தபடி, உல்லாசமாய்ச் சிரித்த அவரது கணவர் வரவேற்றார்.

''என்ன சார்... அதுக்குள்ள எழுந்தாச்சா?'' எனக் கேட்ட பத்மாவின் கன்னம் தட்டி,

''என்னம்மா செய்றது? எனக்கும்... அரை தூக்கத்தில் பக்கத்தில படுத்திருக்கப் பொண்டாட்டியை இறுக்கக் கட்டிப் பிடிச்சிட்டு, நல்லா தூங்க ஆசை தான்! அப்புறம்... ஒரு ஷோ ஓட்டக் கூட ஆசை தான்! ஆனா... எங்க முடியுது?'' எனக் குறையாய் அலுத்துக் கொண்டார் அவரோ!

அதற்குப் பதிலாய், அவரது காதை லேசாய்த் திருகி, ''ஐயோ... ரொம்பத் தான்! பொண்டாட்டியைக் கட்டிப்

பிடிச்சிட்டுத் தூங்கினா... ஆபீஸ்ல எம்.டி.கட்டி வச்சு உதைப்பார்!'' எனச் சிரித்த பத்மாவின் நொங்கு கன்னங்கள், ஹிமாச்சல் ஆப்பிள் வண்ணம் பூசியிருந்தன!

மனைவியின் கன்னச் சிவப்பை ரசித்தாலும், வாழ்வின் நிதர்சனம் அவரைத் திசை திருப்பி விட்டிருந்தது!

''ஹய்யோ... நல்லவேளை ஞாபகப்படுத்தினே... இன்னைக்கு எம்.டி.ஒரு ப்ரோபோசல் விஷயமா பேசணும்... சீக்கிரம் ஆபீஸ் வந்துடுங்கன்னு சொன்னார். சீக்கிரம் கிளம்பணும்!'' என்றார் அவர் பரபரப்புடன்.

''சரி... சரி... நீங்க முதல்ல போய் ப்ரஷ் பண்ணிட்டு வாங்க... நா காபி போடறேன்...'' என்று அவரை அனுப்பி வைத்த பத்மா, காபி கலந்து வருவதற்குள், தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, அவர்களது சின்னத் தோட்டத்தில் நின்றிருந்தார் அவர்.

கம்பின் மீது படர்ந்திருந்த அவரைக் கொடியை அவர் ஆராய்ந்து கொண்டிருக்கவும், ''அம்முப்பா... இந்தாங்க காபி! முதல்ல இதைக் குடிச்சிட்டு... அப்புறம் பாருங்க'' என்று கணவனின் கவனத்தைக் காபிக்குத் திருப்பினார் பத்மா.

''தேங்க்ஸ் பப்பிம்மா...'' என்றவரின் கண்கள், தோட்டத்திலிருந்த காய்கறிகள் மீதே இருந்தன.

''இன்னைக்கு என்ன காய் வேணும்?'' என்று அவர் கேட்கப் போகும் அடுத்தக் கேள்வியை ஊகித்தவராய்.

''கத்திரிக்கா மட்டும் பறிங்க போதும்... நேத்து நல்லா இருந்துச்சேன்னு பட்டர் பீன்ஸ் வாங்கிட்டு வந்தேன்... அதை மசாலா போட்டுக்கலாம்... கத்திரிக்காய் சாம்பார்!'' என்று அன்றைய மெனுவைச் சொல்லிவிட்டு, உள்ளே சென்று மறைந்தார் பத்மா.

காய்கறிகள் பறித்து வரப்பட்டு, அவை வெட்டப் பட்டு, பாதி சமையல் ஆகும் போது, வீட்டுத் தொலைபேசி அடித்தது!

சமையற்கட்டிலிருந்து எட்டிப் பார்த்தால், ஷேவிங் ப்ளேடும் முகத்தில் சோப்பு நுரையுமாய் நின்றிருந்த அம்முப்பா, ''ப்ளீஸ் எடேன்...'' என்று கண்ணாலேயே கெஞ்சினார்.

பெரிதாய் சமையலில் உதவாவிட்டாலும், சிறு சிறு வேலைகளில் தனக்கு உதவியாய் இருக்கும் கணவனின் இந்தக் கெஞ்சலை, பத்மாவால் மறுக்க முடியவில்லை.

கரைத்துக் கொண்டிருந்த புளியை, கொதித்துக் கொண்டிருந்த சாம்பாரில் ஊத்திவிட்டு, கையைக் கழுவிக் கொண்டு வேகமாய் சென்று தொலைபேசியை எடுத்தார் பத்மா.

எதிர்முனையில், பத்மாவின் அக்கா தான்!

''என்னக்கா சொல்லு? ரேணு எப்படி இருக்கா?''

''.....''

''ஹோ... அப்படியா? நைட்ல இருந்தே வலியாக்கா? இல்ல இப்ப தானா?''

''.....''

''சரி...சரி...நீ பதறாதே! நா வந்துடுறேன்...''

''.....''

''பிள்ளைங்களை ஸ்கூல்-ல விட்டுட்டு அப்படியே அங்க வந்துடுறேன். அப்பவும் வலி இருந்துச்சுன்னா, டாக்டர்கிட்ட கூட்டிப் போலாம்!''

''.....''

''ஷ்... அக்கா... நீயும் பயந்து அவளையும் பயப்படுத்தாதே! நா வந்துடுறேன்!'' எனக்கூறி, ஒரு வழியாக தொலைபேசியை வைத்தார்.

அவரது பேச்சைக் கேட்டபடியே, தன் வேலையை முடித்துக் கொண்டு வந்த அவரது கணவர், ''என்னம்மா? ரேணுக்கு வலி வந்துடுச்சா? ஆனா... டெலிவரி டேட் டிசம்பர்ல தானே?'' என்று இழுக்க,

''டிசம்பர் தான்... ஆனா... என்னமோ முதுகு ரொம்ப வலிக்குதுன்னு சொல்றாளாம்... உங்களுக்குத் தான் எங்கக்காவைப் பத்தித் தெரியுமே? சரியான டென்ஷன் பார்ட்டி... இல்லாது பொல்லாது எல்லாத்தையும் கற்பனை பண்ணி, அந்தச் சின்னப் பொண்ணையும் பயப்பட வச்சுருவா...'' என்று மாசமாய் இருக்கும் தன் சகோதரி மகளின் நிலையையும்... சகோதரியின் பதட்டத்தையும் ஒன்றாய் எடுத்துக் கூறி, அலுத்துக் கொண்டார் பத்மா.

''சரி விடு! எல்லாருமே உன்னை மாதிரி... நிதானமா இருப்பாங்களா? ஒரு சிலரோட... இயற்கை குணம் அது!'' என்று சமாதானம் சொன்னவர்.

''நானும் பசங்களும் கிளம்பும் போது, நீயும் வந்துடு! உன்னை... உங்க அக்கா வீட்டில் இறக்கி விட்டு, நா பசங்களை ஸ்கூல்ல விட்டுட்டு, அப்படியே நான் ஆபீஸுக்குப் போறேன்!'' என்றார் மனைவியின் மனம் அறிந்து.

''உங்களுக்கு நேரம் ஆகாதா?'' - லேசாய் தயங்கிய போதும், கணவனுடன் வண்டியில் சென்றால், சீக்கிரம் சென்று விடலாமே என்ற எண்ணம் பத்மாவுக்கு!

''அதெல்லாம் பெருசா லேட் ஆகாது! போற வழி தானே... நானே ட்ராப் பண்ணிடுறேன்... பஸ்ல போனா ரெண்டு பஸ் மாறிப் போகணும்! எதுக்கு வீணா அலையுற? எங்களோடவே வந்துடு!'' என்றவர், குளிக்கச் சென்றுவிட்டார்.

அவர் குளித்து வந்ததும், ''அம்முப்பா... பசங்களை எழுப்புங்க! லேட் ஆகுது!'' என்று பத்மா கட்டளையிட, அங்கே ஓர் ரணகளம் ஆரம்பமானது.

படுக்கையறைக்குள் சென்று பார்த்தால், மூன்றாம் வகுப்பு படிக்கும் அம்மு கட்டிலின் ஓரத்தில் சுருண்டிருக்க, ஒன்றாம் வகுப்பிலிருந்த கண்ணனோ... முழு கட்டிலையும் ஆக்கிரமித்துப் படுத்திருந்தான்!

''அம்மு... எழுந்திரு ராஜாத்தி!''

''கண்ணா... டேய்... கழுத! எப்படிப் படுத்திருக்கான் பாரு? காலும் கையும் ரெக்டாங்கில் மாதிரி அங்கையும்... இங்கையும் இருக்கிறதை பாரு! அவளைக் கொண்டு போய்.. ஒரு மூலையில் தள்ளிட்டான்! தள்ளிப் படுடா...!'' - பெண்ணையும் பிள்ளையையும் எழுப்பினார் அவர்.

''அப்பா... இன்னும் கொஞ்ச நேரம்...'' என்று அம்மு புரண்டு படுக்க,

அவளது தம்பி கண்ணனோ. ''நா கழுதன்னா... நீங்களும் கழுத தான்!'' என்று தூக்கத்திலேயே, தந்தைக்கு எதிராய்க் கொடி பிடித்தான்!

''அடி! கொழுப்பைப் பாரு... எழுந்திருடா...'' என்று அவர் அடி வைக்க.

''பிள்ளையை அடிக்காதீங்க!'' என்று வந்தார் பத்மா.

தாயின் குரல் கேட்டதும், ஒரே தாவலில் தாயிடம் தஞ்சம் புகுந்த கண்ணன் ''அம்மா... அப்பா என்னை கழுதன்னு சொல்றாங்க...'' என்று புகார் வாசித்தான்!

''அவரு போறார்! எப்பப் பார்த்தாலும்... புள்ளையைத் திட்டிட்டு...'' என்று பிள்ளையைக் கொஞ்சும் போர்வையில், கணவனை வைதார் பத்மா.

''அப்பா... சாமி தாங்கலைடா உங்க கொஞ்சல்! சாயந்திரம் நான் வந்ததும்... இன்னைக்கு உங்க பையன் என்ன பண்ணிட்டு வந்திருக்கான் தெரியுமான்னு நீ ஆரம்பி, அப்புறம் இருக்கு உனக்கு!'' என்று எச்சரித்தார் கணவரோ!!

அவர் சொல்வதும் உண்மை தான்! இந்தப் பையன்... பொல்லாத கண்ணன்! விளையாட்டு... விளையாட்டு... விளையாட்டு தான்!

ஸ்கூல் முடிந்ததும், ஒரு நாளும் உருப்படியாய் வீடு வர மாட்டான்!

வகுப்பறையில் இருக்கும் டஸ்டரை ஒருவர் மேல் ஒருவர் அடித்து விளையாடி, நிஜமான ''பக்கிக் குட்டியாய்'' வீடு வந்து சேரும் பிள்ளையை, அடக்க கணவரின் துணையைத் தானே தேட வேண்டும்!

அவரது குரலுக்குத் தான், இவன் கொஞ்சமும் அடங்குவான்! பத்மா அதட்டினால், ''ஷ்... போம்மா! டென்டைம்ஸ் அடிச்சா... ஒரு பிளேயர் கார்டு கிடைக்கும் தெரியுமா? நீயும் வந்து விளையாடு... சூப்பரா இருக்கும்...'' என்பான் கண்ணன், கனவு மிதக்க! பிள்ளைகளுக்கு... கிரிக்கெட் பைத்தியம் தானே? அதுவும், வீரர்கள் பேர்... அணி... அடித்த ரன்கள்... எடுத்த விக்கெட்டுகள் என்று

சகல விஷயமும் அடங்கிய அட்டைகளை சேகரிப்பதில் ஓர் ஆனந்தம்! பரமானந்தம்!

அதன் பின்னர், தந்தை மகளைக் கிளப்ப, தாயோ மகனுடன் போராடினார்.

''சீக்கிரம் பிரஷ் பண்ணு கண்ணா... எவ்வளவு நேரமா பிரஷை வாயில வச்சுட்டே இருப்பே...''

''ஹ்ம்ம்... இந்த இந்தப் பாலைக் குடி... வா கண்ணா.. சமத்தில்ல!!''

''காலையிலேயே இந்தக் கார்டை எடுத்திட்டு உச் காரணுமா? குளிக்க எழுந்திருச்சு வா!'

''ஹ்ம்ம்... வா ராஜா!''

''ஹய்யோ... இதென்ன காதில எல்லாம் சோப்பு... ஒழுங்கா தேச்சேக் குளிக்க மாட்டியா? அம்மா குளிக்க வைக்கிறேன்னாலும் விட மாட்டேங்கிற!? ப்ச்...''

''இங்க வா... நல்லாத் துவட்டிக்கோ!''

''ஹ்ம்ம்... இன்னைக்கு ஃப்ரைடே இல்ல... வைட் யூனிஃபார்ம் போடணும்...''

''இங்க வா... ம்மா... தலை சீவிக்கோ! போதும் ஸ்டைல் பண்ணது!'' - ஒன்றொன்றுக்கும் அவனிடம் மல்லுகட்ட வேண்டியிருந்தது!

ஆனால், தந்தை - மகள் பக்கமோ ஆரவாரமில்லாமல் அமைதியாய் கிளம்பியது!

''அப்பா... இந்த முடியை எடுத்து கிளிப் போட்டு விடுங்கப்பா...'' என்று தனக்குத் தலை பின்னிக் கொண்டிருந்த தந்தையிடம், தன் முன்னுச்சி மயிர்களைக் காட்டிக் கூறினாள் அம்மு.

அவரோ, அதைச் செல்லமாய்க் களைத்துவிட்டு, ''இதான்டா குட்டி உனக்கு அழகே! புஸ்... புஸ்ன்னு பூனைக் குட்டி மாதிரி...'' என்று நெற்றியைத் தட்டி விட்டார்!!

''போங்கப்பா...'' என்று மூக்கைச் சுருக்கி, அது காண்பித்த மகளோ, அவரை வயிற்றோடு அணைத்துக் கொண்டாள்.

ஒரு வழியாக, நால்வரும் உணவு மேஜைக்கு வந்தனர்.

எப்போதும் போலல்லாமல், இன்று தாயும் தங்களுடன் அமர்ந்து சாப்பிடவும், ''என்னம்மா? நீங்களும் ரெடியா இருக்கீங்க?'' என்று வினவினாள் மகள்.

''அம்மா... இன்னைக்கு பெரியம்மா வீட்டுக்குப் போறாங்க! உனக்குத் தெரியாதா?'' - கண்ணனின் குரலில் ஏகப்பட்ட பெருமை! அக்காவைப் பார்த்து, ''உனக்கு இது கூடத் தெரியலையே?'' என்ற நக்கல். அம்மா வெளியே செல்வது எனக்கு தான் முதலில் தெரிந்தது என்ற கர்வம்!

''அப்படியாம்மா? பெரியம்மா வீட்டுக்கா? என்கிட்டே சொல்லவே இல்ல...'' - அம்முவுக்கு கோபம்! அதென்ன, அவனிடம் மட்டும் சொல்வது!

''அவன்ட்டையும் சொல்லலைடா குட்டி... அவனா சொல்றான்...'' என்று சமாதானம் செய்தார் பத்மா.

''இல்ல... அம்மா சொன்னாங்க...'' கண்ணன் வம்பிழுக்க.

''எப்பப் பார்த்தாலும்... அம்மா அவன்ட்ட தான்ப்பா பாசமா இருக்காங்க... என்னன்னா பிடிக்கவே இல்லை!''

- அழுகை பீறிட்டு வர, தந்தையிடம் குற்றப் பத்திரிகை வாசித்தாள் மகள்.

''வரவர... நீ ரொம்ப சீரியல் பார்க்கிறேன்னு நினைக் கிறேன்... உன்னோட சேர்ந்து குழந்தைகளும் பார்த்து, பாசம்... அது இதுன்னு இந்த வயசிலேயே டயலாக் பேசுறாங்க!'' என்று சட்டென, மனைவியிடம் பாய்ந்து விட்டார் குடும்பத் தலைவர்.

''ப்ச்... என்னப்பா இது? அவ என்னமோ...'' என்று கணவரிடம் துவங்கிய பத்மாவின் பேச்சு, மகளின் அழுகையில் அவளிடம் தாவியது.

''குட்டிமா... அவன் சும்மா சொல்றான்டா.... அம்மா அவன்ட்ட எதுவுமே சொல்லலை...'' என்று மீண்டும் கூறியவர்.

''ஏய்...வாலு! ஒழுங்கா சொல்லு... நான் பெரியம்மா வீட்டுக்குப் போறேன்னு, உன்கிட்ட சொன்னேனா?'' என்றார் மகனின் காதைத் திருகி.

''ஹ்ஹ்ஹஹா... வலிக்குது... வலிக்குது...'' என்று எம்பிக் கொண்டே நடித்தவன்.

''இல்ல... நீங்க போன்ல பேசினத நா கேட்டேன்...'' என்றான் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு.

''அப்ப... நீ தூங்கலையா?'' என்று பத்மா அவன் முதுகில் ஓர் அடி போட,

''தூங்கினேனே.... ஆனா... கேட்டுச்சு...'' என்று சிரித்தான், அந்தக் கண்ணன்.

''இவன் சரியான பசப்பன்ம்மா... போடா லூசா'' என்று தம்பியை அடித்த அம்முவின் முகத்திலும் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

ஒருவழியாக, அனைவரும் கிளம்பி வெளியே வந்தனர்.

காலையில், அம்முவும் கண்ணனும் தந்தையுடன் பள்ளிக்குச் சென்று விடுவர். மாலையில் மட்டும், ஆட்டோவில் வருவர்.

தினமும், கண்ணன் முன்னால் அமர்ந்திருக்க, அம்முவோ தந்தையின் பின்னே அமர்ந்து பள்ளிக்குப் பயணப்படுவார்கள்.

இன்று, பத்மாவும் வருவதால், கண்ணனுக்கு தாயுடன் அமர விருப்பம்!

''நா... அம்மாட்ட... அம்மாட்ட...'' என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்து, அம்முவை முன்னால் அமரச் சொல்லிவிட்டு, தந்தைக்குப் பின்னே அமர்ந்த தாயின் மடியில் அமர்ந்து கொண்டான் கண்ணன்.

''அப்பாக்கும் அம்மாக்கும் நடுல உக்கார்ந்துக்கோ ராஜா...'' என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார் பத்மா.

''ம்ஹூம்... அம்மா மடில... ப்ளீஸ்ம்மா...'' என்று கொஞ்சியவன்,

''இன்னைக்குத் தானேம்மா... நீங்க வர்றீங்க? நாளைக்கு எல்லாம்... நாங்க தனியா தானே போகணும்... ப்ளீஸ்ம்மா... உங்க மடில உக்கார்ந்துக்கிறேன்...'' என்று கெஞ்சினான்.

அதற்கு மேல், பத்மாவால் மறுக்க முடியவில்லை.

பைக்கின் பின் சீட்டில் அமர்ந்து, பிள்ளையை மடியில் வைத்துக் கொண்டவர், வலக்கையால் கணவனின் இடுப்பையும், இடக்கையால் மகனையும் இறுக்கிக் கொண்டார்.

இந்தியாவில் வாழும் பல மத்தியத் தரக் குடும்பங் களின் நிலை இது தானே?

காரிலோ டாக்ஸியிலோ போகும் அளவிற்கு வசதியும் பத்தாது, அதற்காக அடிபட்டு நைப்பட்டு பேருந்தில் செல்ல மனமும் வராது!

இருக்கும் ஒரே இரு சக்கர வாகனத்தில், குடும்பமே பயணிப்பர்! அது இருவராய் இருந்தாலும் சரி! மூவராய் இருந்தாலும் சரி! ஏன் ஐவர் கூட! அதிலும், பள்ளி செல் லும் குழந்தைகள் என்றால் அவர்களது புத்தகப்பையும் சாப்பாட்டு பையும் இன்னொரு ஆளின் சுமை!

அது போலவே, பத்மாவின் குடும்பமும் தங்கள் பய ணத்தைத் துவக்கியது!

''அம்மா... ரேணுக்காக்கு பாப்பா பொறக்க போதாம்மா? என்ன பாப்பாம்மா பொறக்கும்? கேர்ள் பேபியா? பாய் பேபியா? என்னை எப்படிம்மா கூப்பிடும்? இன்னைக்கே பொறந்திடுமா?'' - மகனின் வாய் ஓயாத கேள்வி களுக்குப் பதில் சொல்லியபடியே பத்மா அமர்ந்திருக்க, பைக் சந்து பொந்துகளைக் கடந்து, பிரதான சாலைக்கு வந்திருந்தது!

பத்மாவின் பொறுமையான பதில்களுக்கு நேரெதி ராய், வேகமாய்ச் சென்று கொண்டிருந்தது வண்டி.

பிரதான சாலையின் நடுவே, பாதாளச் சாக்கடை ஒன்றின் மூடி திறந்தே கிடக்க, அதன் வெகு அருகில் சென்ற போது தான் அதைக் கவனித்த அம்முப்பா, சட்டென பிரேக் போட்டு வண்டியை நிறுத்தினார்.

அவர் சட்டென வண்டியை நிறுத்துவார் என்ற எண்ணமே இல்லாமல், பின்னால் வேகமாய் வந்து கொண்டிருந்தது ஓர் பேருந்து!

பூச்சரத்தின் முதல் பூ - பதட்டம்!



2

''உள்ளம் கொள்ளை போகுதே...
உன்னைக் கண்ட நாள் முதல்...
உள்ளம் கொள்ளை போகுதே...
அன்பே என் அன்பே!'' - பாட்டு அந்த வீட்டையே அதிரச் செய்து கொண்டிருந்தது!

''டேய்.. சவுண்டைக் குறைடா...'' - சமையலறையில் இருந்து ஒரு கூவல்!

ம்ஹூம்! அரை டெசிபல் கூட சவுண்ட் குறைய வில்லை!

''டேய்... எருமைமாடு... காதில விழுதா இல்லையா? சவுண்ட்டைக் குறை...''

அங்கே வரவேற்பறையில் ஆடிக் கொண்டிருந்த வனுக்கு கேட்டால் அல்லவோ!?

ஒரே ஆட்டம்!

''நிஷூ... சத்தத்தைக் குறை... கீர்த்தி எழுந்துப்பா...'' - கொஞ்சம் தன்மையாய் வந்தது, ஓர் முதிர்ந்த குரல்.

அப்படியும் சவுண்ட் குறையாமலே இருக்க, ''இவனை... வாயால சொன்னா இவன் அடங்கவே மாட்டான்பா...'' என்று பல்லைக் கடித்தபடியே, வரவேற்பறைக்கு வீறு கொண்டு வந்தான் கிருஷ்ணன்.

அடுப்படியிலிருந்து தோசைக்கரண்டியை எடுத்துக் கொண்டு, அய்யனார் போல் வந்தவன், வரவேற் பறையில் தான் கண்ட காட்சியில் தன் அவதாரத்தை முற்றிலும் களைந்தான்!

''ஹஹஹா... ஹஹ்ஹஹா... என்னடா இது? ஹய்யோ... என்னால முடியல...'' என்றவன் அப்படியே சோபாவில் மடிந்து சிரிக்க ஆரம்பித்தான்.

அவன் சிரிப்பதை, ஒரு புழுவைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு, மற்றவன் வேலையைத் தொடர, கிருஷ்ணனுக்கோ இன்னமும் சிரிப்பு பொங்கிப் பெருகி வந்தது!

போனவன், சவுண்ட்டைக் குறைக்காமல் அங்கே விழுந்து விழுந்து சிரிப்பதை உணர்ந்த அரவாமுதன், ''ப்ச்... இங்க என்ன சிரிப்பு? கீர்த்தி எழுந்துப்பா...'' என்ற கண்டிப்புடன் அங்கே வந்து சேர்ந்தார்.

அவருக்குமே, நிஷூ என்ற நிஷாந்த் நின்ற நிலையைக் கண்டதும் சிரிப்பு தான்! ஆனால், பெரியவர் என்ற கெத்தைக் கைவிடாமல், ''நிஷூ... என்ன பண்ணிட்டு இருக்கே?'' என்றார் கொஞ்சம் கோபமாகவே.

அவன் அசைந்தால் அல்லவோ?!

''நிஷூ... என்ன பண்றேன்னு கேட்டேன்...'' - பல்லைக் கடித்தார் அரவாமுதன்.

''என்ன என்ன பண்ணிட்டு இருக்கே? பார்த்தாத் தெரியலையா? விழுந்து கிடக்கேன்... என் மேல வாக்கும் கிளீனர் விழுந்து கெடக்கு... அதில எடக்கு மடக்கா காலை வச்சதில, உள்ள போயிருந்த குப்பையெல்லாம் என் மூஞ்சில விழுந்து கெடக்கு....'' - தரையில் விழுந்த நிலையிலேயே கடுப்படிக்க,

''ஹஹஹ்ஹா...'' - கிருஷ்ணனால் சிரிப்பை நிறுத் தவே முடியவில்லை.

''இப்ப தான்டா... நீ அழகா இருக்கே!!'' என்று அவன் திருஷ்டிக் கழிப்பது போல் பாவனை செய்ய,

''குப்பை வெறில இருக்கேன்... என்னையக் கொலை காரன் ஆக்காதீங்க சொல்லிட்டேன்...'' - நிஷாந்த் பல்லைக் கடிக்க,

''கொலைவெறில இருந்தா தான் கொலைகாரன் ஆக முடியும்! குப்பை வெறில இருந்தா குப்பைக்காரன் தான் ஆக முடியும்!'' என்று தத்துவம் பேசினான் கிருஷ்ணன்.

அரவாமுதனுக்குமே சிரிப்பை அடக்க முடியவில்லை!

''ஏன் நிஷான் இந்த வெட்டி வேலை? வீடைக் கிளீன் பண்ணுன்னு சொன்னா... அதை மட்டும் பண்றது தானே? எதுக்கு... டான்ஸ் கீன்ஸ்-ன்னு கண்டதையும் ட்ரை பண்றே?'' என்று அலுத்துக் கொண்டவர், மெதுவாய் அவனையும் வாக்கும் கிளீனரையும் பிரித்து எடுத்தார்.

கிருஷ்ணனும் உதவி செய்ததால், வேலை சீக்கிரமே முடிந்தது!

முகம் முழுக்க, தூசியும் தும்பும் படிந்திருக்க, ''ச்சை கருமம்... உவ்வாக்...'' என்று குமட்டிக் கொண்டே, வாஷ் பேசின் நோக்கி ஓடினான் நிஷாந்த்.

''என்ன கருமம்? என்ன உவ்வேன்னு கேட்கிறேன்... நைட் சாப்பிட்டுட்டு... இங்கேயே தட்டைப் போடும் போது, சாருக்கு உவ்வெக்க ... கருமம் எல்லாம் தெரி யாது!'' என்று கிருஷ்ணன் இடுப்பில் கை வைத்து கேட்கவும்.

''நீங்க ப்ரோஃபஸ்ஸரா இருக்கலாம்... அதுக்காக சும்மா மிரட்டிட்டே இருந்தீங்க? நல்லா இருக்காது சொல் லிட்டேன்...'' என்றவன், மாடிக்கு நழுவிச் செல்லவும்.

''டேய்... எங்க போறே? வந்து... வீட்டைக் கிளீன் பண்ணிட்டு, அப்புறம் என்ன வேலைன்னாலும் பாரு!'' என்று அதட்டினான் கிருஷ்ணன்.

''உங்களோட பெரிய தொல்லையா இருக்கே... துரி யோதனன்! பச்...'' என்று அலுத்துக் கொண்ட நிஷாந்த்.

''ப்ளீஸ்... தூசி விழுந்ததில், கண்ணெல்லாம் ஒரே எரிச்சல், இன்னைக்கு ஒரு நாள் விட்டிருங்களேன்...'' என்றான் கெஞ்சலாய்.

இளைய மகன் கெஞ்சுவது பொறுக்காமலோ அல்லது அவன் கண்ணில் தெரிந்த சிவப்பின் காரணமாகவோ ''அவன் போகட்டும்... கிருஷ்ணா! நீங்க வேலைக்குப் போனதும்... நான் கிளீன் பண்ணி வைக்கிறேன்'' என்றார் மகனுக்கு உதவிக்கரம் நீட்டும் தந்தையாய்.

''ஹாய்... சூப்பர்!' அப்பாவே பண்றேன்னு சொல்லிட் டாங்க... மீ எஸ்கேப்...'' என்று நிஷாந்த் மாடிப்படியில் குதித்தேற,

''நத்திங் டூயிங்க்!'' - கிருஷ்ணனின் கண்டிப்புக் குரல் அவனைக் கட்டிப் போட்டது.

''அப்பாக்கு என்ன வயசாகுதுன்னு தெரியுமா தெரியாதா உனக்கு? அறுபது வயசில... அவரு ொக்கும் பண்ணனுமா?'' என அவன் கேட்டபோது, நிஷாந்தின் முகம் சுளிப்பைக் காட்டியது.

அவனது அலுப்பை ஓரம் கட்டிவிட்டு, ''கண்ணில நல்லா தண்ணியடிச்சுக் கழுவிட்டு, கிளீன் பண்ற வழியைப் பாரு! கிளீன் பண்ணினா தான்... மார்னிங் டிபன்!'' எனக் கண்டிப்பு நிரம்பிய குரலில் கூறிச் சென்றான் கிருஷ்ணன்.

அந்தக் குரலை மீற முடியாது என்பது ஒரு புறமிருக்க, சில நாட்களாய் சோர்ந்து காணப்படும் தந்தையை முன்னிலைப்படுத்தி, வீட்டைச் சுத்தம் செய்ய ஆரம் பித்தான் நிஷாந்த்.

ஃபிலடெல்ஃபியா நகரத்தின் ஓர் குடியிருப்பு பகுதி யில் அமைந்திருக்கும் இந்தப் பெரிய வீட்டைச் சுத்தம் செய்வது என்பது அவருக்குமேக் கஷ்டமான காரியம் தானே?

ஆனாலும், குப்பைப் பட்ட கண் கொடிய மிளகாய்ப் பொடியாய் எரிய, ''ப்ச்...ப்ச்...பச்...'' என்று அலுத்துக் கொண்டே வேலை செய்ய ஆரம்பித்தான் நிஷாந்த்.

நாலடி சுத்தம் செய்திருப்பான். என்னமோ, நரகத்தில் விடப்பட்ட ரோபோ போல், சுவைங்... சுவைங்... என்று சோக ராகம் வாசிப்பதாய்த் தோன்றியது!

அந்த எண்ணம் தோன்றிய மறுநிமிடம், கைகள் மியூசிக் பிளேயரை உயிர்ப்பித்து விட, ஆட்டத்துடன் ஆட்டமாய் வீட்டைச் சுத்தம் செய்யத் தொடங்கினான் நிஷாந்த்.

''அண்ணாத்தே ஆடுறார்... ஒத்திக்கோ! ஒத்திக்கோ!

தென்னாட்டு வேங்கை தான்! ஒத்துக்கோ! ஒத்துக்கோ!'' என்று தன்னைத் தானே புகழ்ந்தபடி, வாக்கும் கிளீனரின் டியூபை வலது கையிலிருந்து... இடது கைக்கு தூக்கிப் போட்டு, அதனுடன் டூயட் பாடிக் கொண்டிருந்தவனை, அரவாமுதனின் கெஞ்சலுக்கு இணங்க கிருஷ்ணன் ஒன்றும் சொல்லவில்லை.

நிஷாந்துக்கு படிக்கும் போதே பாட்டு வேண்டும்! அப்படியிருக்கையில், குப்பைப் பொறுக்கும் போது, சும்மாவா இருப்பான்?

அவன் சுத்தம் செய்து முடிக்கும் வேளையில், கீர்த்தி என்றழைக்கப்படும் கீர்த்தனா மெல்ல மேலிருந்து கீழே வந்தாள்.

''ஏய்... பாதாம்! குடுமார்னிங்! என்ன மேடம்... அதுக் குள்ளே எழுந்துட்டீங்க...'' என்றான் நிஷான் உற்சாகமாய்.

''ப்ச்... போடா! தூக்கமே வரல!'' என அவள் சோகம் கொள்ள,

''அடிப்பாவி! இந்த கிரீன் சாண்ட் எழுந்து, வாசல் தெளிச்சு, கோலம் போட்டு, வீட்டைப் பெருக்கி... உன்னோட புருஷன் குமுச்சு வச்சிருக்கப் பாத்திரத்தை எல்லாம் கழுவி... எவ்வளவோ வேலை பார்த்திருக் கேன்! நீ என்னடான்னா... எட்டு மணி வரைக்கும் தூங் கிட்டு, தூக்கமே வரலைன்னு சொல்றே...'' என அலுத்துக் கொண்டான். பொய்யாய்க் கண்ணைத் துடைத்தபடியே.

ஆனால், அவளோ ''இவ்வளவு வேலை பார்த்தியா நிஷூ? ஐயோ... பாவம்! என்னை டாக்டர் ரெஸ்ட் எடுக்கச் சொல்லியிருக்காங்க நிஷூ... அதான் எதுவும் செய்ய முடியல... சாரிடா...'' என்றாள் நிஷாந்தின் கன்னம் வருடி.

அந்தச் செயல், கண்ணில் ஏனோ கண்ணீரை வர வைக்க, ''ச்சே... நா சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன் கீர்த்தி! நீ போ... போய் அப்பாட்ட காபி வாங்கிக் குடி!'' என்றார் பெரியவனாய் உருமாறி.

அப்போதும், அவள் தெளியவில்லை.

''நிஜமா உனக்கு... என் மேல கோபமில்லையே?'' என அவள் தலை சரித்துக் கேட்க, நிஷாந்துக்கு லேசாய் சிரிப்பு வந்தது.

அவளைச் சீண்டிப் பார்க்க எண்ணி, ''உன் மேல கோபமில்லை! ஆனா.... துரியோதனன் மேல தான் கோபம்!'' என்று அவன் கண்ணை உருட்டி, உருட்டி சமையலறையைக் காட்டவும்.

''ரொம்பத் திட்டிட்டாங்களா?'' என்று அவளும் கண்ணை உருட்டினாள்.

''ஆமா... திட்டுறது மட்டுமில்ல! இங்க ஒரு அடி... அப்புறம் இங்க முதுகுல ஒரு அடி வச்சாங்க!'' என்று இடது தோளையும், கையைச் சுற்றி முதுகுப் புறம் கொண்டு சென்று பின்பக்கமும் காட்டினான் நிஷாந்த்.

நிஷாந்தின் முகம் வேறு அப்பாவிக் குழந்தையின் சாயலை ஏந்தி நிற்க. ''அடிச்சாங்களா? அச்சோ!'' என்று அதிர்ந்து போனாள் கீர்த்தி.

நிஷாந்தும் ''ஆமா... ஆமா...'' என்று நீலிக் கண்ணீர் வடிக்க,

''இரு... நான் கேட்கிறேன்! பாவம்... காலையில எழுந்து எவ்வளவு வேலை பார்க்கிறே! உன்னைப் போய் அடிக்கலாமா?'' என்றவள், வேகமாய்ச் சமைய லறைக்குள் நுழையவும்.

''நா எஸ்கேப்...'' என்று சத்தமில்லாமல் மாடிக்கு நழுவிச் சென்றான் நிஷாந்த்.

அடுத்த அரை மணி நேரத்தில், அவன் உணவு மேஜை யில் இருக்க, கிருஷ்ணனும் அங்கே தான் இருந்தான்.

தன் தட்டில், இரண்டு தோசைகளை எடுத்து வைத்துக் கொண்டு நிஷாந்த் அமரக் காத்திருந்தவன் போல், ''கீர்த்து கண்ணா.. இவனை நா எங்க அடிச்சேன்னு சொன்னே?'' எனக் கேட்டான் கிருஷ்ணன்.

வரவேற்பறை சோபாவில் அமர்ந்திருந்த கீர்த்தியோ, ''அடிச்ச உங்களுக்குத் தெரியாதா என்ன?'' எனக் கேட்க.

நிஷாந்துக்கு அபாய மணியின் ஓசை தூரத்தில் கேட்டது.

''சும்மா சொல்லுடா கீர்த்து! எனக்கு மறந்துடுச்சு...''

''இதெல்லாம் மறந்துடுங்க! நா நேத்து மாத்திரை சாப்பிடலைங்கிறதை மட்டும் நல்லா ஞாபகம் வச்சுக் கோங்க!'' என அலுத்துக் கொண்ட போதும்,

''முதுகுலையும்... அப்புறம்... ஹ்ம்ம்... ஷோல்டர் லையும் அடிச்சீங்களாம்! அவன் என்ன அஞ்சாங்கிளாஸ் பையனா... எம்.பி.ஏ. படிச்சிட்டு, நல்ல வேலையில இருக்கிறவனை இப்படியா அடிக்கிறது?'' - கீர்த்தனா வுக்கு ஆற்றாமை ஆறவில்லை.

''தப்பு தான்... என்ன பண்றது...'' என்று கிருஷ்ண னுக்கு ராகமிழுக்கும் போதே,

''ஹய்யோ... சும்மா இருந்து எலிக்கு ஹான்ட்ஷேக் கொடுத்து, ஹாண்ட்பிரேக் வாங்கப் போறேன் போலவே!'' என்று உள்ளுக்குள் உதறலெடுக்க, தட்டைக் கையில் எடுத்துக் கொண்டு வேகமாய் உணவு மேசையை நிஷாந்த் காலி செய்யும் முன்னர், கிருஷ்ணனின் கரங் கள் அவனது முதுகிலும் தோளிலும் தடம் பதித்திருந்தன.

பட்டென்று சத்தம் கேட்டபோதும், வலிக்காமல் தான் விழுந்தது அடி.

ஆனால், நம் நடிப்பு நாகார்ஜுனோ கன்னம் தெறிக்க, கண்கள் கலங்க ''ஐயோ அம்மா...'' என்று அலறினான்.

அதைக் கண்ட கீர்த்து, ''அச்சோ.... என்ன அடிச் சுட்டீங்க...'' எனப் பதற.

''நீ எதுக்கு இப்போப் பதறிட்டு இருக்கே? இந்த டைம்ல பதறக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார் இல்ல... பேசாம உட்காரு!'' என்று அவளை அதட்டிய கையோடு.

''பொய் சொன்ன வாய்க்கு... வேற ரெண்டு அடி போடணும்! அப்பா... அந்த தோசைக்கரண்டியை எடுத்திட்டு வாங்க...'' என்றான் நிஷாந்தின் சட்டையைப் பிடித்தபடியே.

''அய்யயோ... விட்டுடுங்க துரு! ச்சே குரு! ச்ச்ச்சே குரு! நா சும்மா லுலுலா இக்குச் சொன்னேன்...'' என்று கையை எங்கயும் அங்கேயும் ஆட்டி. ஒரு வழியாய் அவனிடம் கெஞ்சிக் கொஞ்சி விடுபட்டு வெளியே வந்த நிஷாந்த், எதிரே தோசைக்கரண்டியுடன் நந்தை நிற்கவும், ''யூ டு...ஹனி!'' என்றான் கண்ணைச் சுருக்கி.

''ச்சை... தள்ளுடா... நீ ஆடின ஆட்டத்தில, தோசைக் கரண்டில இருந்த தோசை கீழே எங்கயோ போய் விழுந் திருச்சு.... தள்ளு பாப்போம்!'' என்று மகளை விலக்கி விட்டு தோசையைத் தேடினார் பெரியவர்.

''பொருள் தேடும் பூமியில்... தோசை தேடும் அமு தனே!'' - என அவரைப் பார்த்து நிஷாந்த் பாட, கீர்த்தனா அடக்கமாட்டாமல் சிரித்தாள்.

அவள் சிரிப்பதைக் கண்ணுக்குள் நிறைப்பிய கிருஷ்ணனுக்கும், சிரிப்பே!

ஒருவழியாக, கிருஷ்ணனும் நிஷாந்தும் வெளியே கிளம்பி வந்தனர்.

கிருஷ்ணன், ஃபிலடெல்ஃபியா நகரத்தில் இருக்கும் ஒரு புகழ் பெற்ற பல்கலைக்கழகத்தில் விரிவுரையாள னாய்ப் பணியாற்றுகிறான்.

நிஷாந்த், கிருஷ்ணன் பணியாற்றும் அதே பல்கலைக் கழகத்தில் உள்ள வார்டன் ஸ்கூல் ஒப்பிசினஸ்-இல் எம்.பி.ஏ படித்துவிட்டு, தன் நண்பன் ப்ரவீனுடன் சேர்ந்து ஒரு பினன்சியால் கன்சல்டிங் கம்பெனி நடத்துகிறான்! வெற்றிகரமாகவே!

அன்றைக்கு! ''துரு...ச்சே...குரு... இன்னைக்கு உங்க யூனிவர்சிடில என்னை.... விசிட்டிங் லெக்ச்சர் கொடுக்கப் கூப்பிட்டு இருக்காங்க... சோ நானும் உங்களோட கார்ல வரேன்...'' என்று அவன் கிளம்ப.

''அடக்கடவுளே, உன்னையே எப்படி தான் ஸ்டூ டெண்ட்டா எடுத்தாங்கங்கிற விஷயத்திலேயே நான் இன்னும் தெளியல... இதில, நீ... லெக்ச்சர்... ஹ்ம்ம்.... பாவம் பாசங்க...'' என்று கிருஷ்ணன் பெருமூச்சு விட.

''நீங்க கொடுக்கிற லெக்ச்சரை கேட்கவே நாலு பொண்ணுங்க வரும் போது, என்னோட பர்சனாலிட்டிக்கு ஆயிரம் பொண்ணு வரும் பாஸ்...'' என்று நிஷாந்த். அசால்ட்டாய்க் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

அவன் என்னமோ விளையாட்டுக்குத் தான் சொன்னான். ஆனால், சட்டெனக் கீர்த்தனாவின் முகம் வாடி விட்டது!

அதை மறையாமல் கண்டு கொண்ட கிருஷ்ணனோ, ''சும்மா இருடா... அவளே ஒண்ணுன்னா ஒன்பதைக் கற்பனை பண்ணுவா! இதில நாலு... அஞ்சுன்னுட்டு!!!! இந்நேரம் கற்பனைக் குதிரை... என்னோட லெக்ச்சர் ஹால் வாசலுக்குப் போயிருக்கும்!'' என்று தலையில் அடித்துக் கொண்டான்.

''ஹை... இது நல்லா இருக்கே? கீர்த்தனா கிருஷ்ணன்... (K.K) தன் கற்பனை குதிரை (K.K)வை தட்டி விட்டாங்கோ!'' என்று நிஷாந்த் ராகம் பாட.

''போடாங்கிறேன்... ஓடிப் போயிரு... '' என்று அவனை அடித்தக் கிருஷ்ணன் கீர்த்தனாவிடம் வந்தான்.

அதன் பின், பத்து நிமிடங்கள் எப்படியோ கழிந்து போக, காரில் அமர்ந்து கொண்டு ஹாரனை ஓங்கி அடித்தான் நிஷாந்த்.

''அச்சோ லூசு... பக்கத்தில வீட்டில இருக்கவன் நியூ சன்ஸ் கேஸ் போட்டுறப் போறான்! இரு வரேன்!'' என்று தலையில் அடித்துக் கொண்டே நகர்ந்த கிருஷ்ணன்.

''கீர்த்து... ரொம்ப நேரம் கம்ப்யூட்டர் முன்னாடியே உக்காந்திருக்கக் கூடாது! ஓகேவா? ஸ்டோரி படிக்கிறதெல்லாம்... இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு வச்சுக்கலாம்... இப்போ தூங்கு... ஓகே?'' என்று மனைவியின் கன்னம் தட்டிவிட்டு, காருக்கு ஓடினான்.

காரை லாவகமாய் நிஷாந்த் வெளியே எடுக்கவும், ''டேய்... வரும்போது என்னோட வந்துடுவா சரி? அப்புறம்... ஆபீஸ் எப்படி போவே?'' எனக் கேட்க,

''பிரவீன் வந்து பிக் பண்ணிக்கிறேன்னு சொல்லியிருக்கான்... உங்க காலேஜ்ல, மதியம் லஞ்ச்க்கு இந்தியன் ரெஸ்டாரண்ட் ஒண்ணுல இருந்து, ஃபூட் வருமாமே... கேள்விப்பட்டேன்... அதான் சாப்பிடலாம்ன்னு...''

''அதானே பார்த்தேன்... சரியான சாப்பாட்டு ராமன்கள்!''

''போங்க துரு...ச்சே குரு... நான் படிக்கும் போதெல்லாம் இந்தக் காஞ்சு போன பிரட்-டும் பிட்சாவும்... ரைஸ் பௌல்ங்கிற பேர்ல விறைச்சுப் போன சாதமும் தான் கிடைக்கும்! இப்ப தான்... இந்த இந்தியன் ஃபூட் வருதாம்... ட்ரை பண்ணனும்...'' என்றான் நிஷாந்த் ஆர்வமாய்.

அதே ஆர்வத்துடன், தனது உரையை முடித்துக் கொண்டு, பிரவீனுக்காகக் காத்திருந்தான்.

பிரவீன் வந்ததும், ''மச்சீ... வாடா... உனக்காகத் தான் வெயிட் பண்ணிட்டு இருக்கேன்...'' என்று அவனைத் தள்ளிக் கொண்டு, இந்தியன் உணவு வகைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வண்டியை நோக்கி விரைந்தான்.

அங்கே சென்றதும், பிரவீன் அவர்களிடமிருக்கும் உணவு வகைகளைப் பற்றி விசாரிக்கப் போய்விட,

ஏதோ பயங்கரத்தைக் கண்டவன் போல், அங்கே நின்று உணவுப் பார்சல் வாங்கிக் கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்த்து, அதிர்ந்து நின்றான் நிஷாந்த்!

பூச்சரத்தின் தொடுக்கப்படும் இரண்டாம் பூ - அதிர்ச்சி!



3

நிஷாந்தின் மனம் படபடவென வேகமாய் அடித்துக் கொண்டது!

நெஞ்சம் வெளியே வந்து விழுந்து விடும் அளவிற்கு, இதயத்துடிப்பு அவன் காதைக் கிழித்தது!

''இவள்... இவள்... இவள்... அன்னைக்கு பைக்ல'' - மனதிற்குள் ஆயிரமாயிரம் சிந்தனைகள் ஒன்றாய்க் குழுமி நிற்க, நிஷாந்திற்கு மனதையும் உடம்பையும் ஏதோ செய்தது!

இங்கே இனி தாமதிப்பது மிகவும் அபாயம் என்று மூளை எச்சரிக்கை விடுக்கவும், அங்கிருந்து நகர முற்பட்டான் நிஷாந்த்.

ஆனால், முடியத் தான் இல்லை! கண்கள் அவளை விட்டு அசைவேனா என்றது! ஆனால், மனமோ அவளைக் காண ஏதோ பாலைவனத்திற்குள் செல்வது போல் வறண்டு போய், மூச்சுக் குழாயை அடைத்தது!

''கடவுளே... இவளை... இவளைப் போய் ஏன் இங்க கொண்டு வந்தே?'' என்று சட்டைப் பைக்குள்ளிருந்த ஆஞ்சநேயரின் படத்தை இறுகப் பிடிக்க,

அங்கே இறைவனோ ''ஹஹ்ஹஹா! யார்ட்ட? இந்த மாசத்துக்கு... நீ தான் மக்கா எனக்குக் குரங்கே! ஆட்டி வைக்கிறேன் பாரு!'' என்று நக்கலாய்ச் சிரித்தார்.

அது தெரியாமல், உணவுப் பொட்டலத்தை வாங்கிக் கொண்டு, பணத்தை நீட்டும் அவள் கைகள் மீதே நிஷாந்தின் கண்கள் நிலைத்திருந்தன.

சரியாக சில்லரைக் கொடுத்திருப்பாள் போலும், பணத்தைப் பெற்றவன் ''தேங்க்ஸ்!'' என்று விரிந்த புன்னகை ஒன்றை உதிர்க்கவும், இவளுமே அதே விரிந்த புன்னகையைப் பதிலாக்கிவிட்டு, அங்கிருந்து நகர,

இங்கே நிஷாந்த், அந்தப் புன்னகை எனும் படுகுழியில் தன் இதயம் தடுமாறுவதைத் தடுக்க முடியாமல் விக்கித்து நின்றான்.

அதற்குள், அங்கே வந்து விட்ட பிரவீன் ''நிஷான், நாண்... பட்டர் சிக்கன் மசாலா காம்போ வாங்கட்டுமா? இல்ல உனக்கு ரைஸ் வேணுமா?'' என்றான் நண்பனின் முகபாவனையை உணராமல்.

நிஷாந்தோ, அந்த இடத்தை விட்டு நகரும் அப் பெண்ணின் மீது தன் பார்வையைப் படரவிட்டு, தன் உணர்வு மறந்து சமைந்து நின்றான்.

சற்று நேரம், நிஷாந்திடம் எந்தப் பதிலும் வராமல் போகவே ''டேய்...'' என பிரவீன் லேசாய்த் தட்டவும்.

என்னவோ பெரிய புல்டோசரால் அடிபட்டது போல், ''ஹான்...'' என்று பயங்கரமாய் ஒரு ரியாக்ஷன் கொடுத்து விழித்தவன்.

''என்ன கேட்டே?'' என்றான் தடுமாற்றத்துடன்.

''என்ன சாப்பாடு வாங்கன்னு கேட்டேன்?'' - பிரவீனின் பார்வையின் விநோதம் புரியாமல்.

''எனக்கா? எனக்கு ஒரு சாம்பார் சாதம்!'' என்றான் நிஷாந்த், படு தீவிரமாகக் கண்கள் என்னமோ அவளிடமே இருந்தன. எங்கே கண்ணை ஒரு வினாடி விலக்கினாலும், வாழ்வே அஸ்தமித்து விடுமோ என்ற பயம் கொண்டவன் போலிருந்தது அவனது தொடரல்.

''என்னது சாம்பார் சாதமா? டேய்... தயிர் சாதம்... எந்த நாட்டில் மச்சான் இருக்கே?'' என்று பிரவீன்.

''விட்டா... நெய்யும் முந்திரியும் போட்ட பொங்கல் வேணும்ன்னு கேட்ப போலவே?'' என்றான் ஒரு மார்க்கமாய்.

ஆனால், நிஷாந்திற்கு அதெல்லாம் உறைக்கவே இல்லை.

''ஹோ... சாம்பார் சாதம் இல்லையா? விடு! நீ சாப்பிட்டுட்டு ஆபீஸ் போ... நா... ஹ்ம்ம்... இங்க ஒரு சின்ன வேலை இருக்கு... நா முடிச்சிட்டு வரேன்!'' என்றவன், பிரவீனின் பதிலை எதிர்பார்க்காமலே வேகமாய் ஓடி விட்டான்.

ஆனால், என்ன ஓடி என்ன புண்ணியம்? அந்தப் பெண்ணைக் காணவில்லை!

இந்தக் கட்டிடத்திற்குள் தான் சென்றிருக்க முடியும் என்ற கணிப்பின் படி, ஒரு பெரிய கட்டிடத்திற்குள் நுழைந்தவன், ஏமாற்றத்தை மட்டுமே பதிலாய்ப் பெற்றுக் கொண்டு வெளியே வந்தான்!

''ச்சை....'' என்று மனம் சோர,

''வேணாம் மச்சி... அவளைப் பார்க்கிறது உனக்கு நல்லதில்ல...'' என்று எச்சரித்தது மூளை.

ஏனோ, மூளையின் பேச்சைக் கேட்கத் தோன்றியது நிஷாந்திற்கு! ஏனென்றால், நெஞ்சை ஏதோ செய்தது! உள்ளே ஏதோ பிசைவது போல்! அழுத்தமாய்! ம்ஹூம்... இனி சரிவராது என்ற எண்ணம் தோன்ற, கைகள் கைப்பேசியை எடுத்தன.

கைகள் தானாய் தந்தையின் எண்களுக்கு போன போதும், நிஷாந்தால் அவற்றை அழைக்க முடியவில்லை.

ஏதோ ஒன்று உள்ளிருந்துத் தடுத்தது!

சட்டென முடிவு செய்தவனாய், கிருஷ்ணனின் எண்ணை அழுத்தினான்.

மறுமுனை உயிர்பெற்று, ''என்ன நிஷான்... இழுக்க முடியாத அந்த நாணுக்கும்... இனிப்பே உருவான அந்த பட்டர் சிக்கன் மசாலாவுக்கும் காம்பினேஷன் எப்படி?'' என்று நக்கலாய்க் கேட்க.

''குரு... நா உங்களைப் பார்க்கணும்...'' என்றான் நிஷாந்த், குரலில் துளியும் விளையாட்டில்லாமல்.

கிருஷ்ணன், ''ஏன்? என்னாகிற்று? எங்கே இருக்கிறாய்?'' என்று எந்தவிதமான கேள்வியும் கேட்கவில்லை.

தானிருக்கும் இடத்தைச் சொல்லி, ''இங்க வா நிஷான்!'' என்றான் ஆதரவாய்.

நிஷாந்த் ''சரி'' எனவும், ஏதோ அவசரமாய் யோசித்தவனாய் ''உன்னால வர முடியுமா, நிஷான்? இல்ல நா வந்து கூட்டிட்டுப் போகவா?'' என கிருஷ்ணன், நிஷாந்தின் மனம் உணர்ந்தவனாய்க் கேட்க,

''இல்ல... நானே வந்துடுவேன்...'' என்ற நிஷான், அடுத்த பத்தாவது நிமிடம் கிருஷ்ணனின் அறையிலிருந்தான்.

நிஷாந்தின் குரல் சொன்ன சேதி, ஏதோ அபாயத்தை முன்னிறுத்தவே, கிருஷ்ணனும் தன் அறை வாயிலிலேயே காத்து நின்று, நிஷாந்த் வந்ததும் அவனை ஆதரவாய் அணைத்து உள்ளே கூட்டிச் சென்றான்.

அங்கே போடப்பட்டிருந்த நாற்காலியில் அவனை அமர வைத்து விட்டு, ஒரு குவளை நீர் எடுத்து வந்து கொடுத்தவன், அவன் அதை ஒரே மடக்கில் குடித்து முடிக்கவும், அவனது தோள்கள் இரண்டையும் அழுத்தி ''ரிலாக்ஸ்'' என்றான் மனதை ஊடுருவும் குரலில்.

அதன் பின், ஐந்து நிமிடங்கள் அங்கே அமைதியே நிலவியது!

பேச வேண்டியவன் நிஷாந்த் என்பதால், மார்பின் குறுக்கே கையைக் கட்டிக்கொண்டு கிருஷ்ணன் அவனையே பார்த்திருக்க, ஆறாம் நிமிடத்தின் ஆரம்பத்தில் ''குரு...'' என்ற அழைப்பு நிஷாந்திடம் இருந்து வந்தது.

''ஹ்ம்ம் சொல்லு...'' என்று கிருஷ்ணன் உந்த.

''அந்தப் பொண்ணு... அந்தப் பொண்ணு குரு... அந்தப் பொண்ணை இங்கப் பார்த்தேன்...'' என்றான் கண்களில் பயம் போல ஒன்று பரவி வர.

''எந்தப் பெண்?'' என்று கேட்காமலே, கிருஷ்ணனுக்கு விவரம் புரிந்தது!

சற்று யோசித்துவிட்டு, ''இங்கேயா? கோயம்புத்தூர்ல தானே?'' என அவள் வாய் விட்டே யோசிக்க.

''ஹான்... ஆமா... கோயம்புத்தூர்ல... பைக்ல... ஒரே ரத்தம்... அய்யோ... குரு என்னால முடியல குரு... நெஞ்செல்லாம் அடைக்குது... வலிக்குது...'' என்ற நிஷாந்தின் முன்னே பூச்சி பறப்பது போலிருந்தது! ஆம், மூச்சடைத்து கண்கள் மயங்கத் தொடங்கியிருந்தன அவனுக்கு!

''நிஷூ... நிஷூ... என்ன ராஜா...'' - வேகமாய் ஓடி வந்து கிருஷ்ணன் அவன் தலையைத் தாங்கிக் கொள்ள,

''குரு...'' என்றான் அவன் ஈனமாய்.

மெல்ல அவன் தலையை சோபாவில் சாய்த்துப் படுக்க வைத்த கிருஷ்ணன், வேகமாய் ஓடிச் சென்று கொஞ்சம் தண்ணீர் எடுத்து வந்து, நிஷாந்தின் கண்களைக் கைகுட்டையால் துடைத்து விட்டான்.

என்ன தான் மென்மையான வருடலாய் அவன் தொடுகை இருந்த போதும், நிஷாந்தின் விழிகள் அந்த ஈரத்தின் ஸ்பரிசத்தை உணர்ந்த நொடியில், விலுக்கெனத் திறந்தன!

வெடித்துக் கிளம்பும் எரிமலையாய், சிவந்து விரிந்தன கண்கள்.

ஒரு கணம் திடுக்கிட்டவனாய், ஓரடி பின்னே நகர்ந்த கிருஷ்ணன், ''நிஷான்... ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்!'' என்றான் இளையவனின் நெஞ்சை நீவி விட்டபடியே.

''என்னால முடியல குரு... மைண்ட் எங்கேயோ போகுது...'' என்று தவித்தான் நிஷாந்த், நெஞ்சை அழுந்தப் பிடித்துக் கொண்டு.

பெண்களுக்கு மட்டும் தான் தவிப்பும்.. பயமும் சொந்தம் என்று யார் சொன்னது? ஆறடி உயரமும், ஆஜானுபாகு உடம்பும் கொண்டிருந்தாலும், ஓரோர் ஆணுக்குள்ளும் ஓர் பலவீனம் இருக்கிறது! அந்த பலவீனம், பெண்ணை விடவும் அவனை மென்மையானவனாய் மாற்றிவிடும்!

சொல்லப் போனால், உடலின் வலிமையை மனதில் இருத்தி வைக்கத் தெரியாதவர்கள் ஆண்கள்! பெண்ணோ, மனதின் வலிமையை உடலுக்கு இட்டுச் சென்று தாக்கத் தெரியாதவள்! இது தான், ஆணுக்கும் பெண்ணுக்குமான வித்தியாசம்!

அந்த உலக நியதியின் படி, நிஷாந்த் வெளிப்படையாகவே அரற்ற ஆரம்பித்தான்!

''குரு... எனக்கு என்னமோ செய்யுதே... முடியல குரு...'' என்றவன், சட்டென எழுந்து அமர்ந்து, கிருஷ்ணனின் கையைப் பற்றிக் கொண்டு, ''எங்க நான் முன்னாடி மாதிரியே ஆகிடுவேனோன்னு... எனக்கு பயமா இருக்கு குரு!'' என்றான் குரல் நடுங்க.

அவனது குரலின் நடுக்கமே, அவனது பயத்தைப் பூதாகரமாய் அவனுக்கே திருப்பி இட்டுச் சென்று, உடலை நடுங்கச் செய்தது!

எதிரே தவித்துக் கொண்டிருப்பவனின் மனநிலை புரிய, ''ச்சச்சே... நா அப்படியாக விட்டிருவேனா? ரிலாக்ஸ் நிஷாந்த்!'' என்றான் அவனை ஆதரவாய் அணைத்து.

தன்னை வயிற்றோடு அணைத்திருந்தவனின் இடுப்பை இரு கரங்களாலும் இறுக்கிக் கொண்டு, ''குரு...'' என்றான் அவன் தாயைத் தேடும் குழந்தையாய்.

''நிஷாந்த்! இங்க பாரு... ஜஸ்ட் ரிலாக்ஸ் மை பாய்! சும்மா கலங்கக் கூடாது! இப்ப என்னாச்சு... அந்தப் பொண்ணைப் பார்த்தே! அவ்வளவு தானே? அதுக்கேன் இவ்வளவு டென்ஷன்?'' என்றான் அவன் ஒன்றுமே இல்லாதது போல்.

''இல்ல குரு... எனக்கு அவளைப் பாத்த உடனே... பழசெல்லாம் ஒண்ணு ஒண்ணா மைண்ட்டுக்கு வருது! ஏதோ ஒரு பிரஷர் வந்து மூளையை அமுக்கிற மாதிரி இருக்கு... சம்திங் சோ பிக் கெட்ஸ் புட் அப்... பயமா இருக்கு குரு!''

நீ ஏன் அப்படி எடுத்துக்கிறே? அந்த சம்பவத்துக்கு அப்புறமும், அந்தப் பொண்ணு இங்க வரைக்கும் படிக்க வந்திருக்கான்னா... அவ... எவ்வளவு தைரியசாலியா இருக்கணும்? ஹ்ம்ம்... அப்படி நினை!'' என்று சூழ்நிலையை வேறோர் கோணத்தில இருந்து பார்க்கும் வித்தையைக் கற்றுக் கொடுத்தான்.

''ஹான்...'' என்று நிஷாந்த் யோசிக்கும் போதே.

''ஹே... அவளே இப்படியொரு சிச்சுவேஷனை தாண்டி அமெரிக்கா வரைக்கும் வந்திருக்கான்னா... நீ சந்தோஷமா இல்ல இருக்கணும்? எதுக்கு... பயப்படணும்? எதுக்கு... தேவையில்லாமப் பயப்படணும்!? கம் ஆன்... நிஷூ! சியர் அப்... மை பாய்!'' என்றான் கிருஷ்ணன், குதூகலமாய்.

நிஷாந்த் இந்தக் கோணத்தில் யோசிக்கவே இல்லை!

அவளைக் கண்டதும், தன்னை மீறிப் பின்பக்கமாய் நகர்ந்த எண்ணங்களும், அதனால் உண்டான பயமுமே அவனை ஆக்கிரமித்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தன!

அவளால் 'தனக்கு' ஏற்பட்ட பாதிப்பிலேயே உழன்று கொண்டிருந்தவன், 'அவளிடமே' ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கவனிக்கவில்லை,!

இப்போது, கிருஷ்ணன் அதை சுட்டிக் காட்டியதும், ''அட... ஆமா... இல்ல...'' என்றிருந்தது!

அதன் பின்னர், மனமோ எவ்வளவோ லேசாகிப் போனது!

முன்னர் அழுத்திக் கொண்டிருந்த பாரம், தூரமாய் எங்கோ ஓடிப் போயிருக்க, புத்துணர்வு பெற்றவனாய் நிமிர்ந்தான் நிஷாந்த்.

''நா இப்படி யோசிக்கவே இல்ல... குரு!'' என்றவனின் கண்கள் ஆச்சரியத்தைக் காட்டின.

கிருஷ்ணன் லேசாய் புன்முறுவல் பூக்கவும், ''ரியல்லி... அந்தப் பொண்ணு கிரேட் இல்ல குரு...'' என்றான் சிலாகிப்பாய்.

கிருஷ்ணனுக்குமே அப்படித் தான் பட்டது போலும்! ஆமோதிப்பாய்த் தலையசைத்தவனின் கண்கள், அந்தப் பெண்ணிற்கான பாராட்டைத் தாங்கி நின்றன!

ஒரு நெடிய நிம்மதிப் பெருமூச்சை வெளியிட்ட நிஷாந்த், ''ஐ ஃபீல் பெட்டர் குரு!'' என்றான் முகம் பிரகாசிக்க.

''குட்...'' என கிருஷ்ணன் தட்டிக் கொடுக்கவும்.

''இப்ப... நா என்ன தெரியுமா பண்ணப் போறேன்?'' என அவன் விரலை நீட்டிக் கேட்க.

''போய்... அந்த இந்தியன் நாணை நார் நாரா கிழிக்கப் போறே!'' என்றான் கிருஷ்ணன்.

''இல்லையே... இல்லையே! வீட்டுக்குப் போகப் போறேன்... போய் அப்பா கையால சாம்பார் சாதம் சாப்பிடப் போறேன்!'' என்று குதூகலித்தவன்.

''வாழ்க்கையில முதல் முறையா... என்னைத் தப்பா கணிச்சிருக்கீங்க... குரு'' என்றான் சிரிப்புடன்.

கிருஷ்ணன் மலர்ந்து சிரிக்கவும், ''நான் வரேன்...'' என்று ஓடியேப் போய் விட்டான்.

அவன் வந்த நிலைக்கும், போகும் நிலைக்குமான வித்தியாசத்தை எண்ணியபடியே தன் இருக்கையில் வந்தமர்ந்தான், கிருஷ்ணன்!

அந்த வித்தியாசம்... அந்தப் பெண்ணல்லவோ!

கிருஷ்ணனின் எண்ணத்தைப் பொய்யாக்காமல், அடுத்த நாளே நிஷாந்த் வந்து கிருஷ்ணனிடம் நின்றான்.

''குரு... அந்தப் பொண்ணு உங்க காலேஜ் தானே? அவளோட டீடைல்ஸ் கோல்லேச்ட் பண்ணித் தாங்க குரு! நா அவளை கரெக்ட் பண்ணனும்!'' என்ற கோரிக்கை யுடன் நிஷாந்த் வந்து நிற்க.

கிருஷ்ணனுக்கோ, சமீபத்தில் வெளிவந்த ஓர் படத்தின் ''மச்சான்... அந்த ஃபிகரை எப்படி உஷார் பண்றது சொல் லுடா...'' என்ற வசனமே நெஞ்சுக்குள் வந்து போனது!

பூச்சரத்தில் தொடுக்கப்படும் மூன்றாம் பூ - ஈர்ப்பு!



4

''கொஞ்சம் கூட பயமே இல் லாம... என்னடாப் பேச்சு இது?'' என்று கேட்ட கிருஷ்ணனின் குரலில், கண்டிப்போ பயமோ சிறிதுமில்லை. சிரிப்பேப் பிரதானமாய் இருந்தது!

''பயமா? அதுவும் உங்ககிட்ட...?!'' என்ற அலட்சிய மாய் கேட்ட நிஷாந்த்.

''போங்க குரு! காமெடி பண்ணிக்கிட்டு!'' என்றான் ஒட்டுதல் காட்டியச் சிரிப்புடன்.

''அடிங்க!'' என்று அவன் முதுகில் ஓர் அடி வைத் தாலும்,

''சும்மா... இதென்ன ஸ்வீட் கடைக்குப் போய் அரைக் கிலோ ரசகுல்லா வாங்குற மாதிரின்னு நினைச்சியா?'' என்றான் கிருஷ்ணன், சற்றே நிதர்சனத்தை எடுத்துரைக் கும் வண்ணம்.

''ச்சச்சே...'' என்று உடனே மறுத்த நிஷாந்த், தன்னைப் போலவே உணர்கிறான் என்ற எண்ணத்தில் கிருஷ்ணன் இருக்க, அவனோ ''எனக்கு ரசகுல்லா சுத்தமாப் பிடிக் காது குரு! காஜு கத்லி தான் என்னோட ஃபேவரெட்! உங்களுக்கு 'பாதம்' ஹல்வா தானே ரொம்பப் பிடிக்கும்... அது மாதிரி எனக்கு 'காஜு'கத்லி!'' என்றான் கண்ணைச் சிமிட்டி.

தீவிர்மான ஓர் விவாதத்தை எதிர்நோக்கியிருந்த கிருஷ்ணனுக்கு. வந்த கோபத்திற்கு நிஷாந்தின் முதுகு மத்தளமாய் மாறியிருக்க வேண்டும்! கிருஷ்ணன், திரு வாரூர் பக்தவச்சலம் போல் மிருதங்கத்தில் தோந்தவன் இல்லை என்பதால் நிஷாந்த் தப்பித்தான்!

வந்த கோபத்தை வார்த்தையில் விட்டு, ''நிஜமாவே... செமத்தியா மிதி வாங்கப் போறே?!'' எனக் கிருஷ்ணன் எச்சரிக்க,

''சும்மா துரியோதனன் அவதாரம் எடுத்து... டைம் வேஸ்ட் பண்ணாதீங்க குரு! ஆக்ஸன்ல இறங்குற

வழியைப் பாருங்க! நானும்... என் சைட்ல ட்ரை பண்றேன்!'' என்றவன், கிருஷ்ணனின் பதிலை எதிர்பார்க்காமல், சென்றே விட்டான்.

''வருது... வருது! விலகு.. விலகு! வேங்கை... உன்னைத் தேடி வருது!'' என்று பாடியபடியே நிஷாந்த் செல்ல.

''இவரு பெரிய புலி... சரியான பச்சைப் பால் குடிக்கிற பூனை!'' என்று உதடு பிதுக்கத் தோன்றியது கிருஷ்ணனுக்கு!

கூடவே, ''எனக்கென்னமோ... அவ புலியா இருப்பான்னு தான் தோணுது! இந்தப் பூனை போய் பம்பூன் ஆகிட்டு வரப் போகுது!'' என்ற பெருமூச்சும் வெளியேறியது!

அங்கே அந்தப் புலியோ... ம்ஹூம் பூனையோ, இந்தியன் ரெஸ்டாரண்ட்டில் வண்டி வருவதற்காகத் தேவுடு காத்துக் கொண்டிருந்தது!

வண்டியும் வந்தது!

சாப்பாடும் வந்தது!

அவள் தான் வரவில்லை!

''அடக்கொடுமையே! நேத்து ஏகக் கொடுமையா சமைச்சுட்டீங்களாடா... பொண்ணு ஆளு அரவமே காணோம்!'' - மனதிற்குள் அந்த இந்திய உணவகக்காரனைச் சபித்த போதும், பசித்த வயிறு அவனிடமே சாப்பாடு வாங்க வைத்தது!

உண்டு முடித்ததும் ''அவ்வளவு மோசமில்லையே... ஏன் இந்தப் பொண்ணு ஓடிப் போச்சு...'' என்ற கேள்வியுடன், சுற்றுமுற்றும் பார்த்தபடி நின்றான் நிஷாந்த்.

எங்கெங்கு காணினும், அவளைக் காணாது போக, அவன் சலிப்புடன் காலை உதைக்கும் போது, கைப்பேசி கிணுகிணுத்தது!

பார்த்தால் பிரவீன்!

எடுத்து ''சொல்லு மச்சி...'' என அவன் ஆரம்பிக்க,

''நீ என்ன நினைச்சிட்டு இருக்க மனசில? ஒழுங்கா மரியாதையா ஆபீஸ் வந்து சேரு... சொல்லிட்டேன்! இங்க ஒருத்தன் வந்து... என்னைப் போட்டுக் கேள்வி மேல கேள்வி கேட்டு டார்ச்சர் பண்றான்... நீ என்னடான்னா இன்னும் ஆபீஸ் வராம இருக்கே!'' என்று அவன் பிடிபிடி என பிடிக்கவும், தன் தவறை உணர்ந்தவனாய் ஓடினான் நிஷாந்த்.

கைப்பேசியை அணைத்து சட்டைப்பையில் போடும் போது, தூரத்தில் அந்தப் பெண்ணைப் போல் ஒருத்தி வருவது தெரிந்தது!

''ஆஹா... வராளே...'' என்று ஒரு வினாடி தயங்கியவனுக்கு பிரவீனின் கோபம் முகம் கண் முன்னே வந்து மிரட்டியது!

பிரவீன்... வேலையில் புலி! பேச்சில் எலி!

நிஷாந்தோ... வேலையில் ஆமை! பேச்சில் புலி!

இரண்டு 'புலி'களும் ஒன்றாய் இருந்தால் தான் காசு பார்க்க முடியும் என்பதாலேயே, இந்தக் கூட்டணி வெற்றி பெற்றுக் கொண்டிருந்தது! இப்போது எலியை வாலிபால் விளையாட விட்டால், தன்னைத் தூக்கி போட்டு ஃபுட் பால் ஆடும் அபாயம் இருப்பது புரிய, வேகமாய் அலுவலகம் நோக்கி விரைந்தான் நிஷாந்த்.

''இந்தக் கல்லூரி தானே? எங்கேப் போய் விடப் போகிறாள்?'' என்ற தைரியம் வேறு, அவனை ஓட வைத்தது!

அங்கே அலுவலகத்திற்கு வந்திருந்தவரோ, நிஜமாகவே கேள்விகளால் அவனைப் பந்தாடினார்!

ஆனால், மியூச்சுவல் ஃபண்ட் தொடர்பாய் அவர் கேட்ட கேள்விகள் அனைத்துமே நிஷாந்துக்கு அத்துப் படி என்பதால், அவனால் சமாளிக்க முடிந்தது!

ஒருவழியாய் அவர் கிளம்பிச் சென்றதும், ''நிஷான்... இனிமேல் என்னை மட்டும் டீல் பண்ண விட்டுப் போய்டாதேடா! நானுமே... நீ சொன்னதை தான் சொன்னேன்... ஆனா நீ சொல்லும் போது மண்டையை மண்டையை ஆட்டிச் சரி சொன்னவன், என்னை மட்டும் திகார் ஜெயில் ஜெயிலர் மாதிரியேப் பார்க்கிறான்டா...'' என்று அலுத்துக் கொண்டான் பிரவீன்.

அவன் மிகவும் நொந்து போயிருப்பது நிஷாந்திற்கு புரிந்தது!

''சரி விடு மச்சி! ஒரு கஸ்டமர் கிடைச்சார்ங்கிற சந்தோஷத்தோட விடு...'' என்று நண்பனின் தோள் தட்டிய நிஷாந்த், ''ஹ்ம்ம்... இனிமேல் வேலை நேரத்தில் வெளிய இருந்தோம்... இந்தப் பய நம்மளை ப்ளேட் போட்டே சாவடிச்சுடுவான் போலவே!'' என்று யோசனையுடன் இருக்கையில் அமர்ந்தான்.

மனம் முழுதும், நேற்று அவன் கண்ட முகமே நிரம்பியிருந்தது!

எப்படியாவது அவளைப் பார்த்துவிட வேண்டும் என்ற முடிவு மட்டும், நெஞ்சை விட்டு நீங்காமலிருக்க, அதற்கு என்ன செய்வது என்று தான் தெரியவில்லை.

அவ்வளவு பெரிய கல்லூரியில் அவளை யாரென்று... என்னவென்று விசாரிப்பது?

இந்தியன் மாணவர்கள் கூட்டமைப்பில் விசாரிக்கலாம் தான்! ஆனால், அதற்குப் பேராவது வேண்டாமோ? ஊரும் தெரியாது... பேரும் தெரியாது... ஆனால் அவளைப் பார்க்க வேண்டும்? எப்படி? எப்படி? - மண்டையைக் குடைந்தபடி அமர்ந்திருந்தான் நிஷாந்த்.

வெறுமனே ஒரு முறை பார்த்ததால், நிஷாந்திற்கு இந்த ஈர்ப்பு வந்துவிடவில்லை!

கிருஷ்ணனின் பேச்சு விளைவித்த ''எவ்வளவு பெரிய கஷ்டத்தில இருந்து... என்ன அழகா மீண்டும் வந்திருக்கா...'' என்ற எண்ணமே, அவனது ஈர்ப்பிற்குக் காரணம்!

அவளது இன்றைய நிலை, அவளது மன உறுதியை படம் பிடித்துக் காட்ட, நெஞ்சம் அவள் பால் சாயத் தொடங்கியது!

எப்போதுமே, தன்னிடம் இல்லாத... இல்லாத என்பதை விடவும் இல்லையே என்று ஏங்க வைக்கும் ஓர் குணம் மற்றவரிடம் இருந்தால், அவர் பால் ஓர் ஹீரோ வொர்ஷிப் ஏற்படுமே! அது தான், இங்கும் நடந்தது! என்ன இங்கே, ஹீரோயின் வொர்ஷிப்!

தன்னிடம் இல்லாத மன உறுதியை... அவளிடம் கண்ட நிஷாந்த், அவளிடம் மயங்கி நின்றான் என்றே சொல்ல வேண்டும்!

இது உடலால்... சிரிப்பால்... முகவடிவால்... அழகாய் விழும் முன்னுச்சி முடிக்கற்றையால்... உடல் வளைவுகளால்... வளைந்து சிரிக்கும் நளினங்களால் ஏற்பட்ட

ஈர்ப்பல்ல! அவளது உள்ளத்தின் உறுதி கண்டு வந்த நேசம் இது!

ஆம், தன் எண்ணத்தை ''நேசம்'' என்றே வரையறுத்து விட்டிருந்தான் நிஷாந்த்!

அந்தளவுக்கு, அவன் பால் உள்ளம் தாவியிருந்தது!

அவள் அனுபவித்தத் துன்பத்தைக் கண்ணெதிரே கண்டவன் அல்லவோ நிஷாந்த்!

''ஹய்யோ.. ஹய்யோ... ஏன் இப்படியொரு நிலைமையை அந்தப் பொண்ணுக்குக் கொடுத்தே? இனிமே... அவளோட வாழ்க்கை என்னவாகும்?'' - பார்வையாளனாய் இருந்த அவனையே பல நாட்களுக்கு உலுக்கிப் போட்ட அச்சம்பவத்தை ஒதுக்கி வைத்து விட்டு, மூன்றே வருடங்களில் இங்கே படிக்க வந்திருக்கிறாள் என்றால்? என்னவொரு உறுதி இருக்க வேண்டும்!

நிஷாந்த், அவளது விசிறியாகிப் போனான்!

உள்ளம், பற்பல எதிர்மறை கேள்விகளைக் கேட்ட போது, ''இல்ல... எனக்கு என்னமோ அவளை நான் கரெக்ட் பண்ணியே தீருவேன்னு தோணுது!'' என்று மனசாட்சியிடம் சவால் விட்டான், அந்த வீரன்!

''ஆமா... கிழிச்சே! முதல்ல அவளோட பேரைக் கண்டுபிடிடா... பார்ப்போம்!'' என்று மனசாட்சி சவால் விட.

அடுத்த இரண்டு நாட்களும், அதற்காக ''உழைத்தான்'', நிஷாந்த்! ஆனால், என்ன உழைத்து என்ன புண்ணியம்? அவளைக் கண்ணாலேயேப் பார்க்க முடியவில்லை!

''டேய்... ஒழுங்கா சமைங்களேன்டா...'' என்று அந்த இந்திய உணவகக்காரங்களைச் சபிக்க மட்டுமே முடிந்தது அவனால்!

ஏனோ, அவள் சமீபமாய் தான் அமெரிக்கா வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு வலுத்துக் கொண்டே இருந்தது!

மதிய நேரம் மட்டுமென்று இல்லாமல், மாலை இரவு என்று கிடைக்கும் நேரமெல்லாம் கல்லூரி வளாகத்தையேச் சுற்றி வந்தான் அவனும்!

ஆனால், அவளைக் காணவே முடியவில்லை!

அந்த இயலாமை எல்லாம் கோபமாய் உருமாறி, ''நீங்கெல்லாம் ஒரு ப்ரொஃபசர்? சும்மா... கண்ணாடியை மாட்டிக்கிட்டு... லேப்டாப்பும் கையுமா நியூட்டன் லுக்கோட அங்கேயும் இங்கேயும் அலைஞ்சா ஆச்சா? ஒரு ஸ்டூடெண்ட்- டோ டீட்டெயில் கலெக்ட் பண்ணத் தெரியல!'' என்று கிருஷ்ணனிடம் வெடிக்க வைத்தது!

கிருஷ்ணன் அசந்தால் அல்லவோ?

''என்னப்பா செய்றது? என்னோட கெபாசிட்டி இவ்வளவு தான்! வேணும்னா கீர்த்துகிட்டயோ... அப்பா கிட்டயோ ட்ரை பண்ணிப் பாரேன்! அவங்க ஹெல்ப் பண்ணலாம்!'' என அவன் சோகமாய் உச்சுக் கொட்ட.

''தெய்வமே! தெய்வமே! போட்டுக் கொடுத்துறாதீங்க தெய்வமே!'' என்று கையெடுத்துக் கும்பிட்டான் நிஷாந்த்.

பயந்த அவனுக்கும் தெரியவில்லை. சிரித்த கிருஷ்ணனுக்கும் தெரியவில்லை. கீர்த்தி மூலமாய் தான் அந்தப் பெண்ணின் விவரம் தெரியப் போகிறது என்று!

ஒரு நாள் மாலை, ஏழு மணி இருக்கும்.

அரவாமுதன் வாக்கிங் சென்றிருந்தார்.

கிருஷ்ணன் ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்திருக்க, கீர்த்தி அவன் மடியில் தலை சாய்த்துப் படுத்திருந்தாள்.

நிஷாந்தோ... வீடியோ கேம்ஸ்-இல் தன்னைத் தொலைத்திருந்தான்!

வீட்டுத் தொலைபேசி அடித்தது!

''ச்சை... ஒரு கேம் கூட முழுசா விளையாட முடியல...'' சிறு குழந்தையின் அங்கலாய்ப்புடன், தொலைபேசியை காதில் வைத்த நிஷாந்தின் கோபம் இன்னமும் அதிக மாகியது!

பின்னே, ''டேய்... மாமா!'' என்றல்லவோ ஆரம்ப மாகியது அந்த அழைப்பு.

யாரென்று யோசிக்கவே இடம் கொடாமல், அந்த அழைப்பு அவனைத் தாக்க, ''ஏய்...லூசு நீயா? இப்ப எதுக்கு போன் பண்ணினே?'' என்று கடுப்படித்தான் நிஷாந்த்.

''என்ன மாமா இப்படிக் கேட்டுப்புட்டே... உன்னைக் கொஞ்சோ கொஞ்சுன்னு கொஞ்சி... ஒரு சூப்பர் டூப்பர் டூயட் பாடலாம்ன்னு தான் கூப்பிட்டேன்...'' - எதிர்புறம், கிராமத்துப் பைங்கிளி வேடம் பூண்டது.

''கொஞ்சமாவது பொண்ணுங்கிற வெட்கமிருக்கா... பேச்சைப் பாரு...''

''ஹலோ... ஹலோ... எங்க பேச்சை நாங்க பார்த்துக் கிறோம்... நீங்க கீர்த்தி அக்காவைக் கூப்பிடுங்க!'' என்றவள்.

''இவர் பெரிய கவிஞர் வைரமுத்து... பொண்ணுங்க வெட்கப் படறதை பார்த்துப் பார்த்து... கவிதை எழுதி களைச்சுப் போயிட்டாரு...'' என்று சத்தமாகவே முணுமுணுப்பது ஸ்பீக்கர் தாண்டியும் கேட்டது!

இந்த அபாண்டக் குற்றச்சாட்டைக் கேட்ட நிஷாந்தால் பொறுமையாய் இருக்க முடியுமா என்ன? உடனே, குதித்துக் கொண்டு வந்தன வார்த்தைகள்!

''எனக்கு ஒரு டவுட்... கல்யாணத்தன்னைக்காவது, இந்த வாலை... ச்சே வாயைச் சுருட்டி வச்சிட்டு இருப் பியா? இல்ல... அருந்த வாலு தானா?'' என்றான் கோபமாக.

''அதை... உனக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கிற அன்னைக்குப் பார்த்துப்போம்டா மாமா...'' என்று மற்ற வள் ராகமிழுக்கவும்.

''அட்டா! உனக்குக் கூடக் கலாய்க்க வருதே... சூப்பர்!'' என்று நக்கலாய்ப் பாராட்டினான் நிஷாந்த்.

''ஹே... நிஜமா தான் சொல்றேன்... அங்க ஒரு K.K இருக்க மாதிரி நாம நிர்மலா நிஷாந்த் N.N ஆகிடு வோம்! வாட் சே யூ!'' என்றாள் நிர்மலா.

''நீ விட்டாப் பேசிட்டேப் போவே... இந்தா கீர்த்திகிட்டத் தரேன்...'' என்றவன், கீர்த்தனாவிடம் கிட்டத்தட்ட ஓடி னான்.

''ஹே பாதாம் கீர்... இந்த உன்னோட அருமை தொங் கச்சி சோப்புத் தூள் பேசுது!'' என்று தொலைபேசியைக் கொடுத்துவிட்டு, அங்கிருந்து வேகமாய் நகர்ந்தான்.

பின்னே, வீடியோ கேமைத் தொடர வேண்டுமல்லவா?!

பத்து நிமிடத்திற்கு பின்னர், கையில் தொலைபேசி யுடன் கிருஷ்ணன் அவனைக் கடப்பது ஓரக்கண்ணில் பட்டபோதும், கண்ணை நிமிர்த்த மனம் வரவில்லை அவனுக்கு!

ஆனால், கிருஷ்ணன் பேசியது மட்டும் அவன் காதில் விழுந்தது!

"ஹே... அதென்ன கீர்த்துவை அக்கான்னு சொல்றே... ஆனா என்னை சித்தப்பான்னு சொல்றே? டூ மச்... நிம்மி!"

"....."

"இனிமேல் நானும் நிஷான் மாதிரி... வாஷிங் பவுடர் நிர்மா... நிர்மான்னு பாடிடுவேன்!"

"....."

"அட ஆமா... அவன் தமிழ்ல இல்ல சொல்லுவான்..."

"ஹ்ம்ம்... இனிமேல் சோப்புத் தூள் தான் சொல்லிட்டேன்! ஒழுங்கா க்ரிஷ் அண்ணான்னுக் கூப்பிடு!" - இப்படியாய்ப் பேசிக்கொண்டே சென்றவன், ஒரு வழியாய் போனை வைத்துவிட்டு, மனைவியிடம் சென்றான்.

அந்தப் பக்கம் நிர்மலா என்ன பேசியிருப்பாள் என்பதை ஊகித்தவனாய், முகத்தை அஷ்டகோணலாய்ச் சுளித்து, "குரங்கு..." என்று வாய் விட்டே திட்டிக் கொண்டு, தன் வீடியோ கேமைத் தொடர்ந்தான் நிஷாந்த்.

அவனது முகபாவனையையும், அவன் விட்ட வார்த்தையையும் கேட்ட கிருஷ்ணன். லேசாய்ச் சிரித்துவிட்டு, "நிஷான்... கிட்டத்தட்ட ரெண்டு மணி நேரமா கேம் விளையாடிட்டு இருக்கே... போதும்! கண்ணு கெட்டுடும்!" என்று அறிக்கை விட.,

"இவரு ஒருத்தரு... மக்களவைல இருக்க எதிர்க்கட்சித் தலைவர் மாதிரி... சும்மா சும்மா அறிக்கை விட்டுட்டு..." என்று அலுத்துக் கொண்ட போதும்.

"இதோ... லாஸ்ட் கேம் குரு! முடிச்சிட்டு ஆஃப் பண்ணிடுறேன்!" என்று கிருஷ்ணனின் ஆணையை அடி பணியவும் நிஷாந்த் மறுக்கவில்லை.

அவன் எது செய்தாலும் தன் நல்லதுக்கே என்ற எண்ணம், நிஷாந்தினுள் ஊறிப் போயிருந்ததே இதற்குக் காரணம்!

அந்த வார இறுதியில், "என்னங்க... இன்னைக்கு அந்தப் பொண்ணை வீட்டுக்குக் கூப்பிடுங்க!" என்று திடீரென்று ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்தாள் கீர்த்தனா.

"அந்தப் பெண்" என்றதுமே, நிஷாந்திற்கு "அவளின்" ஞாபகங்கள்.

அவளை எப்படி? என்று அவன் யோசிக்கும் போதே.

"நிர்மலா பிரண்ட் மைவிழி தானே... நேத்தே பேசிட்டேன். இன்னைக்கு டின்னருக்கு வரேன்னு சொல்லியிருக்கா..." என்றான் கிருஷ்ணன்.

"ச்சே... இந்தப் பொண்ணு வேறயா?" என்ற சலிப்பும்.

"அந்தக் குரங்கோட பிரண்டா... இது ஒரு டைனோசரா இருக்கப் போகுது! பேசாம... அது வரப்போ எஸ்கேப் ஆகிடுவோமா?" என்ற எண்ணமும் நிஷாந்தை ஆட்டி வைத்தன.

கிளம்பிவிட வேண்டியது தான் என்று நிஷாந்த் முடிவு செய்யும் போதே, கீர்த்தியை அந்தப் பக்கம் அனுப்பிவிட்டு, "நிஷான்... உனக்கு ஒரு நல்ல சான்ஸ்டா... இன்னைக்கு வர பொண்ணுக்கிட்ட... அந்தக் கோயம்புத்தூர் பொண்ணோட டீட்டெயில்ஸ் சொல்லி, விசாரிக்கலாம்டா! ஏதாவது லூப் கிடைக்கும்!" என்று கிருஷ்ணன், ரகசியம் பேசவும் "ஹே சூப்பர் குரு! இப்படி நான் யோசிக்கவே இல்லையே!" என்று குதூகலித்தவன்,

"குருன்னா... குரு தான்!" என்று ஒரு சல்யூட் வைத்து விட்டு, விசில் அடித்தபடியே நகர்ந்தான்.

''அவளை'' பற்றி எப்படியும் ஒன்றிரண்டு விஷயங் களாவது கிடைக்க வேண்டுமே என்ற பிரார்த்தனையின் விளைவாய், சற்றே எதிர்பார்ப்புடனே மைவிழியின் வருகைக்காகக் காத்திருந்தான், நிஷாந்த்!

பூச்சரத்தில் மணம் வீசும் அடுத்த பூ - எதிர்பார்ப்பு!



5

மைவிழி, அவர்களது வீட் டிற்கு இரவு உணவுக்கு வருவதாய் ஏற்பாடு!

ஆதலால், எப்போதையும் விட இரண்டு... மூன்று உணவு வகைகள் அதிகமாய்ச் சமைப்பதாய் ஏற்பாடு!

சமைப்பது கிருஷ்ணன், காய் வெட்டுவது அரவாமுதன் என்றாலும் எடுபிடி நிஷாந்த் அல்லவோ!

''இந்தச் சிக்கனைக் கிளீன் பண்ணி வை...''

''இந்தப் புதினாவைக் கிள்ளி... கழுவி வை...''

''நிஷான்... என்ன பண்ணிட்டு இருக்கே? பாட்டை அமத்திடுவேன்... ஒழுங்காத் தக்காளியை நறுக்கு! நீ அமுக்குற அமுக்குல... பாதித் தக்காளி ஜூஸ் ஆகிடுச்சு!''

''இன்னும் ரெண்டே ரெண்டு வெங்காயம் நறுக்கி வை. நிஷூ! சாலட்டுக்கு நறுக்கணுங்கிறது முன்னாடி மறந்து போச்சு!''

''பிளேட்ஸ் எல்லாம் டேபிள்ல அரெஞ்ச் பண்ணு...''

கிருஷ்ணன் ஓரோர் ஆணையாய்ப் பிறப்பிக்க நிஷாந்தோ படு எரிச்சலுடன் செயல்பட்டுக் கொண் டிருந்தான்.

இதில், கீர்த்தி வேறு!

''நிஷூ... எனக்கு ரொம்பக் கால் வலிக்கிற மாதிரி இருக்கு! நீ... உள்ளங்காலில ஒரு மசாஜ் பண்ணு வியே... அதைப் பண்ணி விடுறியா?'' என்று வந்து நின்றாள்.

வெளியே பார்த்தால், ஏகக் கோபம் உண்டாக்கக் கூடியது தான்!

ஆனால், நிஷாந்தின் மூளை வேறு வகையில் செயல் பட்டது!

''குரு... கீர்த்துக்குக் கால் வலிக்குதாம்... அவளுக்குக் கால் வலிச்சா உங்களுக்கு நெஞ்சம் வலிக்கும்ல... அதை என்னாலத் தாங்க முடியுமா? இல்ல... கீர்த்துவால தான் தாங்க முடியுமா? சோ... நா அவளுக்கு மசாஜ் பண்ணப் போறேன்...'' என்று ஓடியேப் போனான், சின்னவன்.

''எந்த ஓட்டைடா கிடைக்கும்... அதில பூந்து தப்பிக் கலாம்ன்னு காத்துட்டு இருப்பான்...'' என்று கிருஷ்ணன் முணுமுணுக்க.

அரவாமுதன் லேசாய்ச் சிரிக்கவும், ''என்னப்பா... சிரிக்கிறீங்க? அவன் என்னை ஏமாத்திட்டுப் போறது உங்களுக்குச் சிரிப்பா இருக்கா?'' என்றான் கிருஷ்ணன், கேலியாய்.

''உன்னை ஏமாத்த முடியுமா? அதுவும் அவனால...'' என்று பதில் கேள்வியால் அவனை மடக்கியவர்.

''நா அதுக்காகச் சிரிக்கல கிருஷ்ணா... இந்த நாள்... அதாவது இன்னைக்கு... நீ வரது முன்னாடி எப்படி இருந்துச்சுன்னு நினைச்சுப் பார்த்தேன்... நீ வந்ததும் எங்க வாழ்க்கை எப்படி அழகா மாறிடுச்சுன்னும் நினைச்சேன்!

மனசு லேசாகி... முகத்தில சிரிப்பு வந்துடுச்சு!'' என்றார் தன் ஒரோர் வார்த்தையும் உணர்ந்து!

ஆனால், கிருஷ்ணன் சந்தோஷப்படவில்லை.

''ப்ச்... என்னப்பா இது? கீர்த்துவும் நிஷூவும் ஓரளவு தேறி வந்து, இந்த வருஷம் தான், அந்த துர் சம்பவத்தை நினைக்காம இருக்காங்க! நீங்க என்னடான்னா...'' என அவன் கடிந்து கொள்ள,

''என்னால மறக்க முடியலையே கிருஷ்ணா... அவங்களோட சந்தோசம் தொலைஞ்சு போக, நான் தானே காரணம்! என்னால தானே...'' என்று சட்டென அரற்ற ஆரம்பித்துவிட்டார் பெரியவர்.

''அப்பா! இனிமேல்... உங்களை நான் கன்சோல் பண்ண மாட்டேன்... நிஷாந்தை விட்டுத் தான் கன்சோல் பண்ணச் சொல்லுவேன்...'' என்று தீவிரமாய் மிரட்டியவன்,

அரவாமுதன் புரியாமல் பார்க்கவும்,

''நிஷான்... அப்பாக்கு லேசாத் தலைவலிக்குதாம்... நீ எப்பவும் போடுவியே ஒரு ப்ளாக் டீ... அது ஒரு கப் போட்டுக் கொடு!'' என்று கிருஷ்ணன், வரவேற்பறை நோக்கிக் குரல் கொடுக்க,

''டேய்... டேய்... ஏன் கிருஷ்ணா? ஐயோ... அவனைப் போய்... ஐயோ... அதுவும் ப்ளாக் டீ... சும்மா இருடா...'' என்று பதறிய அரவாமுதனுக்கு, முந்தைய பயமெல்லாம் கண்காணாமல் ஓடியே போயிற்று!

உடலும், மனமும் ''ப்ளாக் டீ'' பீதியில் வெளுத்திருக்க,

நிஷாந்தோ ''அட... என்னோட ப்ளாக் டீக்கு வீட்டுக்குள்ளேயே ஒரு பெரிய விசிறி இருக்கிறது தெரியாமப் போச்சே? அப்பா... வெயிட்... இந்த மசாஜ் முடிச்சிட்டு.

உங்களுக்கு டீ போட்டுத் தரேன்...'' என்றான் உற்சாகமாய்.

அரவாமுதனின் முகம் மேலும் வெளுத்தது!

கிருஷ்ணன் வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க, ''ஏன்டா... இந்த விபரீத விளையாட்டு!?'' என்று தலையில் அடித்துக் கொண்டவர்.

''வேணாம் நிஷான்! அப்பாவுக்குச் சரியாகிடுச்சு'' என்றார் வேகமாய்.

''அதெப்படி இவ்வளவு சீக்கிரம் சரியாகும்?'' - நிஷாந்த் விடுவதாய் இல்லை.

''சரியாகிடுச்சுன்னா விடேன்டா... சும்மா தலை வலியைப் போய் குறுக்கு விசாரணைப் பண்ணிக்கிட்டு!'' என்றார் அரவாமுதன் எரிச்சலாய்.

''ஹ்ம்ம்... போங்க... உங்க தலைவலிக்கு என்னோட டீயோட பேரைக் கேட்டதுமே பீதி வந்துடுச்சு... அதான் வாதம்... பிரதிவாதம் எதுக்குமே இடம் கொடுக்காம ஓடிப் போயிடுச்சு...'' என்று உதடு பிதுக்கி, உச்சு கொட்டிக் கொண்டான் நிஷாந்த்.

அந்த நேரத்தில் தான், மைவிழி அவர்கள் வீட்டுக்குள் நுழைந்தாள்.

வரவேற்பறை சோபாவில் கீர்த்தி சாய்ந்தமர்ந்திருக்க, கீழே சம்மணமிட்டு அமர்ந்து, கீர்த்தியின் வலது காலை இடது உள்ளங்கையில் தாங்கிக் கொண்டு, வலது கை பெருவிரலால் அவளது கால்களின் விரல்களை அமுக்கிக் கொண்டிருந்தான் நிஷாந்த்.

கை தன் போக்கில் வேலை செய்ய, வாயோ ''ப்ளாக் டீ'' பற்றிய படோபகத்தில் மூழ்கியிருந்தது!

உள்ளே நுழைந்து அவனது உரையாடலின் சில பகுதியைக் கேட்டதுமே, ''யப்பா... என்ன வாய்... இந்த லூஸ் டாக் லொடுக்கு பாண்டி தான் நிஷாந்த் போல...'' என்று தன்னுள் முடிவு பண்ணி விட்டிருந்தாள் மைவிழி!

நிர்மலா தான், அந்தக் குடும்பத்து நபர்களைப் பற்றி விலாவாரியாக அவளிடம் கூறியிருந்தாளே!

அதுவும், நிஷாந்திற்கு அவள் கொடுத்த அறிமுகம் இன்னமும் மைவிழியின் மனதில் பதிந்து போயிருந்தது!

''ட்ரபிள்சம்... ஹாண்ட்சம் லொட லொட பாய்! இங்க 'பாய்'ங்கிற அடைமொழியை நல்லா நோட் பண்ணிக்கோ... அது ஒரு மான்லி பாய்!'' என்று நிர்மலா கூறியது, நூற்றுக்கு நூறு உண்மை என்றே பட்டது அவளுக்கு!

கூடவே, சின்னக் கீற்றாய் ஓர் புன்னகையும்!

ஆனால், அந்தப் புன்னகை கீர்த்தியின் கால் மீது நிஷாந்தின் விரல்கள் தடம் பதித்த இடங்களைக் கண்டு மறைந்தது!

உள்ளுக்குள் எதுவோ உந்த, 'விருந்தினர்' என்ற தனது அடையாளத்தை மறந்து வேகமாய் வீட்டினுள் பிர வேசித்தாள்.

வேக எட்டுக்கள் எடுத்து வைத்து, கீர்த்தியின் அருகே வந்தவள், சட்டெனக் குனிந்து நிஷாந்தின் பிடியிலிருந்த அவளது காலை விலக்கி வைத்தாள்.

அந்த அதிரடி நடவடிக்கையில், கீர்த்தி - நிஷாந்த் இரண்டு பேருமே திகைத்துப் போயினர்!

கீர்த்திக்கு, ''யார் இந்த பொண்ணு?'' என்ற கேள்வியும், ''ஏன் காலைத் தட்டிவிட்டா... கால் வலிக்கு எவ்வளவு சுகமா இருந்துச்சு!'' என்ற அங்கலாய்ப்பும் மட்டுமே!

நிஷாந்திற்கோ அதிர்ச்சி என்றால் அதிர்ச்சி அப்படி யொரு அதிர்ச்சி!

''இவளா? இவளா? இவளா?'' என்ற கேள்வியே மனதை முழுதும் ஆக்கிரமிக்க, அவள் முகத்தை விட்டு அகல்வேனா என்றன கண்கள்!

ஆனால், அவளோ அவனைக் கவனிக்கும் மனநிலை யில் இல்லை. ஏன் அவனை ஒரு பொருட்டாகக் கூட அவள் நினைக்கவே இல்லை.

கீர்த்தியின் புறம் திரும்பி, ''என்ன கீர்த்திக்கா பயந்துட் டீங்களா? நான் தான் மைவிழி... நிம்மியோட பிரண்ட்!'' என்று தன்னைத் தானே அறிமுகம் செய்து கொண்டவள்.

''சாரி... உங்க தம்பி கால் அமுக்கி விடுற விதம் ரொம்பத் தப்பு கீர்த்திக்கா... அதான் தட்டிவிட்டேன்...'' என்றாள் தன் செயலுக்கான விளக்கமாய்.

அதுவரையிலும், அவள் முகத்தையே ஊன்றி கவ னித்துக் கொண்டிருந்த நிஷாந்த், அவளது குற்றச் சாட்டில் சட்டெனச் சிலிர்த்தான்.

''என்ன தப்பு? கால் வலிச்சா... உள்ளங்காலில இருக்க அக்கு ப்ரெஷர் பாயிண்ட்ஸ்ல அழுத்தம் கொடுத்தா... சரியாகிடும்! அதைத் தானே செஞ்சேன்...'' என்று கோபம் கொண்டான் நிஷாந்த்.

ஆனால், மைவிழி அவன் புறம் திரும்பினால் அல் லவோ?!

கீர்த்தியையே பார்த்துக் கொண்டு, ''உங்க தம்பி... ஃபினான்ஸ் தானே படிச்சிருக்கார்? ஒருவேளை... அக்கு ப்ரெஷர் தெரப்பியும் பார்ட் டைம்ல படிச்சாரா?'' என்று அவள் கண்ணை உருட்ட,

''இல்ல.. எம்.பி.ஏ தான் படிச்சான்...'' - கீர்த்தியின் குரலில் ஸ்ருதி சன்னமாய் மட்டுப்பட்டது.

''ஹ்ம்ம்...'' என்று பெரிதாய் ஒரு நெடுமூச்சை அவள் வெளியிடவும்.

''இந்த மேடம்... அங்கு ப்ரெஷர் தெரப்பியை பாலில கலந்து மடக்கு... மடக்குன்னு குடிச்சிருக்காங்களா என்ன?'' என்று நக்கலாய்க் கேட்டான் நிஷாந்த்.

அவனுக்கு தனக்குத் தெரிந்த வேலையைக் குறை சொல்லிவிட்டாளே என்ற கோபம்!

மைவிழியை அவனது கோபம் பாதிக்கவே இல்லை!

மெல்லத் தலை குனிந்து, கீர்த்தியின் கால்களைப் பற்றியவள், ஒற்றை சலங்கை வைத்து சிந்து பாடிய மெட்டியை லேசாய்ச் சுண்டி விட்டாள்.

''இதை... அதான் மெட்டி எதுக்குப் போடுறாங்க தெரியுமா?'' என்றாள் கண்ணைக் கீர்த்தியிடமே வைத்து.

''கல்யாணமானதும் போடுவாங்க! அவரு போட்டாரு...'' என்று இழுத்த கீர்த்தியின் முகம், தன் திருமண நாளை எண்ணி லேசாய் வெட்கம் கொண்டது.

''அச்சோ... என்னழகா வெட்கப்படுறீங்க...'' என்று கீர்த்தியின் கன்னம் தட்டியவள்,

பெருவிரலுக்கு அடுத்திருக்கும் விரலைச் சுட்டிக் காட்டி, ''இந்த விரல்ல ஒரு நரம்பிருக்கு... அந்த நரம்பு கர்ப்பப்பையோட கனெக்ட் ஆகுது... கல்யாணமானப் பொண்ணுங்களுக்கு இந்த விரல்ல மெட்டி போடுறதால, அதில ஒரு அழுத்தம் ஏற்பட்டு... அது கர்ப்பப்பையை அழுத்தும். அந்த அழுத்தம்... கர்ப்பம் தரிக்கிறதை ஈஸியாக்கும்!'' என்று நீண்ட உரை ஒன்றை நிகழ்த்தினாள்.

அந்த உரையைக் கீர்த்தி புருவம் உயர்த்திக் கேட்டிருக்க, நிஷாந்தோ மண்டையைச் சொரிந்து கொண்டிருந்தான்.

மைவிழிக்கு மெல்லியதாய்ச் சிரிப்பு வந்தது!

''சரியான பேக்கு...'' என்று மனதிற்குள் சலித்துக் கொண்டவள்.

''உங்க தம்பி... குருட்டாம் போக்கில, அங்கையும் இங்கையும் அமுக்கி வச்சு... அந்த அழுத்தம் கூட, உங்க கர்ப்பப்பையில இருக்க கருவைப் பாதிக்கலாம்!'' என்றாள் நிஜத்தை எடுத்துரைக்கும் குரலில்.

அங்கே, சற்று நேரம் பலத்த அமைதி நிலவியது!

அவ்வளவு நேரம், முகத்தில் கோபத்துடன் அமர்ந்திருந்த நிஷாந்த், ஒன்றும் பேசாமல் அங்கிருந்து எழுந்து போனான்.

கீர்த்தியோ கண்ணில் பயத்துடன், அடி வயிற்றில் கை வைத்துக் கொண்டாள்.

அவளது செயலைக் கண்ட மைவிழிக்கு, உள்ளம் கனிந்தது!

எதையும் யோசிக்காமல் சொல்லிவிட்டோமோ என்று ஒரு நிமிடம் தோன்றினாலும், ''அவள் நல்லதுக்குத் தானே?'' என்று மனம் தேறியது.

''ஹய்யோ... ஏன் கீர்த்திக்கா இப்படிப் பயப்படுறீங்க? உங்கக் குட்டிப் பாப்பாக்கு ஒண்ணும் ஆகியிருக்காது... இனிமேலும் எதுவும் ஆகிடக் கூடாதில்லையா... அதான் சொன்னேன்...'' என்றாள் கீர்த்தியின் கன்னம் தொட்டு.

கீர்த்தியோ, தன் கன்னத்தில் பதிந்திருந்த அவளது விரல்களைப் பிடித்துக் கொண்டு, ''ரொம்ப நாள் கழிச்சு,

எனக்கு பாப்பா வரப் போகுது... ஒண்ணும் ஆகாது தானே?'' என்றாள் கண்ணில் பயத்துடன்.

ஏழு வருடங்களுக்குப் பின்னர், கீர்த்தி செயற்கை முறையில் கருத்தரித்து இருப்பது மைவிழிக்கு, நிர்மலா வின் வாய்மொழியாய்த் தெரியும்.

அதுவும், குழந்தை... குழந்தை என்று அவள் மறுகித் தவித்ததை, ''ரோட்டில பிச்சை எடுக்கிற குழந்தைங் களைப் பார்க்கும் போது, ஏன் முருகா இந்த குழந்தைங் களை இப்படிப் பிறக்க வைக்கிற? என்னோட கீர்த்து அக்கா குழந்தை வேணும்... வேணும்ன்னு எவ்வளவு ஆசைப்படறாங்க... அவங்க வீட்டில இந்த குழந்தைங் களைப் பிறக்க வைக்கக் கூடாதா? எவ்ளோ நல்லா பார்த் துப்பாங்க...'' என்று தான் வருந்தியதை, தொண்டை யடைக்க நிர்மலா கூறியபோது, மைவிழிக்குமே கஷ்ட மாய் தான் இருந்தது!

அப்படிப்பட்ட ஓர் ஆசை, ஒரு சிறு தவறால் சிதறி விடக் கூடாதே என்ற பயத்தில் தான் மைவிழி, நிஷாந்தின் செயலைத் தடுத்ததே!

ஆனால், அந்தச் செயல்... கீர்த்தியை அளவுக்கு அதிகமாய் பாதித்து விட்டது என்பது புரிய,

சிறு குழந்தையின் பயத்துடன் தெரிந்த அந்த முகத்தை வருடி, ''ம்ஹூம்! ஆகவே ஆகாது! முருகன் பார்த்துப் பார்!'' என்றாள் உறுதியாக.

இந்தப் பேச்சு வார்த்தை முழுதையும், அடுக்களை வாயிலில் நின்று கேட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணன், அதற்கு மேல் அங்கிருப்பது நாகரீகம் அல்ல என்று உணர்ந் தவனாய் ''வாம்மா மைவிழி...'' என்றபடியே வந்தான்.

ஏற்கனவே தொலைபேசியில் பேசியவன் என்பதால், ''ஹலோ அண்ணா...'' என்று சிநேகமாய்ப் புன்னகைத்து, அவனுடன் கை குலுக்கினாள்.

''வந்ததும் வராததுமா... நிஷாந்தை ஒரு கலக்குக் கலக்கிட்டே போல? பையன்... ஆள் அட்ரஸே காணோம்...'' என்று கிருஷ்ணன் சிரிக்க.

''ஹஹ்ஹா...'' என்று சிரித்தாளே ஒழிய, மைவிழி எதுவும் மறுத்துப் பேசவில்லை.

அதன் பின்னர், மைவிழி பற்றிய சிறு முன்னுரை கொடுக்கப்பட்டது.

அவளது தந்தை - நடராஜன், கோயம்புத்தூரில் பருத்தி நூல் வணிகம் செய்யும் ஓர் செல்வந்தர். தாய் - சிவகாமி, குடும்பத் தலைவி. தம்பி - சாண்டில்யன் - மூன்றாமாண்டு பொறியியல் படிக்கும் மாணவன், கூடவே, தாய் வழிப் பாட்டி - அமுதம்.

இங்கே, ஃபிலடெல்ஃபியாவில் பயோ - டெக்னாலஜி யில் மேற்படிப்புப் படிக்க வந்து பத்து நாட்களே ஆகிறது!

சிறு புன்னகையுடன் மைவிழி, தன் முன்னுரையை முடிக்கவும்.

''நிர்மலாவை எப்படிம்மா பழக்கம்? அவ கோயம்புத் தூர்ல படிச்ச மாதிரி ஞாபகமில்லையே...'' என்று அரவாமுதன் கேட்க.

மைவிழியின் முகத்தில் கோடென சிறு வலி சென்று மறைந்தது!

ஆனால், அது பொய்யோ என்று எண்ணும் அளவிற்கு, ''அவ கோயம்புத்தூர் வந்தா தான் நாங்க பிரண்ட்ஸ்

ஆக முடியுமா அங்கிள்? நா சென்னை போனேன்... என்னோட யூ.ஜி நா சென்னைல தான் பண்ணினேன் அங்கிள்'' என்றாள் நிலைத்த சிரிப்புடன்.

பாந்தமான அந்தச் சிரிப்பு, பெரியவரையும் தொற்றிக் கொண்டது.

''நிர்மலா மாதிரியே நல்லா பேசுறேம்மா...'' என்று அவர் சான்றிதழ் வழங்க.

''என்னைப் பிடிக்கலைன்னா நேரடியா சொல்லிடுங்க அங்கிள்... இப்படி அசிங்கப்படுத்தாதீங்க...'' என்று சோகம் போல் அவள் சொல்லவும், சிறு அமைதிக்குப் பின்னர், அந்த வீடே சிரிப்பலையில் மூழ்கியது.

சிரிப்பினூடே இரவு உணவும் முடிந்தது!

ஆனால், நம் தலைவர் நிஷாந்த் தான் அறையை விட்டு வரவேயில்லை.

கிருஷ்ணன் அழைத்ததற்குக் கூட, ''இல்ல குரு... எனக்கு மூடு ஒரு மாதிரி இருக்கு... அங்க வந்து உங்களோட ஹாப்பினஸை ஸ்பாயில் பண்ண விரும்பலை...'' எனக் கூறிவிட்டு எம்பதுகளில் வந்த ஓர் பாடலை ஓட விட்டு, அதில் மூழ்கிப் போனான்.

கிருஷ்ணனும் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை.

நிஷாந்த் தேடும் ''அந்தப் பெண்ணை'' பற்றிச் சொல்லலாம் என்று வாய் வரை வந்த வார்த்தையை உள்ளேயே புதைத்துக் கொண்டான். அவன் மனதை ஏற்கனவே ஏதோ ஒன்று தின்று கொண்டிருக்கிறது... இதில் இது வேறு எதற்கு என்று எண்ணினான் போலும்!

உணவு முடிந்து, கிளம்புகையில் ''உங்க தம்பியை கண்ணிலேயே காணோமே? நா சொன்னதில கோபமா இருக்காரா?'' என்று கேட்ட மைவிழி.

''சாரி கேட்டேன்னே சொல்லுங்க...'' என்று சொல்லியிருப்பாள் என்று எண்ணினாள் தவறு!

''புருவம் முடியுற இடத்தில... ரெண்டு பக்கமும் பெருவிரலால அழுத்தி பிடிக்கச் சொல்லுங்க... கோபம் பறந்தே போய்டும்! அப்புறம்... தப்புத் தப்பு அக்கு பிரேசர் தெரப்பி செய்யாம இருக்கிறதுக்கு... மூளையில ஒரு ஸ்போர்ட் இருக்கு, அங்க ஒரு அடி நச்சுன்னு வச்சா போதும்... எல்லாம் தெளிஞ்சிடும்!'' என்று படு தீவிரமாகச் சொல்லிவிட்டு, அழகாய்க் கண் சிமிட்டினாள் மைவிழி.

அவள் கூறியதை முதலில் கிரகித்த கிருஷ்ணன், ''நிஷான் கேட்டிருக்கணும்... வீடே போர்க்களம் ஆகியிருக்கும்!'' என்றான் சிரிப்புடன்.

மைவிழியோ ''வாழ்க்கையே போர்க்களம்... வாழ்ந்து தான் பார்க்கணும்! போர்க்களம் மாறலாம்... போர்கள் தான் மாறுமா?'' என்றாள் சிரிப்புடன்.

அதே சந்தோஷத்துடன், அவள் கிளம்பிச் சென்று விட, கிருஷ்ணன் நிஷாந்திடம் சென்றான்.

''என்ன நிஷான் இது? வீட்டுக்கு ஒருத்தர் வந்திருக்கும் போது, இப்படித் தான் தனியா வந்து உக்காந்துக் கிறதா? நீ இன்னும் சின்னப்புள்ளையா?'' என்று லேசாய் கடிந்து கொள்ளவும்.

ஜன்னலருகே ஓர் நாற்காலியில் அமர்ந்து, தொலை வானத்தை வெறித்துக் கொண்டிருந்த நிஷாந்த், சட்டென எழுந்து கிருஷ்ணனின் கை பற்றினான்.

குரல் கரகரக்க, ''பாப்பாக்கு எதுவும் ஆகாதில்ல குரு? நா ஏதோ எக்குத்தப்பா பண்ணி... பாப்பாக்கு...'' என்று அவன் பயம் மேலிட கேட்கவும்.

கிருஷ்ணனுக்கு உருகிவிட்டது!

''அதெல்லாம் ஒண்ணும் ஆகாது... நிஷான்! ரிலாக்ஸ்!'' என்றான் இதமாய்.

எதையோ எண்ணி பயந்தவனாய், ''இல்ல குரு... இன்னைக்கு... இன்னைக்கு... அம்மா... எனக்கு பயமா இருக்கு குரு!'' என்றான், கண்களை இறுக மூடிக் கொண்டு.

''ச்சீ...லூசு! கண்டதையும் கற்பனைப் பண்ணாத!'' என்று அதட்டியவன், நிஷாந்தின் முகம் அப்போதும் தெளியாமலிருக்கவே,

''ஹே... மைவிழிகிட்ட அந்தக் கோயம்புத்தூர் பொண்ணைப் பத்திக் கேட்டிருக்கலாம் இல்ல... ஒரே ஊருங்கிற தால அவளுக்குத் தெரிஞ்சிருக்கும்...'' என்று நிஷாந்திற்குப் பிடித்த விஷயத்தின் புறம் திசைத் திருப்பினான், கிருஷ்ணன்.

ஆனால், நிஷாந்தோ ''ஒரே ஊரில்ல குரு! ஒரே ஆரு தான்!'' என மிக சாதாரணமாய் கூற,

அதிர்ச்சியோ... திகைப்போ... சந்தோஷமோ.... அலுப்போ... எதுவுமே இல்லாமல். வெறும் பச்சைத் தண்ணீராய் அவன் கூறிய விஷயம். கிருஷ்ணனின் மனதினுள் பதியவே முழுதாய் ஒரு நிமிடம் பிடித்தது!

''என்னடா சொல்றே? அந்தப் பெண்ணா இவ? அன்னைக்கு... நடந்த கொடுமைக்கான அடையாளமே இல்லையேடா...'' என்றான் அவன், உச்சக்கட்ட மலைப்புடன்!

பூச்சரத்தில் தொடுக்கப்படும் ஐந்தாம் பூ - பிரமிப்பு!



6

நிஷாந்திற்கு மைவிழி வந்து போன பிரமிப்பு நீங்கவே நான்கு நாட்கள் ஆகிற்று.

அதை விடவும், அவள் சொல்லிச் சென்ற ''அக்கு ப்ரெஷர்'' பற்றிய பயம் மனதைக் கவ்வி நின்றது!

ஏனோ உள்ளுக்குள் ஒருவிதக் கலவரம் குடியேற, நிஷாந்த் தன் இயல்புக்கு முரணாய், அமைதியாகவே இருந்தான்.

அதுவே, அந்த வீட்டில் சிறு சலசலப்பை உண்டு பண்ணியது!

அரவாமுதனே, ''என்ன நிஷூ... ஏன் இப்படி இருக்கே? அம்மா ஞாபகமா இருக்கா?'' என்று மகனிடம் கேட்டு விட்டார். அவரால், அவன் தன் சுட்டித்தனத்தை அடக்கிக் கொண்டு, எப்போதும் ஏதோ சிந்தனையில் இருப்பதைக் காண முடியவில்லை. முன்னர் போல், தன்னுள்ளேயே அவன் அமுங்கிப் போகும் அபாயம் தெரிய, தந்தையாய் பதறிப் போனார்.

தந்தை, தாயை நினைவு படுத்தவும், சட்டென முகம் வாடிப் போனான் நிஷாந்த்.

''இல்லப்பா... என்னமோ மனசே சரியில்லை! என்னோட பிடிவாதத்தால அம்மாவை இழந்துட்டேன்... இப்பவும் அந்த மாதிரி...'' முடிக்காமல், நெஞ்சைப் பிசைந்து கொண்டு முகம் வெளிறி நின்றான் நிஷாந்த்.

''ஷ்ஷ்... நிஷான்! எண்ணம் போல் வாழ்வுன்னு பெரிய வங்க சும்மா சொல்லலை... நம்மளோட எண்ணம் நல்லா இருந்தா, நடக்கிறதும் நல்லபடியாக நடக்கும்!'' என

அரவாமுதன் தேற்றியபோதும், நிஷாந்தின் முகம் தெளியவில்லை.

அதனாலேயே என்னவோ, மைவிழியைச் சந்திக்கும் முயற்சியைக் கூட அவன் எடுக்கவில்லை.

ஆனால், அவள் முகமும்... அதில் தெரிந்த கம்பீரமும் அவனைக் கவரவே செய்தன!

அதிலும், முந்தைய வாழ்வின் சிறு சுவடு கூட இல்லாமல், அவள் இயல்பாய் இருப்பது அவனுக்குப் பிடித்திருந்தது!

''ஐயோ... எனக்கு இப்படி ஆகிவிட்டதே... கடவுளே... கடவுளே...'' என்று நடந்ததை நினைத்து உடலும் மனமும் மறுகிக் கொண்டிராமல், அவள் அதைத் தூக்கி எறிந்துவிட்டு, அழகாய் வெளிவந்து பிரகாசிப்பது, இரும்பு மனுஷியாய் அவளைக் காட்சிப்படுத்தியது!

வேதனையையே வாழ்க்கையாக்கிக் கொள்ளாமல், அந்த வேதனையில் ஓர் விடியலைத் தேடி வெற்றி நடை போடும் அவளுக்கு... நிஷாந்த் நிரந்தர விசிறியாகிப் போனான்.

இப்போதும் அவளைக் கரெக்ட் பண்ணும் ஐடியா சாருக்கு இருக்கவே செய்தது! ஆனால், அதைச் செயல் படுத்த விடாமல், மனதை ஏதோ குடைந்தது!

அவளை விடவும், தன் குடும்பத்தின் புதுவரவின் மீது உயிரை வைத்திருந்த நிஷாந்திற்கு, தன்னால் அதற்கு ஓர் பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்ற பயம் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது!

பல வருடங்கள் கழித்து, தன் தாயின் மறுபிறப்பாய் உதிக்கப் போகும் அந்தச் சின்னச் சீட்டின் மீது நிஷாந்த் இப்போதே உயிரை வைத்திருந்தான்!

அதற்கு ஒரு பாதிப்பு... அதுவும் தன்னால் என்றால், அவனால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை!

இது தான் நிஷாந்த்!

ஒன்று நடப்பதற்கு முன்னரே, இப்படி நடந்து விடுமோ... அப்படி நடந்து விடுமோ என்று எப்போதும் எதிர்மறை சிந்தனையிலேயே உழன்று கொண்டிருப்பான்!

அதுவும், அந்தக் கெட்ட விஷயம் நடக்க தானும் ஓர் வகையில் காரணம் என்பது போல் தெரிந்துவிட்டால் அவ்வளவு தான்! அவன் மனம். கட்டுக்கடங்காமல் அலைபாயத் தொடங்கிவிடும்!

''என்னால் தான்... என்னால் தான்...'' என்ற தவிப்பும்.

கெட்டது நடந்துவிடின். வீட்டிலிருப்போர் எப்படித் தாங்குவார்கள் என்ற பரிதவிப்புமாய், அவனும் தவித்து, மற்றவர்களையும் கவலை கொள்ள வைத்து விடுவான்!

அது தான், இப்போதும் நடந்தது!

நிஷாந்தின் பயம்... நிஜமாகியது!

ஆம், அடுத்து வந்த பரிசோதனைக்குச் சென்ற கீர்த்தியிடம், எழுபத்தியெட்டு நாட்கள் வளர்ந்திருக்க வேண்டிய கரு எழுபத்திரண்டு நாட்களே வளர்ந்திருப்ப தாகவும், இதை இப்படியே விட்டால் மனநலம் குன்றிய குழந்தை தான் பிறக்கும் என்றும், அதனால் இந்தக் கருவை இப்போது அப்புறப்படுத்திவிட வேண்டும் என்றும் கூறினார் மருத்துவர்!

வீடே சோகமானது!

அதிலும், நிஷாந்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! மனது ஒடிந்து போனான் அவன்!

விஷயம் கேள்விப்பட்டு, மைவிழி வீட்டிற்கு வந்தாள்.

அவள் வந்தது ஓர் ஞாயிற்றுக்கிழமை.

அவள் வீட்டுக்கு வரும்போது, அரவாமுதன் பூஜை யறையில் அமர்ந்திருந்தார்.

கீர்த்தியும் கிருஷ்ணனும் வீட்டுத் தோட்டத்தில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் அமர்ந்திருந்தனர்.

கிருஷ்ணன், ஊஞ்சலில் சாய்ந்தமர்ந்து வானத்தையே வெறித்துக் கொண்டிருக்க, அந்தக் கண்களில் கரை காணா வலி இருப்பது வெளிப்படையாய் தெரிந்தது.

முதல் பார்வையிலேயே, ''ஆள் செம உறுதியான பார்ட்டி'' என்று கணக்குப் போடவைக்கும் கிருஷ்ணனே இடிந்து போயிருந்தான் என்றால், கீர்த்தி எம்மாத்திரம்?

கண்ணில் வடியும் கண்ணீரைக் கூடத் துடைக்கத் தோன்றாமல், கணவனின் தோளில் ஒண்டிக் கொண்டிருந் தாள் அவள்.

கிருஷ்ணனின் கைகளோ அவளை ஆதரவாய் வரு டியபடி இருந்தன!

சற்று நேரம், மைவிழிக்கு மனதை ஏதோ செய்தது!

தன்னால் தான்... தனது பேச்சினால் தான் இந்த நிலைமையோ என்று மனம் தடுமாறியது!

ஒருவேளை, தான் நிஷாந்தை தடுக்காமல் இருந்திருந் தால், இப்படியொரு துர்பாக்கியம் நிகழ்ந்தே இருக் காதோ என்று வருந்திய மனதைத் தேற்றிக் கொண்டு, மெல்ல அவர்கள் அருகே சென்றாள் மைவிழி.

அவள் வந்ததைக் கூட உணராமல், கணவனும் மனை வியும் தங்களது துக்கத்திலேயே உழன்று கொண்டிருந்தனர்.

தன் வருகையைக் கூட கவனிக்காத அவர்களது கவலை, மைவிழியின் மான்விழிகளில் மிரட்சியைக் கொண்டு வந்தது!

மெல்ல, கீர்த்தியின் அருகே சென்று அவளது கைகளைப் பிடித்துக் கொண்டவள், ''சாரி கீர்த்திக்கா...'' என்றாள் வருத்தம் மேலிட

சட்டென உணர்ச்சி பெற்றவளாய், கணவனின் கையணைப்பில் இருந்து வெளிவந்த கீர்த்தி, ''மைவிழி...'' என்றாள் தவிப்புடன்.

அந்த அழைப்பில் தென்பட்ட வலியை விடவும், அதில் தெரிந்த ஓர் நெருக்கம்... ஓர் நிம்மதி... மைவிழியை அசைத்தது!

''கீர்த்திக்கா... ரொம்ப சாரி கீர்த்திக்கா... எனக்கு உங்களோட வேதனை புரியுது... இந்த வேதனைக்கு நானும் ஒரு வகையில் காரணம்ன்னு நினைக்கும் போது கஷ்டமா இருக்கு...'' என்றாள் ஆழ்ந்த வருத்தத்துடன்.

''ப்ச்...'' என்று உச்சுக் கொட்டிய கீர்த்தியைத் தொடர்ந்து,

''எல்லாம் என்னோட தலையெழுத்து, மைவிழி! அது... கீர்த்தியையும் பாதிக்குது!''

''அச்சோ என்ன அண்ணா இது? நீங்களே இப்படிப் பேசலாமா?''

''பின்ன என்ன? எனக்கு என்னோடக் குடும்பத்தோட... அதாவது என்னோட அம்மா - அப்பாவோட ஒரு ஒட்டுதல் இருந்ததே இல்லை... சரி பெத்தவங்களோட தான் ஒட்டுதல் இல்லாமப் போச்சு... பொறக்கப் போற குழந்தையோடவாவது சந்தோஷமா இருப்போம்ன்னு நினைச்சேன்... ப்ச்... அதுக்கும்...'' என்றான் கிருஷ்ணன். தன் வேதனையை மறையாது வெளியிட்டு.

கணவன் தன் மன ஆதங்கத்தை வெளியிட்ட நிமிடமில்லாமல், கீர்த்தி விம்மி வெடித்து அழுதாள்.

''அவங்களுக்கு... ஒரு நியாயமான சந்தோஷத்தைக் கூட என்னால கொடுக்க முடியலையேன்னு வருத்தமா இருக்கு... மைவிழி!'' என்று அவள் குமுறி அழ.

''அடடா... இதென்ன ரெண்டு பேருமே இப்படி அரற்றிட்டே இருந்தா.. நல்லாவா இருக்கு!'' என்று அதட்டிய மைவிழி.

''உங்ககிட்ட இருந்து நான் இதை எதிர்பார்க்கவே இல்லை... கிருஷ் அண்ணா!'' என்றாள் கிருஷ்ணனின் புறம் திரும்பி.

அவன் பதில் சொல்வதற்கு முன்னர், ''நீங்க வந்ததுக்கு அப்புறம், கீர்த்திக்காவோட லைஃப்பும்... நிஷாந்தோட லைஃப்பும் எப்படி மாறிச்சுன்னு, எனக்கு நிம்மி சொல்லியிருக்கா! அவங்களோட வாழ்க்கையில ஒரு பாசிடிவ் இம்பாக்ட் கொண்டு வர முடிஞ்ச உங்களால, உங்க லைஃப்பை மாத்த முடியாதா? முதல்ல... இப்படி சோர்ந்து உட்கார்ந்திருக்கிறதை விடுங்க! எழுந்திருங் கண்ணா!'' என்றாள் அதட்டலாய்.

தேவையான நேரத்தில், சரியான வார்த்தை பிரயோகங்களுடன் வெளிவந்த மைவிழியின் வார்த்தைகள், கிருஷ்ணனை அசைத்தன!

கிருஷ்ணன் தன் தவிப்பிலிருந்து கொஞ்சமாய் மீள, கீர்த்தியோ கண்ணீரை விடுவதாய் இல்லை.

''அண்ணா... நீங்க போய் கீர்த்திக்காவுக்கு ஒரு டம்ப்ளர் ஆரஞ்சு ஜூஸ் எடுத்திட்டு வாங்க! ஹ்ம்ம் போங்க!'' என்று அவனை அனுப்பிவிட்டு.

கீர்த்தியை ஊஞ்சலில் அமர வைத்து, தானும் அருகே அமர்ந்து, அவளது கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

மெல்ல பெரியவளின் கைகளைத் தட்டி, ''கீர்த்திக்கா...'' என்றாள் அன்பாய்.

கீர்த்தியோ எதுவும் பேசாமல், வெறுமனே கண்களை மட்டும் உயர்த்தி பார்க்க,

''இந்த குழந்தை... டெஸ்ட் டியூப் பேபின்னு நிம்மி சொன்னா... நிஜமா?'' என்றாள் மெல்ல.

''ஆமா... எனக்கு ஓவரில சின்ன சிஸ்ட் இருந்துச்சு... அதைப் போன வருஷம் தான் எடுத்தோம். அதற்கு அப்புறம்... நார்மல் ப்ரெக்னன்சிக்கு சான்ஸ் இருக்குன்னு தான் சொன்னாங்க... ஆனா எனக்கு தான் ரெண்டு மாசம் ஆனதும் பயம் வந்துடுச்சு... அடுத்தும் மூணு மாசம் ஒண்ணும் பாசிட்டிவா நடக்கலையா... சோ... டெஸ்ட் டியூப் பேபி ட்ரை பண்ணாங்க... முதல் அட்டெம்ப்ட்லேயே எனக்கு சக்சஸ் ஆச்சு தெரியுமா? ப்ச்... என்ன ஆகி என்ன புண்ணியம்... கடவுள் இல்லைன்னு ஆக்கிட்டாரே!'' என்று அவள் அழ.

''ஷ்... அக்கா அழக் கூடாது!'' என்று அவளை அதட்டியவள்.

''டாக்டர்ங்கிறவங்க கடவுள் மாதிரி தான்... நான் இல்லைன்னு சொல்லலை! ஆனா... அவங்க கடவுள் ஆகிட முடியாது!'' என்றாள் சம்மந்தா சம்மந்தம் இல்லாமல்.

''என்ன?'' என்பது போல் கீர்த்தி புரியாமல் பார்க்க.

''உங்களுக்குள்ள வளர்ந்த அந்த கரு... டாக்டர் உருவாக்கினது! கடவுள் உருவாக்கினது இல்லை!''

"கடவுள் உருவாக்கக் கூடிய சித்தம் இருக்கும் போது... டாக்டர் உருவாக்குறதைக் கடவுள் ஏத்துக்க மாட்டார்..."

இப்போது கீர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை.

"அவரால உருவாக்க முடியலைன்னா தான்... டாக்டர் என்கிற கருவி மூலமா கடவுள் அதை நிறைவேத்துவார். அது தான், உலக நியதி!"

"எனக்கு என்னவோ... உங்க விஷயத்தில டாக்டர்ங் கிற கருவியை கடவுள் விரும்பலைன்னு தோணுது! அவரே... நேரடியா உயிரைப் படைக்க விரும்புறார்! அது கண்டிப்பா நடக்கும்!" என்றாள் உறுதியாக.

அவளது பேச்சைப் புரிந்து கொள்ள முடியாமல், "நீ என்ன சொல்றே?" என்ற கீர்த்தியின் குரலில், ஏகப்பட்ட குழப்பம்!

"நா என்ன சொல்றேன்னா... இந்த டெஸ்ட் டியூப் பேபி மேட்டர் எல்லாம் இல்லாம... நீங்க இயற்கையாவே ப்ரெக்னன்ட் ஆவீங்க..." என்றாள் உறுதியாய்.

"அப்படியா?!!!!!!!!!!!" - ஏகத்திற்கும் அதிர்ந் தாலும், அந்த முகத்தில் அப்படியொரு சந்தோஷம்.

அதை ரசித்தவளாய், "ஆமா... எனக்கு அப்படித் தான் தோணுது! எந்தவிதமான ட்ரீட்மென்ட்டும் இல்லாம... உங்களுக்கு ஒரு குட்டி பிறக்கும் பாருங்க!" என்றாள் மைவிழி, பற்றியிருந்த அவள் கைகளை அழுத்தி,

"எப்படி?" - ஆர்வமே வடிவாய் கீர்த்தி கேட்க,

"முதல்ல... D&C பண்ணினா, உங்களோட கர்ப்பப் பையில இருக்கற கசடெல்லாம் நீங்கிடும், அதுவே ஒரு நார்மல் ப்ரெக்னன்சிக்கு வழி வகுக்கும்..." என்றவள்.

"அடுத்தது... நம்பிக்கை!" என்றாள் கீர்த்தியை நேராய்ப் பார்த்து.

"நம்பிக்கைன்னா?"

"நம்பிக்கைன்னா... உங்களுக்கு இயற்கையாவே குழந்தை பிறக்கும்ன்னு நீங்களே நம்பணும்! சும்மா... இலை அசைஞ்சா எதுவும் ஆகிடுமோ... கால் பிடிச்சா எதுவும் ஆகிடுமோ... இதைச் சாப்பிட்டா எதுவும் ஆகி டுமோ... இப்படி நடந்தா குழந்தைக்கு வலிக்குமோன்னு எப்பவும் நெகடிவ் எண்ணங்களோடவே சுத்தி வராம, என் குழந்தை நல்லபடியா பிறக்கும்ன்னு நம்பிக்கை வைங்க... அதுவே நிறைய மாற்றங்களைக் கொண்டு வரும்..."

"....." கீர்த்தியின் முகத்தில் அப்போதே நம்பிக் கையின் கோடுகள்.

"சப்போஸ்... உங்களால தனிச்சு நம்பிக்கையா இருக்க முடியலைன்னா... உங்களோட இஷ்ட தெய்வம்ன்னு யாராவது இருப்பாங்க இல்ல... அவரு மேல நம்பிக்கை வைங்க... நடக்கும்!" என்றாள் மைவிழி உறுதியாக.

"ஹ்ம்ம்..." என்ற கீர்த்தியின் முகம், நன்றாகவே தெளிந்திருந்தது!

மைவிழியின் முகம் கீற்றாய் ஓர் புன்னகையை ஏந்தக் காத்திருந்தவள் போல், கீர்த்தியின் முகம் மீண்டும் வாடிப் போயிற்று!

"இப்ப என்னக்கா?" என்றாள் மைவிழி ஆயாசமாய்.

"இல்ல... நிஷூ... என்னை விட அவன் தான் குட் டியை ரொம்ப எதிர்பார்த்தான்.. இப்போ ரொம்ப உடைஞ்சு போய்ட்டான்... அதுவும், அவன் கால் அமுக்கினதால

தான் பாப்பா... பாப்பா...''- முடிக்காமல் இழுத்தாள் கீர்த்தி.

கூடவே, ''நிஷான் ஒரு குழந்தை... எனக்குத் தெரிஞ்சு அவன் ரொம்ப சந்தோஷமா இருந்தது பாப்பாவோட நியூஸ் தெரிஞ்ச டைம்ல தான்... என்னை ஒரு வேலை செய்ய விட மாட்டான்... இப்போ இந்த D&C நியூஸ் அவனை ரொம்பவே பாதிச்சுடுச்சு! ரெண்டு நாளா... ஆபீஸ் கூடப் போகலை... வீட்டிலேயே அடைஞ்சு கிடக்கான்! அவனைப் பாக்க பாக்க... எனக்கு நெஞ்சே வலிக்குது! அவரை நினைச்சா ஒரு மாதிரி வேதனைன்னா... இவனை நினைச்சா இன்னொரு மாதிரி கஷ்டமா இருக்கு!'' என்று தன் வேதனை முழுதையும் கொட்டித் தீர்த்தாள்.

''இதான் மேட்டரா? இவன் தான் அழுது வடிஞ்சு... வீட்டை ரணகளப்படுத்திட்டு இருக்கானா?'' என்ற எண்ணம் தோன்ற.

''எங்க உங்க ஆசை தம்பி... நிஷாந்த்?'' என்றாள் கீர்த்தியிடம்.

''மேல... அவன் ரூம்ல இருக்கான்! நீ... நீ அவனை எதுவும் சொல்லாத... அவன் ஏற்கனவே...'' என்று கீர்த்தி கூறியதைக் காற்றைக் கேட்க விட்டுவிட்டு, மைவிழி வேகமாய் உள்ளே நுழைந்தாள்.

அப்போது, கிருஷ்ணன் கையில் பழரசத்துடன் எதிர் பட, ''ஒரு ஆரஞ்சு ஜூஸ் போட இவ்வளவு நேரமா? சீக்கிரம் போய்... கொடுங்க!'' என்றாள் மைவிழி, சிறு சிரிப்புடன்.

மனைவியிடம் அவள் ஏதோ பேசுவதை உணர்ந்தவனாய், வேண்டுமென்றே தான் கிருஷ்ணன் மெதுவாய் வேலை செய்தான்.

''உலகத்திலேயே விலையின்றிக் கிடைப்பது அறிவுரை மட்டுமே!'' என்ற புதுமொழியை, மைவிழியின் பேச்சுக்கு அடை மொழியாக்க அவன் விரும்பவில்லை.

தன் சொந்த வாழ்வில், மலையளவு துன்பத்தைத் தாண்டி வந்த மைவிழி, கீர்த்தியின் மனதில் சிறிதேனும் நம்பிக்கையை விதைப்பாள் என்ற நம்பிக்கை இருந்தமையால், கிருஷ்ணன் மெதுவாகவே வேலை செய்தான்!

தூரத்திலிருந்து பார்க்கும் போதே, கீர்த்தியின் முகத்தில் வேதனையை மீறிய யோசனை தெரியவும், கிருஷ்ணனின் முகமும் தெளிந்தது!

என்னவென்று கேட்போம் என்று கீர்த்தியை நோக்கி அவன் செல்ல, மைவிழியோ ''நிஷாந்தோட ரூம் எது?'' என்று கேட்டுத் தெரிந்து கொண்டு, மாடிக்கு விரைந்தாள்.

வேகமாய் ஏறி, நிஷாந்தின் அறைக்கு முன்னே வந்து விட்டிருந்தாள் மைவிழி.

ஆனால் பட்டென கதவைத் திறந்து கொண்டு உள்ளே செல்ல மனம் சுணங்கியது!

என்னவென்றாலும், அவன் ஓர் ஆண் மகன் அல்லவோ! அதுவும், ஓர் அந்நியன்!

என்ன தான், நிம்மியின் மூலம் அவர்கள் குடும்பத்தைப் பற்றி அறிந்திருந்த போதும், பார்த்து ஒரு முறையே ஆன ஓர் ஆண் மகனை, அவனது அறையிலேயே சந்திப்பதற்கு சற்றுக் கூச்சமாய் இருந்தது மைவிழிக்கு!

ஒரு நிமிடம் தயங்கி நின்று, மூச்சை ஆழ எடுத்து விட்டுக் கொண்டவள், ''கூச்சநாச்சம் எல்லாம் பார்க்க இது நேரமில்ல... முதல்ல இந்தப் புள்ளப் பூச்சியை சரி

பண்ணாதான்... கீர்த்திக்கா சரி ஆவாங்க!'' என்ற முடி வெடுத்தவளாய், அறைக்கதவைத் தட்டினாள்.

அடுத்த வினாடியே, ''எஸ்...கம் இன்!'' என்ற குரல் கேட்க.

'இவரு பெரிய ஐ.ஏ.எஸ் ஆபீசர்!? என்னமோ பியூனுக்கு அனுமதி கொடுக்கிற மாதிரி... கம் இன்!' என்று உள்ளுக்குள் வைதுகொண்டே, கதவைத் தள்ளினாள்.

கதவைத் திறந்தவள், தன்னை மறந்து சிரித்தே விட்டாள்.

அறையே அலங்கோலமாய்க் கிடைக்க, மூன்று நாள் தாடியும், கையில் ஓர் காபிக் கோப்பையும், மியூசிக் பிளேயரில் ஓர் சோகப் பாட்டுமாய், அய்யா ''சோக'' மூடில் வயலின் வாசித்துக் கொண்டிருந்தார்!

கதவு திறந்ததுமே, யாரென்று பார்ப்பதற்காக லேசாய் கண்ணைத் திருப்பிப் பார்த்தவன், அங்கே மைவிழியைக் கண்டதும் திகைத்து நின்றான்.

ஆனால், அவளோ அவனது திகைப்பின் உணரும் நிலையில் இல்லை! மனம் நிறைந்து சிரித்துக் கொண்டிருந்தாள் அவள்!

''என்ன சிரிப்பு...'' - சிறு எரிச்சலும், கோபமுமாய்க் கேட்ட நிஷாந்தின் மனம். 'என்ன இவ? எவ்வளவு பெரிய சந்தோஷத்தை இழந்திட்டு... வீட்டில எல்லாரும் எப்படி வாடிப் போயிருக்கோம்! இவ என்னடான்னா சிரிக்கிறாளே!' என எண்ணி குமுறியது!

அவன் மனதைப் படித்தவளாய், ''பின்னே சிரிக்காம... உங்களோட மாதிரி சோக வயலின் வாசிக்கச் சொல்றீங்களா?'' என்று பட்டெனக் கேட்டாள் மைவிழி.

''ஹான்...'' என நிஷாந்த் பார்த்திருக்க.

''ஆமா... உங்களுக்கு என்ன பாசமலர் சிவாஜி கணேசன்னு நினைப்பா... ஓவரா ரியாக்ட் பண்ணிக்கிட்டு இருக்கீங்க?'' என்றாள் காட்டமாய்.

நிஷாந்திற்குக் கோபம் வந்துவிட்டது!

''அப்புறம்... என்றென்றும் புன்னகைன்னு பாட்டு படித்துச் சுத்தணுமா? இங்க என்ன நடந்துச்சுன்னு உனக்குத் தெரியுமா?''

''ஏன் தெரியாது? எல்லாம் தெரியும்... நிம்மி மூலமா விஷயம் கேள்விப்பட்டு, கீர்த்திக்காவைப் பார்க்க வந்தேன்!''

''ஹோ... தெரிஞ்சுமா இப்படிப் பேசுறே? உனக்கு வருத்தமாவே இல்லையா?'' என்ற போது, நிஷாந்தின் குரல் வருத்தத்தில் சிக்கியிருந்தது!

''வருத்தம் தான்! கஷ்டம் தான்! எனக்கும் புரியுது! பட்... வருத்தப்படுறதால போன உயிர் திரும்ப வந்திடும்ன்னு சொல்லுங்க.... நானும் வருத்தப்படுறேன்...'' என்றாள் அவள். சவால் விடும் குரலில்.

ஒன்றும் பேசாமல் அவளையேப் பார்த்திருந்த நிஷாந்த், ''இல்ல... என்னால தான்... அதான் அன்னைக்கு நான் எசகு பிசக்கா எங்கேயோ அமுக்கப் போய் தான், பாப்பா... பாப்பா...'' என்று அவன் இழுக்க,

''ஹய்யோ! என்னால முடியல... கீர்த்திக்கா சொல்ற நாள் கணக்குப் படி பார்த்தா... குழந்தையோட வளர்ச்சி நின்று போய், ரெண்டு நாள் கழிச்சு தான், நீங்க காலே பிடிச்சு விட்டிருக்கீங்க! சோ... சும்மா மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க...''

"இருந்தாலும்...முதல் பேபி..."

"இதென்ன சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிட்டு... நீங்க என்ன சின்னப் பிள்ளையா?" என்று பொறுமை பறக்கக் கத்திய மைவிழி,

"முதல் பேபி தான்... ப்ரெஷியஸ் பேபி தான்... ஆனா... அது ஊனமா... மூளை வளர்ச்சி இல்லாம வளர்ந்தா... அதை நம்மால தாங்கிக்க முடியுமா சொல்லுங்க! வாழ்நாள் முழுசும்... அந்தக் குழந்தையைப் பார்த்துப் பார்த்து... வேதனை படுறதுக்கு, இந்தத் தற்காலிக வேதனை பெரிசில்லை!" என்றாள் தீர்க்கமாய்.

நிஷாந்தின் முகத்தில் "நா இப்படி யோசிக்கவே இல்லையே!" என்ற பாவனை தோன்ற,

"சோ... நடந்ததை நினைச்சு நீங்களும் வருத்தப்பட்டு... கீர்த்திக்காவையும் வருத்தப்பட வைக்காம, எப்பவும் போல லூசு டாக் விட்டுட்டு... ப்ளாக் டீ போட்டு எல்லாருக்கும் பீதியைக் கிளப்பி விட்டுட்டு சந்தோஷமா இருங்க!" என்றாள் மைவிழி, முடிவாய்.

அவனையும் மீறி, நிஷாந்தின் தலை சம்மதமாய் ஆடியது!

"பையனுக்கு வேப்பிலை அடிச்சது போதும்... இதுக்கு மேல அடிச்சா, ஒரேடியா மயங்கி விழுந்திருவான்!" என்ற எச்சரிக்கை உணர்வுடன், அங்கிருந்து நர்ந்தாள் மைவழி.

ஆனால், வெறும் அறிவுரையுடன் நிறுத்திக் கொள்ள வில்லை மைவிழி.

வார இறுதிகளில் மட்டுமல்லாமல், வார நாட்களிலும் கிடைக்கும் நேரமெல்லாம் கீர்த்தியுடனே இருந்தாள்.

கீர்த்தியின் D&C சமயத்தில், மருத்துவமனையில் துணை இருந்தாள்.

அந்த இளம் தாயின் முகத்தில் வேதனை படியும் போது, "கீர்த்திக்கா... திண்டுக்கல்ன்னு ஒரு ஊரு இருக்குத் தெரியும் தானே? அங்க... மலை அடிவாரத்தில, ஓதசுவாமிகள் கோவில்ன்னு ஒரு பெரிய சித்தரோட கோவிலிருக்கு! அழகான ஒரு மலை அடிவாரத்தில சின்ன சுனையோட... மனசுக்கு ஒரு ஆத்ம திருப்தி கொடுக்கிற இடம்! எனக்கு ஏதாவது ஒரு கஷ்டம்ன்னா... நா அய்யாவை... அதான் ஓதசுவாமியைத் தான் நினைச்சுப்பேன்! இப்பவும், உங்களுக்காக... அங்க ஒரு மூட்டை பச்சை அரிசி வாங்கிக் கொடுக்கிறதா வேண்டிட்டு இருக்கேன்! சோ... நீங்க நம்பிக்கையோட இருங்க! இந்தாங்க அவரோட அஷ்டோத்திரம்... தினம் ஒரு வாட்டி சொல்லுங்க... உங்களுக்கே ஒரு சேன்ஜ் தெரியும்!

என்னோட பாட் டைம்ஸ் எல்லாத்திலையும்... அய்யா தான் துணை இருந்திருக்கார்!" என்று அவளிடம் நம்பிக்கை விதையைத் தூவினாள்.

அடுத்ததாய், ஷாப்பிங்... கோவில்... இசை நிகழ்ச்சி என்று பலவற்றுக்கும் அவளை அழைத்துச் சென்றாள்.

அந்த சமயத்தில் தான், கிருஷ்ண ஜெயந்தி வந்தது!

"கீர்த்திக்கா... இந்த வாட்டி கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடுங்கக்கா... கண்டிப்பா கிருஷ் அண்ணாக்கு ஒரு கிருஷ்ணனோ... ராதையோ பிறப்பாங்க!" என்று கீர்த்தியை உந்தி, ஓர் சின்ன விழாவுக்கு ஏற்பாடு செய்தாள்.

மாயக்கண்ணனின் பிறந்தநாள், ஓர் வார இறுதியில் வர, அனைவருக்குமே சௌகரியமாய் போனது!

கிருஷ்ணனுடன் வேலை செய்பவர்கள், நிஷாந்தின் நண்பர்கள், கோவிலில் பழக்கமானவர்கள் என்று தெரிந்த வர்களை அழைத்திருந்தனர்.

மைவிழியோ, முதல் நாளே வந்து கீர்த்தியுடன் சேர்ந்து கிருஷ்ணா ஜெயந்தி வேலைகளைக் கவனித்தாள்.

இந்தக் காலத்துப் பெண்கள் போல், ''எனக்கு கிட்சன்ல உப்பு எது... சீனி எதுன்னெ தெரியாது...'' என்று அலட்டிக் கொள்ளாமல்.

இனிப்பு சீடை முதல், கை முறுக்கு வரை அவள் ஆர் வத்துடன் செய்தது கீர்த்திக்கு ஆச்சரியமாய் இருந்தது!

''உனக்கு எப்படி மையு இதெல்லாம் தெரியும்?'' என்று கீர்த்தி கேட்க.

''எல்லாம்... எங்க அம்மு டார்லிங் ட்ரைனிங்...'' என்று கண் சிமிட்டினாள் மைவிழி.

சட்டென, கீர்த்தியின் முகம் வாடிப் போனது!

அதைக் கவனித்துவிட்டு, ''என்னக்கா...'' என்று மைவிழி கேட்க.

''ஒண்ணுமில்ல... ஒண்ணுமில்ல...'' என்று வேறு வேலையைப் பார்க்கப் போய் விட்டாள், கீர்த்தி.

மைவிழியும் அதற்கு மேல், வற்புறுத்தவில்லை!

வேலைகள் வேகமாய் நடக்க, சின்னக் கண்ணன் வெளிவாசலில் இருந்து உள்ளே வரவேண்டிய நேரம் வந்தது!

அரிசி மாவைக் கரைத்து வைத்துக் கொண்டு, ''எப்படி கிருஷ்ணன் பாதம் போடுவது?'' என்று கீர்த்தி யோசித்துக் கொண்டிருக்க,

''உங்க தம்பியப்பர் எங்க?'' என வினவினாள் மைவிழி.

''அவனா... அவன்!'' என்று கீர்த்தி சுற்றுமுற்றும் பார்க்கும்போதே, மேலே நின்று மைவிழியையே பார்வையால் தொடர்ந்து கொண்டிருந்த நிஷாந்த்.

''ப்ரசென்ட் மிஸ்!'' என்றான், பள்ளிகூடத்தில் வருகையைப் பதிவு செய்யும் குழந்தை போல்.

சட்டெனச் சிரித்த மைவிழி, ''நாங்க என்ன கிண்டர் கார்டனா நடத்துறோம்?'' என்று விட்டு, ''இங்க வாங்க...'' என்றாள்.

நிஷாந்த் வரவும், அவனது முழுக்கைச் சட்டையை சுட்டிக் காட்டி, ''ஹ்ம்ம்... டீ-ஷர்ட்டை மடிச்சு விடுங்க...'' என்றாள்.

''எதுக்கு?''

''விடுங்கன்னு சொல்றேன்ல்ல...''

''ஹ்ம்ம் விட்டாச்சு...''

''ஹ்ம்ம்... இந்த மாவுல கையை முக்கி எடுங்க...''

''எதுக்கு?''

''பாதம் வரைய மிஸ்டர்... முக்கி எடுத்துட்டீங்களா?''

''எடுத்தாச்சு... ஆனா, கையை வச்சு எப்படிப் பாதம் போடறது? காலை வச்சுத் தானே போடணும்?''

''உங்க காலைப் பார்த்தீங்களா? குட்டிக் கிருஷ்ணன் காலு மாதிரியா இருக்கு? கும்பகர்ணன் காலு மாதிரி இருக்கு... இதை வச்சுப் பாதம் போட்டா... வரவங்க எல் லாம் அய்யயோ கிருஷ்ணனுக்குப் பதிலா கடோத்கஜனை உள்ள கூட்டிட்டு வந்துட்டாங்க போலன்னு பயந்து ஓடிடு வாங்க...'' என்று சுட்டு விரல் நீட்டி மிரட்டினாள் மைவிழி.

''ஷப்பா... இதுக்கு இருக்க வாய் இருக்கே... அய்யய்யோ...'' என்று புலம்பினாலும், அவள் சொன்னபடி செய்ய நிஷாந்த் மறுக்கவில்லை.

நிஷாந்த் அரிசி மாவில் கையைத் தோய்த்ததும், அவன் கையைப் பிடித்து, சின்ன பாதம் நடந்து வருவது போல்... சிறு சிறு இடைவெளி விட்டு தரையில் பதித்தாள் மைவிழி.

கீர்த்தி சிரிப்புடன் பார்த்திருக்க, ''என்னக்கா பார்க்கிறீங்க? உங்க தம்பி மாதிரி... ஒரு லொட லொட வாலு குட்டி உங்களுக்குப் பிறக்கணும் இல்ல... அதான் அவரை வைக்கச் சொன்னேன்...'' என்றாள் மைவிழியும் சிரிப்புடன்.

சட்டென நிஷாந்தின் கண்கள் மைவிழியின் முகத்தை மேய்த்தன!

ஏதோ எண்ணியவனாய், அவளது முழு கை சுடிதாரைப் பார்த்தவன், ''நா பாதி பாதம் வைக்கிறேன்... நீ பாதி பாதம் வை... உன்னை மாதிரி ஒரு லட்டு குட்டி எங்க கீர்த்துக்குப் பிறக்கட்டும்!'' என்றான் உள்ளதை மறையாது காட்டி.

கீர்த்தி, ''ஆமா... மையு... நீயும் வையேன்...'' எனக் கூற.

மைவிழியோ, தன் கயல்விழியால் எதிரே இருந்த கதிரவனின் கண்களுக்குள் கதிர் வீசினாள்.

ஓர் வினாடியே என்றாலும், இருவர் பார்வையும் கலந்து நிற்க.

அதன் பிடியிலிருந்து முதலில் வெளிவந்தவள் மைவிழி தான்!

''இல்ல... என்னை மாதிரி... வேணாம்... இல்ல... இல்ல... இல்ல... அது வந்து.. பாதம் ஒரே அளவில் இருந்தா தான் நல்லா இருக்கும்! அவரே வைக்கட்டும்!'' என்ற வளின் முகத்தில் படர்ந்த முதல் உணர்ச்சி வலி என்றாலும், அதைத் தொடர்ந்து அவள் முகத்தை அலங்கரித்த உணர்ச்சிக்குப் பெயர் - நாணம்!

பூச்சரத்தில் ஆறாவதாய் சேரும் பூ - பாதிப்பு!



7

நாட்கள் வேகமாய் நகர்வது போலிருந்தது நிஷாந்திற்கு!

ஆனால், கிருஷ்ண ஜெயந்தி முடிந்து ஒரு வாரமே ஆகியிருந்தது!

கிருஷ்ண ஜெயந்தி விழா முடிந்து கிளம்பியவள் தான், மைவிழி வீட்டுப் பக்கமே வரவில்லை.

அவள் வரவில்லை என்றால் என்ன? அய்யா தான், தினமும் கல்லூரி வாசலில் தவமிருந்து, தன் காதல் நோய்க்கு மருந்து தேடிக் கொண்டிருந்தானே?

பார்ப்பது சில நிமிடங்களே என்றாலும், வெண்ணை திருடும் கண்ணனாய் அவளை மறைந்திருந்து பார்ப்பது நெஞ்சுக்குள் இனித்தது!

ஏதோ, தாய்க்கு மறைத்து மறைத்து... ஹார்லிக்ஸ் உண்ணும் சிறுவன் போய் நெஞ்சம் படபடத்தது!

அதுவும் அவளைப் பார்க்கும் போதெல்லாம், அவள் நடையில் காட்டும் நிமிர்வும், முகத்தில் காட்டும் கம்பீரமும் அவனை இம்சித்தன!

ஆம், நிஷாந்த் அவளது கன்னச் சிவப்பைப் பார்த்தோ... முகத்தில் தவழும் நாணத்தைக் கண்டோ அவளிடம் காதல் கொள்ளவில்லை! அவனுக்கு அவளிடம் பிடித்ததே அந்த நிமிர்வு தானே!

அதை அணு அணுவாய் ரசித்தான், அவன்!

இப்படியாய் நாட்கள் கழிய, நிஷாந்தின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்த கிருஷ்ணன், ஒரு நாள் அவனை மடக்கிப் பிடித்தான்.

''சார்... என்ன பிளான்ல இருக்கீங்க?'' என்று அவன் ஆரம்பிக்க,

''என்ன பிளான்? ஹோ... இந்த வீக்-எண்டு பிளானா? பிரவீன்... ஹெலிகாப்டர் மியூசியம் போலாம்ன்னு சொன்னான்... அவனோடப் போறேன்...''

''நா அதைக் கேட்கலை...''

''அப்புறம்?''

''மைவிழி பத்திக் கேட்கிறேன்...''

''அவளுக்கு என்ன?''

''அவளுக்கு ஒண்ணுமில்லை... உனக்குத் தான் ஏதோ ஆகிடுச்சு...''

''என்ன ஆச்சு...''

''சும்மா நடிக்காதடா... தினம் யூனிவர்சிடி வாசலில நீ தேவுடு காக்கிறது எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா?''

''உங்களுக்குத் தெரியாதுன்னு நான் சொன்னேனா? என்னை விட உங்களுக்குத் தான் என்னோட மூவ்ஸ் பத்தி நல்லா தெரியும்...''

''அப்படிங்கிற? அப்போ... உன்னோட மனசில என்ன இருக்குன்னு நான் சொல்லவா?''

''தாராளமா சொல்லுங்க...''

''மைவிழியை நீ காதலிக்க ஆரம்பிச்சுட்டே...''

''ஆமா... பெரிய கண்டுபிடிப்பு! நான் தான் முதல் நாளே சொன்னேன்ல... அவளை கரெக்ட் பண்ணனும்ன்னு... அப்பவே உங்களுக்குத் தெரிலையாக்கும்!?''

''சரி... கரெக்ட் பண்றேன்... கரெக்ட் பண்றேன்னு இங்கேயே காரட் தின்னுட்டு திரிஞ்சா... கரெக்ட் ஆகிடுவாளா? அவகிட்ட நேரா பேசினியா?'' - நிஷாந்த் தின்று கொண்டிருந்த சாலட்டை தட்டைப் பிடுங்கிக் கொண்டு, கோபப்பட்டான் கிருஷ்ணன்.

''ஹய்யயையோ... எனக்குப் பயமா இருக்குது குரு! அடிச்சுப் போடுவா!'' என்று முகத்தில் நிஜமான பயத்தை இட்டு வந்து, நிஷாந்த் பின்வாங்க,

கிருஷ்ணன் வாய்விட்டுச் சிரித்தான்!

''ச்சே அடிக்கவெல்லாம் மாட்டாடா...''

''அப்போ... மிதிப்பான்னு சொல்றீங்களா? வேணாம் குரு... நா ஒரு பச்சைப் புள்ள... அடியோ மிதியோ அதையும் தாங்க மாட்டேன்...'' என்றான் நிஷாந்த், தீவிரமாக.

''ஆமா... இப்படியே உக்காந்து வியாக்கியானம் பேசிட்டு இரு... அவ வீட்டில வேற யாராவது மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கட்டும்!''

''சும்மா... பயமுறுத்தாதீங்க குரு! இப்போ தான் படிக்கவே ஆரம்பிச்சு இருக்கா... எப்படி உடனே மாப்பிள்ளை பார்ப்பாங்க...''

''டேய்... நிஜம்டா! நிம்மி சொன்னா... மைவிழி வீட்டில இப்பவே மாப்பிள்ளைப் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்களாம். நல்ல இடமா இருந்தா... இப்ப நிச்சயம் பண்ணிட்டு, அவ படிப்பு முடிஞ்சதும் கல்யாணம் பண்றதா இருக்காங்களாம்!'' என்று கிருஷ்ணன் உண்மையை எடுத்துரைக்க,

''ஆஹ்ஹா! இது வேறயா?!'' என்று ஒரு நிமிடம் அதிர்ந்த நிஷாந்த்.

''சரி விடுங்க... எப்ப சொன்னாலும் அடியோ மிதியோ வாங்கப் போறது உறுதின்னு ஆகிப்போச்சு! அதை... இப்பவே செஞ்சுட்டாப் போச்சு!'' என்றான் ஒரு முடிவுக்கு வந்தவனாய்.

''அப்போ... இன்னைக்குப் போய் சொல்லப் போறியா?'' என்றான் கிருஷ்ணன். ஆர்வம் மிகவுற.

''நாம அடி வாங்குறதில இந்த உலகத்துக்குத் தான் எம்புட்டு சந்தோசம்?'' என்று வியந்த நிஷாந்த்.

''இல்ல குரு! கீரத்துக்கு ஒரு குட் நியூஸ் வந்ததுக்கு அப்புறம் தான்... என்னோட லைஃப்ல எந்த மூவ்வ்னாலும் எடுத்து வைக்கணும்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்!'' என்றான் முகத்தில் தீவிரமான அன்பு ஜொலிக்க.

கிருஷ்ணனுக்கு உருகி விட்டது!

எதுவும் பேசமாட்டாமல், ''நிஷான்...'' என்று மட்டும் கூறியவனின் குரல் கனிந்திருந்தது!

ஆனால், உடனேயே வாழ்வின் நிதர்சனம் புரிய ''அதுக்கு நிறைய நாள் ஆனாலும் ஆகலாம் நிஷான்!'' என்றான் லேசான வலியுடன்.

''இல்ல குரு! ரொம்ப நாள் ஆகாது! எனக்கு நம்பிக்கையிருக்கு!'' என்றான் நிஷாந்த் உறுதியுடன்.

சற்றே பிரமித்து நிஷாந்தின் முகம் பார்த்தான் கிருஷ்ணன்.

''ஆமா குரு... கீர்த்துவே எவ்வளவு பாசிடிவா இருக்கா தெரியுமா? இந்த பாசிடிவ்நஸ் அவளுக்கு ஒரு நல்லதைக் கண்டிப்பா எடுத்திட்டு வரும்!'' என்றவன்.

''நானுமே... அவளுக்காக நிறைய வேண்டியிருக்கேன்! எப்பவுமே... சாமி குழந்தைங்க எது கேட்டாலும் கொடுப்பார் தானே... சோ நா கேட்டதைக் கண்டிப்பா கொடுப்பார்!'' என்றான் கண்களைச் சிமிட்டி.

மனதை சூழ்ந்திருந்த நெகிழ்வு சட்டெனச் சிரிப்பாய் உருமாற, ''அடிங்க! நீ குழந்தையாடா? மூணு குழந்தைக்கு அப்பா ஆகுற வயசில என்ன பேச்சுப் பேசுறான் பாரு...'' என்று அவனை அடித்தான் கிருஷ்ணன்!

கீர்த்தனாவின் மனதில் தோன்றிய நல்ல எண்ணங்களின் விளைவா?

அவள் மனதில் உதித்த ''நானும் தாயாவேன்! கண்டிப்பாக!'' என்ற நம்பிக்கையா?

எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், ''எனக்கு ஒரு நல்லதைக் கடவுள் கொடுப்பார்'' என்று இறைவன் மேல் வைத்த அதீத பக்தியா?

கிருஷ்ணனின் பாசமிக்க குடும்பக்கனவா?

அரவாமுதனின் இடைவிடாதப் பிரார்த்தனையா?

நிஷாந்த் கடவுளிடம் முன்வைத்த வேண்டுதல்களா?

நிஷாந்தை ''குழந்தை'' என்று நிரூபிக்கும் கடவுளின் திருவிளையாடலா?

எதுவாக இருந்தாலும், D&C செய்த இரண்டாம் மாதம், கீர்த்தி கருவுற்றாள்! இயற்கையாகவே!

வீட்டில் நிலவிய சந்தோஷத்திற்கு வானமே எல்லை யாய்ப் போனது!

முன்னர் ஊசிகளின் மூலமாகவும், மாத்திரை மருந்து களின் மூலமாகவும், மருத்துவர்களின் திறமையாலும் உருவான உயிரை விட,

இப்போது நம்பிக்கையாலும்... பக்தியாலும்... சந் தோஷத்தாலும் உருவான இந்த உயிர். அவர்கள் வாழ்வை அர்த்தமுள்ளதாக்கியது!

"எண்ணம் போல் வாழ்வு! நல்லது நினைப்பின் நல்லது நடக்கும்!" என்ற பெரியோர் வாக்கு மெய்யானதில், அந்தக் குடும்பமே அன்பெனும் தித்திப்பில் திகட்டத் திகட்ட முக்குளித்தது!

அந்தப் புதுவரவு, அவர்களுள் ஓர் புது உத்வேகத்தை உண்டாக்கியது!

கரை புரண்ட சந்தோசம் என்ற போதும், புதுவரவுக்கு வித்திட்ட மைவிழியை அவர்கள் மறக்கவில்லை.

மருத்துவரிடம் சென்று வந்ததுமே, மைவிழிக்கு விஷயத்தைச் சொல்லிவிட்டாள் கீர்த்தி!

"ஹாய் சூப்பர் கீர்த்திக்கா! நா ரொம்ப ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேன்..." என்று மனதார சந்தோசம் கொண்ட மைவிழி.

"ஹய்யோ... இன்னும் ரெண்டு நாளுக்கு எனக்கு ஒரு ரிசர்ச் ரிசல்ட் சப்மிட் பண்ண வேண்டிய வேலை யிருக்கு! சன்டே வரேன்க்கா..." எனக் கூறியதோடு நில்

லாமல், ஞாயிற்றுக் கிழமை ஒன்பது மணிக்கெல்லாம் கீர்த்தியின் வீட்டிலிருந்தாள்.

வந்தவள், "ஹையோ... புது பாப்பா... புது அம்மா... புது வெட்கம்... புது லவ்வு... கலக்குறீங்களே கீர்த்திக்கா!" என்ற ஆர்ப்பாட்டமாய் நுழைய,

வீடே கலகலப்பானது!

"ச்சீ... போ மைவிழி..." என்று கீர்த்தி ரோஜாவாய் மாற,

கிருஷ்ணனோ "தேங்க்ஸ் மைவிழி! இந்த சந்தோஷத் துக்கான பேஸ்மென்ட் நீ தான்..." என்றான் ஆத்மார்த்த மாய்.

"அச்சோ... அப்படியெல்லாம் சொல்லாதீங்க... அப் புறம் பேஸ்மென்ட் வீக்... பில்டிங் ஸ்ட்ராங்ன்னு சொல்ற மாதிரி, என்னைக் கழட்டி விட்டுடப் போறீங்க..." என்று மைவிழி சோகம் போல் நடிக்க,

"ச்சே... நெவர் எவர்! உன்னைப் போய் மறக்க முடி யுமா? அதுவும் எங்க வீட்டுக்கு வரப்போறப் பொண்ணை...." - தன்னை அறியாமல் வாயை விட்டு விட்டான் கிருஷ்ணன்.

மைவிழியின் பேச்சு சட்டென நின்று போனது!

கூர் பார்வை ஒன்றை அவள் கிருஷ்ணன் மீது வீச, 'ஆஹா... அவளே ஒரு ஐன்ஸ்டீன் பீஸ்ன்னு உனக்குத் தெரியாதா என்ன? அவகிட்ட போய் வாயைக் கொடுத்து... மாட்டிக்கப் பாத்தியேடா...' என்று தனக்குள் சொல்லிக் கொண்டவன்.

"எங்க வீட்டுக்கு வர பொண்ணுன்னு சொன்னேன்... அதுக்கேன் இப்படிப் பார்க்கிறே?" என்றான் பேச்சை மாற்றி.

"அப்படியா சொன்னீங்க? எனக்கு வேற மாதிரிக் கேட்டுச்சே..."

"இல்லையே... அப்படித் தான் சொன்னேன்! கீர்த்து... நா அப்படித் தானேடா சொன்னேன்... நீ கேட்டே தானே?" என்று மனைவியைத் துணைக்கு அழைத்தான்.

அவள் எங்கே அவன் பேசியதைக் கவனித்தாள்? அவன் பேச்சு நின்று, மைவிழி அவனைக் குறுகுறுவென பார்க்கும் போது தான், கீர்த்தியின் கவனம், தன் பிள்ளை யிடமிருந்து அவர்களிடம் திரும்பியது!

ஆனால், கணவனின் பேச்சை விடவும் அவனது விழி மொழி உணர்ந்தவனாய் "ஆமா... ஆமா... அப்படித் தான் சொன்னாங்க..." என்றாள் கீர்த்தனா, ஆமோதிப்பாய்.

"ஹ்ம்ம்...புருஷனும் பொண்டாட்டியும் ஐ கேம் (eye game) விளையாடுறீங்கன்னு தெரியுது... சரி போங்க... இந்த ஒரு வாட்டி மன்னிச்சு விடுறேன்..." என்றவளின் கண்கள் சுற்றும் முற்றும் தேடின.

"யாரைத் தேடுறே?" எனக் கேட்ட கிருஷ்ணனின் குரலில், சின்னதாய் ஓர் கேலி இருந்தது போல், மைவிழிக்குத் தோன்றியது.

"அங்கிளைக் காணோமேன்னு பார்த்தேன்..." என்றாள் அவள், சாதாரணமாய்.

"அப்படியா?" இப்போதும் சின்னதாய் ஓர் கேலி இழையோட வினவினான் கிருஷ்ணன்.

அவனை நேருக்கு நேராய்ப் பார்த்த மைவிழி, "அப் படித் தான்!" என்று அழுத்திக் கூற.

கைகளை மேலே தூக்கிக் காட்டிவிட்டு, "சாரி... அப்பா கோவிலுக்குப் போயிருக்காங்க..." என்றான் அவள் கேட்டதற்கு மட்டும் பதில் கூறி.

"ஹோ... நன்றி செலுத்தும் படலமா?" என்று கேட்ட மைவிழியை, கீர்த்தியுடன் பேசவிட்டு விட்டு, கிருஷ்ணன் நகர்ந்தான்.

அவன் நகர காத்திருந்தவள் போல், கீர்த்தியிடம் திரும்பிய மைவிழி "ஆமா... எங்க உங்க தம்பியப்பர்? மேலே... குத்து பாட்டு போட்டு... சந்தோஷத்தைக் கொண் டாடிட்டு இருக்காரா?" என்றாள் கண்களை உருட்டி.

கீர்த்தி பதில் சொல்வதற்குள், "ஹோ... அவரா? அவரு... கோவிலுக்குப் போயிருக்காரு..." என்று நக்கல் குரலில் ராகம் இழுத்தபடி, மைவிழியையே சுவாரஸ்ய மாய்ப் பார்த்தபடி கீர்த்தியின் பின்னே நின்றான் கிருஷ்ணன்.

"கடவுளே!" என்றிருந்தது மைவிழிக்கு!

ஆனாலும், "ஹி...ஹி..ஹி..." என்று அசடு வழியத் துடித்த முகத்தை முயன்று சரி செய்து கொண்டு, "சரி... சரி... அதை விடுங்க! இன்னைக்கு என்ன சாப்பாடு?" என்றாள் சாதாரணமாய்.

கேலியாய் ஓர் சிரிப்பை உதிர்த்த கிருஷ்ணன், புருவத்தை உயர்த்திப் பார்க்க, இதையெல்லாம் உணராத கீர்த்தியோ "பூரியும் உருளைக்கிழங்கு மசாலாவும்... நிஷூக்கு ரொம்பப் பிடிக்கும்" என்று அன்றைய மெனுவை வாசித்தாள்.

"ஒண்ணாங் கிளாஸ் படிக்கிற பாப்பா..." என்று மன திற்குள் கூறிக் கொண்டு மைவிழி, சற்று நேரம் அவர் களுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு,

"என்னோட பிரண்ட் அனுஷா... ஷாப்பிங் போக ணும்ன்னு சொன்னா! சோ... நான் கிளம்புறேன்!" என்று கிளம்பி விட்டாள்.

கீர்த்தியும்... ஏன் கிருஷ்ணனும் கூட, அதில் ஓர் உள்குத்து இருப்பதை உணரவில்லை!

இதில் என்ன உள்குத்து இருக்கப் போகிறது?

இருந்ததே! மைவிழி ஷாப்பிங் செய்யச் சென்றது. கோவிலுக்கு அல்லவா?! அதுவும், நிஷாந்த் சென்றிருந்த அதே கோவிலுக்கு என்றால் குத்து பலம் தானே?!

அவள் உள்ளே நுழைந்த சமயம், முதலில் கண்ணில் பட்டது நிஷாந்த் தான்!

அடி மேல் அடி வைத்து, அடி பிரதக்ஷணம் வந்து கொண்டிருந்தான் அவன்!

சட்டென விழியைச் சுழற்றி, அரவாமுதன் இருக்கிறாரா என்று பார்த்தாள் மைவிழி.

அவர் இருந்தார். ஆனால், அங்கிருந்த பெரிய ஹாலின் ஓர் மூலையில், கண் மூடி தியானத்தில் இருந்தார்.

நெஞ்சுக்குள் விசித்திரமான ஓர் நிம்மதி பரவ, நிஷாந்திடம் திரும்பின கண்கள்.

கைகள் கூப்பிய நிலையிலிருக்க, ஓரோர் அடியையும், மெது மெதுவாக எடுத்து வைத்து, முகம் முழுக்க பிரகாசமும், உதடு முழுக்க உருக்கமான வேண்டுதலுமாய் சுற்றி வந்து கொண்டிருந்தவனைக் காணும் போது, உதடுகள் தானாகப் புன்னகையை பூசிக் கொண்டன.

"அக்கா குழந்தை மேலேயே இவ்வளவு பாசமா இருக்கவன்... அவனுக்குன்னு ஒரு குழந்தை பிறந்தா எவ்வளவு நல்லா வச்சுப்பான்..." என்ற எண்ணம் அவளுள் மலர்வதை அவளால் தடுக்க முடியவில்லை.

கீர்த்தியின் தாய்மையைக் கேள்விப்பட்டதில் இருந்து, கீர்த்தியை விடவும் நிஷாந்தின் சந்தோஷத்தை எண்ணியே, மைவிழியின் மனம் சுழன்று கொண்டிருந்தது!

பாவம்... எவ்வளவு கவலைப்பட்டுப் போயிருந்தான்... இப்போ குழந்தை விஷயம் தெரிஞ்சதும் என்ன செஞ்சானோ?

கீர்த்திக்காவைத் தூக்கிச் சுத்தியிருப்பானோ!?

ச்சே பயந்தவன்... எங்க அக்காவைத் தூக்கினா, குழந்தைக்கு எதுவும் ஆகிடுமோன்னு பயந்து, அப்படியெல்லாம் செஞ்சிருக்க மாட்டான்!

ஹ்ம்ம்...ச்வீட் வாங்கிட்டு வந்து, வீட்டையே ரணகளப்படுத்தி இருப்பான்!

ஒருவேளை... ப்ளாக் டீ போட்டிருப்பானோ? பாவம்... கீர்த்திக்கா! குழந்தை பிறக்கிற வரைக்கும்... கீர்த்திக்கா டீ... காபி சாப்பிடக் கூடாதுன்னு அவன்கிட்ட சொல்லி வைக்கணும்!

அய்யா தான் எப்பவும் பாட்டும் காதுமா இல்ல இருப்பார்? ஒருவேளை... ஜூனியர்...ஜூனியர்ன்னு கூப்பாடு போட்டுட்டு இருப்பானோ?

நிஷாந்தை சுற்றியே சென்று கொண்டிருந்த அவளது எண்ணங்களின் தாக்கத்தினால் தான், அவள் கோவிலுக்கு வந்ததே!

அவனது சந்தோஷத்தைக் கண்ணாரக் காண வேண்டும் போல் நெஞ்சம் துடித்தது!

மனம் கொடுத்த தைரியத்தில் கோவிலுக்கு வந்தவள், தன்னை மறந்து சந்தோஷத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

எவ்வளவு நேரம், அப்படியே நின்றாள் என்று மைவிழியும் அறியவில்லை.

உள்ளம் உருக, கடவுளிடம் தங்கள் வீட்டு சின்ன இளவரசி / இளவரசன் நல்லபடியாய்ப் பிறக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருந்த நிஷாந்தும், அவள் வந்ததை உணரவில்லை.

இப்படி உள்ளம் உருக வேண்டும் ஓர் ஆணைக் காண்பது அதிசயமாக இருந்தது!

அவளது தந்தையும் சாமி கும்பிடுவார் தான்! ஆனால், விளக்கேற்றி இருந்தால்... கையெடுத்து ஒரு முறை கும்பிடுவார்! அவ்வளவே! அதுவும், அவளுக்கு நடந்த அசம்பாவிதத்திற்கு பின்னர், கடவுள் மீதான அவரது நம்பிக்கை சற்றே குறைந்து விட்டது என்றே சொல்ல வேண்டும்!

அடுத்து... சாண்டில்யன்! கோவிலுக்குப் போவதென்றால் அவனுக்கு அப்படியொரு கடுப்பு! தேமே என்று வந்து நிற்பான்! கும்பிட வேண்டுமே என்று கை கூப்புவான்! ஆரத்தியைக் கண்ணில் ஒத்திக் கொள்வான்! அவ்வளவே!

ஆனால், இவன்? என்ன உருக்கம்! என்ன ஒரு பக்தி!

தனக்காக என்று வேண்டிக் கொள்பவர்களை விடவும், பிறருக்காக வேண்டிக் கொள்பவர்களுக்கு அழகிய மனசு என்று எங்கோ படித்தது நினைவு வந்தது மைவிழிக்கு!

மொழுக் மொழுக் என்று ஜீரா தண்ணீரில் உப்பிய ரசகுல்லா போல் இருந்த அவனது இரண்டு கன்னத்தையும், இரண்டு கைகளாலும் கிள்ளி, ''சோ... ஸ்வீட்...'' என்று கொஞ்ச வேண்டும் போலிருந்தது!

சட்டென, தன் எண்ணம் போகும் போக்கைக் கண்டு திடுக்கிட்டு நின்றாள் மைவிழி!

அவள் திகைத்து நின்ற அந்த நொடி, நிஷாந்த் அவளைக் கவனித்தான்!

''இவள் எங்கே இங்கே?'' என்ற கேள்வி உதித்தாலும்.

உள்ளுக்குள்ளிருந்த ''காதல்'' அவனை உந்தித் தள்ள, வேகமாய் அவளை நோக்கிச் சென்றவன்.

விழித்துக் கொண்டு நின்ற அவள் முன்னே விரல்களைச் சொடுக்கினான்.

''ஹான்...'' - கனவிலிருந்து விழிப்பவள் போல் மைவிழி முழிக்க.

''நானே உன்னைப் பார்க்க வரணும்ன்னு இருந்தேன்... நீயே வந்துட்டே...'' என்றான் நிஷாந்த், குதூகலமாய்.

அப்போதும், தன் திகைப்பிலிருந்து... அதிர்ச்சி என்று சொல்ல வேண்டுமோ... அதிலிருந்து வெளிவரவில்லை மைவிழி.

''எங்க... எப்படி உன்னைப் பார்க்கிறதுன்னு யோசிட்டே இருந்தேன்... கரெக்ட்டா கோவில்ல அதுவும்... ஹனுமான் முன்னாடி வந்து நிக்கிற! சூப்பர்!'' என்றவன்.

அவளது திகைப்பை கண்டு ஒரு வினாடி யோசித்தாலும், தன் மனத்தைக் காட்டிவிடும் வேகம் அவனை உந்தியது!

''ஓகே... ஒஜோ! நேரடியா பாயிண்ட்டுக்கு வந்துடுறேன்...'' என்றவன்.

போட்டிருந்த முழுக்கைச் சட்டையை முழுங்கை வரை மடித்து விட்டுக் கொண்டு.


''ஒஜோ... டே... அமோ!'' என்றான் தீவிரமாய்.

அப்போது தான், சுயநினைவுக்கு மீண்டவளாய் ''என்னது டீயும் ஆமவடையும் வேணுமா?'' என்று மைவிழி கேட்க.

''அடக் கண்றாவியே... கொடுமை பண்ணிட்டாளே...'' என்று தலையில் அடித்துக் கொண்டவன்.

''ஐ லவ் யூ...'' என்றான், அவளது கைகளை வேகமாய் பற்றி இழுத்து.

பூச்சரத்தில் அடுத்ததாய் சேரும் பூ - காதல்!



8

தான் காதலைச் சொன்னதும், ''வாட்...'' என்ற அதிர்ச்சியைத் தான் நிஷாந்த் எதிர்பார்த்தது!

கூடவே, ''என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று அவள் சீற,

''உன்னைப் பத்தி எனக்கு நல்லாவேத் தெரியும்!'' என்று நெஞ்சை நிமிர்த்தி தான் சொல்ல.

''அதான் என்ன தெரியும்ன்னு கேட்கிறேன்...'' என அவள் மீண்டும் கோபம் கொள்ள...

''மூணு வருஷத்துக்கு முன்னாடி... உனக்கு நடந்த கொடுமையை நேர்ல பார்த்தவன் நான்! இதை விட என்ன வேணும்!'' என உன்னைப் பற்றிய அனைத்தும் தெரிந்து தான். காதலைச் சொல்கிறேன் என்ற கர்வத்துடன் தான் சொல்ல.

வார்த்தைகள் முட்டி மோதும் என்று நிஷாந்த் எதிர் பார்த்து காத்திருக்க, மைவிழியோ வேறு சொன்னாள்! முற்றிலும் வேறு!

அவன் கையிலிருந்த தனது கையை அவள் வேகமாய் உருவும் போது தான், நிஷாந்த் கவனித்தான்!

அவளது முழுக்கை டீ-ஷர்ட்டையும் மீறி உள்ளுக்குள் எதுவோ ஒன்று குறுகுறுத்தது!

என்னவென்று அறிந்து கொண்டே ஆக வேண்டும் போல் நெஞ்சம் படபடக்க, தன் பிடியிலிருந்து நழுவிக் கொண்டிருந்த அவளது கைகளை மேலும் வேகமாய் பிடித்து தன் புறம் இழுத்தான், நிஷாந்த்.

''விடுங்க...'' என்று மெலிந்து ஒலித்த அவளது குரலை, அவன் இதுவரை கேட்டதே இல்லை.

எப்போதும், ஓர் ஆரவாரம்... ஓர் ஆர்ப்பாட்டம்... இல்லையேல் ஓர் தெளிவு... ஓர் நிமிர்வு என்று குரலே அவளது மனதின் உறுதியைப் படம் பிடித்துக் காட்டும்!

ஆனால், இன்று!

கொஞ்சம் கரகரத்து... லேசாய் நடுங்கி... குரலே மெலிந்து தேய்ந்திருந்தது!

''ஒஜோ...'' என்று அவள் வியப்புடன் இழுக்க,

அவனது வியப்பின் விலையான நூலிழையில், அவன் பிடியிலிருந்து தன் கையை உருவிக் கொண்ட மைவிழி, நீண்ட மூச்சு ஒன்றை ஆழ எடுத்து விட்டாள்.

பின்னர், நிஷாந்தை நேருக்கு நேராய் நோக்கி, ''என்னால லவ் மேரேஜ் எல்லாம் பண்ண முடியாது! நா... அப்பா பார்க்கிற மாப்பிள்ளையைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்! சாரி!'' என்றாள் திடமாய்.

ஒன்றும் புரியாமல், நிஷாந்த் ''ஹே!'' என்ற ரியாக்ஷனுடன் நின்றிருக்க, விறுவிறுவென அங்கிருந்து நகர்ந்தும் சென்று விட்டாள்.

''இவ என்ன சொல்றா?''

''என்னைக் காதலிக்கலைன்னு சொல்றாளா?''

''இல்ல... காதலே பிடிக்காதுன்னு சொல்றாளா?''

''இல்ல... நீ எப்படிடா காதலைச் சொல்லாம்ன்னு சொல்றாளா?''

''என்னடா மேட்டர்?'' - பிரம்மிப்பு மாறாமல் நிஷாந்த், யோசித்துக் கொண்டிருக்கும் போதே.

''என்ன நிஷூ... அடி வாங்காமத் தப்பிச்சிட்டோம்ங் கிறதை உன்னால நம்ப முடியலையாக்கும்?'' என்றார் அரவாமுதன் பின்னாலிருந்து.

''அப்பா!'' - என்று மீண்டும் ஒரு முறை அதிர்ந்து திரும்பினான் நிஷாந்த்.

அரவாமுதன் லேசாய்ச் சிரிக்கவும், ''என்னப்பா இது? கொஞ்சமாவது கோபம் வருதா உங்களுக்கு? உங்க பையன் ஒரு பொண்ணுகிட்ட... அதுவும் கோவில்ல வச்சு... லவ் சொல்றான்... நீங்க பாட்டுக்குச் சிரிக்கிறீங்க? உங்களுக்கு என்ன புன்னகை மன்னன்னு நினைப்பா?'' என்றான் கோபம் போல் காட்டி.

''ஆமா... என் பொண்ணு லவ் மேரேஜ் பண்ணதையே நான் எதிர்க்கலை... இதில பையன் பண்றதை எதிர்க்கப் போறேனாக்கும்? அதுவும், கிருஷ்ணன் மாதிரியும்... மைவிழி மாதிரியும் பொறுப்பான மனுஷங்க என் வீட் டுக்கு மருமகப்புள்ளைங்களா வரதுக்கு, நான் கொடுத்து வச்சிருக்க வேணாம்!'' என்றார் பெரியவர், மாறாக சிரிப்புடன்.

''குருவும், ஒஜோவும் பொறுப்புன்னா... நாங்க என்ன? என்னை நீங்க இன்சல்ட் பண்றீங்கப்பா!'' என்று சிறு பிள்ளையாய் சிணுங்கினான் நிஷாந்த்.

''உண்மையைச் சொன்னா... கோபம் வருதாக்கும்! உனக்கு வாழ்க்கையில என்னடா தெரியும்? மியூச்சுவல் ஃபண்டையும்... டாக்ஸ் ஃபார்மையும் தவிர?!'' என்ற எதிர்கேள்வியில் அவனை அடக்கினார் பெரியவர்.

''ஆமா... அவளுக்கு மட்டும் எல்லாம் தெரியு மாக்கும்? நா லவ் யூன்னு சொல்றேன்... ஏதே பட்ஜெட் நோட்ஸ் கேட்ட மாதிரி... எதிர் அறிக்கை ஒண்ணைத் தாக்கல் பண்ணிட்டுப் போறா? ஏதாவது... புரியிற மாதிரியா பேசுறா?'' என்று கடிந்து கொண்டான், நிஷாந்த்.

''உனக்குப் புரியலைன்னா... அவ புரியிற மாதிரி பேசலைன்னு அர்த்தமா?'' என்றார் அரவாமுதன் சிரிப் புடன்.

''அப்பா!!!'' - பல்லைக் கடித்தான் மைந்தன்.

''சரி சரி...வா! வந்து உன்னோட குருகிட்டேயே... அவ பேசினதுக்கு என்ன அர்த்தம்ன்னு கேட்டுத் தெரிஞ்சுக்கோ!'' என்று அவனை அழைத்துச் சென்றார் பெரியவர்.

''ஏன் நீங்க சொல்ல மாட்டீங்களோ?''

''என்ன இருந்தாலும்... உன் குரு அளவுக்கு வரா துப்பா...'' - சிறு கேலியாய் உதடு பிதுக்கினார் தகப்பனார்!

நிஷாந்தும் அரவாமுதனும் வீடு சென்று, கிருஷ்ண னுடன் பேசிய அதே நேரம். மைவிழி தான் தங்கியிருந்த வீட்டிற்கு விரைந்திருந்தாள்.

வரும் வழியாவும், நெஞ்சைப் போட்டுப் பிசைந்த பல விஷயங்களை உள்ளேயே அடக்கிக் கொண்டு

வந்தவளால், அறைக்குள் நுழைந்ததும் தன்னை அடக்கி வைக்க முடியவில்லை.

அவளுடன் அறையைப் பகிரும் தோழிகளும், விடுமுறை நாளைக் கழிக்க வெளியே சென்றிருக்க, படுக்கையில் விழுந்தவள், கதறி அழத் தொடங்கினாள்!

எதற்கென்று தெரியாவிட்டாலும், நெஞ்சை ரணமாய் வலித்தது!

நிஷாந்த் காதலைச் சொன்னதாலா?

இல்ல தனக்கு நடந்த கொடுமையாலா?

இல்லை... அவன் காதலைச் சொல்லும் போது, பட்டென மறுக்காத தன் மீதான கோபத்தினாலா?

ஒருவேளை, அவன் காதலைச் சொன்னதும், நாணம் ஏற்பட்டு வெட்கிக் குனியாத தன் முகத்தினாலா?

எதுவென்று அவளுக்கேத் தெரியவில்லை!

நெஞ்சம் கதறித் தவித்தது!

நிற்காமல் வடிந்து கொண்டிருந்த கண்ணீரின் ஸ்பரிசத்தைக் கூடத் தாங்க மாட்டாதவளாய், கையை உயர்த்தி புறங்கையால் துடைத்துக் கொண்டாள்.

முழுக்கை வரை நீண்டிருந்த மிருதுவான டீ-ஷர்ட்டின் ஸ்பரிசம் பட்டது. வெறி வந்தது போல் ஆகிவிட்டது மைவிழி!

''ஹான்... ஹான்...'' என்று வீறு கொண்டு கத்தியவள்.

இமைக்கும் நேரத்தில், தன் மேனியைத் தழுவியிருந்த ஆடையைக் கழட்டி வீசினாள்.

தூரமாய்ப் போய் விழுந்த அந்த டீ-ஷர்ட்டின் துணியில் என்ன கண்டாளோ, அதே கோபத்துடன் டீ-ஷர்ட் விழுந்த இடத்திற்குச் சென்றவள், தன் கோபம் முழுதையும் கால்களில் திரட்டி, அதை ஓங்கி மிதிக்க ஆரம்பித்தாள்.

''ஹ்ஹ்ஹ்...ஹ்ஹஹஹஹ...ஹ்ஹான்... போ... போ போ என்னை விட்டுப் போ...'' என்று வெறி பிடித்தவள் போல் கத்தியவள்.

தொடர்ந்து அந்த டீ-ஷர்ட்டை துவம்சம் செய்யத் தொடங்கினாள்!

டீ-ஷர்ட் பறந்து விழுந்தது அறையின் ஓர் மூலையில் என்பதால், அதை உதைக்கிறேன் என்று மைவிழி எடுத்து வைத்த ஓரோர் அடியும் அவளது கால்களையே பதம் பார்த்தன!

கால் விரல் நகங்கள், சுவற்றில் மோதி மோதிப் பெருத்த வலியை உண்டாக்கியபோது, மைவிழி தன் வெறிச் செயலை நிறுத்தவில்லை.

ஒரு கட்டத்தில், சுவற்றில் மோதிய பெரு விரலின் நகம் பிய்ந்து. தோல் வெளியே தெரிய, ரத்தம் ஊற்றாய் பெருகியபோது தான், மைவிழியின் ஆத்திரம் மட்டுப் பட்டது!

ரத்தத்தைப் பார்த்த வினாடி, கைகள் இரண்டையும் கன்னத்தில் வைத்து, மேலிருந்து கீழாக இழுத்து வந்தவள், ''அய்யோயோயோயோயோயோயோயோ..... ரத்தம்ம்ம்ம்ம்ம்ம்ம்...'' என்று உடல் நடுங்கியவளாய், பின்னோக்கி நகர்ந்து கட்டிலில் தொப்பென விழுந்தாள்.

காலை விடவும் நெஞ்சு பயங்கரமாய் வலித்தது!

''ஹய்யோ... ஏன் முருகா ஏன்? நிஷாந்தை... என்னோட வாழ்க்கையில முன்னாடியே வந்திருக்கக் கூடாதா?

ஏன்... ஏன்? ஏன் இப்ப வந்தான்? என்னால... சரி சொல்ல முடியாத நிலமையில ஏன் வந்தான்?'' என்று குமுறியது நெஞ்சம்.

மேலுடலை உள்ளாடைகள் மட்டுமே மறைத்திருக்க, வெற்றுடம்பாய் படுத்தியிருக்கிறோம் என்ற எண்ணம் கூட அவளைப் பாதிக்கவில்லை.

''மூணு வருஷம் முன்னாடி... இவனைப் பார்த்திருக்கக் கூடாதா?'' என்று மட்டும் நெஞ்சம் கிடந்து அடித்துக் கொண்டது!

ஆனால், மற்றொரு மனமோ ''மூணு வருஷம் முன்னாடி வந்திருந்தா... என்ன செஞ்சிருப்பே? இவனையும் இன்னொரு ரமேஷா நினைச்சு... ஒதுக்கி வச்சிருப்பே! அந்த நேரத்தில... ரமேஷ்...நிஷாந்த் யாரா இருந்தாலும் உனக்கு அவங்க மேல காதல் வந்திருக்குமா?'' என்று கேள்வி கேட்டது!

அதற்குப் பதிலாய், ''இல்ல... இல்ல... நிஷான்... ரமேஷ் மாதிரி இல்ல! நிஷான் இஸ் ஸ்வீட்!'' என உரக்க கத்தின, மைவிழியின் உதடுகள்!

''ரியல்லி?'' என்று மனம் மீண்டும் குடைய.

''ஆமா... நிஷான் ஒரு நல்ல மனுஷன்! ரமேஷ் மாதிரி நாய் கிடையாது!'' என்று ஆத்திரமாய்க் கத்தினாள் மைவிழி.

ஏன் இப்படிக் கத்துகிறோம் என்று கூட அவளுக்குத் தெரியவில்லை!

ஆனால், இப்படி வெறி பிடித்தது போல் கத்தும் போது, உள்ளிருக்கும் வேதனைக்கு வடிகால் கிடைப்பது போல் தோன்றியது!

உள்ளக் குமுறல் முழுதும், கண்ணீராய் வெளியேற. காலில் வடிந்த இரத்தத்தைப் பற்றிய நினைப்புக் கூட இல்லாமல், அப்படியே படுத்திருந்தாள் மைவிழி.

''ரமேஷ்!'' என்ற பெயர் பற்பல எண்ணங்களை இட்டு வர, அதன் தொடக்கத்திற்குப் பயணப்பட்டாள் மைவிழி.

பன்னிரெண்டாம் வகுப்பு முடிந்து, கல்லூரி சேர்வதற்குக் காத்திருந்த நேரம் அது!

ஆயிரம் மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியிருந்தாள் மைவிழி. பாராட்டக்கூடிய மதிப்பெண் இல்லை என்றாலும், கழிக்கக் கூடிய மதிப்பெண் இல்லை என்பதால், நல்ல கல்லூரியில் இடம் கிடைப்பதற்காகக் காத்திருந்தாள்.

அப்பா நடராஜனுக்கு செல்ல மகள் என்பதால், ''கண்ணம்மா...'' என்ற அவரது ஆஸ்தான அழைப்பில் தொடங்கி,

''உன்னோட மார்க்குக்கு... இஞ்சினியர் சீட் கிடைக்குமாம்டா! பணம் கட்டினாலும்... அப்பா படிக்க வைக்கிறேன்...'' என்று பெண்ணின் முடி கோதினார் அந்த அன்ப தந்தை!

''இல்லப்பா... எனக்கு இஞ்சினியர் ஆகணுமன்னு ஆசையெல்லாம் இல்லப்பா... எனக்கு பயோ-கெமிஸ்ட்ரி படிக்கணும்! எனக்கு அதில தான்ப்பா இன்ட்ரெஸ்ட்...'' என்று மகள் கெஞ்சல் குரலில் கூறியபிறகு, தந்தையால் மறுக்க முடியுமோ?!

கோயம்புத்தூரில் இருக்கும் ஓர் பிரபல கல்லூரியில் மகளை பி.எஸ்.சி பயோ-கெமிஸ்ட்ரி சேர்த்துவிட்டார்.

இயல்பிலேயே, மைவிழி கலகலப்பானவள் அல்ல! அவள் மனம் திறந்து பேசும் நபர்கள்- அவளது வீட்டார் மட்டுமே! முக்கியமாய், அவர்களுடனே தங்கி இருக்கும் அவளது தாய் வழி பாட்டி - அமுதம் தான், அவளது தோழியே!

பாட்டியிடம் பகிராத விஷயங்களே இல்லை எனும் அளவிற்கு, பாட்டியும் பேத்தியும் க்ளோஸ்!

வகுப்பிலுமே, யாருடனும் அவ்வளவாய் பேச மாட்டாள்! தான் உண்டு. தன் வேலை உண்டு என்றிருக்கும் ரகம்!

பள்ளிக்கூடம் போலவே, கல்லூரியிலும் அவள் யாரிடமும் அவ்வளவாய் பேசியதில்லை.

தன்னருகே அமரும் ரோஜாவிடம் பேசுவாள், அதுவும், மைவிழியும் அவளும் ஒரே பேருந்தில் வருபவர்கள் என்பதால், பேச்சு கொஞ்சம் கூடுதலாய் இருக்கும்!

வகுப்பில் அட்டெண்டன்ஸ் எடுக்கும் போது கூட, தன் உடன் பயில்வோரின் விவரம் அறிய முற்பட்டதில்லை அவள்!,

அவள் அறியாவிட்டால் என்ன? பிறர் அவளைப் பற்றி அறிந்து வைத்திருந்தனரே! முக்கியமாய் ரமேஷ்.

ஒரு நாள் மதியம், உணவு முடிந்துவிட்டு மரத்தடியிலிருந்து வகுப்பிற்கு அவள் சென்று கொண்டிருந்த போது, ''ஹலோ மைவிழி...'' என்று அவளை நிறுத்தினான் ஒருவன்.

வழியை மறித்துக் கொண்டு நிற்பவனைத் தாண்டிச் செல்லத் தோன்றாமல், கண்ணை மட்டும் உயர்த்தி ''என்ன?'' என்பது போல் பார்த்தாள் மைவிழி.

''நான் ரமேஷ்...'' என்று தன்னைத் தானே அறிமுகம் செய்துகொண்டவன்.

''இருந்துட்டு போகட்டும்? எனக்கென்ன வந்துச்சு?'' என்பது போன்ற அவளது பார்வையில் சற்றே கோபம் கொண்டவனாய்.

''உன்னோட ஒரே கிளாஸ்ல படிக்கிறேன்!'' என்றான் அழுத்தமாய்.

இப்போதும், மைவிழியின் ஒட்டுதல் இல்லா பார்வையில் மாற்றமில்லை!

''அதற்கென்ன இப்போது?'' என்ற கேள்வியைத் தாங்கி நின்ற அவளது பார்வையில் வெகுண்டவனாய்.

''உனக்கென்ன பெரிய அழகின்னு நினைப்பா? என்னமோ... புழுவைப் பார்க்கிற மாதிரி பார்க்கிறே?'' என்றான் எரிச்சலாய்.

மைவிழிக்கு ஆச்சரியமாய் இருந்தது!

என்னமோ, இவள் போய் அவனிடம் வலிய பேசியது போல் இதென்ன சிறுபிள்ளைத்தனமான கோபம் என்று தான் இருந்தது அவளுக்கு!

ஒன்றும் சொல்லாமல், தன்னை மறைத்தபடி நின்றவனை, தாண்டி கொண்டு செல்ல முயன்றவளின் கைகளைச் சட்டென பற்றியவன்.

''ஹே... என்னடி திமிரா? பேசிட்டே இருக்கும் போது... போறே?!'' என்று சீறியவன்.

''நா உன்னை லவ் பண்றேன்டி... நீயும் என்னை லவ் பண்ணனும்!'' என்றான் கட்டளை போல்!

அன்று அவன் பற்றிய அதே கையைத் தான், இன்று நிஷாந்தும் பற்றியிருந்தான்!

அன்று அவன் சொன்ன அதே காதலைத் தான், இன்று நிஷாந்தும் சொன்னான்!

ஆனால், இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசம்!? விஷத்திற்கும், பாதாம் பாலுக்குமான வித்தியாசம் அல்லவா?!

பூச்சரத்தில் சேரும் அடுத்த பூ - தவிப்பு!



9

நிஷாந்தின் நினைவு நெஞ்சில் பளிச்சிட்டதுமே, மைவிழிக்குப் பழையன எல்லாம் நினைவிலிருந்து மறையத் தொடங்கின.

நிஷாந்தின் குறும்பும், அவன் கண்களில் தென்படும் பாசமும், அவனது வளவளா கொழகொழாப் பேச்சும் அவளைக் கட்டி இழுத்து வந்தன!

''ஷப்பா... என்ன பேச்சு? திடீர்ன்னு வந்து... ஐ லவ் யூ சொல்லிட்டானே! அதுவும் கோவில்ல வச்சு...'' என்று வியக்காமல் இருக்க முடியவில்லை அவளால்!

ஆனால், ''கோவில்'' என்ற சொல் அவளுக்கு பழைய நினைவுகளின் மிச்சத்தை எடுத்து வர ஆரம்பித்தன!

ரமேஷ் தன் ''காதலை'' மைவிழியிடம் பகிர்ந்து ஒரு வாரமே ஆகியிருந்த சமயம் அது!

மைவிழியும், அவனது அடாவடி பேச்சை ஒரு பொருட்டாக மதிக்காமல், அவனைத் தவிர்த்துவிட்டு வந்து கொண்டிருந்தாள்!

''காதல் என்ன... மரத்தில காய்க்கிற கொய்யா காயா? கொக்கி போட்டு இழுத்ததும் டொப்பு.... டொப்புன்னு

விழுகிறதுக்கு! லூசு பய!'' என்ற நினைப்புடன், அவனை அப்படியே மறந்துவிட்டு தன் வேலையில் கவனம் செலுத்தத் துவங்கினாள் மைவிழி.

அடுத்த பத்து நாட்களில் பரீட்சை வந்ததால், அது அவளுக்கு சிரமமாகவும் இல்லை!

பரீட்சை முடிந்து, விடுமுறையில் இருந்த சமயம், அவர்களது குலதெய்வக் கோவிலில் பூஜை ஒன்று வந்தது!

மைவிழியின் குடும்பம் மொத்தமும் அங்கே சென்றிருந்தது!

பற்பல சொந்தங்களும், ஊரார்களும் அங்கே குழுமியிருந்தனர்!

விருந்தும் பேச்சுமாய் நேரம் கழிய, இடுப்பு வரை நீண்ட பின்னலும், குழி விழும் கன்னமும், அமைதி படிந்த கண்களுமாய், அழகுப் பதுமையென நடமாடி வந்தவளை மேய்ந்தன பலரது கண்கள்!

அதிலும், ஒரு சிலர் நடராஜனிடமே வந்து ''பொண்ணுக்கு வரம் பார்க்கிறியாப்பா? அப்படியெதுவும் விஷயம்ன்னா சொல்லு... என் சொந்தத்தில நெறைய பசங்க இருக்காங்க...'' என்று நேரடியாய்ப் பெண் கேட்டனர்.

அவரோ, ''படிப்பு முடியட்டும் அண்ணே! கண்டிப்பா சொல்லிவிடுறேன்!'' என்றார் பெருமை பொங்கிய புன்னகையுடன்.

அதே போல், சிவகாமியிடமும் பல உறவுக்காரப் பெண்கள், மைவிழியின் திருமணத் தகுதி பற்றி விசாரித்தனர்.

கணவனின் பதிலையே திரும்பப் படித்த சிவகாமிக்கும் பெருமையே! கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பூரிப்புடன் பார்த்துக் கொண்டனர்.

ஆனால், வேறு சில பேச்சுக்கள் அந்த பெருமையை சற்று குறைத்தன என்றே சொல்ல வேண்டும்!

"இப்படித் தான்... அந்த ராதாம்மா மக நிவேதாவும் அழகு கொட்டுனா... ஆனா என்னாச்சு... ஒரு பையனை லவ் பண்ணி, வீட்டை விட்டு ஓடிப் போய்ட்டா... ஹ்ம்ம் பொண்ணுங்க அழகா இருந்தாளே பெத்தவங்க பாடு திண்டாட்டம் தான்!"

"ஆமா... ஆமா... இப்படியொரு பக்கம்ன்னா... நம்ம சாரதா மருமக இருக்காளே! ஆத்தாடி ஆத்தா... என்ன ரப்பு... என்ன ராங்கி... அவ சிலுப்புற சிலுப்பும்... அலப்புற அலுப்பும்... தாங்கலை! அழகா இருக்கோம்ன்கிற மெதப்பு!"

"ஊரும் கெட்டுக்கெடக்கு... உம் மக வேற டவுன்ல இருக்க பெரிய காலேஜுக்கு போய் படிக்கிறா... நா அவளைத் தப்பு சொல்லலை சிவகாமி... ஆனாலும், இந்தப் பசங்க இருக்கானுங்களே! பொண்ணுங்க பின்னாடியே சுத்தி... சுத்தி... அதுங்க மனசைக் கரைச்சிடுவாங்க!"

இப்படியாய் பற்பல பேச்சுக்களை மூட்டைக் கட்டிக் கொண்டு, வீடு வந்து சேர்ந்த மைவிழியின் குடும்பம், அடுத்த இரண்டு நாட்களும், மைவிழியின் காதை "காதலின் தீய்மையைச்" சொல்லி, ஓட்டையாக்கியது!

அதனாலேயோ... இல்லை இயல்பிலேயே அதிகம் பேசாதவள் என்பதாலோ, மைவிழி ரமேஷின் காதல் விஷயத்தை சொல்லவே இல்லை! அவள் பாட்டியிடம் கூட!

எங்கே அவர்களிடம் சொன்னால், தேவையில்லாமல் பயந்து போவார்களோ என்று அவள் எண்ணியிருக்க, காரியம் கை மீறிப் போக ஆரம்பித்தது!

அவள் போகும் இடமெல்லாம் அவனும் வந்தான்!

பேருந்தில்... கல்லூரியில்... ஆய்வுக்கூடத்தில் என்று அவள் பின்னோடு சுற்றினான்.

பல முறை, கையைப் பிடித்து இழுத்தான்!

"ஏய்... என்னடி திமிரா?" என்று கத்தினான்!

"நீ என்னை விட்டு எவனைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு பார்க்கிறேன்!" என்று சூளுரைத்தான்!

"நீ எனக்குத் தான்!" என்று உரிமை பாராட்டினான்.

அவள் கொண்டு வரும் உணவை எடுத்து உண்டான்.

மறுத்து அவள் இழுத்தால், "நீயே எனக்குத் தான்... இதில சாப்பாட்டைக் கொடுக்க என்னடி தயங்குறே?" என்று அசிங்கமாய் பேசினான்.

இன்னும் என்னென்னவோ! ஒரு மாதத்திற்கு மேல், மைவிழியால் அவனது டார்ச்சரை பொறுக்க முடியவில்லை!

தந்தையிடம் சொல்லிவிட வேண்டும் என்று அவள் முடிவெடுத்த நாளில், மதிய உணவு முடிந்து முதல் வகுப்பு ஆரம்பிக்கும் நேரத்தில், ரமேஷ் அவள் அமர்ந்திருந்த இருக்கைக்கு வந்தான்.

வந்தவன், அவள் முன்னே இருந்த மேசையில் இரு கைகளையும் ஊன்றி, நன்றாக குனிந்து, அவளது முகத்தைக் கூர்ந்து பார்த்தான்!

மதுவின் நெடி, நாசியைத் துளைத்தது!

"ச்சீ..." என்று அவள் முகம் சுளிக்க,

"என்ன ச்சீ... அடி என் காதல் ராணி! என்னடி ச்சீ..." என்றவன், அவள் தாடையைப் பற்றி, அவள் முகத்தைத் தன்னருகே இழுக்கவும்,

மைவிழி அதிர்ந்தாள்! இதுவரை, அவனது அதிகப் பட்ச செயல் கையைப் பற்றி இழுப்பது தான்! அதுவும், வகுப்பறைக்கு வெளியே! ஆனால், இன்று... நினைக்க நினைக்க மனம் கூசியது! உடல் நடுங்கியது!

தன் அருகே இழுத்துவரப்பட்ட அவளது முகத்தில், "ஊ... ஊ..." என்று ஊதியவன், உல்லாசமாய் சிரித்தான்.

தன் பலம் முழுதையும் திரட்டி, அவனிடமிருந்து விடுபட முயன்றாள் மைவிழி.

ஆனால், முடியவில்லை! மிருகத்தின் பிடியன்றோ... மிக இறுக்கமாய் இருந்தது!

அதற்குள் உடன் பயிலும் சில மாணவர்கள், "ரமேஷ்... கிளாஸ்ல வச்சு மிஸ்பீகேவ் பண்ணாதே!" என்று கடிந்து கொள்ள,

"அப்ப... வெளிய வச்சு பண்ணலாமா? என் மைவிழி... உங்க வீடு ஓகேவா? எல்ல எங்க வீட்டுக்கு வந்துடு றியா? இல்ல ஹோட்டல் போலாமா?" என்று அசிங்க மாய் பேசத் தொடங்கிவிட்டான்.

"ஏய்... விடு... ச்சை... கருமம்..." என்று அவள் தன் நகத்தால் அவனைக் கீற,

வெறி கொண்டவனாய், அவளது துப்பட்டாவை வேகம் கொண்டு இழுத்தான் அந்தக் குடிகாரன்.

பின் பண்ணியிருந்த துப்பட்டா சட்டென கைக்கு வந்துவிட, மைவிழியின் அபாய வளைவுகளில் அவனது விழிகள் பாய்ந்து மீண்டன!

அவமானத்தில் செத்து போனாள், மைவிழி!

மைவிழிக்கு அழுகை முட்டிவிட்டது!

கூடவே, சூழ இருந்து பார்த்துக் கொண்டிருந்த முழு வகுப்பும், அவள் உடம்பைக் கூசச் செய்ய, ஆத்திரமும் பொங்கி விட்டது!

ஆத்திரமும் அழுகையுமாய், அவனிடம் வெடித்தாள் மைவிழி! முதன் முறையாக!

"ஏய்... உனக்கு அறிவில்லை? லவ் என்ன கடையில விக்கிற பொருளா? காசு கொடுத்து வாங்குறதுக்கு?"

"என்னமோ... உன்னைத் தான் லவ் பண்ணனும்ன்னு ஆர்டர் போடுறே? போடா... என்னால லவ் பண்ண முடியாது! என்ன வேணும்னாலும் பண்ணிக்கோ!"

"இன்னைக்கே... உன்னைப் பத்தி பிரின்சிபால்கிட்ட கம்ப்ளைன்ட் பண்றேனா இல்லையான்னு பாரு?"

"நாளைக்கு... எங்கப்பாவை கூட்டிட்டு வாரேன்! உன்னை உண்டு இல்லைன்னு ஆக்கி... இந்த காலேஜை விட்டே துரத்தலை... நா மைவிழி இல்ல!"

"பொண்ணுன்னா என்னடா நினைச்சே... நீ மிரட் டினதும், பயந்து போய் உன் பின்னாடியே வந்துடுவான்னா..."

"திமிரு... திமிருடா உங்களுக்கெல்லாம்!"

"எல்லாம் இந்த சினிமா காரனுங்களை சொல்லணும்! குடிக்கிறவனும்... கொள்ளை அடிக்கிறவனும்... கொலை பண்றவனையும் ஹீரோன்னு காட்டுறானுங்க இல்ல... அதான்... நீங்களும் இப்படி அலையுறீங்க!"

"உன்கிட்ட இப்போ சொல்றேன் கேட்டுக்கோ! எனக்கு உன்னை... சுத்தமா பிடிக்கலை! பிடிக்கலை! பிடிக்கலை!"

''எனக்கு வாழ்க்கையில கண்டிப்பா லவ் வரும்... நானே ஒருத்தரை லவ் பண்ணாலும் பண்ணுவேன்... இல்ல அப்பா பார்க்கிற பையனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு லவ் பண்ணுவேன்!''

''ஆனா... உன் மேல லவ் வராது! கண்டிப்பா வராது! வரவே வராது!''

கத்தி தீர்த்துவிட்டாள் மைவிழி!

அவளால், இத்தனை நாட்களாய் அனுபவித்த வேதனையை அடக்கி வைக்க முடியவில்லை.

அதுவும் அவன் குடித்துவிட்டு, பல பேர் முன்னாடி முகத்தைப் பிடித்து இழுத்ததும், ஏதோ முத்தம் வைத்தது போல் நெஞ்சம் கனத்து போனது!

கோபத்திலும், வேதனையிலும், ஆத்திரத்திலும் அவள் வெடித்துக் கிளம்ப,

ரமேஷ் என்ற மது உண்ட மதயானையோ, திமிர் எனும் ஆயுதத்தை அள்ளி வீசினான்.

கொத்தாக மைவிழியின் முடியைப் பிடித்தவன், ''ஏய்... என்னடி திமிரா... ரொம்பப் பேசுறே? அந்த கிழட்டுப் பயகிட்ட போவியா... போயேன்... அவன் மட்டும் என்னை காலேஜை விட்டுத் தூக்கட்டும்... அவனையும் போட்டுட்டு... உன்னையும் சாவடிக்கிறேன்டி...'' என்றான் ஆங்காரமாய்.

இதே ஆங்காரத்துடன், ''போடுறதுக்கு முன்னாடி... உன்னை அணுஅணுவா சித்ரவதை பண்ணிட்டுத் தான்டி... மறுவேலை!'' என்று அவன் கர்ஜிக்க,

வகுப்பறையே ஒன்று கூட, மைவிழியை அவனிடமிருந்து பிரித்தது!

ஆனால், சுற்றியிருந்த அனைவரையும் மீறிக் கொண்டு, தன் கையிலிருந்த லைட்டரை எடுத்து பத்த வைத்தவன், மைவிழியின் நீண்ட கூந்தலில் அதை வைத்தே விட்டான்!

''ஆஅ... ஆஅ... ஐயோ தீ...''

''அய்யயோ... அய்யோ...''

''மைவிழி... தீ டீ...''

''யாராவது தண்ணி எடுத்திட்டு வாங்க...''

''ஏய்... என்னோட ஷாலை தா...'' என்று பற்பல குரல்களுக்கு இடையே, மைவிழியின் மேல் பரவத் தொடங்கிய தீ முளையிலேயே கிள்ளப்பட்டது!

ஆனால், அதற்குள் பாதி கூந்தல் அழிந்தே போய் விட்டது!

இடைவரை நீண்ட கூந்தல் எரிந்ததை விடவும், கூந்தலில் பரவத் தொடங்கிய தீ, சட்டையில் பட்டு, அங்கங்கே தீ காயங்களை ஏற்படுத்தி விட, அந்த அதிர்ச்சியிலேயே மயங்கிச் சரிந்தாள்!

உடலில் பரவிய தீ, உள்ளத்தை எரித்துச் சென்றது!

ஆசை ஆசையாய் வளர்த்த கூந்தல் கருகியதில், மைவிழியின் மனம் சருகாகிப் போனது!

முதுகில் சிற்சில கிழிசல்களையே விட்டிருந்தாலும், நெஞ்சம் பெரும் பொத்தலாகிப் போனது!

வெளியே பரவிய தீயை அணைத்துவிட்ட போதும், உள்ளுக்குள் பரவிய பயமெனும் தீயை அவளால் அணைக்க முடியவில்லை.

விஷயம் கேள்விப்பட்டு, பதறியடித்துக் கொண்டு ஓடி வந்த குடும்பத்தாரைக் கண்டதும் தான் மைவிழி சற்று தெளிந்தாள்.

தன் உடல் எரிந்ததை விடவும், பிறருக்கு தெரிந்ததில் அந்தக் கன்னிப் பெண்ணின் கண்ணிமை அவளைக் கலங்கச் செய்தது!

முன்னே இருந்த வனப்பில் பாய்ந்த பலரது பார்வையும், பின்னே தீக்காயங்களின் ஊடே தெரிந்த வெளீர் உடம்பைக் கண்ட அவர்களது கழுகுக் கண்களும் அவளைக் கொத்திப் பிடுங்கின!

உலகத்திலேயே உன்னதமான அமுதமாம், தாய்ப் பாலை சுரக்கும் மார்பகங்களைக் கூட காமப்பசியுடன் பார்க்கும் மிருகங்களை, அவர்கள் குடித்த தாய்ப்பால் வெளியே வரும் வரை அடித்தால் என்ன?

ஒரு பெண்ணுக்கு நிகழக் கூடாத கொடுமையை அனுபவித்துவிட்டு, ஒரு பெண் துடிக்கும் நிலையிலும்... வயது வித்தியாசமில்லாமல் வெளிப்பட்ட அந்த விரசப்பார்வைகள், தூங்கும் போதெல்லாம் கனவில் வந்து அவளை இம்சித்தன!

அதிலும், அந்த ரமேஷ் என்ற வெறியனின் முகம் பாம்பாய் மாறி, சின்ன அணிலான தன்னை அள்ளிச் சென்று முழுங்குவது போல், கற்பனை தோன்றி உடம்பு பதறியது!

மூன்று நாட்கள் கழிந்த பின்னரும், பயந்த விழிகளும்... வெறித்த பார்வையுமாய் இருந்த பெண்ணை பெற்றவரால் பார்க்க முடியவில்லை.

ஒரு முடிவுக்கு வந்தவராய், மனைவி தடுத்ததையும் பொருட்படுத்தாமல், காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு வந்தார்.

''மைய்யு... ஒண்ணுமில்லைடா... அந்தப் பொறுக்கி மேல மர்டர் அட்டெம்ப்ட் கேஸ் ஃபைல் பண்

ணிட்டேன்டா... போலீஸ் கண்டிப்பா அர்ரெஸ்ட் பண்ணிடுவாங்க!'' என அவர் கூறியதும் தான், மைவிழி நிமிர்ந்து அமர்ந்தாள்.

''ஆமாப்பா... அவனுக்கு கண்டிப்பா தண்டனை கிடைக்கணும்!'' என்று அவள் கண்ணில் வெறியுடன் சொல்ல,

சிவகாமி குறுக்கே புகுந்தார்!

''சொல்லச் சொல்லக் கேட்காம கம்ப்ளைன்ட் கொடுத்திட்டு வந்திருக்கீங்களே... உங்களை என்ன பண்றது? அந்தப் பையன் குடும்பமே ஒரு மாதிரியான குடும்பமா... இனி என்ன நடக்குமோ? கடவுளே!'' என்று மருகியவள்,

''இனிமே... எம் பொண்ணு வாழ்க்க என்னாகப் போகுதோ!'' என்று பயந்தார்.

ஆனால், நடராஜன் தான் ''அதெல்லாம் ஒண்ணும் பயமில்லைம்மா! காலேஜ்லேயும்... அவனை டிஸ்மிஸ் பண்ணிட்டாங்க! ஈவ்-டீசிங் கேஸ்ங்கிறதால... கலெக்டர் வரைக்கும் புகார் போயிருக்காம்! அதனால தான், என்னையும் கம்ப்ளைன்ட் கொடுக்கச் சொன்னாங்க! இனிமே... அந்த ராஸ்கலை நினைச்சு நீ பயப்பட வேண்டாம்!'' என்று மகளுக்குத் தைரியம் சொல்லி, கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்.

உள்ளுக்குள் பயத்துடன் தான், மைவிழி கல்லூரிக்குச் சென்றது!

அவள் பயத்தை ஒன்றுமில்லை என்றாக்குவது போல், ரமேஷ் வரவில்லை!

கல்லூரி முதல்வரும், அவளைக் கூப்பிட்டு அனுப்பி, ''இனி பயப்படத் தேவையில்லை! ரமேஷை டிஸ்மிஸ் செய்துவிட்டோம்!'' என்று தைரியம் கூறினார்.

வகுப்பு ஆசிரியர், உடன் பயில்வோர் அனைவருமே, ரமேஷ் இந்த கல்லூரி பக்கம் வரவே முடியாது என்று உறுதியாய் சொல்லவும் தான், மைவிழி தைரியமாய் உலாவ ஆரம்பித்தாள்.

ஒரு மாதம், எந்த விதமான சலனமுமில்லாமல் கழிந்தது!

சிவகாமியுமே, கடவுள் அருளால் இனி எந்த பிரச்னையும் வராது என்று நம்பத் தொடங்கி விட்டிருந்தார்!

தலைக்கு வந்தது, தலைமுடியோடு போயிற்று என்று அமுதம் பாட்டி பழனியில் முடி இறக்கிக் கொண்டார். இனிமேல், வருடா வருடம் வந்து முடி இறக்குவதாக அவர் வைத்த பிரார்த்தனையில் என்ன குறை கண்டாரோ முருகன்? ஹ்ம்ம்!

ரமேஷ் என ஒருத்தன் இருந்ததையே மைவிழி மறந்திருந்த சமயம் அது!

நான்கு மணிக்கு கல்லூரி வகுப்புகள் முடிந்த பின்னரும், மைவிழியும் இன்னும் சிலரும், தங்களது ஆர்வத்தின் காரணமாய், ஆய்வு கூடத்தில் வேலை செய்து விட்டுப் போவர்.

அன்று அப்படித் தான், ஆய்வு கூட வேலை முடிந்து, மாலை ஐந்து மணிக்கு மைவிழியும் ரோஜாவும் கல்லூரியிலிருந்து பேருந்து நிலையத்திற்கு நடந்து வந்து கொண்டிருந்தனர்.

அது தான், மைவிழிக்கு இன்று வரை நினைவிருக்கிறது!

ரோஜாவும் அவளும், அன்று நடந்த ஆராய்ச்சி பற்றி பேசிக் கொண்டே சென்றனர்.

அப்போது, ரோஜாவுக்கு கைப்பேசியில் அழைப்பு வந்தது!

"ஹே... என்னோட அத்தை பையன் பேசுறாங்கப்பா... நீ முன்னாடி போ... நா வந்துடறேன்..." என்று அவள் நகர்ந்தாள்.

சிறு சிரிப்புடன் அவளுக்குத் தலையசைத்துவிட்டு, நேரமாகிவிட்டால் பேத்திக்கு பசிக்குமே என்று பாட்டி நறுக்கிக் கொடுத்துவிட்டிருந்த ஆப்பிள் துண்டுகள் நிரம்பிய டப்பாவை எடுப்பதற்காக, பைக்குள் பார்வையைப் பதித்தபடியே, அவள் தலை குனிந்தாள்!

அந்த நிமிடம், "ஹே..." என்று ஒரு பெரும் சத்தம் கேட்டது!


என்னவென்று அவள் திரும்பிப் பார்ப்பதற்குள், அவளை யாரோ பின்னாலிருந்து இடப்பக்கமாய் தள்ளி விட்டனர்.

ஆனால், தள்ளிவிட்டவனின் எண்ணமே ஈடேறும் முன்னர், மைவிழியின் வலப்பக்கம் முழுதிலும் அமிலம் தெளிக்கப்பட்டது!!!!

மைவிழி அறிந்த விஷயம் - கொட்டியவன் ரமேஷ்! அமிலத்தைக் கொட்டியவன்!

மைவிழி அறியாத விஷயம் - தட்டியவன் நிஷாந்த்! மைவிழியைத் தட்டியவன்!

பூச்சரத்தில் சேரத் துடிக்கும் அடுத்த பூ - கசப்பு!



10

கிடைக்காத அமுதத்திற்கு, அமிலத்தால் பழி தீர்த்துக் கொண்டான் ரமேஷ்!

மைவிழியின் அழகு மேனி, அமில அபிஷேகத்தால் கருகிப் போனது!

பால்... தயிர்... மஞ்சள்... இளநீர்... பழம் என்று அபிஷேகம் செய்ய எவ்வளவோ இருக்க, ரமேஷின் கொடும் கண்களுக்குப் பட்டது அமிலம் போலும்!

அன்பில் குளிக்க வேண்டிய நெஞ்சம், அமிலத்தில் நனைந்ததில், அன்பின் சுவடே நெஞ்சில் இல்லாமல் போனது!

அமிலம் கொட்டிய இடமெல்லாம், காட்டுத்தீயில் கருகும் பச்சை மரமாய், அவளது இளம் மேனியை எரித்தது!

ரமேஷ் எனும் மிருகத்தின் மனசிலிருந்த காமம், அவளை அலங்கோலமாய் பிய்த்து போட்டது!

எதிரே வந்த பைக்கிலிருந்தவன், தன் கையிலிருந்த எதையோ அவள் மீது வீசப் போவதை மைவிழி உணரும் முன்னரே, அந்த திரவம் அவள் மேனியில் பட்டது!

அவளைப் பின்னாலிருந்து ஒருத்தன் இழுக்காமல் இருந்திருந்தால், தன் முகத்தில் பட்டு, அதை உருக்குலைத்தே இருக்கும் என்பதை அந்தத் தருணத்திலும் உணர்ந்தாள் மைவிழி உணர்ந்தே இருந்தாள்!

ஆனால், அது யாரென்று அவள் பார்க்கும் முன்னரே, அந்த அமிலம் அவளை அலங்கோலமாய் கிழித்து விட்டிருந்ததே!

சின்ன சூட்டுக் காயத்திற்கே, கன்றி சிவந்து போகும் மேனி, அமிலத்தின் வேதியியல் தன்மையால் அப்படியே கருகிப் போனது!!

உடம்பின் ஓரோர் அணுக்குள்ளும், அந்த தீ பரவ,

"அம்ம்ம்ம்ம்மா" என அலறினாள் மைவிழி!

"அய்ய்ய்ய்யோ ஓஓஓஓஓ... எரியுதே... அம்ம்ம்ம்ம்மா..." என்று கதறியவள்,

வலியைப் பொறுக்க முடியாமல், இடக்கையால் வலக்கையை அழுந்தப் பிடித்து விட்டாள்!

அவ்வளவு தான்!

உயிரே போய்விட்டது!

அவள் போட்டிருந்தது, ஓர் சிந்தெடிக் துணியில் தைத்த சுடிதார் வேறு! திரவம் பட்டதும், சுடிதார் துணி நைந்து, வெந்து போன உடம்போடு ஒட்டிக் கொண்டது!

அது வரை, உயிரை ஊடுருவி போயிருந்த வலி, இப்போது இடக்கையால் வலக்கையை பிடித்ததும் உயிரே போய்விட்டது!

அப்படியே மயங்கிச் சரிந்தாள், மைவிழி!

அதன் பின், அவள் கண் விழித்தது மருத்துவ மனையில்!

வாழையிலையில் அவள் படுத்திருக்க, வலப்பக்கம் முழுதும் வெந்து போயிருக்க, சதையும்... ரத்தமும்... எரிந்து போன நரம்புகளும்... வெளியே தெரிந்த எலும்பும் பார்ப்போரின் முகத்தைத் திருப்ப வைக்கும் அளவிற்கு கோரமாய் இருந்தது!

வலப்பக்கம் முழுதும் அமிலம் பட்டிருந்ததால், ஓர் மெல்லிய ஆடையுடன் அவளைப் படுக்க வைத்திருந்தனர்!

அப்படியே, உடம்பெல்லாம் கூசியது அவளுக்கு!

ஆனால், அதற்கெல்லாம் மேலாக உடம்பு நெருப்பில் காய்ந்த இரும்பாய் தகித்தது!

அருகே நின்று தந்தையின் முன்னே, தான் இப்படி படுத்திருப்பது நெஞ்சை அறுத்தது!

தாயும் தந்தையும் வாயைப் பொத்திக் கொண்டு அழ, பாட்டி அழுதமோ இடிந்து போய் அமர்ந்திருந்தார்.

கையை எடுக்க வேண்டிய நிலைமை வராது என்று கூறியபோதும், அவளால் அந்தக் கையை வைத்துக் கொண்டு எந்த வேலையும் செய்ய முடியாது என்று கூறினர். எழுதுவது உட்பட!

அதுவே ஒரு பெரிய இடி என்றால், ''ஹய்யோ... இனிமே எம் பொண்ணை யாரு கல்யாணம் பண்ணிக்குவா?'' என்று சிவகாமி புலம்பியது, மைவிழியை அசைத்தது!

இனிமேல், வாழ்க்கையில் ஒன்றுமே இல்லை என்பது போல் வெறுமையாய் இருந்தது!

படிக்க முடியாது! எழுத முடியாது! திருமணமில்லை! குழந்தையில்லை! குடும்பமில்லை! - வாழ்வே சூன்யமாய் போனது போன்ற உணர்வு!

மனம் உடைந்து போன மைவிழி, ''அப்பா... என்னைக் கொன்னுடுங்கப்பா...'' என்று கதறி அழ,

நடராஜன் வெகுண்டு எழுந்தார்!

''என்ன டேச்சு இது... மைய்யு?'' என்று கர்ஜித்தவர்,

''உனக்கு ஒண்ணுமில்லை மையும்மா! இதுவே... முகத்தில இந்த ஆசிட் பட்டிருந்தா... கொஞ்சம் நினைச்சுப் பாரு... இதை விட அது பெரும் கொடுமையில்லையா! ஆனா... இது ஜஸ்ட் கையில மட்டும் தான்... காலில் கூட அவ்வளவா இல்லை! கை-கால் இல்லாதவங்களே தன்னம்பிக்கையோட வாழும் போது... உனக்கு என்ன? கையையே எடுத்துடலையே... வேலை செய்ய முடியாதுன்னு தானே சொல்றாங்க! இப்ப... என்ன ரைட் ஹான்ட்ல எழுதினா தான் எழுத்தா? லெப்ட் ஹான்ட் ரைட்டர்ஸ் எத்தனை பேர் இருக்காங்க? சும்மா இப்படி பைத்தியம் மாதிரி பேசுறதை விட்டுட்டு... பேசாம தூங்கு!'' என்று அதட்டினார்.

அப்போதும் மகளின் முகம் வேதனையையே தாங்கி நிற்கவும், ''என்ன மையும்மா...'' என்று உருகி நின்றார் தகப்பனார்.

''இல்லப்பா... என்னால முடியல... ஒரொரு நிமிஷமும் உடம்பு எரியுது... அப்படியே கையை கட் பண்ணி வெளியே வச்சுடலாம் போல வலிக்குது... என்னால இந்த வேதனையைத் தாங்க முடியலைப்பா... ப்ளீஸ் பா... என்னைக் கொன்னுடுங்க!'' என்றாள் மைவிழி, கண்ணிலிருந்து வழிந்தோடிய கண்ணீருடன்.

மகளின் அந்த அரற்றலில், உள்ளம் உடைந்து போன அந்தப் பெற்றவர், ''கடவுளே... பெத்த பொண்ணு வாயில இருந்து ஒரு அப்பன் கேட்கக் கூடிய பேச்சா இது? அப்பா... முருகா...'' என்று கதறி அழ,

குடும்பமே சோகத்தில் மூழ்கியது!

மைவிழிக்கு ஓரோர் வினாடியும் நரகமாய் கழிந்தது என்று சொன்னால் அது மிகையான வார்த்தையல்ல!

''செத்து விடவேண்டும்... சீக்கிரம்... இந்த எரிச்சலும்... உடல் வேதனையும் அப்போதாவது குறையும்...'' என்ற எண்ணம் மட்டுமே அவள் மனதிலிருந்தது!

ஒரு பொட்டு கூட கண் மூடாமல், விட்டத்தையே வெறித்துக் கொண்டிருந்த மைவிழியின் உதடுகள், ''ஐயோ... எரியுதே... எரியுதே...'' என்றே புலம்பிக் கொண்டிருந்தன!

தூங்க முடியவில்லை! எழ முடியவில்லை! உட்கார முடியவில்லை! திரும்பிப் படுக்க முடியவில்லை! இதே நிலைமை நீடித்தால், முதுகில் புண் வந்து... சீல் வைத்து... செத்தே விடுவோம் என்ற எண்ணம் தோன்றியது! சீல்

வைத்த புண்ணை கற்பனை செய்து பார்த்தவள், முகத்தில் படர்ந்த அருவெறுப்புடன் அழுதாள்!

சட்டென பார்வை, குதறி போயிருந்த கைகளில் நிலைக்க, தோல் முழுதும் வழண்டு போய், நரம்புகள் பிய்ந்து... எலும்பு வரை தெரிந்த புண்ணைக் கண்டதும், ''ஹய்யோ...'' என வெடித்து அழுதாள்!

அந்த நேரம், அவளது இடக்கையை ஒரு கரம் இறுகப் பற்றியது!

சட்டென விழியைத் திருப்பியவள், அங்கே தம்பியைக் காணவும், திகைத்தாள்!

அவளுக்கு விபத்து நடந்த நாள் தொட்டு, அவன் தன்னிடம் பேசவே இல்லை என்பது புரிய, ''என்ன சாண்டி...'' என்றாள் மெல்ல.

''அக்கா... நா ஒண்ணு சொல்லுவேன்... நீ கேப்பியா?'' என்றான் அவளையே பார்த்துக் கொண்டு.

அவனது பார்வையின் தீவிரம் அவளை உந்தி இருக்க வேண்டும்!

''ம்ம்... சரி...'' என்று தானாய் ஆடியது தலை!

''இப்படி அழறதை முதல்ல விடு! இப்படி அழுதுட்டே இருந்தா... நீ செய்ய வேண்டிய வேலையெல்லாம் யாரு செய்வா?'' என்றான் கேள்வியாக.

''என்ன வேலைடா?'' என்று கேட்டவள்,

''என்னால முடியலையே சாண்டி... கையெல்லாம் எரியுதே...''

''ஷ்... அக்கா! உனக்கு எரியுற மாதிரி... உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கின அந்த ரமேஷுக்கும் எரிய வேணாமா? சும்மா இப்படியே புலம்பிட்டே

இருந்திட்டு... அவனை ஒண்ணும் செய்யாம விடப் போறியா?'' என்றான் பட்டென.

''சாண்டி!'' - மைவிழி அதிர,

''ஆமா... நீ இப்படி அழுதுட்டே இருக்கிறதால... எதுவும் ஆகாது மைய்யுக்கா! நீ சீக்கிரம் குணமாகி வந்து... அவனுக்கு தண்டனை வாங்கிக் கொடு...'' என்றான் அழுத்தமாய்.

''முடியுமாடா?''

''என்ன முடியுமா? முடியாம என்ன பண்ணும்? அவனும்... கதறணும்க்கா... துடிக்கணும்... ஏன்டா மைவிழியை டிஸ்டர்ப் பண்ணினோம்ன்னு அவன் நினைக்கணும்! அவன் மட்டுமில்ல... பொண்ணுங்களை இப்படி டார்ச்சர் பண்ற ஒவ்வொருத்தனும் பயப்படணும்!'' என்றான் கோபம் கொப்பளிக்க.

அந்த கோபம் தந்த உத்வேகத்தின் காரணமாகவோ, தம்பி தன் மேல் வைத்திருக்கும் பாசத்தின் காரணமாகவே, மைவிழி அதன் பிறகு புலம்பவில்லை!

சாவை மீறி, அவனுக்கு ஒரு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற வெறி நெஞ்சில் புகுந்தது!

அவளது தந்தைக்குமே, அந்த வெறி இருக்க, போலீஸ் கம்ப்ளைன்ட ஃபைல் ஆனது!

மைவிழிக்கு ஆதரவாய் பற்பல சாட்சியங்கள்!

அவன் கல்லூரியில் நடந்து கொண்டதே, அவனுக்கு எதிரான பலமான சாட்சியமாகிவிட, வழக்கு வலுப் பெற்றது! மைவிழியும் மறு உயிர் பெற்றாள்!

சாட்சி சொல்வதற்காக மைவிழி நீதிமன்றம் செல்ல வேண்டிய தினம்!

மெதுவாக எழுந்து வந்து, பூஜையறையின் முன்னே நின்றவள், ''முருகா... அவன் அழியணும்! இது தான் என்னோட வேண்டுதல்! அது மட்டும் நடந்ததுன்னா... எனக்கு நடந்த கொடுமையை நான் மறந்துடுவேன்... இது சத்தியம்! இதையே நினைச்சுக்கிட்டு வாழ்க்கையை வீணடிக்க மாட்டேன்! புதுசா... ஒரு வாழ்க்கையை நானே அமைச்சுக்குவேன்! ப்ளீஸ்... இதெல்லாம் எனக்கு நடக்கணும்ன்னா... நீ இருக்கேன்னு எனக்கு காட்டணும்! அதுக்கு ஒரே வழி... அவனைக் கொல்றது! அவனைக் கொன்னுடு! அவனுக்கு மரண தண்டனை வாங்கிக் கொடு!'' என்று மனதார வேண்டியவள், கண் திறக்கும் போது வீட்டின் தொலைபேசி கிணுகிணுத்தது!

அந்த மணி சத்தமே, தனக்கு ஒரு சம்மதமாய் எடுத்துக் கொண்டவள், ''போலாம்ப்பா!'' என்றாள் தந்தையிடம்.

கூடவே, ''சாண்டி... இன்னைக்கு நீயும் என் கூட வா'' என்று தம்பியையும் அழைத்தாள்!

ஓர் இறுக்கமான சூழ்நிலையின் பிடியிலிருந்து வீட்டை விட்டு, அவர்கள் கிளம்பும் முன்னரே, வீட்டுத் தொலைபேசி மீண்டும் அடிக்க, நடராஜன் வேகமாய் அங்கே விரைந்தார்.

தொலைபேசியை எடுத்து காதில் வைத்தவரின் முகம், ஒரு தரம் சுருங்கி, மறு தரம் பிரகாசம் உற்றது!

பின்னர் தொலைபேசி வைக்கப்பட்டது!

''ம்ம்... எஸ்... ஆமா... ஹலோ'' என்ற எந்தவித வார்த்தையாடலும் இல்லாமல் நடைபெற்ற அந்த உரையாடல், மைவிழிகள் சந்தேகத்தைக் கிளப்ப,

''அப்பா...'' என்று மெல்ல அழைத்தாள்!

அவர் ஒன்றுமே சொல்லவில்லை.

நேராக, பூஜையறையின் முன்னே சென்றார்.

அவள் மேல் ஊற்றப்பட்ட அமிலத்திற்கு தெய்வத்தை காரணமாக்கி, இது நாள் வரை பூஜையறை வாயிலையே மிதிக்காமல் இருந்த நடராசன், அங்கே செல்லவும் வீடே திகைத்தது!

''கடவுளாம் கடவுள்! ஒரு பாவமும் அறியாத என் பொண்ணுக்கு இப்படியொரு கஷ்டத்தைக் கொடுத்தவன்... கடவுளே இல்லை!'' என்று கோபம் கொண்டவர்,

இப்போது சாமியறையில் கை கூப்பி நின்றது, அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது!

''இனிமேல் உன்னை நான் கும்பிடவே மாட்டேன்...'' என்று முருகனைப் பார்த்து சூளுரைத்தவர்,

''நன்றியப்பா... முருகா!'' என்று மனமுருக வேண்டியது, அனைவரையும் உருக்கியது!

''என்னப்பா...'' என்று மைவிழி மெல்ல நடந்து அவர் பக்கம் வர,

''ரமேஷ் செத்துட்டான்மா... விஷம் குடிச்சு செத்துப் போயிட்டானாம்!'' என்றார் அவர் மிகுந்த சந்தோஷத்துடன்.

ஓர் உயிரின் மரணத்தில், தான் இவ்வளவு சந்தோஷப் படுவோம் என்று மைவிழி என்னவே இல்லை!

ஆனால், அவள் சந்தோஷித்தாள்!

பூரித்துப் போனாள்!

பக்தியில் திளைத்தாள்!

முருகனை கையெடுத்துக் கும்பிட்டாள்!

இடும்பனை அழித்த இனிய வேல் முருகனை எண்ணி எண்ணி பூரித்தாள்!

ரமேஷ் எனும் அசுரனுக்கு அரக்கனாய் மாறி நின்ற விஷம் முருகனே என்று மனதார நம்பினாள்!

மைவிழி தெளிந்தாள்!

''நா காலேஜ் போறேன்ப்பா...'' என்று அவள் தெம்புடன் பேசவும், குடும்பமே மகிழ்ச்சியில் திளைத்தது!

எங்கே கருகிய மரமாய் துளிர் விடாமலே போய் விடுவாளோ என்று பயந்திருந்தவர்கள், அவள் அறுபட்ட மரமாய் துளிர்த்து எழவும் சந்தோசம் கொண்டனர்!

முருகனிடம் கூறியது போலவே, ரமேஷ் என்ற அத்தியாயத்தை அழிக்க முயன்றாள்.

அது சுலபமான காரியமாய் இல்லாமல் போனாலும், ''அவனை மறக்கணும்... அவன் செஞ்ச கொடுமையை மறந்தே ஆகணும்'' என்று உள்ளுக்குள் உருப்போட்ட படியே இருந்தாள்!

பாதி எரிந்து போன கையைப் பார்க்கையில், ரத்தத்தின் சிறுதுளி வரை சுண்டிய போதும், மைவிழி தளரவில்லை.

எனக்காக முருகன் செய்திருக்கிறான்... அவனுக்காக நான் என்ன செய்வேன் என்ற எண்ணம் அவளை தொடர்ந்து பயணிக்க வைத்தது!

பெற்றோருக்குமே, அவள் தெளிந்து வருவது மகிழ்ச்சியைக் கொடுக்க, அவள் மீண்டும் கல்லூரி சேர்வதற்கு முன்னர், குலதெய்வக் கோவிலுக்குச் சென்று வர எண்ணினர்.

அங்கே மைவிழியை வேதனைப் படுத்தவென, இன்னொரு பூகம்பமும் காத்துக் கொண்டிருந்தது!

சாமிக்கான படையல், வேண்டுதல் என்று ஆரவாரமின்றி கழிந்த நேரத்தை, உருக்குலைக்கவென சில பேர் வந்து சேர்ந்தனர்.

''என்னம்மா... எப்படி இருக்கே...'' என்று அவளிடம் ஆரம்பித்தவர்கள்,

''அந்த பையன் செத்துப் போயிட்டானாமே...'' என்றனர் அவளையே பார்த்தபடி.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல், மைவிழி தலை குனிய,

''திடீர்ன்னு இந்தப் பொண்ணு மேல... ஆசிட் ஊத்துற அளவுக்குப் போயிருக்கான்னா... இவ பக்கத்தில இருந்து ஏதோ தப்பு நடந்ததால தானே இப்படியொரு முடிவுக்கு வந்திருக்கான்!'' என்று ஒருவர் சொல்ல,

''அண்ணே... என்ன நடந்ததுன்னு தெரியாம பேசாதீங்க! அந்தப் பையன்... ஏற்கனவே ஒரு வாட்டி மைவிழிகிட்ட வம்பு பண்ணி, காலேஜ்ல இருந்து டிஸ்மிஸ் பண்ற அளவுக்குப் போயிருக்கு! அந்தக் கோபத்தில தான்... மைவிழி மேல ஆசிடை ஊத்திட்டான் பொறுக்கி!'' என்று குறுக்கே வந்தார் நடராஜன்.

''ஹோ... அப்படியா விஷயம்...'' என்று ஆமோதித்த போதும்,

''என்னமோ போ... நடராஜா... உன் பொண்ணால ஒரு உயிரு போயிருச்சே...'' என்று வருத்தம் கொண்டார் அவர்.

மைவிழிக்கு அழுகை பொங்கி வந்தது!

அவள் என்ன தப்பு செய்தாள் என்று இந்த பேச்சு?!

என்னவோ... அவனைக் காதலித்து, ஏமாற்றி, அவன் தற்கொலை செய்து கொண்டது போலல்லவா பேசுகின்றனர்! ச்சை!

அவளுமே, உயிர் கருகி புத்துயிர் பெற்றன்றோ வந்திருக்கிறாள்! ஏன், அவளது வேதனையை இந்த மக்கள் புரிந்து கொள்ளவில்லை!

வலக்கையால் உண்ணமுடியவில்லை... எழுத முடியவில்லை... புத்தகத்தைப் புரட்டக் கூட முடியவில்லை... ஒரு பேனா பிடிக்க முடியவில்லை... இரு கைகளையும் கூப்பி இறைவனைக் கூட வணங்க முடியவில்லை! கையை மடக்கினாலே... வலி உயிர் போனது! அவளது இந்த வேதனையை விட, போலீஸுக்குப் பயந்து உயிர் விட்டவன் மேலாகிப் போனானா?! இதென்ன கொடுமை!?

ஒரு படத்தில் வருமே, "என்னய்யா பெரிய வேதனை... கழுவுற கையில திங்கணும்... அம்புட்டு தானே?" என்று! அதை நேரில் அனுபவிக்கும் மைவிழிக்கு, அருவெறுப்பாய் இருந்தது!

கையிருந்தும் அதை உபயோகமற்றதாய் வைத்திருப்பது எவ்வளவு கொடுமை என உணர்ந்தவளன்றோ அவள்!

என்னவோ... அவளது வேதனை ஒன்றுமில்லை என்பது போல் அவர்கள் பேசியது நெஞ்சத்தை அறுத்தது!

இந்த உடல் வேதனையை ஒதுக்கி வைத்தாலும், ரமேஷ் என்று ஒருவன் அவள் பின்னே சுற்றியதற்கு அவள் என்ன செய்வாள்?

அந்த நாய் தெனவெடுத்து போய், அவள் பின்னே சுற்றினால், அதற்கு அவள் எங்கனம் பொறுப்பாக முடியும்?!

என்ன மனிதர்கள் இவர்கள், போன உயிருக்கு கொடுக்கும் மதிப்பை... வெந்து தணியும் உயிருக்கு ஏன் தர மறுக்கிறார்கள்!

மைவிழியின் மனக்குமுறலை அதிகப் படுத்துவது போல்,

"அந்தப் பையன் முரடன்-ன்னாலும்... அவங்க குடும்பம் நல்ல குடும்பம் போல... பேசாம உம் மக அவனை லவ்வே பண்ணியிருக்கலாம்... இவளுக்கும் ஆசிட் பட்டிருக்காது... அவனும் செத்திருக்க மாட்டான்! பாவம்... வீட்டுக்கு ஒரே பையனாம்... மகன் செத்துட்டான்னு அந்தக் குடும்பம் கதறுது!" என்று தங்கள் நியாயத்தை அவர்கள் பேச,

மைவிழி வெடித்து அழுதாள்!

ஏன் இப்படி? ஏன்? ஏன் தனக்கு மட்டும்?

ஒருவனைக் காதலித்தாலும் தப்பு... காதலிக்காவிட்டாலும் தப்பு...

இப்போது அவன் உயிரோடு இருந்து, அவனை தான் காதலித்திருந்தாலும், "நடராசன் மக... ஓடிப்போய்ட்டாளாம்" என்று இவர்கள் பேசத் தான் செய்வார்கள்!

அவன் இறந்ததும், "ஐயோ... அவனை ஏன் காதலிக்கவில்லை!" என்று பேசுகிறார்கள்!

என்ன விதமான வாய் இது?

இனிமேல் "காதல்" என்ற வார்த்தைக்கே என் வாழ்க்கையில் இடம் இருக்கக் கூடாது! திருமணம் என்று ஒன்று என்றேனும் நடக்குமானால், அது காதல் திருமணமாய் இருக்கவே கூடாது என்று உறுதி எடுத்தாள்! அப்பா பார்க்கும் மாப்பிள்ளை தான்!

இந்த கருகின மூஞ்சியை எவனாவது காதலிப்பானா? அது ஒன்று தான், இந்த பட்ட மரத்துக்கு குறைச்சல்!

எப்படியும் அப்பா பார்க்கும் மாப்பிள்ளை தான்!

அதுவும் லட்சக்கணக்கில் வரதட்சணை கொடுத்து, அவன் காலில் கையில் விழுந்து, திருமணத்திற்கு கேட்பார்! ச்சை...!!!

அப்படி கெஞ்சிக் கூத்தாடினாலும், தனக்கு திருமணம் நடக்குமா? ஒருவன் மாப்பிள்ளையாய் வருவானாம்.

தன்னையும் ஒருவன் இனிமேல் மணப்பானா?

மனம் குமுறி அவள் அழ, நடராசன் ஏதோ பேசத் தொடங்கும் முன்னர், சாண்டில்யன் பேசினான்.

''வாய் இருக்குங்கிற ஒரே காரணத்துக்காக என்ன வேணும்னாலும் பேசுவீங்களா? கொஞ்சம் கூட அறிவே இல்லையா உங்களுக்கு எல்லாம்?'' என்று அவன் தொடங்க,

''தம்பி வார்த்தையை அளந்து பேசு!''

''நீங்க வார்த்தையை அளந்து பேசியிருந்தா... நான் ஏன் பேசப் போறேன்?'' என்றவன், சட்டென அங்கிருந்த விளக்கை எடுத்து நின்றிருந்தவரின் சட்டையில் தூக்கி எறிந்தான்.

''ஏய்... ஏய்... என்ன பண்றே...'' என்று பதறியவர், பரவத் தொடங்கிய தீயை அணைத்தபடி, ''ஏய்... அறிவிருக்கா உனக்கு?'' என்று கத்தினார்.

கூடவே, தீ பட்டதால் காந்தத் தொடங்கியிருந்த இடங்களை அவர் ஊதிவிட,

''அஞ்சு நிமிஷத்தில அணைஞ்சு போற நெருப்புக்கே... நீங்க இப்படி அலறுறீங்களே... எங்கக்கா உடம்பெல்லாம்

ஆசிட் பட்டதும் எப்படி எரிஞ்சிருக்கும்! எவ்வளவு காந்தியிருக்கும்!'' என்றான் வேதனையுடன்.

''லேசாய் பட்ட காயத்தையே ஊது... ஊதுன்னு ஊதுறீங்களே... அவ எத்தனை நாள் தூங்காம அம்மா... எரியுதே... எரியுதேன்னு புலம்பி இருப்பா... அது தெரியுமா உங்களுக்கு...''

''அவ எந்த ஜென்மத்தில செஞ்ச புண்ணியமோ... அவ முகத்தில பட வேண்டிய ஆசிட் கையில பட்டுச்சு...''

''எங்க பாட்டி கும்பிட்ட முருகன் தான்... மனுஷ ரூபத்தில வந்து... அவளைத் தள்ளிவிட்டிருக்காரு...''

''இல்லைன்னா... அவ... அவ... அவ... செத்து கூடப் போயிருக்கலாம்...'' என்றவன், கூறிய வார்த்தையின் பாரம் தாங்காமல், கண்ணை மூடிக் கொண்டு கதறி அழுதான்.

அதுவரை தம்பி பேசுவதையே ஒரு வலியுடன் கேட்டிருந்த மைவிழி, அவன் அழவும் ''சாண்டி...'' என்றாள் மெல்ல அவன் கை பற்றி.

''என்னக்கா என்ற சாண்டி... இதெல்லாம் நான் பேசக் கூடாதுக்கா... நீ பேசணும்... பேசுக்கா... வாயைத் திறந்து நீ பேசினா தானே... உன் மனசில இருக்கிற வேதனை எல்லாருக்கும் தெரியும்! பேசுக்கா... எனக்கு வலிக்குது இப்படி பேசாதீங்கன்னு சொல்லு! வலின்னு இல்லை... எதுனாலும் மனசு விட்டு பேசுக்கா... நீ சொன்னா தானே உன்னை எல்லாருக்கும் புரியும்!'' என்றான் சாண்டில்யன், கோபமும் ஆவேசமுமாய்.

அவனது குமுறல், மைவிழியை புரட்டிப் போட்டது!

அன்று முதல் தான், மைவிழி தன் மனதில் எண்ணியதை மறையாது சொல்லத் தொடங்கினாள்!

கோயம்புத்தூர் படிப்பை அப்படியே மூட்டை கட்டிவிட்டு சென்னை வந்தது, அங்கே பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டது, பிசியோ தெரப்பி செய்து கையை அசைக்க வைத்தது, மேல்படிப்புக்காக வெளிநாடு வந்தது என்று வாழ்க்கை வேகமாய் சென்றது!

இந்த ஓஜோ கள்ளனைப் பார்க்கும் வரை!

அவனைப் பார்த்த பின்னர், அவனோ அன்றி நினைவில் நிற்கிறான்! வாழ்க்கையை நகர விடாமல்!

''ஆமா... ஓஜோன்னா என்ன?'' என்று மூளை கேட்க,

''அட தெரியலையே...'' என்று பதில் சொன்ன மனம்,

''நீ கண்டுபிடிக்க வேண்டியது தானே? என்னைக் கேட்கிறே?'' என்று மூளையை வைதது!

''ஓஜோ!''வின் அர்த்தத்தை அவள் தேடும் போதே, அவளது கைப்பேசி அடித்தது!

வீட்டு எண்ணைக் கண்டதும், நிஷாந்த் உண்டு பண்ணி வைத்திருந்த சந்தோசம் ஊற்றாய் கிளம்ப, ''ஹலோ... அப்பா...'' என்றாள் துள்ளி விழுந்த குரலுடன்.

''மையும்மா... உனக்கு ஒரு வரன் வந்திருக்குடா...'' என்றார் அவரும் அதே துள்ளலுடன்.

பூச்சரத்தில் புதிதாய் கோர்க்கப்படும் பூ - தன்னம் பிக்கை!



11

''உனக்கு மாப்பிள்ளை பார்த் திருக்கிறேன்!'' என்ற தந்தையின் வார்த்தையில், மைவிழியின் மனமும் முகமும் தாழ்ந்து போனது!

''என்னப்பா சொல்றீங்க?'' என்று அவள் தடுமாற,

''ஆமாம்மா... அவங்களா தேடி வந்து பொண்ணு கேட்டாங்க! மாப்பிள்ளை பேரு கண்ணன். நீ படிக்கிற இடத்துக்கு ஒரு மணி நேர தூரத்தில தான் இருக்காங் களாம்! உன்னோட போட்டோவை நம்ம சங்கத்தில (அவரவர் பிரிவுக்கு ஏற்றார் படி இருக்கும் கல்யாண வலைத்தளம்) பார்த்திருக்காங்க போல... ரொம்ப பிடிச்சு போச்சாம்...'' - அவர் பேசிக் கொண்டே போக,

மைவிழிக்கு எரிச்சலாய் வந்தது!

''என்னைப் பத்தி எல்லாம் சொல்லிட்டீங்களாப்பா...'' என்று அவள் கேட்டதன் பின்னணியே, தன்னைப் பற்றி தெரிந்ததும் அவன் ஓடிவிடுவான் என்ற எண்ணத்துடன் தான்!

ஆனால் அவரோ ''அது தெரிஞ்சு தான்ம்மா பொண்ணே கேட்டு வந்திருக்காங்க!'' என்றார் சந்தோஷத்தில் மிதந்த மனதைக் குரலில் இட்டு வந்து.

''ஹய்யகோ!'' - மைவிழியின் மனம் சோர்ந்து போனது.

நிஷாந்த் தன் காதலைச் சொல்லாமல் இருந்திருந் தால், இந்த வரனை எப்படி ஏற்றுக் கொண்டிருப்பாளோ தெரியாது! ஆனால், இப்போது முடியவில்லை.

''அப்பா... நா...'' என்று இழுத்தவள்,

''இப்ப தானே படிக்க ஆரம்பிச்சு இருக்கேன்... கொஞ்ச நாள் போகட்டுமே...''

''ஹய்யோ... மைய்யும்மா... நா சொல்றதுக்கு முன் னாடி அவங்களே, நீ கல்யாணத்துக்கு அப்புறம் படிப்பை கண்டினியூ பண்ணலாம்ன்னு சொல்லிட்டாங்கடா...''

''அட கெரகம் பிடிச்சவனுங்களா...'' என்று தான் எண்ணத் தோன்றியது மைவிழிக்கு!

''ஹோ!'' என்ற ஒற்றைச் சொல்லோடு மகள், தன் ரியாக்ஷனை முடித்துக் கொள்ளவும்,

''என்ன மைய்யு? உனக்கு சம்மதமில்லையா? எனக்கு... இந்த இடம் ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்குடா... உன்னோட கடந்த காலத்தை அவங்க ஒரு பொருட்டாவே மதிக்கலை! ஜஸ்ட் லைக் தட்... அக்சப்ட் பண்ணிக்கிட்டாங்க! உன்னை... உனக்காகவே பொண்ணு கேட்கிறாங்க கண்ணம்மா! ஒரு பைசா வரதட்சணை வேணாம்ன்னு சொல்லிட்டாங்க... நா பணத்துக்காக சொல்லலை... என் பொண்ணுக்கு போடுறதை நான் போடுவேன்... ஆனா அவங்க மனசை சொல்லுறேன்...'' என்ற வரின் குரல், உணர்ச்சி பெருக்கில் முக்குளித்து இருந்தது.

மைவிழிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

அவள் யோசனை செய்ய எடுத்துக்கொண்ட ஐந்து நொடிகளிலே, ''என்னம்மா... ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறே?'' என்ற நடராஜனின் குரல் தேய்ந்தது.

''அது அப்பா... அது வந்து...'' என்று இழுத்த மைவிழி,

நடராஜனின் ''என் வாழ்க்கையில் கல்யாணம்ன்னு ஒண்ணு நடந்தா... அது நீங்க சொல்ற மாப்பிள்ளையோட தான்ன்னு சொன்னியே மைய்யு! இப்போ... அப்பா சொல்றேன்... இவரு தான் என்னோட மருமகன், அவரைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டியாம்மா?'' என்ற கேள்வியில், வாயடைத்து போனாள்.

''ஹய்யோ! இது வேற இருக்கே...'' என்று ஆயாசமாய் வந்தது மைவிழிக்கு.

அதற்கு மேல் என்ன சொல்வதென்று தெரியாமல், ''உங்க இஷ்டம்ப்பா...'' என்று அவள் முடித்துவிட,

''ரொம்ப சந்தோசம் கண்ணம்மா... நீ எப்போ இந்தியா வர முடியும்? அடுத்த வாரம் வர முடியுமா?'' என்றார் நடராசன் அவசரமாக.

''என்னது அடுத்த வாரமா? போங்கப்பா அங்கிட்டு!'' - அதிர்ந்து விழுந்தன வார்த்தைகள்.

''அவங்க வீட்டில... அவங்க அக்... இல்ல இல்ல... தப்பு... தப்பு... அண்ணாவுக்கு குழந்தை பிறக்கப் போகுதாம்! அதுக்குள்ள கல்யாணத்தை வச்சுக்க சொல்லி கேட்டாங்க!'' என்றார் அவர் சிறு தடுமாற்றத்துடன்.

ஆனால், அவரது தடுமாற்றத்தை உணரும் மன நிலையில் அவள் இருக்கவில்லை.

''என்னப்பா இது... திடீர்ன்னு வா னா எப்படி?'' என்று அவள் தயங்க... தயங்குவது போல் நடிக்க,

''சரிம்மா... நா வேணும்ன்னா அவங்ககிட்ட கேட்டுப் பார்க்கிறேன்...'' என்றவர்,

''அவங்ககிட்ட பேசிட்டு உனக்குக் கூப்பிடுறேன்ம்மா...'' என்று அழைப்பைத் துண்டித்தார்.

அவர் அழைப்பை வந்த நொடி தொட்டு, ''ஹய்யோ... இது என்ன புது குழப்பம்? இந்த தடியனை... கொஞ்சம் அலைய விடுவோம்ன்னு நினைச்சா... இதென்ன நமக்கே ஒரு பெரிய ஆப்பு வைக்கிறாங்க...'' என்ற எண்ணமே அவளை இம்சித்தது.

அவளால், தந்தையின் சொல்லையும் மீறமுடியவில்லை! நிஷாந்தின் காதலையும் ஒதுக்கி வைக்க முடியவில்லை!

எந்த மாதிரி சூழ்நிலையில், தந்தைக்கு ''பெற்றோர் பார்த்து நிச்சயிக்கப்பட்ட திருமணம்!'' என வாக்கு

கொடுத்தோம் என்பது நினைவுக்கு வர, கண்ணைக் கரித்தது!

''ஹய்யோ... இப்ப என்ன செய்றது?'' என்று மனம் தவித்தது.

கூடவே, ''என்னைப் பத்தி... அந்த லூசுக்கு என்ன தெரியும்? சும்மா லவ் யூன்னு சொல்லிருச்சு... ஒரு நாள், ஃபுல் ஸ்லீவ் போடாம அவன் முன்னாடி போய் நின்னு பார்ப்போம்... அப்பவும் அவனோட ரியாக்சன் லவ் பண்ற மாதிரியே இருந்துச்சுன்னா... அப்பாகிட்ட பேசுவோம்!'' என்ற எண்ணமும் நெஞ்சில் உதித்தது.

ஆதலால், அவனது மனநிலையை உறுதி செய்து கொள்ளாமல், தந்தையிடம் எதையும் வெளிக்காட்ட வேண்டாம் என எண்ணியவள், தந்தையின் அழைப்பில் கலைந்தாள்.

''ஆஹா... அதுக்குள்ளே பேசிட்டாரா? அந்த ஆளுங்க ஏன்... இவ்வளவு வேகமா இருக்காங்க...'' என்ற யோசனையின் ஊடே, தொலைபேசியை எடுத்து காதில் வைத்தாள் மைவிழி.

எதிர்புறமிருந்த நடராஜனோ ''மைய்யுமா... அவங்களுமே ஒரு மூணு மாசம் போகட்டும்ன்னு சொல்றாங்க... அவங்க... ஹா... அதான்... அவங்க அண்ணன் வைஃப் ரெண்டு மாசம் ரெஸ்ட்ல இருக்கணுமாம்... அதுக்கு அப்புறம் தான் ட்ராவல் பண்ண முடியுமாம்... அதனால, மூணு மாசம் கழிச்சு கல்யாணத்தை வச்சுக்கலாம்ன்னு சொல்லியிருக்காங்க! நீ எதுக்கும்... ரெண்டு மாசம் முன்னாடியே வந்துடுறியா கண்ணு? கல்யாணத்துக்கு தேவையானது எல்லாம் வாங்கணுமே?'' என்றார் அவளைப் பேசவிடாமல்.

''என்னப்பா விளையாடுறீங்களா? ரெண்டு மாசமெல்லாம் லீவ் எடுக்க முடியாது! நா பார்க்கிறேன்... பார்த்து சொல்றேன்...'' என்று அழைப்பை வைத்தவளுக்கு எரிச்சலாக வந்தது.

''திடீர்ன்னு இந்த கண்ணன்... நொண்ணன் எங்கிருந்து வந்தானோ? ச்சை...'' - கோபமெல்லாம் அந்த முகம் தெரியாத ''கண்ணன்'' மீது பாய்ந்தது.

''ஹே... நில்லு நில்லு! இதென்ன திடீர்ன்னு நிஷ்மி பாய் மேல காதல்?'' என்று மூளை அவளை நிறுத்த,

''அதெல்லாம் அப்படித் தான்! காதல் என்ன கொரியரா? ரெசிபிட் வாங்கிட்டு... ஃப்ரம் டூ போட்டு வரதுக்கு?!'' என்று அதை அடக்கியவள்,

''அவன் தானே... என்னமோ டே ஆமோன்னு... உளறினான்... நானா அவன்ட்ட போய் லவ்வைச் சொன்னேன்? அவன் சொன்னான்... எனக்கு வந்துச்சு! அவ்வளவு தான்!'' என்று தன் நினைப்பிலேயே ஓர் அலட்சியப் பாவனையைக் கொண்டு வந்தாள்.

''லவ் வந்திருச்சுன்னா... சரின்னு அங்கேயே சொல்றது தானே? எதுக்கு... லவ் மேரேஜ் இல்ல... அரேஞ்ட் மேரேஜ் தான்னு பினாத்திட்டு வரே? அதுக்கு நேரடியா சொன்னாலே புரியாத அளவுக்கு... அதுவே ஒரு பேக்கு! இதில சுத்தி வளைச்சு வேற... கஷ்டகாலம்!'' என்று நொந்தது மனது.

கூடவே, ''உடனே நா சொன்னதை... அவங்க குருகிட்ட போய் ஒப்பிச்சிருக்கும்... சரியான ஜிங்குஜா சிஷ்ய மகா பிரபு! அவரு... விளக்கம் சொன்னதும் ஓடி வருவான்!'' என்ற முடிவுக்கு அவளாகவே வந்தாள்.

ஆனால், அவன் வரத் தான் இல்லை!

ஒரு நாள்... இரண்டு நாள்... மூன்று நாள்... ஒரு வாரம்... கல்லூரி வாசலை தேவுடு காக்கும் மிஸ்டர். ரோமியோவைக் காணவே இல்லை!

அவனது, சிகப்பு கலர் டோயோடோவும் கண்ணிலேயே படவே இல்லை!

''எங்க போய் தொலைஞ்சான்?'' என எரிச்சல் மிகுந்தது மைவிழிக்கு.

ஆனால், அவனைத் தேடிக் கொண்டு கீர்த்தியின் வீட்டுக்குச் செல்லவும் கூச்சமாக இருந்தது!

அவனைப் பார்த்தாலே, முகம் பூரித்துப் போய், தன் விருப்பத்தை அவனுக்குக் காட்டிக் கொடுத்துவிடும் என்ற பயம் அவளுக்கு.

அவனுக்குத் தெரிந்தால் தான் என்ன? என்ற மூளை அதட்ட,

''கொஞ்ச நாள் காயட்டும்! அப்புறம்... எஸ் சொல்லலாம்'' என்றது மனம், விசில் அடித்துக் கொண்டு.

''வேணாம்... அப்புறம் அந்த நொள்ளக் கண்ணன் நடுல பூந்திடுவான்!'' என்று மூளை எச்சரிக்கை செய்ய,

''என்னை மீறி புகுந்திடுவானாக்கும்? தாலியை என் கழுத்தில தானே கட்டணும்? அதுக்கு நா அவன் பக்கத்தில உக்காரணும் இல்ல... நான் தான் என்னோட அமுல் பேபியோட போய் நிப்பேனே? என்னோட அமுல் பேபியைப் பார்த்திட்டு... ஐயோ... இவன் என்ன அநியாயத்துக்கு அழகா இருக்கான்... இவன்ட்ட நம்மளால மோத முடியாதுப்பான்னு... அந்த நொள்ள கண்ணன்... நொந்தக் கண்ணனா மாறி ஓடிப் போயிருவானே?'' என்று கை தட்டி சிரித்தது மனம்.

மைவிழிக்கே தன்னை நினைத்து சிரிப்பாக வந்தது!

''ஒரு டீயிலும்... ஆமை வடையிலுமா இப்படி கவுந்துட்டோம்'' என்ற எண்ணம் சிரிப்பை வரவழைக்க, அதன் பின்னணியில் ''ஹே நீ இன்னும் ஓஜோக்கு அர்த்தம் கண்டு பிடிக்கலையே!'' என்று மனம் எடுத்துக் கொடுத்தது.

''அட ஆமா...'' - குதூகலமாய் கணினியின் முன்னே உட்கார்ந்தாள், மைவிழி.

வீரப்பனை, தமிழ்நாடு தேடியதைக் காட்டிலும், மிக தீவிரமாய் நடை பெற்றது தேடுதல் வேட்டை.

ஓஜோ... என்று விக்கிபீடியாவில் அடித்துவிட்டு காத்திருந்தாள்.

ஓஜோ என்றால், நைஜீரியாவில் ஒரு டவுன் என்றது விக்கி.

''என்னது? நைஜீரியாவா? இவன் எங்க நைஜீரியாவுக்கு போனான்? ஒருவேளை... அங்க யாரையாவது லவ் பண்ணி... அவ ஞாபகமா ஓஜோன்னு...'' என்று இழுத்தது சிந்தனை.

இல்லையேல், ஒரு ஜப்பானிய புத்தராம்!

''புத்தரா? அடப்பாவி... நா ஃபுல் ஹான்ட் ஷர்ட் போடறதால... புத்தர்ன்னு முடிவே பண்ணிட்டானா? லூசு! லூசு!''

அடுத்ததாய், டோப்சி ஓஜோ என்று ஒரு இங்கிலீஷ் ரக்பி பிளேயராம்?

''இவனைக் கல்யாணத்துக்கு அப்புறம்... ஃபூட் பால் ஆடப் போறேன்னு சிம்பாலிக்கா வச்சிருப்பானோ? ச்சே... என் செல்ல நிஷூவை நான் அடிக்கவெல்லாம் மாட்டவே மாட்டேன்!'' என்று உறுதி பூண்டாள் உள்ளுக்குள்.

பின்னர், ஏதோ புத்தக தொகுப்பாம்!

''நா புக்ஸ் படிப்பேன் தான்... அதுக்காக இப்படியா?'' - லேசாய் அழுகை வரும் போல் இருந்தது, மைவிழிக்கு!

கடைசியாய்... ஸ்பானிஷ் மொழியில் ''கண்'' என்றது!

''ஹை... ஓஜோன்னா கண்ணு... கன்னுன்னா விழி! ஹை சூப்பர்! அட லூசுங்களா, இதை முதலே போட்டிருக்க வேண்டியது தானே? என்னோட அம்லுகுட்டியை நானே தப்பா நினைச்சிட்டேன்ல'' என்று கோபம் கொண்ட மைவிழிக்கு, ஏகப்பட்ட சந்தோசம்!

சட்டென, 'ஓஜோ'' என்ற வார்த்தையை கூகுளில் தேடியவள், இரண்டாவதாய் ''கண்ணின்'' வரைபடம், ''இமேஜ்'' பகுதியில் வரவும்,

''ச்சை... முதலேயே கூகுளில தேடியிருக்கணும்?! பெரிய மேதாவின்னு காட்டுறதுக்காக... விக்கிபீடியா போனது தான் தப்பா போச்சு!'' என்று தன்னைத் தானே குட்டிக் கொண்டவள்,

''மைவிழி ரேஞ்சுக்கு யோசிக்காம... நிஷாந்த் ரேஞ்சுக்கு யோசிச்சிருக்கணும் சொல்றே... சரி விடு!'' என்ற மூளையின் கேலி கலந்த கேள்வியை, ஒரு பெரிய சிரிப்புடன் நிறுத்தி வைத்தாள்.

பின்னர், ''ஓஜோ! ஓஜோ! ஓஜோ! ஓஜோ!'' என்று வெவ்வேறு ஸ்ருதியில் சொல்லிப் பார்த்தவள்,

''அழகாய் தான்ய்யா இருக்கு!'' என்று முகம் சிவந்தாள், அழகாக.

இந்த ''ஓஜோ'' கண்டுபிடிப்பில், தன்னையே இரண்டு நாட்கள் தொலைத்திருந்தவளின் மைவிழிகள், நிஷாந்தை மீண்டும் தேடத் தொடங்கின.

ஆள் அரவமே காணவில்லை.

''லவ் சொன்னதோட சரி... எங்க போனான்? ஒருவேளை... எனக்கு பிடிக்கலைன்னு நினைச்சுட்டானோ? எங்க திரும்ப வந்தா... அடிப்பேன்னு புள்ள பயந்திருச்சோ?'' என்று அவன் மேல் பரிதாபம் வேறு வந்தது.

கூடவே, ''ஏதாவது கெட்டது நடந்துட்டா... அய்யா அழுகாச்சி காவியம் படிச்சிட்டு, வீட்டுக்குள்ள தேவதாஸ் மாதிரியில்ல இருப்பான்? ஒருவேளை... இப்பவும், நான் சொன்னதைப் புரிஞ்சுக்காம, ஊ... ஊன்னு அழுதிட்டு இருக்கானோ?'' என்று எண்ணம், அவனைச் சுற்றியே சுழன்றது!

''அப்படித் தான் இருக்கும்! வாழ்வே மாயம்... இந்த வாழ்வே மாயம்ன்னு சால்வையைத் தோளைச் சுத்தி போட்டுக்கிட்டு, ரெண்டு நாள் தாடியோட... சோக லுக் கொடுத்திட்டு உக்காந்திருப்பான்! பேக்கு!'' - சரமாரியாய் அவனை வசைபாடியது நெஞ்சம்.

மைவிழியால், பதினைந்து நாட்களுக்கு மேல் பொறுக்க முடியவில்லை.

அவனைப் பார்த்தே ஆகவேண்டும் போல் நெஞ்சம் பரபரத்தது!

''ஏய்... அலையாதேடி...'' என அடக்கிய நெஞ்சத்தை,

''போடி... அந்தப்பக்கமா? நானே... தவிச்சு... தண்ணி வத்தி போயிருக்கேன்... இவ ஒருத்தி!'' என்று அடக்கி விட்டு, கீர்த்தியின் வீட்டுக்கு நடையைக் கட்டினாள்.

எப்போதும் போல், கீர்த்தியும் கிருஷ்ணனும் வாசலில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் தான் இருந்தனர்.

''இதுக்கு ஒண்ணும் குறைச்சலில்ல... அங்க ஒரு புள்ள அழுது வடிஞ்சு... சோகத்தை ஜுஸா பிழியுதேன்னு

கொஞ்சமாச்சு வருத்தமிருக்கா... எப்ப பாரு, இந்த ஊஞ்சலே கதின்னு கெடக்க வேண்டியது! என்னோட அம்லு பேபி படற கஷ்டம்... இவங்க யாருக்காவது தெரியுதா? எல்லாம்... இந்த ஓஜோவே பார்க்கணும்!'' என்று அலுத்துக் கொண்டு, வீட்டிற்குள் நுழைந்தாள்.

அவளைக் கண்டதும், கிருஷ்ணனும் கீர்த்தியும் பார்வையாலேயே ஏதோ பேசிக் கொண்டது போலிருந்தது!

கிருஷ்ணனின் இதழ் ஓரத்தில் சிறு சிரிப்பும், கீர்த்தியின் முகத்தில் பெரும் சந்தோஷமும் வேறு அவளை குழப்பியது!

''ஹலோ... கீர்த்தி அக்கா... என்ன ஞா...'' என்று மைவிழி ஆரம்பிக்க,

''என்ன மைவிழி மேடம்... எங்களையெல்லாம் ஞாபகமிருக்கா? வீட்டுக்கு வந்து பதினைஞ்சு நாளாகப் போகுது!'' என்று கிண்டல் செய்தான், கிருஷ்ணன்.

தான் கேட்க நினைத்ததை, அவன் கேட்டுவிடவும், என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் முழித்தவள்,

''அது... அது வந்து... ஒரு புது அசைன்மெண்ட் வொர்க்... அதான்'' என்றாள் மழுப்பலாக.

கிருஷ்ணனின் ''நம்பிட்டோம்! நாங்க ரெண்டு பேரும் நம்பியே நம்பிட்டோம்!'' என்ற கேலியில், தன் முகம் சிவப்பதை அவளால் அடக்கவே முடியவில்லை.

கூடவே, ''உனக்கு தெரியுமா கீர்த்து... அசைன்மெண்ட் வொர்க் எல்லாம்... காலேஜ் கேட் கிட்ட தான் செய்வாங்களாம்'' என்று அவன் கூறவும், முகம் சிவப்பு ரிப்பன் போல் பின்னிக் கொண்டது!

''சரி... சரி... உங்க உடம்பு எப்படி இருக்கு?'' என்று கேட்டவள், சிறிது நேரத்தைக் கீர்த்தியைப் பற்றிய விசாரணையில் கழித்தாள்.

பத்து நிமிடத்திற்கு மேல் பொறுக்க முடியாமல், ''அங்கிளும்... நிஷாந்தும் எங்க?'' என்றாள் பார்வையை சுழல விட்டு.

''எதுக்கு அங்கிளை முன்னாடி சொருகிக்கிறே... வெறுமனே நிஷாந்த் எங்கேன்னு கேட்க வேண்டியது தானே?'' என்று கிருஷ்ணன் சிரிக்க,

''சரி... இப்ப என்ன? உங்க சிஷ்ய மகாபிரபு எங்க?'' என்றாள் மைவிழி குரலில் கண்டிப்புடன்.

''அவன் பறந்து போனானே! எங்களை விட்டு பறந்து போனானே!'' என்று பாடிய கிருஷ்ணன், பறப்பது போல் செய்கையும் செய்ய,

''என்னது?'' என்று குழம்பினாள் மைவிழி.

''நிஷூ... சியாட்டல் போயிருக்கான், மைய்யு! அவனோட ஃபினான்ஷியல் கன்சல்டிங் ஆபீஸுக்கு அங்கயும் ஒரு பிரான்ச் ஆரம்பிக்கலாம்ன்னு ஒரு பிளான்... அதுக்கான ஃபர்ஸ்ட் கட் வேலையெல்லாம் பார்க்கப் போயிருக்கான்!'' என்று குண்டைத் தூக்கிப் போட்டாள் கீர்த்தனா.

மைவிழிக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி!

ஒரு நிமிடத்திற்கு மேலாக, அவள் எதுவும் சொல்லாமல், வாயைப் பிளந்தபடியே இருக்க, ''அவனோட நம்பர் தரவா? பேசிப் பாரேன்!'' என்ற கிருஷ்ணன், நிஷாந்தின் எண்ணை அவளது கைப்பேசியை வாங்கி அழுத்திக் கொடுத்தான்.

கீர்த்தியின் எச்சரிக்கை பார்வையை, ஒரு சின்ன கண்ணசைவில் அடக்கிவிட்டு, ''நீ பேசிட்டு இரு...

நாங்க இப்போ வந்துடுறோம்!'' என்று அங்கிருந்து நகர்ந்தான்.

அவர்கள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த வளின், கைகள் தானாக கைப்பேசியைக் காதுக்கு இட்டுச் சென்றது.

இரண்டே மணிகளில் எடுக்கப்பட்ட அழைப்பின் முதல் ஒலியே,

''ஹே ஓஜோ! ஓஜோ குட்டி! எப்படிடா இருக்கே!'' என்ற நிஷாந்தின் குதூகலக் குரல் தான்!

அவ்வளவு தான், மைவிழிக்கு ஆத்திரம் பொங்கி விட்டது!

''செருப்பு பிஞ்சிரும்!'' என அவள் பல்லைக் கடிக்க,

''இனிமேல் நடக்கப் போறதை சொல்றதுக்கு... நீ என்ன சாமியாரா? செருப்பு பிஞ்சு போச்சுன்னு பாஸ்ட் டென்ஸ்ல சொல்லு!'' என்று சிரித்தான் நிஷாந்த்.

''வேணாம்... டென்ஷன் பண்ணாதீங்க...'' என்று பல்லைக் கடித்தாள் மைவிழி!

பூச்சரத்தில் சேரும் அடுத்த பூ - காதல்! காதல்! காதல்!



12

''ஏய்... ஓஜோ ஏன் டென்ஷன்? கூல் இட் மேன்...'' என்று நிஷாந்த் அவளை சமாதானப் படுத்தவும்,

''நீ... என் மனசில என்ன மேன் நினைச்சிட்டு இருக்கே?''

''உன்னைத் தான்... ஓஜோ குட்டி!''

''சகிக்கலை!''

''ச்சே... ச்சே... அந்தளவுக்கு நீ மோசமில்ல ஓஜோ! சூப்பர் ஃபிகர் இல்லைன்னாலும் ஓரளவுக்கு சுமார் ஃபிகர் தான் நீ!''

''வேணாம்...''

''ஹோ... சுமார் ஃபிகரும் இல்லைங்கிறியா? இப்படியெல்லாம் குறைச்சு எடை போடக் கூடாது ஓஜோ!

''நிஷான்...'' - பொறுமையற்று ஒலித்தது மைவிழியின் குரல்.

''என்ன ஓஜோ...'' - அவனும் அவளது கோபம் அறியாதவனாய், கொஞ்சல் கவிதை வாசித்தான்.

கோபத்தை அடக்கிக் கொண்டு, ''எங்க போனீங்க?'' என்றாள் அவள், மட்டுப்பட்ட குரலில்.

''சியாட்டல் ஓஜோ! புது பிரான்ச் செட் பண்றதுக்கான லீகல் வொர்க் பண்ண வந்திருக்கேன்...'' என்றான் அவன் தீவிரமாக.

மைவிழிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

''டேய்... அன்னைக்கு லவ் பண்றேன்னு சொன்னியே... அந்த பிரகஸ்பதி நீ தானா?'' என்று கேட்க வேண்டும் போலிருந்தது!

ஆனால், கேட்க முடியவில்லை! நாணமா? கோபமா? காதலா? பக்தியா? - ஏதோ ஒன்று அவளைப் பேச விடாது செய்தது.

''சரி... உங்க வேலையைப் பாருங்க!'' என்று சொல்லிவிட்டு, அழைப்பை வைத்துவிட்டாள் மைவிழி.

நிஷாந்திற்கு, அந்தப் பக்கம் சிரிப்பு தாங்கவில்லை.

''வா ஓஜோ வா! அய்யாவ பாக்காம அம்மாவால இருக்க முடியலையோ...'' என்று வீராப்பா சிரிப்பு சிரித்துக் கொண்டவன், மீண்டும் மைவிழியின் கைப்பேசிக்கே அழைத்தான்.

அந்த ஓர் வினாடிக்குள்ளாகவே, அவனது என் மைவிழிக்கு மனப்பாடம் ஆகிவிட்டிருந்தது!

அழைப்பது அவனே என்று உணர்ந்தபோதும், எடுக்க மனம் வரவில்லை.

அவன் தன்னைப் பற்றி கவலைப்படாதது போல் தோன்றியது!

தான் அவனைத் தேடி வீட்டுக்கு வந்தபோதும், அவன் தன்னை கண்டு கொள்ளாதது போல் ஓர் வருத்தம் நெஞ்சை சூழ்ந்தது!

நாம் தான் அலைகிறோமோ? அவனுக்குத் தன் மேல் நாட்டமில்லையோ என்று நெஞ்சு கிடந்து தவித்தது!

'இல்லை இல்ல... அவன் ஓஜோன்னு கூப்பிட்டதிலேயே ஒரு துள்ளல் இருந்துச்சே... சும்மா விளையாடுறான்...' எனத் தன்னைத் தானே சமாளித்துக் கொண்டவள்,

எதிரே வந்த கீர்த்தியிடம், ''கீர்த்திக்கா... நா கிளம்புறேன்...'' என்று முணுமுணுத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

''மதியம்... சாப்பிட்டு போ, மைய்யு!'' என்ற கீர்த்தியின் அழைப்பு அவள் காதிலேயே விழவில்லை.

மனது ஒரு மாதிரி இருக்க, கோவிலுக்கு போனால் தேவலாம் போலிருந்தது மைவிழிக்கு.

கோவிலுக்குள் நுழைந்தவள், அங்கே இருந்த கிருஷ்ணன் சந்நிதி முன்னே சம்மணமிட்டு அமர்ந்தாள்.

கோகுல கண்ணனோ... கந்தவேல் முருகனோ... கடவுள் ஒன்றல்லோ!

''மனசு ஒரு மாதிரி பாரமா இருக்கே முருகா... நிஷான் ஏன் என்னை விட்டுட்டு போனான்? என்னை அவாய்ட் பண்றானா?'' என்று தன்னுள் இருந்த கேள்வியை முருகனிடம் கேட்டாள்.

''ஒருவேளை என்னைப் பத்தின விஷயம் தெரிஞ்சிருக்குமோ? கை மட்டும்னாலும்... பாதி எரிஞ்ச ஒரு மனுஷியை எப்படி கல்யாணம் பண்ணிப்பான்?'' என்ற தாழ்வு மனப்பான்மை அவளுள் தலை விரித்தாட ஆரம்பித்தது!

''அன்னைக்கு கூட... கையைப் பிடிச்சதும் ஒரு மாதிரி அதிர்ச்சியா பார்த்தானே?'' என்ற எண்ணம் தோன்ற,

சட்டென தன் முழுக்கை சட்டையை விளக்கி, பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்ட கையை பார்த்தாள்.

என்ன தான் மேலே ஓர் தோலை வைத்து மறைத்திருந்தாலும், அதற்கு கீழே இருந்த தீயின் கொடூர ஓவியங்கள், கையை அலங்கோலமாகவே காட்டின.

''ப்ச்...'' என்று ஓர் அசூசை மனதைக் கவ்வ, லேசாய் அழுகை வரும் போலிருந்தது!

தீக்கு இரையானதால், பச்சை மிளகாய் போல் மினுமினுத்த விரல்கள், காய்ந்த சிவப்பு மிளகாய் போல் தோல் சுருங்கி, வாடி வதங்கி... பார்க்கவே ஓர் அருவெறுப்பான உணர்வைக் கொடுத்தன.

இதைப் பிடிக்க அவனுக்கு எப்படி பிடிக்கும்?

அவனது விரல்களைத் தான் அவள் பார்த்திருக்கிறாளே, புசு... புசுவென்று இலவம் பஞ்சில் செய்த

குல்பி ஐஸ் போல் அழகாய்... உருண்டையாய்... செழிப்பாய் அன்றோ இருக்கும்!

அந்தக் கையுடன் இந்தக் கை கோர்க்கப்படும் போது!? ச்சை... நினைத்துப் பார்க்கவே அருவெறுப்பாக இருந்தது!

அந்த அருவெறுப்பின் தொடர்ச்சியாக, மைவிழியின் பார்வை அவளது வலது பக்கக் கழுத்தின் புறம் சென்றது.

ரமேஷ் கொட்டிய அமிலம்... கழுத்து தொடங்கி... கை... லேசாய் இடுப்பு... தொடை... முழங்கால் என்று பல்பல இடங்களில் சிந்தி இருந்தது!

உச்சக்கட்ட பாதிப்பு, வலது கை என்றாலும்... மற்ற இடங்களிலுமே அமிலத்தின் தீ நாக்கு தன் ஆட்டத்தைக் காட்டியிருந்தது!

அதுவும் கழுத்துப் பக்கம்... குறிப்பாய் சொல்ல வேண்டுமெனில் கழுத்து சதை கையுடன் இணையும் பகுதி, மிகவும் கொடூரமாய் இருந்தது!

பத்து மீட்டர் துணி வைத்து போர்த்த வேண்டிய ஒரு பொருளை, வெறுமனே ஒரு மீட்டர் துணி வைத்து போர்த்தினால் எப்படி இருக்கும்?

எந்தப் பக்கமும் பத்தாமல், இங்கும் அங்குமாய் இழுத்துக் கொண்டு, அசிங்கமாய் இருக்காது? அது போல் தான் கழுத்து சதையும் இருந்தது!

அவனது வலது பக்கம் நிற்கும்போது, அவனது வலக்கை எழுந்து அவளது வலது தோளை அன்றே அணைக்கும்? அப்படி அணைக்கையில்... இந்த விகாரம் எவ்வளவு அசிங்கமாய் தெரியும்?

ச்சை... இப்படியொரு விஷயத்தை நான் யோசிக்கவே இல்லையே! ச்சை!'' என்று தன்னைத் தானே கொட்டிக் கொண்டாள்.

அவன் காதலைச் சொன்னதும்... என்னவோ உலக கைக்கு வந்துவிட்டது போல் அகமகிழ்ந்து போனது தப்பு போல் தோன்றியது!

தன்னைப் பற்றி தெரியாமல் காதல் சொன்னான்.

தான் ''பெற்றோர் முடித்து வைக்கும் திருமணம்'' என்றதும், நிர்மலாவிடம் விவரம் கேட்டிருப்பான்.

என்னைப் பற்றிய சகலமும் அவள் வாயிலாக தெரிந்ததும், ''அய்யோ... தெரியாத்தனமா லவ்வை சொல்லிட்டோமே!?'' என்று பயந்து போயிருப்பான்.

இதையெல்லாம் யோசிக்காமல், காதல்... கல்யாணம் என்று எதுவரை சென்றுவிட்டோம்!?

''ச்சை!'' என்று வந்தது மைவிழிக்கு!

தன் மீதே கோபம்... கழிவிரக்கும்... விரக்தி என்று அனைத்து எதிர்மறை உணர்வுகளும் வந்து போயின!

இவளைப் பற்றிய யோசனையில், அப்பா சொன்ன மாப்பிள்ளையைக் கூட ''நொள்ளக் கண்ணன்... நொந்தக் கண்ணன்...'' என்று கிண்டல் செய்தாகிற்று!

ஹ்ம்ம்... சூது வாது தெரியாத குழந்தை... என்று தான் நினைத்திருந்த நிஷானிற்கே... தன்னைப் பிடிக்க வில்லை எனும் போது, அந்தக் கண்ணனுக்கு அவளை எப்படி பிடிக்கும்?

எதிர்காலத்தைப் பற்றிய கணக்கீடுகள் கொண்ட ஓர் மனிதனால், எப்படி அவளை மனைவியாய் ஏற்றுக் கொள்ள முடியும்?!

அவனும்... தன்னை நேரில் பார்த்த மறுநொடி, பின்னங்கால் பிடரியில் பட ஓடப் போகிறான்!

இப்படியாய் பற்பல எண்ணங்கள் மைவிழியின் மனதை ஆக்கிரமித்தன!

அலைபாயும் மனதை அடக்கும் வழி தெரியாமல், கண்களை இறுக மூடிக் கொண்டவள், மூச்சை ஆழ எடுத்துவிட்டாள்.

ஐந்து நிமிடம்... பத்து நிமிடம்... இருபது... முப்பது!

சரியாக நாற்பது நிமிடங்கள் கழித்தே, அந்த மோன நிலை கலைந்தது!

எதைப் பற்றியும் சிந்திக்காமல், மனதிலிருக்கும் அனைத்து எண்ணங்களையும் ஆழ இழுக்கும் மூச்சில் நிரப்பி, மெது மெதுவாய் வெளியே விட்டவள், நிர்மலாய் அமர்ந்திருந்தாள்.

ரமேஷ்... நிஷாந்த்... கண்ணன் என்று அவள் மனதையும் வாழ்வையும் புரட்டிப் போட்ட... புரட்டிப் போடும்... புரட்டவிருக்கும் மூவரையும் சுற்றி சுழன்ற எண்ணங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் அவளை விட்டு வெளியேறின.

மனதில், முருகனும் அவனது வேலும் மட்டுமே நிலைத்திருக்க, ஓர் மாயலோகத்திற்குள் அவள் சென்றாள்! தனியாக!

அந்த உலகத்தில்... அவளும் முருகனும் மட்டுமே!

தானும்... தனது மனசாட்சியும் மட்டுமே உரையாடும் மெடிடேஷன் நிலைக்கு என்றுமே மைவிழியால் செல்ல முடிந்ததில்லை! எப்போதும், அவளுக்கோர் துணை வேண்டும்! அந்த துணை - முருகன்! எங்குமிருக்கும் கடவுள்... அவள் மூச்சினுள் கலந்து, மனதில் அமர்வது போன்ற உணர்வு, அவள் தியான நிலைக்குச் செல்லும் போதே அவளுக்கு தோன்ற துவங்கிவிடும்.

மெது மெதுவாய், அவளுளிருக்கும் அலைபாயும் எண்ணங்களைத் தன் வேலால் தட்டித் தட்டி வெளியே பெயர்த்து எடுக்கும் முருகன், ''ஹ்ம்ம்... சொல்லு! உனக்கு என்ன பிரச்சனை?'' என்று கம்பீரமாய் கேட்கும் அந்த நொடி வரை, அவள் அவளிடமே இருக்க மாட்டாள்!

மனமும் உடலும் முருகனின் வசம் சென்றுவிடும்!

இப்போதும், அவள் மன சிம்மாசனத்தில் சொகுசாய் ஏறி அமர்ந்து கொண்ட முருகன், ஒரு காலை மடக்கி இருக்காய் மேல் வைத்துக் கொண்டான். மறு காலை, ஒரு தாளத்துடன் ஆட்டியபடி, ''இப்ப எதுக்கு என்னைக் கூப்பிட்டே? சீக்கிரம் சொல்லு!'' என்றான் அவசரப் படுத்தும் தொனியில்.

''உனக்கு தெரியாதா? எல்லாம் இந்த நிஷாந்த் பிரச்னை தான்!''

''ஹ்ம்ம்... அவன் தான் ஊரை விட்டே ஓடிப் போய்ட்டான் இல்ல? பேசாம... எனக்கும் உங்க அப்பாக்கும் வாக்கு கொடுத்தபடி, உங்க அப்பா பார்க்கிற மாப்பிள்ளையையே கல்யாணம் பண்ணிக்கோ! அது தான் உன்னோட வாழ்க்கைக்கு நல்லது!'' என்று எச்சரித்தார், வேல்முருகன்.

''ஹான்... அப்படியா... ஹய்யோ... எனக்கு நிஷாந்தை பிடிச்சிருக்கே?!'' என்று மைவிழி சிணுங்க,

''உங்க அப்பா பார்த்திருக்க... கண்ணனை இன்னமும் அதிகமா பிடிக்கும்! அதனால இந்த நிஷாந்த் பையனைத் தூக்கி தூரமா வச்சுட்டு... ஊருக்குப் போற வழியைப் பாரு...''

''அய்யயோ! அப்போ... நிஷாந்த் வேணாமா?'' அவன் நல்லவன், முருகா!''

"என்கிட்டேவா? கண்ணன் அவனை விட நல்லவன்!"

"இருந்தாலும்... எனக்கு நிஷாந்தை... அவனை... ப்ளீஸ் முருகா..." - இறைஞ்சினாள் முருகா.

"என்ன ப்ளீஸ்? எனக்கு அவனைப் பிடிக்கலை. காதலைச் சொன்னவன்... அதுக்கு அப்புறம் உன்னை ஒரு வாட்டியாவது வந்து பார்த்தானா? இல்லையில்ல? அவன் வேணாம்! கண்ணன் அவனை விட நல்லவன்! அவன் தான் உனக்கு ஏற்றவன்! சின்ன வயசிலேயே தாயை இழந்தவன்... உன்னோட அன்பு அவனுக்கு தேவை! அதனால, நிஷாந்தை மறந்திட்டு அப்பா சொல்ற மாப்பிள்ளையைக் கட்டிக்கிற வழியைப் பாரு!"

"ஹ்ம்ம்... அப்படியா? ஆனா... இன்னைக்கு கூட ஓஜோன்னு நல்லா கொஞ்சினானே?" குரல் கெஞ்சிற்று.

"தமிழ் கடவுளான என்னிடம் ஸ்பானிஷ் பேசும் ஒரு மானுடப் பதருக்காக வாதாடுகிறாயா? நல்லதல்ல மைவிழி! நல்லதல்ல!"

"ஹய்யோ... சாரி தல! தெரியாம சொல்லிட்டேன்!"

"ஹ்ம்ம்! அது... அந்த பயம் என் மேலிருக்க வேண்டும்!"

"உன் மேல பயமிருக்கணுமா? அப்புறம் ஏன்... நீ இருக்க பயமில்லைன்னு சொல்றாங்க!"

"மைவிழிழிழிழி!!!"

"சாரி சார் சாரி தல! இனிமேல் அப்படியெல்லாம் பேச மாட்டேன்!"

"ஹ்ம்ம். நிஷாந்தைப் பற்றி பேசுவது மட்டுமல்ல நினைப்பதும் கூடாது!"

"ம்ம்ம்ம்."

"அழுது வடியாதே! கண்ணன் நிஷாந்தை விட நன்றாக ஸ்பானிஷ் பேசுவான்... ஸ்பானிஷ் மட்டுமல்ல ஜெர்மன்... பிரெஞ்சு எல்லாமே பேசுவான்! அவனே உனக்கு மணாளனாய் வர வேண்டும் என்பதே என் சித்தம்!"

"அப்படியே ஆகட்டும் தல!"

"ஹ்ம்ம்... போதும் எனக்கு கால் வலிக்கிறது... எனது பி.எம்.டபிள்யூ வெளியே காத்திருக்கிறது! பறந்து போகிறேன்!" என்று மயில் மீதேறி பறந்தே விட்டான்.

முருகன் மேல, மைவிழிக்கு ஏகப்பட்ட வருத்தம்!

இவர் மட்டும் வள்ளியை... ஸ்கெட்ச் போட்டு... காதல் செய்வாராம்... நான் மட்டும் செய்யக் கூடாதாம்! இவருக்கு ஒரு சட்டம்... எனக்கொரு சட்டம்! - உதடு பிதுக்கி, மூக்கு சுருக்கி, மயில் மீதமர்ந்த இளைய வேலனைப் பார்த்து பழிப்பு காட்டினாள் மைவிழி.

"அடி! அடி பிச்சுருவேன் ஜாக்கிரதை! அதென்ன... எப்பப் பாரு என்னோட வள்ளி டார்லிங்கையே எக்சாம் பிலா எடுக்கிறே? என்னோட தெய்வானை பேபியை உதாரணமா எடுத்துக்க வேண்டியது தானே? எங்கம்மா பார்த்த... அழகே வடிவான தெய்வானை பேபியை ஒரு வார்த்தை கூட மறுத்து பேசாம கல்யாணம் பண்ணிக் கிட்டேன் இல்லையா? அது மாதிரி... நீயும் கண்ணனைக் கல்யாணம் பண்ணிக்கோ! சொல்லிட்டேன்!"

"உனக்கென்ன ராஜா... உன் இஷ்டத்துக்கு ஒருத்தி... உங்கம்மா இஷ்டத்துக்கு ஒருத்தின்னு ஜமாய்க்க முடியாது! நா அப்படியா? ஹ்ம்ம்..." என்று பெருமூச்சு வந்தது மைவிழி.

முருகனுடன் நடந்த உரையாடல் மனதை தெளிவு படுத்தி இருந்தாலும், நிஷாந்தின் நினைவுகள், நெஞ்சை விட்டு அகல மறுத்தன!

அவளால், தன் கடந்தகாலத்தை அறிந்து கொண்டு நிஷாந்தை தன்னை விட்டு விலகி இருப்பான் என்பதை ஒப்புக்கொள்ள முடியவில்லை அது அவனது குணத்திற்கு சற்றும் ஒத்து வராத விஷயம் போல் தோன்றியது!

ஆனாலும், என்ன தான் எண்ணங்கள் அவனுக்கு ஆதரவாய் இருந்தாலும்... நடப்பவை அவனுக்கு எதிராய் அன்றோ இருந்தன!

''என்ன? என்ன?'' என்று குழம்பிய மனதை,

''இவ்வளவு நாள் வரை... உனக்கு நல்லதையே நடத்திக் கொடுத்த முருகன், இப்போதும் நல்லதைத் தான் நினைப்பான்! அந்தக் கண்ணன் தான் உன் கணவன்!'' என்று அடக்கினாள் மைவிழி.

கொஞ்சம் கொஞ்சமாய் சாந்தப்பட்ட மனது, ''உனக்கு ஒரு கண்ணன் கிடைக்கையில்... நிஷாந்திற்கு உன்னை விட ஒரு நல்ல துணையை முருகன் நிர்ணயித்து வைத் திருப்பான்! அது தான் உன்னை விலக்குகிறான்!'' என்ற பக்குவப்பட்ட நிலைக்குத் தன்னைத் தானே தள்ளியது!

இந்த நினைப்பு வந்ததுமே, மைவிழி கோவிலை விட்டுக் கிளம்பிவிட்டாள்.

மனதின் ஓரத்தில், நிஷாந்த் மீண்டும் அழைப்பானோ என்ற எண்ணம் குறுகுறுத்துக் கொண்டே இருந்தது.

ஆனால், அவன் அழைக்கவில்லை!

மைவிழியும் நடப்பதை ஜீரணித்துக் கொண்டாள்! வலியுடன் தான்!

அதன் பின், கீர்த்தியின் வீட்டிற்குள் அவளும் செல்ல வில்லை! அவர்களும் அவளை அழைக்கவில்லை!

உள்ளுக்குள் வலித்தபோதும், மனம் அந்த ஏமாற் றத்தை ஏற்றுக் கொள்ளத் தொடங்கியது!

நிர்மலா கூட அவளிடம் சரியாக பேசுவதில்லை!

''எப்படி இருக்கிறாய் நிம்மி...'' என ஆரம்பித்தால்,

''ஏய் சின்டெக்ஸ்... நா பிஸிடி... அப்புறம் கூப்பிடு றேன்'' என்று அவசர அவசரமாய் அழைப்பை வைப்ப வளுக்கு, அந்த ''அப்புறம்'' வரவே இல்லை!

ஏன், அவள் குடும்பத்தார் கூட அவளிடம் ஐந்து நிமிடத்திற்கு மேல் பேசுவதே இல்லை!

அதுவும், அவள் அந்த ''கண்ணன்'' குடும்பம் பற்றி ஏதாவது கேட்டால், குரல்கள் பம்மத் தொடங்கிவிடும்.

மைவிழியே எப்போதாவது, திருமணம் பற்றி பேசுவாள்!

அதுவும், ''அப்பா... அப்பா... நீங்க சொன்ன மாப் பிள்ளை என்ன வேலை செய்றார்?'' என்று தான் ஒரு நாள் கேட்டார்.

அதற்கு அவள் தந்தை உளறிய உளறல் இருக்கே?! மைவிழிக்கே, அவன் நல்லவனா? டுபாக்கூரா என்று சந்தேகம் வந்துவிட்டது!

''அவராம்மா... அவரு... இரு ஒரு செகண்ட்... சிவா... நம்ம மாப்பிள்ளை என்ன பண்றாரு... ஹான்... அவரு... டாக்ஸ்... இல்ல இல்ல... ஹோட்டல் வச்சிருக்கார்மா... அப்படித் தானேடா சாண்டி...'' என்று அவள் தநதை தடு மாறியதில், மைவிழி அவனைப் பற்றி கேட்பதே இல்லை.

ஆனால், அதையும் மீறி ''மாப்பிள்ளை போட்டோ இருக்காப்பா...'' என்று அவள் கேட்க,

''போ... போட்டோவா... அதும்மா... அதான் நேரிலேயே பார்க்கப் போறியே... அப்புறம் எதுக்கு

போட்டோ! மாப்பிள்ள... போட்டோவை விட நேர்ல தான்மா நல்லா இருப்பாரு!'' என்றார் அவர், வேகமாய்.

என்னவோ, தன்னை அனைவருமே ஒதுக்கி வைப்பது போல் ஓர் எண்ணம்! ஓர் தாழ்வு மனப்பான்மை! எல்லாம் இந்த நிஷாந்தின் நினைப்பால் என்ற கோபம்! எல்லாமே!

ஒருவழியாக, அவள் திருமணத்திற்காக இந்தியா செல்லும் நாளும் வந்தது!

பூச்சரத்தில் கோர்க்கப்படும் அடுத்த பூ- விலகல்!



13

மைவிழியின் விமானம். ஃபிலடெல்ஃபியாவிலிருந்து கிளம்பி சற்று நேரமே ஆகியிருந்தது!

ஒரு பக்கம், அவளுக்கு ஊருக்குப் போகவேண்டுமே என்றிருந்தது!

இன்னொரு புறமோ, ஊருக்குப் போகவில்லை என்றால் இந்த லண்டபழனி (அதான் முருகன்) என்ன செய்வாரோ என்று பயமாகவும் இருந்தது!

காதலை, கடவுளின் மேல் கொண்ட பக்தியோ பயமோ வென்றுவிட, விமானம் ஏறிட்டாள்!

ஆனால், நெஞ்சின் படபடப்பு குறைவதாய் இல்லை!

தன்னால், நிஷாந்தின் நினைவின்றி வாழ முடியுமா?

கண்ணனுக்கு செய்யும் துரோகம் போலாகிவிடாதா?

கண்ணன் எப்படி பட்டவன்?

ரொம்பவும் முதிர்ந்தவனோ? வயதால் அல்ல எண்ணங்களால் முதிர்ந்தவனோ?

தன்னால் அவனுடன் ஒன்றி வாழ முடியுமா?

எப்படி எத்தனையோ கேள்விகளுக்கு இடையே, விமானப் பணிப்பெண் கொண்டு வந்து கொடுத்த ஆப்பிள் ஜூஸை வாயில் வைத்தவளின் காதருகே,

''ஏய்... ஓஜோ குட்டி! என்ன வைனா... கலக்கு ஓஜோ நீ! கலக்கு!'' என்ற குரல் கேட்க,

உடல் தூக்கி வாரிப் போட்டதில், கையிலிருந்த ஆப்பிள் ஜூஸ் சிதறியது!

''ஏய்... ஏன் இவ்வளவு டென்ஷன்? கூல் இட் மேன்...'' என்றவன்,

''ஓஜோ குட்டி... நகர்ந்து உட்காரு...'' என்று அவள் தோளைத் தொட்டு தள்ளினான்.

விடுமுறை காலம் இல்லை என்பதாலும், அது வாரத்தின் நடுவே வந்தமையாலும் விமானத்தில் அவ்வளவாய் கூட்டமில்லை.

மைவிழியின் அருகேயும் யாரும் அமர்ந்திருக்கவில்லை.

நிஷாந்த் சொன்னதும், மைவிழி தன்னை மறந்து அடுத்த இருக்கைக்கு மாறி அமர,

அவளருகே அமர்ந்து, அவள் கையில் வைத்திருந்த ஆப்பிள் ஜூஸை வாங்கி ஒரு வாய் பருகியவன்,

ஏதோ பெரும் பரவச நிலையை அடைந்தது போல் ஓர் பாவனை செய்தான்.

''ஹ்ம்ம்... ஆ... ஷ்... ஹ்ம்ம்... என்ன ருசி? என்ன ருசி? என்னோட ஓஜோ குடிச்சிட்டு கொடுத்த வைன் தான் என்ன ருசி!'' என அவன் ரசித்துப் பருகுகையில் தான், மைவிழிக்கு சுய உணர்வே வந்தது.

"நீ என்ன பண்றே... இங்க?" என்று அவள் படபடக்க,

"ஜூஸ் குடிக்கிறேன்!" என்றான் நிஷாந்த், சாதாரணமாக.

"ப்ச்... விளாடாதே! நீ எப்படி இந்த ஃப்ளைட்ல..." என்றாள் அவள் அதிர்ச்சி மாறாமல்.

"டிக்கெட் வாங்கித் தான்! ஃப்ளைட்ல வித் அவுட்ல எல்லாம் வர முடியாது ஓஜோ!" என்றான் அவன் தீவிரமாக.

"ஹய்யோ! மொக்கை போடாதே! எதுக்கு இதில வரே?"

"என்ன கேள்வி இது? இந்தியா போகத் தான்!"

"இந்தியாவா?"

"ஆமா! என் தாய்மண்! தாய்மண்ணே வணக்கம்... மா துஜே சலாம்!" - ஏ.ஆர்.ரஹ்மானின் சிஷ்ய பிள்ளையாய் மாறி அவன் பாட,

"எதுக்கு அங்க வரே?"

"கல்யாணம் பண்ணிக்க!"

மைவிழிக்கு ஏகப்பட்ட அதிர்ச்சி! குழப்பம்! கோபம்! ஆத்திரம்! எல்லாமே!

"கல்யாணமா?"

"ஏய்... ஓஜோ! நீ என்ன எல்லாத்துக்கும்... அப்படியே ரியாக்ஷன் கொடுக்கிறே?"

"ப்ச்... சொல்லு! யாருக்கு கல்யாணம்?"

"ஏன் என்னைப் பார்த்தா கல்யாணம் பண்ணிக்கப் போற மாப்பிள்ளை மாதிரி தெரியலையா?!"

"உன்னைப் பார்த்தா எனக்கு ஒரு கரப்பான் பூச்சி மாதிரி தான் இருக்கு!"

"ம்ம்ம்" - உதடு பிதுக்கி அழுதான் நிஷான்.

"சகிக்கலை! யாரை கல்யாணம் பண்ணிக்கப் போறே?!" என்றாள் அதிகாரமாய்.

"உன்னைத் தான்!" என்றான் அவன் பட்டென. அத் தோடு வேலை முடிந்தது என்பது போல், இருக்கையை விட்டு எழுந்தவன், எதிரே வந்த பணிப்பெண் மேல் முட்டிக் கொண்டான்.

மைவிழிக்கு அவன் கூறிய பதிலை ஜீரணிக்க சற்று நேரம் பிடித்தது!

மரத்து போன மூளையை அவள் தட்டி எழுப்பும் முன், நிஷாந்த் பணிப்பெண்ணுடன் (ஆங்கிலத்தில்) உரையாடத் தொடங்கியிருந்தான்.

"உங்களைப் பார்க்கத் தான் வந்து கொண்டிருந்தேன்!"

"ஹோ! என்ன வேண்டும் சார்... சொல்லுங்கள்!"

"சாக்லேட்!"

"கண்டிப்பாக! என்ன சாக்லேட் வேண்டும் சார்?"

"என்ன வைத்திருக்கிறீர்கள்?"

மைவிழியின் பொறுமை பறந்தது!

"நிஷான்!" என அவள் பல்லைக் கடிக்க,

"ஒரு நிமிஷம் இரு ஓஜோ..." என்றபடியே அவள் புறம் திரும்பியவனை, இழுத்து தன்னருகே அமர்த்திக் கொண்டாள் மைவிழி.

அப்போதும், தன் "சாக்லேட்"மோகத்தை விடாமல், "ஒன் கிட்-காட் ப்ளீஸ்!" என்றான் பணிப்பெண்ணிடம்.

"சியூர்!" என அவள் நகர,

"ஹே ஓஜோ! உனக்கு வேணுமா?" என்றான் மைவிழியின் புறம் திரும்பி.

"ரொம்ப முக்கியம்!" - மைவிழியின் பற்கள் நன்றாகவே கடிபட்டன.

"சரி... விடு!" என அவளுக்குப் பதில் சொன்னவன்,

"மேடம்... டூ கிட்-காட் ப்ளீஸ்! மை ஓஜோ நீட்ஸ் அ பிரேக்!" எனக் கூறி, பணிப்பெண்ணை அனுப்பி வைத்தான்.

அவள் நகர்ந்ததும், "ஆமா... என்ன சொன்னே? என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறியா?" என்றாள் மைவிழி அவசரமாக.

"ஆமா!" என அவன் அலட்சியமாய் சொல்லவும்,

"உளறாத!" என்றாள் அவள் பட்டென.

"ஹே நிஜம்! கீர்த்துக்குப் பிறக்கப் போற செல்லக் குட்டி மேல ப்ராமிஸ்... தெரியுமா?" என அவன் வியப்புடன் கூறவும்,

"லூசு மாதிரி... பிறக்கப் போற குழந்தை மேல எல்லாம் ப்ராமிஸ் பண்ணாதே!" என்று கடிந்தவளுக்கு, முருகனின் "கண்ணன் புராணம்" மனதில் ஓர் பயத்தை உண்டு பண்ணியது.

"சரி விடு! என் மேல ப்ராமிஸ் ஓகேவா? உன்னைத் தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்!"

"எனக்கு வீட்டில வேற மாப்பிள்ளை பார்த்திருக்காங்க!"

"யாரு அந்த வில்லன்!" என்ற நிஷாந்த், கண்ணைச் சுருக்கி, உதட்டைக் கோணலாய் சுளித்து, கைகள் இரண்டையும் நம்பியார் போல் பிசைந்தான்.

"வில்லன் இல்ல! கண்ணன்!"

"இந்த ரைமிங்குக்கு ஒண்ணும் குறைச்சலில்லை!" என்று மைவிழியின் கன்னத்தில் குத்தியவன், "ஒரே ஒரு

கிஸ் கொடுத்துக்கவா?" என்றான் முகத்தை அவளருகில் கொண்டு வந்து.

ஒரு நிமிடம் மைவிழியால் மூச்சே விடமுடியவில்லை!

அன்றொரு நாள்... ரமேஷ் தன் முகத்தருகே தன் உதட்டை எடுத்து வந்தது படம் போல் நெஞ்சிலாட, அப்படியே திக் பிரம்மை பிடித்தது போல் அமர்ந்திருந்தாள்.

"ஹே... என்னாச்சு ஓஜோ!" என நிஷாந்த் அவளை உலுக்க,

மைவிழியின் கண்கள் நீரைக் கோர்த்துக் கொண்டன.

"ச்சே... இதுக்கு போய் அழலாமா? எனக்கு கன்னத்தில் மட்டும் முத்தம் வேணாம்... முகத்தில எல்லா இடத்திலையும் வேணும்ன்னு வெளிப்படையா சொல்ல வேண்டியது தானே? அதுக்கேன்... அழற?" என அவன் பெரும்போக்கான ஆள் போன்ற பாவனையில் கூறவும், மைவிழிக்கு தன் அதிர்ச்சி மறைந்து, சிரிப்பும் கோபமும் ஒருங்கே வந்தன.

"சும்மா... காமெடி பண்ணிட்டு இருக்காத நிஷான்! நான் கண்ணனைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்! முருகன் சொல்லியிருக்கார்!"

"வாட்? யாரு முருகன்? அப்போ கண்ணன்... இப்போ முருகனா? டூ பாட்... ஓஜோ!" என்று ஒரு விரல் நீட்டி எச்சரித்தான் நிஷாந்த்.

"ஏய் லூசு! முருகன்னா... சாமி... கடவுள்... செல்வ முத்துக்குமரன்! ஓகேவா?" என்றவள், "என்ன டூ பாட்... ஃபோர் பாட்... நீ தான் ஓடிப் போயிட்டியே! அப்ப ஓடிப் போயிட்டு... இப்ப வந்து அப்பளம் மாதிரி பொரிஞ்சா ஒண்ணும் செய்ய முடியாது!"

"ஹே என்ன ஓஜோ... இதுக்கெல்லாம் கோச்சுப்பாங்களா?" என்றவன், அவள் தோளை தடவி, தாஜா செய்தான்.

"அதெல்லாம் முடியாது! முருகன் சொல்லிட்டாரு... நா அவரு சொன்னதைத் தான் கேட்பேன்..." என்றாள் அவள் பிடிவாதமாய்.

குரல் அடத்தைக் காட்டியபோதும், கைகள் அவனது தொடுகையை விலக்க முயற்சிக்கவில்லை.

"முருகனுக்கு வேணும்ன்னா... ஒரு டப்பா தினை மாவு கொடுத்து கரெக்ட் பண்ணிடலாம்!" என அலட்சியமாய் கூறியவனை, நன்றாக நாலு அடி சாத்தினாள் மைவிழி!

"அறிவிருக்கா? லூசு... லூசு! சாமிக்கிட்ட... அதுவும் முருகன்ட்ட... லஞ்சம் கொடுக்கிறானாம்!? உன்னையெல்லாம் என்ன செய்றது?"

"ஹே... அடிக்காத ஓஜோ! தினைமாவு மட்டும் பத்தாதுங்கிறியா? ஒரு சேவல் வேணும்னா வாங்கிக் கொடுப்போம்... அவரு நான்-வெஜ் சாமி தானே? கோழி... அதான் சேவல் எல்லாம் வச்சிருப்பாரே? சோ ஒத்துப்பார்!" என்று நிஷாந்த் தொடர்ந்து விளையாட,

"சும்மா விளையாடாதே... நிஷான்! நீ என்ன சொன்னாலும்... நான் கண்ணனைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்! அப்பாக்கு வேறு... இந்த கண்ணனை ரொம்பப் பிடிச்சிருக்கு!"

"ஹே இதெல்லாம் போங்காட்டம் சொல்லிட்டேன்! நான் தானே... உன்கிட்ட முதல்ல லவ் சொன்னேன்... அப்ப என்னைத் தான் நீ லவ் பண்ணனும்!" என்றான் அவன் தீவிரமாக.

"ஆமா... லவ் சொல்லிக் கிழிச்சே... லவ் சொன்ன கையோட எங்கேயோ ஓடி ஒழிஞ்சுக்கிட்டே இல்ல... அதுக்கு இதான் தண்டனை!"

"தண்டனை எல்லாம் வாழ்நாள் முழுக்க கொடுக்கக் கூடாது... ஓஜோ! சும்மா ரெண்டு அடி அடிச்சிட்டு... ப்ரொப்லம் சால்வ் பண்ணிடணும்... ஓகே?" என்று அவன் அறிவுரை கூற,

"இல்ல நிஷான்! என்னால முருகனை ஏமாத்த முடியாது!"

"ஓஜோ! ஓஜோ! அவரே ஒரு விளையாட்டுப் பிள்ளை... ஒரு மாம்பழத்தை அபேஷ் பண்றதுக்காக... மலை மலையா சுத்தி வந்து, அண்ணன்கிட்ட பல்ப் வாங்கினவரு! உன்னை மாதிரி ஒரு தீவிர பக்தைகிட்ட கேட்டிருந்தா... ஒரு மாம்பழம் என்ன? மூட்டை மூட்டையா மாம்பழத்தைக் கொண்டு வந்து கொட்டியிருப்பே... அதை விட்டுட்டு... மலை மேல உக்கார்ந்துக்கிட்டு... ஒரு வயசான பாட்டியை மலையேற வச்சு... அவங்களை மட்டும் பாட வச்சு... ரொம்ப சைல்டிஷ் யூ நோ! இப்ப... என்ன... நீ அவரு சொன்னதைக் கேட்கலைன்னதும்... புதுசா ஒரு மலை மேல ஏறிப்பாரு! நா வேணும்ன்னா போய் ஒரு பாட்டு பாடிடுறேன்... ஓஜோ! என்ன சொல்றே?" என அவன் தீவிரமாய் பேச,

"ஹய்யோ! கொஞ்சம் சீரியஸா பேசு... நிஷான்! வீட்டில கண்ணன் தான் மாப்பிள்ளைன்னு முடிவு பண்ணிட்டாங்க..."

"ஹே... எத்தனை கதைல படிக்கிறே... தாலி கட்டுறதுக்கு முன்னாடி கூட மாப்பிள்ளை மாறிடுவாங்க!"

''இல்ல நிஷான்!'' என்று மறுத்தவள், சட்டென நினைவு வந்தவளாக,

''ஹே உனக்கு என்னோட பாஸ்ட் பத்தி தெரியுமா? நான் ஏன் ஃபுல் ஹான்ட் ஷர்ட் போடுறேன் தெரியுமா?'' என்றாள் வேகமாக.

நிஷாந்தின் மனதில் ஓர் மணி அடித்தது!

அவளைத் தான் பார்த்த 'முதல்' நொடியை அவளிடம் சொல்லி, இந்தக் காதல் அனுதாபத்தால் வந்ததோ என்ற எண்ணத்தை அவளுள் விதைக்க அவன் விரும்பவில்லை.

நிஷாந்த் பதில் சொல்ல எடுத்துக் கொண்ட ஒரு நிமிடத்தில், மைவிழி மீண்டும் பேசத் துவங்கினாள்.

''என்னோட பழைய வாழ்க்கை பத்தி தெரிஞ்சதுன்னா... நீ ஓடிப் போய்டுவே!'' என அவள் துவங்க,

''என்னோட பழைய வாழ்க்கை பத்தி தெரிஞ்சதுன்னா... நீ ஓடியே போக மாட்டே!'' என முடித்தான், நிஷாந்த்.

''என்னது... உனக்கும் ஒரு ஃப்ளாஷ்பேக்கா? ஹய்யோ... மக்கள் தாங்குவாங்களா?'' என்ற எண்ணம் மனதில் தோன்ற, அதை அப்படியே கிடப்பில் போட்டவள்,

''என்ன நிஷான்? உனக்கென்ன ஆச்சு?'' என்றாள் அவன் முகத்தையே பார்த்து,

''அப்படி கேளு... சொல்றேன்...'' என்றவன், அவள் கவனம் திசை திரும்பி விட்டதில், லேசாய் மகிழ்ந்தவன், தன் கடந்த காலத்தை சொல்லத் துவங்கினான்.

''இங்க பாரு... நா இப்பவே சொல்லிடுறேன்... இதை சொல்லும் போது... அப்பப்ப அழுவேன்... எமோஷனல் ஆவேன்... கையைப் பிடிச்சுக்குவேன்... தோளில் சாஞ்சுப் பேன்... அதையெல்லாம் நல்லா நோட் பண்ணிக்கணும்

அப்ப தான்... நா சொல்லி முடிச்சதும், நா உன்னைக் கண்டிப்பா கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்ல முடியும்... சரியா?'' என்று புதுவிதமான பீடிகையுடன் ஆரம்பித்தான்.

அவன் சொல்லிய விதம் சிரிப்பை உண்டு பண்ண, சிறு ஆர்வத்துடன் அவன் முகம் பார்க்கத் தொடங்கிய வளின் புன்னகை, அவனது குடும்பத்தைப் பற்றிய விவரிப்பில் ரசனையாய் மாறியது.

''நாங்க மிடில் கிளாஸ் ஃபாமிலி தான்... ஓஜோ! அப்பா... அம்மா... கீர்த்து... நான்னு அழகான குடும்பம்!''

''எல்லா பசங்க மாதிரியும்... நானும் அம்மா செல்லம்!''

''நா அப்போ ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் தான் படிச்சேன்... பட் அப்பவே... என்னால அம்மாவோட கேரக்டரை நல்லா புரிஞ்சுக்க முடிஞ்சது! அந்த வயசில புரிஞ்சுக்க முடிஞ்சதா... இல்ல பின்னாடி ஒண்ணு ஒண்ணா நினைச்சு நினைச்சு, புரிஞ்சுக்கிட்டேனா தெரியாது... பட் ஐ லவ் அம்மா!''

''எதுக்குமே கோபம் வராது... எதையும் டென்ஷன் இல்லாம ஹான்டில் பண்ணுவாங்க... எப்பவும் ஒரு பாசிடிவ் அப்ப்ரோச் இருக்கும்... ஐ லவ் ஹெர் தெரியுமா?'' என்றபோது, நிஷாந்தின் குரல், பாசத்தில் நடுங்கியது.

கண்ணின் ஓரம் லேசாய் கண்ணீரும்!

மைவிழியின் சிரிப்பு... அப்படியே உறைந்து போயிற்று!

''நிஷான்...'' என அவள் மெல்ல கை தொட,

தொட்ட அவளது கைகளை அழுந்தப் பிடித்துக் கொண்ட நிஷாந்த், கண்களை இறுக மூடித் திறந்தான்.

இரு பெரிய கண்ணீர் துளிகள், கன்னத்தில் உருண்டு ஓடின.

எவ்வளவு நேரம், சிரித்து பேசி... கேலியும் கிண்டலு மாய் இருந்தவனா இவன் என்றிருந்தது மைவிழிக்கு!

சந்தனக் காப்பு செய்த முருகன் போல், சோகக் காப்பு பூசியிருந்தது நிஷானின் முகம்!

"நிஷான்!" என அவள் மீண்டும் ஒரு முறை அழைக்க,

பற்களால் தன் உதட்டை அழுந்தக் கடித்தவன், கண்ணில் வழிந்த கண்ணீரை புறங்கையால் துடைத்துக் கொண்டான்.

இருபத்தியாறு வயது ஆண் மகனாய்... அவனை அவ ளால் எண்ண முடியவில்லை! அவன் கூறிய ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் பையன் போலவே காட்சியளித்தான்!

"ஹ்ம்ம்... ஹ்ம்ம்..." என்று மூக்கை உறுஞ்சிக் கொண்டு,

"ஹ்ம்ம்... நான் இன்னும் சொல்லவே இல்லை யில்ல..." என்று மீண்டும் ஆரம்பித்தான்.

"இல்ல... கொஞ்ச நேரமாகட்டும்! நீ... ங்க கொஞ்ச நேரம் என்னோட தோளில சாஞ்சுக்கோங்க..." என்று மைவிழியே அவனுக்கு இடம் கொடுத்தாள்.

"உன்னோட முருகன் கோச்சுக்க மாட்டாரா?" - சிறு சிரிப்பு எட்டிப் பார்க்க அவன் கேட்க, செல்லக் கண்ண னாய் தெரிந்தான் அவன்!

"அதெல்லாம் கோச்சுக்க மாட்டார்... நீங்க படுத்துக் கோங்க!" என்றவள், மெல்ல அவன் தலையை சாய்த்துக் கொண்டு, முடி கோதிக் கொடுத்தாள்.

ஐந்து நிமிடம்... பத்து நிமிடம்... இருபது நிமிடங்கள் எனக் கழிந்த நேரத்தின் சாரம் - மௌனமா? காதலா? பாசமா? தோழமையா? என்று அந்த நேரத்திற்கு மட் டுமே தெரியும்!

"நா சொல்லி முடிச்சுடுறேன்... ஓஜோ!" என்றவன்,

"அம்மா... எங்க அம்மா பேரு என்ன தெரியுமா? பத்மாசினி! எவ்வளவு அழகான பேரில்ல... நமக்கு பாப்பா பொறந்தா அவங்க பேரே வைக்கலாம்!" என்று அவளுடன் டீல் போட்டுக் கொண்டவன்,

அவளது பதிலை எதிர்பார்க்காமல், மேலே பேசத் துவங்கினான்.

"நிம்மி இருக்கா இல்ல... அவளோட அம்மா ரேணு என்னோட பெரியம்மா பொண்ணு..."

"ஹோ... அடுத்தடுத்த ஜெனரேஷன் ஒரே ஏஜ்ல..." என்று மைய்யு இடையிட,

"ஆமா... எங்கம்மாவுக்கும் பெரியம்மாவுக்கும் நிறைய வயசு வித்தியாசம்! வயசு மட்டுமில்ல... குணமும் தான்! அம்மா தெளிவுன்னா... நிம்மியோட பாட்டி அவள மாதிரியே டென்ஷன் லேடி!"

"ஹோ... இப்ப எதுக்கு அது?"

"இருக்கே... கனெக்ஷன் இருக்கே... வெயிட் பண்ணு!" என்றவன்,

"ரேணு அக்காக்கு பிரசவ வலி வந்துடுச்சுன்னு... பெரி யம்மா போன் பண்ணதால தான் அம்மா அன்னைக்கு எங்களோட பைக்ல வந்தாங்க..."

"ஹோ!"

"அதுக்காக... நா நெறைய வருஷம் பெரியம்மா கூட பேசாம இருந்திருக்கேன் தெரியுமா? ஏன்... பெரியம்மா வீட்டுக்குப் போகவே மாட்டேன்னு கிளாத்தில எல்லாம் போய் குதிச்சிருக்கேன்..."

"நிஷான்!!!!!"

"ஆமா... அப்பா காப்பாத்திட்டாங்க... பட்... ஜஸ்ட் போன் பண்ணின பெரியம்மா மேலேயே எனக்கு கோபம் இருந்துச்சுன்னா... எங்கம்மாவோட சாவுக்கு காரணமான என் மேல எனக்கு எவ்வளவு கோபம் இருக்கும்?"

"என்ன சொல்றே நிஷான்... என்ன நடந்துச்சு... ஒழுங்கா சொல்லு!"

"ஹ்ம்ம்... அன்னைக்கு நாங்க எல்லாரும் ஒரே பைக்ல போனோம். கீர்த்து முன்னாடி உக்கார்ந்துக்கிட்டா... அப்புறம் அப்பா... அடுத்து என்னை உட்காரச் சொன்னாங்க அம்மா... ஆனா நான் தான்... அடம் பிடிச்சு மடியில உட்கார்ந்துக்கிட்டேன்..."

"ஹ்ம்ம்... அப்புறம்..." - மைவிழியால் பதட்டத்தை அடக்க முடியவில்லை. அவன் தாய் இறந்து விட்டார் என்பது வருத்தத்தைக் கொடுத்தபோதும், அதற்கு தான் தான் காரணம் என்று நிஷாந்த் மனதை வருத்திக் கொள்வது நெஞ்சை ஏதோ செய்தது! அவன் துன்பப்படும் அளவிற்கு... என்ன நடந்திருக்கும் என்று மனம் பரபரத்தது! ஹய்யோ... இப்படி அழுகிறானே... என்ன என்ன என்று உடம்பு உதறியது!

அன்று நடந்ததை ஒருமுறை மனதில் ஒட்டுபவனாய், நிஷாந்த் ஒரு நிமிடம் கண் மூடி அமர்ந்தான்.

திறந்திருந்த பாதாளச் சாக்கடையைக் கண்டதும், சட்டென பிரேக் பிடித்து வண்டியை நிறுத்தினார் அரவாமுதன்.

ஆனால், பின்னே வந்த பேருந்தால் பிரேக் பிடிக்க முடியவில்லை!

அரவாமுதனின் வண்டி நின்று விட்டது என்பதை உணர்ந்த பஸ் டிரைவர், பிரேக்கை அழுத்துவதற்குள், வண்டி அவர்களை நெருங்கியிருந்தது.

அப்படியும் அவர் பிரேக்கை, தன் பலம் முழுதையும் திரட்டி வேகமாய் அழுத்தினார்.

பிரேக்கை அழுத்திய வேகத்தில், ஸ்டீயரிங்கையும் இடப்பக்கமாய் ஒடித்தார் பேருந்தின் ஓட்டுனர்.

என்ன அழுத்தி என்ன, ஓடிக் கொண்டிருந்த வண்டி, அரவாமுதனின் பைக்கை இடித்தது!

இடித்த வேகத்தில், முன்னே அமர்ந்திருந்த கீர்த்தி... பைக்கின் முன்பக்கம்... சற்று வலப்புறமாய் விழ,

அரவாமுதன்... வலப்பக்கமாய் தூக்கியெறியப் பட்டார்.

உச்சக்கட்ட பாதிப்பு, பின்பக்கம் தான் தெரிந்தது.

பேருந்து இடப்பக்கம் திரும்பி இருந்தாலும், பின்பக்கம் இடித்தாலும், பத்மாவும் நிஷாந்தும் தடுமாறி கீழே விழுந்தனர்!

விழுந்த வேகத்தில், நிஷாந்தின் கண்களில் பேருந்து ராட்சச வீல்கள் மிக அருகே தெரிய, "அம்மா..." என்று அவன் அலறியது தான் அவன் நினைவிருக்கிறது!

அதன் பின் நடந்ததெல்லாம், ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் நடந்தே முடிந்துவிட்டது!

தான் சாகப் போகிறோம் என்று அந்தப் பிஞ்சு மனம் முடிவு செய்த நொடிக்கு மறு நொடி, அவன் அந்த பேருந்தை விட்டு தூக்கி எறியப்பட்டான்.

அவனை நசுக்க வேண்டிய, அந்த சக்கர ராட்சசன்... அவன் உயிருக்கு உயிரான தாயை... அவன் கண் முன்னேயே நசுக்கிச் சென்றது!

பேருந்து பூதத்தின், ராட்சச பற்களிலிருந்து தப்பித்து விட்டோம் என்ற நிம்மதியை... தாயின் உடம்பு அந்தப் பற்களில் சிக்கி... சின்னாபின்னமான நொடி முற்றிலும் கலைத்தது!

பத்மாவின் கால்... அதனடியில் நசுங்கிய நொடி "அம்ம்ம்ம்ம்மா ஆஆஆஆஆ" என்று அவரது கூவலும்,

அதே நேரம்... மற்ற உறுப்புகள் அந்த ராட்சச சக்கரத்தின் கீழே சென்றபோது, "அம்முப்பாஆஆஆஆஆ" என்ற அவரது அழைப்பும்,

அந்த இடத்தையே அதிரச் செய்தன என்கையில், அவரது சாவை நொடி மாற்றி நொடி பார்த்துக் கொண்டிருந்த மகனுக்கு கேட்டிருக்காதா என்ன?

அதுவும், அந்த பேருந்து பத்மாவை நசுக்கியதும், அவர்கள் கண்கள் அப்படியே மேலே வந்து, தன் தலைக்குப் பின்னால் அமர்ந்திருந்த நிஷாந்தைப் பார்த்த அந்த நொடி! ஹப்பப்பா!!!!! அவனைக் கொன்று போடும் நொடிகள்!

இப்போது, அந்த நொடியை நினைத்தால்... "ஷ்... ஷ்... ஷ்... அப்பா... என்ன கொடுமை தெரியுமா... என்னால பல வருஷம் அம்மாவோட... கண்ணை மறக்கவே முடியல... இட் வாஸ் ஜஸ்ட் லுக்கிங் அட் மீ!" என்றவன், மைவிழியின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டான்.

"தட் டீ... அம்மாவோட கடைசி வார்த்தை என்ன தெரியுமா?" என்றவனின் குரல் அளவிற்கு அதிகமாய் நடுங்கியது.

"நிஷான்..." - மைவிழியாலும் கண்ணீரை அடக்க முடியவில்லை!

நெஞ்சம் அவனுக்காய் அழுதது!

சிறுவனாய் அவன் சந்திக்க வேண்டிய இன்னலா இது?

"எத்தனை நாள் அழுதானோ?

எப்படி தவித்தானோ?

தன்னையே வருத்திக் கொண்டு... துவண்டு போனானா?

தாயின்றி அழுதானோ!

அம்மா... அம்மா... அம்மா என்று கதறியிருப்பானோ!

முருகா... இவனை விடவும்... தாயன்புக்கு ஏங்கியவர்கள் யாரும் இருக்க முடியுமா என்ன?

அவளை... மேலும் வருத்தவென நிஷாந்த் மீண்டும் பேசினான்.

"அம்மாவோட கடைசி வார்த்தை என்ன தெரியுமா... ஓஜோ!" என அவன் கேட்டபோது,

இந்த நேரத்திலும் தன்னை "ஓஜோ" என்றழைக்கும் அவனது அழகிய மனம் அவளை இளக்கியது!

ஆனால், அவளது எண்ண ஓட்டங்களை அறியாத நிஷாந்த் பேசிக் கொண்டே சென்றான்.

"கடவுளே... என் குடும்பத்தை காப்பாத்துன்னு சொல்லிட்டு இறந்து போனாங்க... இது என்ன மாதிரி பாசம் ஓஜோ! ஒரு பொண்ணுக்கு... ம்ஹூம்... ஒரு அம்மாக்கு தன்னை விட... தன் உயிரை விட தன்னோட குடும்பமும்... தன்னோட பசங்களும் அவ்வளவு முக்கியமா? என்னால அந்த பாயிண்டை புரிஞ்சுக்கவே முடியல!" என அவன் கூறியபோது,

பெண்ணாய் பிறந்து, தாய்மையடையப் போவதில் பெருமை கொண்டாள் மைவிழி!

நிஷாந்த், தன் வேதனையில் தொய்ந்து அமர,

மைவிழி மெல்ல அவனைத் தன் மடியில் சாய்த்துக் கொண்டாள்!

தன்னுள்ளிருந்த தாய்மையை... தன் விரல் வழியே புகுத்தி, மெல்ல அவன் நெற்றி வருடினாள், நிஷாந்தின் தாரம்!

அவளுக்குமே... கண்ணீர் கட்டுக்கடங்காமல் பொங்கி வழிந்தது!

'என் செல்லக் கண்ணன்... இவனை என்னை விட்டா யாரு பார்த்துப்பா...' என்று அவள் நினைக்கும் போதே,

அவளது மடியிலிருந்து எழுந்த நிஷாந்த், ''என்ன ஓஜோ? என்னோட பாஸ்ட்டை... உன்னோட ப்ரசென்ட் முருகன் ஏத்துக்கிட்டு... உனக்கான ஃபியூச்சரா என்னை மாத்துவாரா?'' என்றான் சிரிப்புடன்.

பூச்சரத்தின் சேர்ந்து மணம் வீசும் அடுத்த மலர் - பாசம்!



14

நிஷாந்த், அவளிடம் திரு மணத்தைப் பற்றி கேட்ட நொடி, மைவிழி எதையுமே யோசிக்க வில்லை!

முருகன்... கண்ணன்... அப்பா... அம்மா... வாக்குறுதி... எதையுமே!

''கண்டிப்பா என்னோட முருகன் ஒத்துப்பார்!'' என்ற நம்பிக்கை வர,

''ம்ம்ம்!'' என்றாள் சந்தோஷமாய்!

முகம் முழுக்க பிரகாசம் பொங்கிவழிய, ''நா சொல்லல... என்னோட் பாஸ்ட்டை பத்தி கேட்டதும்... நீ ஒத்துப் பேன்னு? நிஷான் இஸ் ஆல்வேஸ் ரைட் யூ நோ!'' என்று பெருமை பீத்திக் கொண்டான்.

''பின்னே...'' என்றவள், அவனுக்கு திருஷ்டி கழித்தாள்.

அதில் சொக்கிப் போனவனாய், ''போ... ஓஜோ! எனக்கு ஒரே வெட்க... வெட்கமா வருது!'' என்று அசடு வழிய,

''ஹய்யோ... என் செல்லம் எம்புட்டு அழகா இருக்கு!'' என்று மீண்டும் ஓர் கொஞ்சல் படலம் ஆரம்பமாகியது!

அழுது வடியும் விமானப் பயணம்... இவ்வளவு சுவாரஸ்யமாய் அமையும் என்று மைவிழி எதிர்பார்க்கவேயில்லை.

நிஷாந்தின் லூஸ் டாக்... நேரத்தை இனிமையாய் கழியச் செய்ய, சென்னை வந்து சேரும் நேரத்தில்,

''சரி... நிஷான்! எனக்கு... இன்னும் ரெண்டு மணி நேரத்தில கோயம்புத்தூர் ஃபிளைட்... நீ என்ன பண்ணப் போறே?'' என்று மைவிழி வினவ,

''என்ன கேள்வி இது? உன்னோடவே கோயம்புத்தூர் வரேன்... என்னோட மாமனாரை பார்க்கிறேன்... என்னோட முருகன்... அதான் என்னோட வில்லன்ட்ட டீல் பேசுறேன்... உன்னைத் தூக்குறேன்...'' என்றான் அவன்.

''என்னது எங்க வீட்டுக்கு வரியா? அதெல்லாம் வேணாம்! அப்பா ஏதாவது சொல்லுவாங்க!'' என்று பதறினாள் மைவிழி.

''என்ன சொல்லிடுவாரு? நேரா போனதும்... அவர் காலில விழுந்து, உங்க பொண்ணைக் கட்டி வைக்க மாமான்னு பாடிடுறேன்!'' என்றான் நிஷாந்த், சிரிப்புடன்

''விளையாட்டில்ல நிஷூ! அப்பாக்கு அவர் பார்த்த மாப்பிள்ளையைத் தான் நான் கல்யாணம் பண்ணிக் கணும்ன்னு ஆசை!'' என அவன் கவலை கொள்ள,

''அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்... ஓஜோ! நீ பேசாம இரு!'' என அவளைத் தேற்றினான் நிஷாந்த்.

''இல்ல நிஷான்...'' அவள் மீண்டும் ஆரம்பிக்க,

''ஷ்... சும்மா இரு ஓஜோ! எனக்கு தூக்கம் வருது...'' என்றவன், அவள் தோள் மீது சாய்ந்து, கண்ணை மூடிக் கொண்டான்.

''எவ்வளவு பெரிய பிரச்சனை கண்ணு முன்னாடி இருக்கு... எருமை மாடு மாதிரி தூங்குது பாரேன்!'' என்று எரிச்சலாய் வந்தபோதும், அவனது அலைஅலையான கேசம், கழுத்தில் உரசிச் சென்ற தினுசில், தன்னை மறந்து, அவனது முகத்தை வருடிக் கொடுத்தாள் மைவிழி.

சென்னை வந்து சேர்ந்த, கோயம்புத்தூர் செல்லும் விமானம் ஏறி விட்டிருந்தனர் இருவரும்.

ஊர் நெருங்க நெருங்க, மைவிழிகள் ஓர் சங்கடப் பேரலை எழுந்து, அவளைப் புரட்டிப் போட்டது!

''நிஷான்...'' என மெல்ல அழைத்தவளின் புயம் திரும்பியவனின் வாய் முழுக்க சமோசா.

''சமோசா சூப்பரா இருக்கு... ஓஜோ! உனக்கு வேணுமா?'' என்று வாய்க்குள் அதக்கிக் கொண்டு அவன் வினவ,

''உன்னை கொன்னுடுவேன் ராஸ்கல்! கொஞ்சமாவது பயமிருக்கா மேன் உனக்கு?''

''ஹே ஓஜோ! எதுக்கு பயம்... நா பார்த்துக்கிறேன் ஓஜோ!''

''ஆமா... உன்னைப் பார்த்துக்கவே உனக்கு குரு வேணும்! இதில... நீ என்னைப் பார்த்துக்கிறியாக்கும்! போடா!''

''ஹே குருவை மறந்தே போனேன் பாரேன்... இறங் கினதும் குருக்கு போன் பண்ணி ஐடியா கேட்கணும்!''

''என்னத்துக்கு ஐயா!?''

''எப்படி மாமனார் காலில் விழுந்து... பொண்ணைக் கரெக்ட் பண்றதுன்னு தான்'!'' என்று அவன் சளைக்காமல் சொல்ல,

''வேணாம்... அழுதுடுவேன்!'' என்று முகம் சுருக்கி னாள் மைவிழி.

''அச்சச்சோ... அழுவக் கூடாது! என் செல்லமில்ல...'' என்று கொஞ்சியவனின் கையைத் தட்டிவிட்டவள்,

''எனக்கு ஒண்ணு சொல்லு... உனக்கு ஸ்பானிஷ் தெரியுமா? அப்புறம் ஜெர்மன்... ஃபிரெஞ்சு... இதெல் லாம் தெரியுமா தெரியாதா?'' என்றாள் வேகமாய்.

''என்னது ஸ்பானிஷா? அடக்கடவுளே... ஓஜோங்கிற ஒரு வார்த்தையில என்னைய ஸ்பானிஷ் டீச்சர் ரேஞ் சுக்கு எடுத்திட்டுப் போயிட்டியே! எனக்கு... தமிழே செம கோளாறு... +2 ல கூட, இவன் தமிழைப் படிக்கிற துக்கு, நாலு மார்க்கை போட்டுப் போயிட்டே இருக்க லாம்ன்னு திருத்தின புண்ணியவான் நினைச்சதால நான் பாஸ் பண்ணினேன்... இல்லைன்னா அங்கேயே அவுட் ஆகியிருப்பேன்! இதில... ஸ்பானிஷ்... ஜெர்மன்... ஃபிரெஞ்சு வேற... கொடுமை! கொடுமை!'' என்று பெரிதாய் அதிர்ந்து போனான், நிஷாந்த்.

அதைவிட பெரிதாய் அதிர்ந்து போனாள் மைவிழி.

''ஹய்யோ... உனக்குத் தெரியாதா?'' என அதிர்ந்தவள்,

''சரி... இப்ப தெரியலைன்னா என்ன? இனிமேல் கத்துக்கோ! நீ... இந்த மூணு லாங்குவேஜும் கத்துக்கிட்ட பின்னாடி தான்... நம்ம கல்யாணம்!'' என்றாள் முடிவாய்!

''அடிப்பாவி! இப்படியொரு குண்டை போட்டுட்டியே? அப்படின்னா... எனக்கு நீ வேணாம்... ஓடிப்போ!'' என்று அவளைத் தள்ளிவிட்டான் நிஷாந்த்.

''டேய்... படார்ன்னு வேணாம்ன்னு சொல்லிட்டியே...''

''பின்னே... இதென்ன சினி ஸ்டோரியா... உனக்காக உயிரை விடுறேன்னு சொல்லி, இந்த ஃப்ளைட்ல இருந்து குதிக்கிறதுக்கு?''

''உயிரையா விடச் சொன்னேன்... ஜஸ்ட் ஒரு லாங்குவேஜ் தானே?''

''லூசா நீ? லாங்குவேஜ்... படிக்கிறது என்ன லட்டு சாப்பிடுற வேலைன்னு நினைச்சியா? இல்ல லக்கேஜ் தூக்குற வேலைன்னு நினைச்சியா? இப்ப... எங்க இருந்து லாங்குவேஜ் ப்ரோப்ளம் வந்துச்சு?'' என்றான் நிஷாந்த் ஆச்சரியமாய்.

''ஹ்ம்ம்... முருகன் சொன்னார்...'' என்றவளின் குரல் மெல்ல தேய்ந்து, லேசாய் சிணுங்கியது.

''அதானே பார்த்தேன்... யோவ் முருகா... எனக்கு ஜென்ம எதிரியா மாறிட்டு வரய்யா நீ! உன்கிட்ட தனியா தான் டீல் பண்ணனும் போல...'' என்று மேலே பார்த்து சொன்னவன்,

''இரு நான் டீலிங் முடிச்சிட்டு வந்துடுறேன்...'' என்று எழுந்து சென்றே விட்டான்.

சற்று நேரம் கழிச்சு, திரும்பி வந்தவன், ''டீல் ஓகே! ஆல் செட்!'' என்றான் பிரகாசமாய்.

''என்ன பேசினே?'' என்று மைவிழி கேட்க,

''லூசா நீ? அவரு என்ன... இந்த ஃப்ளைட்டோட பைலட்டுன்னு நினைச்சியா? ஃப்ளைட்டை நிறுத்தச் சொல்லி, ரெண்டு தம்மை போட்டு, சரி கட்டுறதுக்கு! சாமி... ஓஜோ... சாமி! அவர்ட்ட எல்லாம்... காவடி தூக்குறேன்... பால் அபிஷேகம் பண்றேன்... மொட்டை போடுறேன்னு தான் டீல் பேசணும்! நா... சிம்பிள் டீலா... சந்தனக்காப்பு செய்றேன்னு வேண்டிட்டு வந்திருக்கேன்! அவருக்கும் குளிர்ச்சி... நமக்கும் நிம்மதி!'' என்றான் தீவிரமாக.

''உன்னைய...'' என்று அவனை நாலு சாத்து சாத்தி எடுத்தவள்,

''சாமியாம் சாமி... இப்பத் தான் ஞானோதயம் வந்துச்சோ... ஆளைப் பாரு ஆளை...'' என்று சிரித்துக் கொண்டே, அவனை அடித்தாள்.

சண்டையும் சச்சரவுமாய், கோயம்புத்தூர் வந்து சேர்ந்தனர் இருவரும்.

''ஹய்யோ... அப்பா ஏர்போர்ட் வந்திருப்பாங்க... இப்ப என்ன செய்றது? உன்னை யாருன்னு கேட்டா என்ன சொல்றது?'' என்று மைவிழி புலம்பிக் கொண்டே வர,

நிஷாந்த் அதைப் பற்றியெல்லாம் கவலையே படாமல், லக்கேஜ் தூக்கும் வேலையில மும்முரமாய் இருந்தான்.

ஒருவழியாக, விமானநிலைய சம்பிரதாயங்கள் அனைத்தும் முடிந்து, வெளியே வந்தனர் இருவரும்.

மைவிழிக்கு லேசாய் கால்கள் பின்னுவது போலிருந்தது!

ஆனாலும் சமாளித்துக் கொண்டு, மெல்ல நடந்தவள்,

''வாங்க மாப்பிள்ளை... வாங்க... வாங்க...'' என்று உற்சாகமாய் அழைத்தபடி முன்னேறிய நடராஜனின் குரலில் திகைத்தாள்.

''அடக்கடவுளே... அந்தக் கண்ணனும் இந்த ஃப்ளைட்ல தான் வந்திருப்பானோ!'' என்ற எண்ணம் தோன்ற, விருட்டென தலையைத் திருப்பி, பின்னால் வரும் ஆட்களை அவள் நோட்டம் விட்ட நேரத்தில்,

''மாமா...'' என்ற நிஷாந்தின் குரல் ஒலித்தது.

''ஹ்ஹய்யையோ... இவன் வேற அப்பாவைப் போய் கட்டிப் பிடிச்சு... நிலவரத்தைக் கலவரம் ஆக்கிவிடுவான் போலவே!'' என்று பதறிக் கொண்டு திரும்பிய மைவிழி, அதிர்ந்து நின்றாள்.

பின்னே, இரண்டு ''N'' களும் ஒருவரை ஒருவர் ஆரத் தழுவிக் கொண்டு,

''மாமா...''

''மாப்பிள்ள...''

''மாமா...''

''மாப்பிள்ள...'' என்று மாறி மாறி ''கொஞ்சிக்'' கொண்டிருந்தனரே!

நொடியில், எல்லாம் விளங்கிப் போயிற்று மைவிழிக்கு!

''அடப்பாவிகளா... இப்படி ஏமாத்திட்டீங்களே!'' என்ற எண்ணம் ஓட,

''முருகா... நீயுமா? உனக்கு... சும்மாச்சுக்கும் லண்ட பழனின்னு பேரு வைக்கலை! உனக்கிருக்க லந்தை... பார்த்து... கரெக்ட்டா தான் பேரை வச்சிருக்காங்க! போ... மேன்... உன் கூட டூ! அதுவும்... என்ன எல்லாம்

சொன்னே... ஜெர்மன்... ஃபிரெஞ்சு... நல்லவேள சைனீஸ்... ஜப்பானீஸ் எல்லாம் சொல்லாம விட்டே! இந்த லூசுக்கு... தமிழே சரியா வரல! இதில ஸ்பானிஷ் வேற... முருகா ஆஆஆஆஆ!'' - பற்கள் நறநறவென கடிப்பட்டன.

சட்டென அவள் மனதில் தோன்றிய முருகனோ, ''எனக்கு ரொம்ப நாளா ஒரு விளையாட்டு விளையாடணும் போல உடம்பு பரபரத்துச்சு... நீயும் ஏகத்துக்கும் பேக்கா இருந்தியா... யூஸ் பண்ணிக்கிட்டேன்! இதில என்ன தப்பு?'' என்றான் அலட்சியமாய்.

''ஆமா இல்ல... எவ்வளவு பேக்கா இருந்திருக்கேன்...'' என்ற எண்ணம் தோன்ற,

நிஷாந்த் காதல் சொன்னது தொட்டு நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒன்றாய் கோர்த்துப் பார்த்ததில், தன்னை மட்டும் ஓர் அணியில் விட்டுவிட்டு, அனைவரும் வேறு அணியிலிருந்து கெக்கே... பிக்கே... என்று சிரித்தது போன்ற பிம்பம் தோன்றி, அவளை சிரிக்க வைத்தது!

ஆனாலும், ''ச்சை... ஒரு மூணு மாசமா எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்... ஆனா இவங்க! என்னை வச்சு காமெடி பண்ணியிருக்காங்க! என்ன தைரியம்! இந்த நிஷான் ஓகே... அதுவே ஒரு விளையாட்டுப் பிள்ளை! விவரம் பத்தாது! அப்பா கூட மேகம் ஆடிட்டாரே! அவரு... திக்கி திணறும் போதே நான் சுதாரிச்சு இருக்கணும்!'' என்று பற்பல எண்ணங்களின் மத்தியில் கோபமும் கலந்து இருந்தது.

எஞ்சியிருந்த கோபத்தை, தக்க வைத்துக் கொண்டு, இன்னமும் பாசம் பாராட்டிக் கொண்டிருந்த மாமனிடமும்

மருமகனிடமும் சென்றவள், ''ஹலோ! போதும் உங்க... கொஞ்சல்! தாங்க முடியல!'' என்றாள் சிறு எரிச்சலுடன்.

''வாடா மைய்யு!'' என்று அப்போது தான் பெண்ணை வரவேற்ற தந்தையை முறைத்தாள் மைவிழி.

நிஷாந்தோ, ''ஒரு வழியா... உங்க பொண்ணுக்கு பல்ப் எரிஞ்சிடுச்சு போல! ஆனாலும்... சரியான டியூப் லைட் மாமா!'' என்று சிரித்தான்!

ஏதோ பெரிய நகைச்சுவையைக் கேட்டது போல், நடராஜன் ''ஹ்ஹஹஹஹா'' என்று பெரும் குரலெடுத்து சிரிக்க,

''போதும்... ரொம்ப சிரிக்க வேணாம்!'' என்று நொடித்தாள் மகள்.

''அப்புறம் சிரிக்காம என்ன செய்வாங்க? ஒரு சப்ப மேட்டரை வச்சு உன்னை மூணு மாசம் குழப்ப முடியும்ன்னா நீ ஒரு லூசு தானே?'' என்றான் நிஷாந்த், கை தட்டி சிரித்தபடியே.

''வேணாம்... நானே கொலைவெறில இருக்கேன்! எல்லாம் நீ தான் மேன்... பிளான் பண்ணி இருப்பே... எல்லாம் உன் வேலையா தான் இருக்கும்... எல்லாரையும் உன் பக்கம் இழுத்துக்கிட்டு... ராஸ்கல்! லூசு! பேக்கு! கழுத! எருமை மாடு! போடா...'' என்று கத்தியவளுக்கு, இடையிலேயே சிரிப்பு வந்துவிட்ட போதும், நிஷாந்தை அடிக்காமல் இருக்க முடியவில்லை.

கையிலிருந்த லாப்டாப் பையினால் அவனை நன்றாக மோதி எடுத்தவள், ''இரு மவனே... உன்னை பழி வாங்குற விதத்தில வாங்கிக்கிறேன்!'' என்றாள் செல்ல வன்மத்துடன்.

பாவம், நிஷாந்த் என்ற அறியா பையனுக்கு அந்த ''பழி வாங்குற விதம்'' புரியவில்லை! புரிந்த முருகனுக்கோ, ''ப்ச்... பையன் பாவம்! இந்த விஷயத்தில்... அவன் கையே அவனுக்கு உதவி! நாம... உதவிக்கரம் நீட்டினா... மைவிழி அடிக்கிறாளோ இல்லையே... வள்ளி மொத்தி எடுத்துடுவா!'' என்று தன் பி.எம்.டபிள்யூவிற்கு பெட்ரோல் ஊற்றிக் கொண்டு பறந்தே போனார்!

''ஐயோ... பாவம்ம்மா மாப்பிள்ளை... அடிக்காதே!'' என்று புதிதாய் வந்த மாப்பிள்ளைக்கு பரிந்து கொண்டு வந்தார் நடராஜன்.

அவர் மட்டுமல்ல, சிவகாமியும் அமிர்தமும் அவனைத் தாங்கிய தாங்கலில் மைவிழிக்கு வராத கோபம் கூட வரும் போலிருந்தது.

அதுவும், இவன் ''பேபி டார்லிங்...'' என்று அமுதம் பாட்டியைக் கொஞ்சுவதும்,

பதிலுக்கு அவர், ''கண்ணா பையா...'' என்று கொஞ்சுவதும், சகிக்கவில்லை.

இது போதாதென்று, இருவரும் முறுக்கு சுட்ட அழகை, கோயம்புத்தூரே பேசியது!

இவர் ஒரு புறம் என்றால், ''மாப்பிள்ளைக்கு நெத்திலி மீன் தான் பிடிக்குமாம்... அது ஒரு கிலோ வாங்கிட்டு வாங்க...'' என்று தந்தையை ஏவிக் கொண்டிருந்த தாய், ஒரு பக்கம் அவள் வயிற்றெரிச்சலை கொட்டிக் கொண்டார்.

சரி பெண்கள் தான் போகிறார்கள் என்று பார்த்தால், இந்த சாண்டி பையன்... நிஷானுக்கு காவடி தூக்காத குறை தான்!

கல்லூரிக்கு மட்டம் போட்டுவிட்டு, ''அத்தான்... அத்தான்...'' என்று அவன் பின்னேயே சுற்றியவன்,

''இன்னைக்கு பரூக்ஃபீல்ட் மாலில உங்களை என் னோட பிரண்ட்ஸுக்கு இன்றோ பண்றேன்னு சொல்லி யிருக்கேன் அத்தான்! ப்ளீஸ் போலாமா? அப்படியே ஒரு ட்ரீட்!'' என அவனைத் தள்ளிக் கொண்டு போனான்.

''அவன் அலும்பு தாங்கலையே!'' என்று மைவிழியின் புலம்பலுக்கு இரங்கியோ என்னவோ,

''நாளைக்கு காலையில குரு... கீர்த்து... அப்பா எல்லாரும் வராங்க!'' என்று அறிவித்தான் நிஷாந்த்.

''அப்பா... அய்யாவுக்கு இப்ப தான் நான் இருக்கிறதே கண்ணில் பட்டுச்சு போல!'' என்று மைவிழி அவனைப் பிடித்து நிறத்த,

''அச்சச்சோ! அடிக்கப் போறியா... நா பாவம்! சரியா?'' என்று அவள் கையிலிருந்து நழுவியவன்,

''நானும் பேபி டார்லிங்கும்... இன்னைக்கு மைசூர் பாகு செய்யப் போறோம்! நாளைக்கு கீர்த்து வரா இல்ல... அவளுக்கு மைசூர் பாகு தான் ரொம்பப் பிடிக்கும்ன்னு சொன்னேனா... அதான் பேபி டார்லிங் செய்யலாம்ன்னு சொன்னுச்சு!'' என்று அங்கிருந்து நகர்ந்தான்.

''ஆமா... பெரிய மைசூர் பாகு... நா வேணும்ன்னா பத்து கிலோ மைசூர் பாகு வாங்கித் தரேன்! வாங்க இங்க!'' என்று மைவிழி மீண்டும் அழைக்க,

''பேபி டார்லிங்... உன்னோட மைசூர் பாகு நல்லா இருக்காதாம்... அதனால கடையில வாங்கித் தரேன்னு ஓஜோ சொல்றா...'' என்று நிஷாந்த் ஆரம்பிக்க,

''அடப்பாவி... ஏற்கனவே என்னைய கண்டுக்க மாட் டேங்கிறாங்க... இதில இப்படி வேற கோர்த்து விட்டுட்டு திரியாதே!'' என்று கை எடுத்துக் கும்பிட்டவள்,

''நீ போ சாமி... நா எதுவும் கேட்கல!'' என்றாள் அவனைத் தள்ளிவிட்டபடி.

''அதெப்படி... நீ போன்னு சொன்னா நா போக முடியும்! அதெல்லாம் முடியாது!'' என்றவன், சட்டென அவளை இழுத்து, பேசத் தொடங்கிய உதடுகளுக்கு உதடுகளையே பரிசாக்கினான்!

சுற்று புறம் மறந்து, அப்படியே உறைந்து நின்றாள் மைவிழி!

நிஷாந்த், தன் உதட்டின் வழியே அவள் உதடு புகுந்து, உயிர் கலக்க எடுத்துக் கொண்ட நொடிகள்... நீண்டு கொண்டே சென்றன!

ஓர் உதட்டு முத்தத்தில், உடம்பில எத்தனையோ கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும்! இங்கேயோ... ஏகப்பட்ட மின்சாரம் உற்பத்தியாகி, விளக்கின்றி தத்தளித்த காதல் வாழ்க்கைக்கு விளக்கேற்றி வைத்தது!

''அளவிற்கு மீறினால் அமுதமும் நஞ்சு!'' என்பது காதலர்கள் இடையே பரிமாறப்படும் இதழ் அமுதத் திற்கு, உரித்ததில்லை போலும்!

அளவு மீற... மீற... அமுதத்தின் தித்திப்பு கூடிக் கொண்டே சென்றது!

ஒரு கட்டத்தில், மூச்சு முட்டுவது போல் மைவிழி உணர்ந்த நேரம், நிஷாந்தின் உதடுகள் விடைபெற்றன!

உதடுகள் விடை பெற்ற போதும், கைகள் விடைபெற எண்ணவே இல்லை!

அவளது இடுப்பை வளைத்திருந்த கரங்கள், மெல்ல மெல்ல தன் ஆதிக்கத்தைக் காட்டத் தொடங்க,

''நிஷான்... வேணாம்...'' என்ற மைவிழியின் குரல், காதல் போதையில் சின்னதாய் ஒலித்தது!

ஆனால் அவர்களை முழுதாய் தெளிய வைக்கவென, அமுதத்தின் குரல் ''கண்ணா பையா... எங்க இருக்கே? மைசூர் பாகுக்கு... மாவு பிசைவோமா?'' என ஒலித்தது!

சட்டென ஓடிப் போனான், நிஷாந்த்!

மைவிழி அதே இடத்திலேயே சமைந்து நின்றாள்! அவனது துள்ளலை ரசித்தபடி!

அவளது கற்பனையில்... முதலில் உச்சந்தலை... பின்னர் நெற்றி... கண்... கன்னம்... மூக்கு... காது... என்று வளம் வந்த பிறகே, உதட்டை அடையும் அவனது உதடுகள்!

ஆனால், இந்தக் கள்வன்! எல்லாமே... அதிரடி தான்! காதலைச் சொன்னவன்... நேராய் கல்யாணத்துக்கு நாள் குறித்தது போல், எல்லாமே நேரடியான காரியம் தான்! எதற்கும்... சுற்றி வளைத்த வழியே இல்லை!

அந்த முதல் முத்தம், அவளை ஓர் மாய உலகிற்கு இட்டுச் சென்றிருக்க, அடுத்த நாள் அரவாமுதன்... கிருஷ்ணன்... கீர்த்தி என்று அனைவரும் வந்த பின்னர் தான் கலைந்தது!

அதுவும், கிருஷ்ணன் மைவிழியைப் பார்த்து ''உன்னைப் போய்... ஐன்ஸ்டீன் பீஸ்ன்னு நினைச்ச என்னை... நல்லா பாட்டா செருப்பால அடிக்கணும்!'' என்று சிரிக்கவும், மாயமாவது மண்ணாவது? நிஷாந்தின் மீது கோபம் மட்டுமே எஞ்சி நின்றது!

''ஈஈஈ...'' என்று இழித்துவிட்டு கீர்த்தியிடம் சென்றவள், ''நீங்களுமா கீர்த்திக்கா? ச்சை... என்னை ஃபூல் பண்ணிட்டீங்க'' என்றாள் சிணுங்கலாய்.

''இல்லடா மைய்யு! இவங்க தான்... சொல்ல வேணாம் சொன்னாங்க... நா உன்னைப் பார்த்தா ஏதாவது உளறிடு வேன்னு பயந்து போய், உனக்கு போன் கூட பண்ணக் கூடாது சொல்லிட்டாங்க மைய்யு! ப்ராமிஸ்டா! கோச் சுக்காதே!'' என்று கீர்த்து கெஞ்ச,

''இட்ஸ் ஓகே!'' என்று பதிலுக்கு கொஞ்சினாள் மைவிழி.

அதன் பின்னர், மைவிழியை விடவும்... நிஷாந்தை விடவும்... கீர்த்தியின் தாய்மை மீது அதிக அக்கறை எடுக்கப் பட்டு, அவளே அந்த வீட்டின் ராணியாகிப் போனாள்.

இதனிடையே, கல்யாண வேலைகளும் ஜரூராய் நடந்தேற, வெள்ளியன்று திருமண நாளும் இனிதே விடிந்தது!

மைவிழியும், ''இத்தனை நாளு... என்னைப் படுத்தினதுக்கு எல்லாம் சேர்த்து வச்சு உனக்கு இருக்குடி!'' என்ற எண்ணத்துடன், நிஷாந்தைப் பழிவாங்கும் படலத்திற்கான திட்டத்தை, ஓர் கையேயியின் சாமர்த்தியத்துடன் தீட்டி முடித்தாள்!

பூச்சரத்தில் கோர்க்கப்படும் அடுத்த பூ - பல்பு! ஹஹ்ஹா! முத்தம்!



15

கல்யாண நாளின் காலை!

''குரு... எப்படி குரு உங்களுக்கு மட்டும் வேஷ்டி இடுப்பில நிக்குது...'' என்ற நிஷாந்த், கிருஷ்ணனின் வேஷ்டியை இழுத்துப் பார்க்க,

''அடிங்க! நானே பெல்ட் போட்டு அதை நிக்க வச்சிருக்கேன்! உருவி விட்டுறாதேடா எருமை! ஒழுங்கா

நில்லு!'' என மச்சினனுக்கு வேஷ்டி அணிவித்துக் கொண்டிருந்தான் அவன்.

அரை மணி நேரம் போராடியும், வேஷ்டி இடுப்பில் நிற்பேனா என்று ஆட்டம் காட்டிக் கொண்டிருந்தது!

''என்ன நிஷான்... ரெடியா? இன்னும் என்ன கண்ணா பண்றே?'' என்றபடியே வந்தார் அரவாமுதன்.

''நா ரெடிப்பா... ஆனா என்னோட வேட்டி தான் ரெடி இல்ல...'' என்றான் நிஷாந்த், அவசரமாய்.

சிரிப்பு வந்தபோதும், ''சும்மா விளையாடிட்டு இருக்காத நிஷாந்த்... லேட் ஆகிட்டு இருக்கு! நம்ம சொந்தக் காரங்க எல்லாரும் கோவில் போய்ட்டாங்க... மைவிழி வீட்டில இருந்தும் கிளம்பியாச்சாம்! நீ என்னன்னா...'' என்றார் அவர் கோபமாக.

கல்யாணத்திற்கு முதல் நாளே, மைவிழி வீட்டில் தங்கியிருந்த அரவாமுதன் வீட்டினர் மண்டபத்திற்கு வந்து விட்டிருந்தனர்.

கோவிலில் கல்யாணத்தை முடித்துக் கொண்டு, மண்டபத்தில் மற்ற சம்பிரதாயங்களை வைத்துக் கொள்வதே திட்டம்! மாலை வரவேற்பும் மண்டபத்திலேயே!

முஹூர்த்தத்தை ஏழு மணிக்கு வைத்துக் கொண்டு, ஆறே கால் வரையிலும் வேட்டியுடனே போராடிக் கொண்டிருந்தால், மைவிழியுடன் அங்கே போராட யார் பேசுவது? புதிதாக ஆளா பிடிக்க முடியும்?

நேரத்தின் அவசரம் உணர்ந்தவராய், 'நிஷான்... சீக்கிரம்!' என்று மீண்டும் அதட்டினார்.

''மிஸ்டர்.ஹனி! உங்களோட அதட்டலுக்கு நா வேணும்ன்னா பயப்படுவேன்... ஆனா வேஷ்டி

பயப்படாது! தெரியுமோ? வேணும்ன்னா அதுகிட்ட ட்ரை பண்ணிப் பாருங்க!'' என்ற நிஷாந்த்,

''குரு... ஹனிகிட்ட கொடுங்க! அவருக்காவது இந்த வேட்டி அடங்குதான்னு பார்ப்போம்!'' என்றான் கிருஷ்ணனிடம்.

''தள்ளு கிருஷ்ணா... இவனை...'' என்று அரவாமுதன், அடுத்த ஐந்தாவது நிமிடம், வேஷ்டியை நிஷாந்தின் இடுப்பில் நிற்க வைக்கும் காரியத்தை சாதித்து முடித்தார்.

''ஹே சூப்பர் ஹனி! வேட்டியைக் கூட பயமுறுத்தி வச்சிருக்கீங்களே!'' என்று நிஷாந்த் கூவ,

''நீ தான் சொல்றது கேட்காத கொண்டி மாடா திரியுறே... அதாவது கேட்குதேன்னு சந்தோஷப்படு... கண்ணா!'' என்றவர்,

''இனியும் சட்டையோட ஒரு சண்டை போடாம... சீக்கிரம் வந்து சேரு!'' என்றபடியே வெளியே சென்றார்.

''ப்ப்ப்பூ...'' என வாயில் கை வைத்து சிரிப்பை, கார்ப்பெரேஷன் பைப்பை போல் வெளியிட்டுக் கொண்டிருந்த கிருஷ்ணனும், பிரவீனும் நிஷாந்தை வெளியே கிளப்பி கூட்டி வந்தனர்.

சரியாக ஆறே முக்கால் மணிக்கு, கோவிலுக்கு வந்து சேர்ந்தார் மாப்பிள்ளை! அதான் நிஷாந்த்!

'திருமதி' என்ற பட்டத்தைத் தனக்கு வழங்கப் போகும், பட்டமளிப்பு விழாவிற்கு, செல்வி.மைவிழி வெகு முன்னதாகவே வந்திருந்தாள்.

மயில் கழுத்து வண்ணச் சேலையில், நிஜ மயில் போலவே தோகை விரித்து ஆடியவளுக்கு, மயில்

கழுத்து உடலும்... ஜரிகை கையுமாய் இருந்த முழுக்கை ரவிக்கை, நிஜ தோகையாகவே காட்சியளித்தது!

யாருமே, இந்த சேலைக்கு ஏன் முழுக்கை சட்டை போட்டிருக்கிறாய் என்று கேட்கத் தோன்றாத அளவிற்கு, அந்த சட்டையின் வேலைப்பாடு இருந்தது! இந்த சேலைக்கு முழுக்கை ப்ளவுஸ் தான் அழகு என்று அடித்து சொல்லும் அளவிற்கு!

மைவிழி, தன் பழைய வாழ்க்கையின் மிச்ச சொச்சங்களை நினைவு படுத்தாத நாளாக, இந்த நாள் அமைய வேண்டும் என்று பிரயத்தனப்பட்டதன் விளைவோ என்னவோ... அவளது அலங்காரத்தைப் பற்றி யாருமே கேட்கவில்லை! யார் கண்ணையும் அது உறுத்தவே இல்லை!

அங்கிருந்த அனைவருமே, சந்தோசம் என்ற உணர்வை மட்டும் நெஞ்சில் தாங்கி நிற்க, நிஷாந்த் மைவிழிக்கு "திருமதி" எனும் பட்டத்தை, இறைவன் எனும் சபாநாயகன் முன்னே பரிசளித்தான்! அரசியல் பட்டங்களை போல் அல்லாமல், இது பறிக்கப்படாத... மாசுபடாத... காசு கொடுத்து வாங்காத,

அவளுமே, "இவன் என் செல்லக்கணவன்!" என்ற அந்தஸ்தை, முருகனின் திருவடியைத் தொழுது, முழுமனதாய் நிஷாந்திற்குக் கொடுத்தாள்!

மைவிழியின் மயில் கழுத்தில் தாலியை அணிவிப்பதற்காய், அவள் முகத்தருகே குனிந்தவன், தாலியை அணிவித்த கையுடன், அவள் முகத்தை இரு கைகளிலும் ஏந்தி, அழுத்தமாய் ஓர் முத்தத்தை அவளது கன்னத்தில் பதித்த பின்னரே நிமிர்ந்தான்.

அவ்வளவு தான், மைவிழியின் திட்டமெல்லாம் அதோ கதியாய் போனது! பின்னே, இன்ப மயக்கத்திற்கு அன்றோ அந்த முத்தம் அவளை இட்டுச் சென்றிருந்தது!

மேலை நாட்டு பழக்கமா... இல்லை அவளது செந்தளிர் மேனி செய்த மாற்றமா... எதுவென்றும் தெரியவில்லை! நிஷாந்தால் தன்னை அடக்கிவைக்க முடியவில்லை!

வேகமாய்... அதே சமயம் அழுத்தமாய் பதிந்த அவனது முத்தத்திற்கு, பலத்த கரகோஷம் பரிசாய் வர, மைவிழி தான் வெட்கக் கடலில் மூழ்கவும் முடியாமல், மிதக்கவும் முடியாமல் தத்தளித்து கொண்டிருந்தாள்.

"என்ன நிஷான் இது..." என்று உதடுகள் சிணுங்க, அவளது கண்கள் அவனை முறைத்தன.

"ஹே... நீ ரொம்ப அழகா இருக்கே ஓஜோ! அதான்... ஜஸ்ட் அ டோக்கன் ஆஃப் லவ்!" என்றான் நிஷாந்த், அவளிடமிருந்து விலகாத பார்வையுடன்.

மைவிழிக்கு அவனது பார்வையைத் தாங்கி நிற்கும் திராணியே இல்லை! அப்படியே, அவன் கைப்பிடித்துக் கொண்டு சென்று விடமாட்டோமா என்றிருந்தது! அவன் அழைத்துப் போகும் எந்த உலகத்திற்கும், மைவிழி செல்லத் தயாராக இருந்தாள்! அது... காதல் உலகமாய் இருந்தாலும் சரி... தாம்பத்திய உலகமாய் இருந்தாலும் சரி!

"இப்படி ஒரு முத்தத்தில் கவுந்துப்புட்டியே மைய்யு!" என்று உள்ளிருந்து ஓர் குரல் கேட்க,

"பின்னே... ஊரே கூடியிருக்கும் போது... எனக்காக... என்னோட அழகுக்காக மட்டுமே கொடுக்கப்பட்ட

முத்தத்தை நான் எப்படி மறுப்பது? மறப்பது?'' என்று மனம், அக்குரலுடன் சண்டையிட்டது!

மைவிழி, நிஷாந்த் பின்னி வைத்திருந்த மாய வலைக்குள் சிக்கிக் கொண்டிருக்க, நிஷாந்தோ கர்ம சிரத்தையாய் ஐயர் சொல்லச் சொன்ன மந்திரங்களைக் கூறிக் கொண்டிருந்தான்.

பார்க்கும் அனைவருக்கும், அவனது கடமையுணர்வைக் கண்டு அப்படியொரு பெருமிதம்!

ஐயரின் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு, அவர் பக்கமாய் லேசாய் சாய்ந்து, அவர் சொல்லச் சொல்ல, இவனும் மந்திரங்களைக் கூறிக் கொண்டிருந்த அழகே அழகு!

அரவாமுதனே, ''நிஷானுக்கு... இவ்வளவு பொறுமையா? எனக்கே ஒரு ஆச்சரியமா இருக்கு!!'' என்று வியக்கும் அளவிற்கு, பையன் சமத்தே உருவாய் இருந்தான்!

ஆனால், கிருஷ்ணனோ மைவிழிக்கும் நிஷானுக்கும் நடுவே வந்து, ''டேய்... அவரு என்ன சொல்றாரு... நீ என்ன சொல்றே?'' என்று லேசாய் காதை கடிக்க,

அப்போது தான், மைவிழியே நிஷாந்தின் உதட்டசைவுகளை கவனித்தாள்.

மாப்பிள்ளை சாரின் உதடுகள், ''a b c d'' என்ற ஆங்கில அகர வரிசையை, லயத்துடன் ஒலித்துக் கொண்டிருந்தன.

மைவிழியால் சிரிப்பை அடக்கமுடியவில்லை.

கிருஷ்ணன் யாருக்கும் தெரியாத வண்ணம், நிஷாந்தின் முதுகில் ஓர் அடி வைத்து, ''ஒழுங்கா சொல்லு நிஷான்!'' என்றான் கண்டிப்புடன்.

''சும்மா இருங்க குரு! இவ என்னடான்னா என்னைய ஸ்பானிஷ் கத்துக்கோ... ஃபிரெஞ்சு கத்திக்கோங்கிறா... நீங்க என்னடான்னா என்னை சமஸ்கிருதம் கத்துக்குச் சொல்றீங்க? என்னைப் பார்த்தா உங்களுக்கு என்ன ரிமோட் கார் மாதிரி இருக்கா?'' என்று சிணுங்கலாய் கூறியவன்,

''தமிழ் படத்தில நடிக்கிற பாம்பே ஹீரோயின்ஸ் எல்லாரும்... இப்படி தான் டயலாக் பேசுவாங்க... தெரியுமா!? டப்பிங்ல அட்ஜஸ்ட் பண்ணிப்பாங்க!'' எனக் கூறி சிறு இடைவெளி விட்டுவிட்டு,

''எனக்கு... நீங்க டப்பிங் பேசிடுங்க... குரு!'' என்றான் தீவிரமாய்.

''உன்னையெல்லாம்!!!!'' என்று பல்லைக் கடித்த கிருஷ்ணன், ''திருத்தவே முடியாது!'' என்ற வார்த்தையுடன், வாக்கியத்தை நிறைவு செய்துவிட்டு, அங்கிருந்து நகர்ந்தான்.

''அதான் தெரியுதுல்ல! அப்புறம் ஏன் ட்ரை பண்றீங்க?'' என்று நிஷாந்தும், எதிர்த்து வார்த்தையாட,

''கொஞ்சம் நேரம்... அட்லீஸ்ட் வாயை மூடிட்டு, வேலையைப் பாருங்க!'' என்று அதட்டுவது மைவிழியின் முறையாகிற்று!

அதன் பின்னர், ஐயர் மந்திரத்துடனும்... நிஷாந்த் ''a b c d'' யுடனும் ஐக்கியம் ஆகிவிட, மண்டபத்தில் சிறு சலசலப்பு எழுந்தது.

மைவிழி, கண்ணைச் சுழற்றி என்னவென்று நோட்டம் பிட, ''குருவோட அப்பா-அம்மா வராங்க!'' என்றான் நிஷாந்த், கிசுகிசுப்பாய்.

இதுநாள் வரையிலும், கிருஷ்ணனின் குடும்பம் பற்றிய பேச்சு எழுந்ததே இல்லை என்பதால், மைவிழிக்கு அவனது பெற்றோரின் வருகை ஆச்சரியமாய் இருந்தது!

"அண்ணாக்கு அப்பா-அம்மா இருக்காங்களா?" என்று மைவிழி ஆச்சரியப்பட,

"அவரு... என்ன உன்னோட முருகனா? அப்பாவோட நெற்றிக்கண்ணில இருந்து பிறக்க?" என்று கேட்டவன், "குரு... தான் அவங்க வீட்டில மூத்த பையன்!" என்றான்.

"ஹே! ஆனா..." என்று இழுத்த மைவிழியின் விழிகளே, கேள்வியைக் கேட்டுவிட,

"என்ன சொல்றது? பார்க்கிறே இல்ல... அவங்க அப்பா-அம்மா எவ்வளவு சிவப்பா இருக்காங்கன்னு... குரு அப்படியில்ல..."

"என்ன சொல்றீங்க? கலர் வச்சு... எனக்கு புரியலையே!" என்ற மைவிழிக்கு சுத்தமாகவே புரியவில்லை.

"இல்ல ஓஜோ! எப்பவுமே... குருவை நீ கருப்பு... உனக்கு பெர்சனாலிட்டி இல்ல... அப்படியிப்படின்னு அவங்க அப்பா டிஸ்கரேஜ் பண்ணிட்டே இருப்பார் போல..."

"போதா குறைக்கு... அவருக்கு ஒரு தம்பி! அந்தப் பையன் வயித்தில இருக்கும் போது, அவங்க அம்மா குழந்தை வேணாம்ன்னு நினைச்சு எந்த மருந்தையோ சாப்பிட்டு இருக்காங்க! அந்த மருந்து சரியில்லையோ என்னவோ... குழந்தை இறந்து போகல! ஆனா... அந்தப் பையனோட ஒரு கை ஷார்ட்டா ஆகிடுச்சு! சோ... அவன் மேல இவங்களுக்கு பயங்கர பாசம்! அது எல்லாம் சேர்ந்து, சொந்த வீட்டிலேயே... ஒரு வேண்டாத விருந்தாளி மாதிரி இருந்திருக்கார், குரு!"

"அச்சோ பாவம்!"

"ஹ்ம்ம்... எந்தளவுக்குன்னா... குரு திரட் ஸ்டான்டர்ட்ல இருந்தே ஹாஸ்டல்ல தான் வளர்ந்தார்! ஏன் தெரியுமா? பெரிய பையன் அங்கேயே இருந்தா... சின்னப் பையனுக்கு அண்ணனுக்கு கை நல்லா இருக்கு... நமக்கு தான் சரியில்லைங்கிற தாழ்வு மனப்பான்மை வந்திரும்ன்னு குருவை வீட்டுக்கே வர விடமாட்டாங்களாம்!"

"இதென்ன கொடுமை? சின்னப் பையனை இவ்வளவு நினைச்சவங்க... பெரிய பையனோட மனசைப் புரிஞ்சுக்கவே இல்லையா?"

"தெரியல! பட்... குரு பயங்கர அப்செட்... அப்பா - அம்மான்னாலே ஒரு வெறுப்பு! சின்ன வயசு தானே... அவருக்குமே வீட்டுக்குப் போக இஷ்டமில்லை!"

"ஹ்ம்ம்... அப்புறம் எப்படி..."

"அப்புறம் எப்படி... கீர்த்துவை கல்யாணம் பண்ணாருன்னு கேட்கிறியா?" என்றான் நிஷாந்த், அவள் மனதைப் படித்து,

"ஆம்" என்பது போல், மைவிழி புன்னகை புரியவும், "இதுக்கு... நிஷாந்த்... தி கிரேட் தான் காரணம்" என்றான் காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு.

மலர்ந்த முகத்தில், புருவத்தை மட்டும் வளைத்து "எப்படி?" என்று மைவிழி கேட்க,

'நா பி.டெக் படிச்சேன்ல..." என அவன் ஆரம்பிக்க,

"அய்யயோ... உங்களைப் போயா இன்ஜினியரிங் காலேஜ்ல சேர்த்துக்கிட்டானுங்க! லூசு பயலுங்க!" என்றாள் மைவிழி, நக்கலாய்.

"ஹஹஹா!" என்று சிரித்த நிஷாந்த்,

"எனக்குமே பல காலமா அந்த டவுட் உண்டு... பட்... அந்த காலேஜ்ல சேர்ந்ததால தான் குரு எங்களுக்குக் கிடைச்சார்" என்றான் சட்டென, உணர்ச்சிப் பூர்வமாய் மாறி.

மைவிழி விழி விரித்துப் பார்த்துக் கொண்டிருக்க,

"குரு... என்னோட காலேஜ்ல லெக்சரரா இருந்தார்... உனக்குத் தெரியும் தானே... அம்மா இறந்ததில இருந்து, நான் ரொம்ப மாறிட்டேன்... மாறிட்டேன்னா... ஹ்ம்ம் எப்படி தெரியுமா... பைத்தியம் மாதிரியே இருப்பேன்... படிப்பெல்லாம் வரும்... ஆனா யார்கிட்டயும் பேச மாட்டேன்... ஒரு கழண்ட கேஸ்ன்னு வச்சுக்கோயேன்..."

"குருக்கு... என்னைப் பார்த்ததும், ஒரு பல்ப் போல! இந்த லவ் லந்தா... மணி அடிக்கும்... பல்ப் எரியும்ன்னு சொல்லுவாங்களே! அப்படி... ஒரே இனத்தைப் பார்த்த சந்தேஷம்!"

"கொஞ்சம்... கொஞ்சமா என்னோட கூட்டுக்குள்ள இருந்து... என்னை வெளிய கொண்டு வந்தார்! அதை எல்லாம் விலாவரியா சொன்னா... தனியா ஒரு கதை எழுதணும்! சோ... லெட்ஸ் லீவ் இட்! கிட்டத்தட்ட... என்னை தத்து எடுத்துக்கிட்டாரு வச்சுக்கோயேன்!"

"ஒரு சின்ன வட்டத்துக்குள்ள இருந்த என்னை... ஒரு ரோலர் கோஸ்டர் ரைட்ல ஏத்தின மாதிரி வெளிய கொண்டு வந்தார்..." என்றவனின் அதரங்கள், புன்னகையிலிருந்து சிரிப்புக்கு மாறின.

அதுவும், மலர்ந்த சிரிப்பாய்... மைவிழியை அது மயக்க,

"என்ன சிரிப்பு?" என்றவளின் பார்வை, அவனது உதட்டிலேயே தொக்கி நின்றது!

அவனோ, அதை கவனியாமல் "எனக்கு நல்லது பண்றேன்னு நினைச்சு... அவருக்கு அவரு ஆப்பு வச்சுக்கிட்டதை நினைச்சா... ஒரே சிப்பு சிப்பா வருது!" என்றான் நிஷாந்த், இன்னமும் அதிகமாய் சிரித்து.

"புரியலையே!?" என்று மைவிழி தலை சரிக்க,

"இல்ல ஓஜோ! அவரால தான்... நா இவ்வளவு வாயாடுறேன்! ஆனா... அதுவே... அவருக்கு ஆப்பாகிடுச்சு இல்ல! இப்ப கூட... என்னை ஒண்ணும் செய்ய முடியாம... உன்னைத் திருத்த முடியாதுன்னு சொல்லிட்டாரு பாரேன்! பாவம்... குரு! செல்ப் ஆப்பு வச்சுக்கிறதில மன்னன்!" என்றான் பொங்கிப் பெறுகிற சிரிப்புடன்.

"பெரிய கண்டுபிடிப்பு!" என்று பழிப்பு காட்டியவள்,

"போதும் சிரிச்சது... எங்க அண்ணனுக்கு அஸிஸ்டென்டா, தான் என்னை முருகன் அனுப்பியிருக்கார்! தெரிஞ்சுக்கோங்க! முதல் வேலையா... அவரைக் கிண்டல் பண்ற இந்த வாயை... அப்படியே... இழுத்து வச்சு..." என்று மிரட்டியவள்,

"ஒரு லிப்-லாக் பண்ணிடுவியா? அச்சச்சோ! அப்பேற்பட்ட ரௌடியா நீ? டூ பாட்! டூ பாட்! நிஷானுக்கு இருக்கிறதே ஒரு வாய்... அதையும் நீ லாக் பண்ணி வச்சுக்கிட்டா, அவன் என்ன செய்வான்? பாவம்!" என்ற நிஷாந்தின் பேச்சில், செக்கச் சிவந்து போனாள்.

"கொஞ்சம் கூட... வெட்கமே இல்லாம..." என்று எரிச்சல் வந்த போதும், அது இன்ப எரிச்சலாய் தான் இருந்தது அவளுக்கு!

அவளது வெட்கத்தை ஓர் சுவாரஸ்யத்துடன் நிஷாந்த் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, ''நிஷான்... அத்தை-மாமாகிட்ட ஆசீர்வாதம் வாங்கிக்கோங்கப்பா!'' என்று கிருஷ்ணனின் பெற்றோரை அழைத்து வந்தார் அரவாமுதன்.

முகத்தில் சிறு இறுக்கத்துடன் நின்றிருந்தவர்களின் கால்களில், மணமக்கள் இருவரும் பணிந்து எழ, ஒரு கவரைக் கொடுத்துவிட்டு அவர்கள் அங்கிருந்து நகர்ந்தனர்.

வேகமாய் நடந்த அவர்கள் பின்னே ஓடிய கீர்த்தி, ''மண்டபத்திற்கு வந்துட்டு... சாப்பிட்டு போலாம் அத்தை!'' என்று கூறுவது கேட்க,

கிருஷ்ணனைத் தேடியது மைவிழியின் கண்கள்.

பெற்றோர் நின்றிருந்த இடத்திற்கு, எதிர்ப்புறமாய் நின்றிருந்தான் அவன்!

கண்களில் சிறு வலி தெரிய, பெற்றோரின் பின்னே செல்லும் மனைவியையே தொடர்ந்தன அவன் விழிகள்!

மைவிழிக்கு மனமே பாரமாய் போய்விட்டது!

எப்படிப் பட்ட உலகமிது?

தாயின் மடி தேடும் வயதில், ஒருவனின் தாயைப் பறித்துக் கொண்டது!

தாய் இருந்தும், அவளது மடி கிடைக்கா ஏக்கத்தில் ஒருவனை தவிக்க விட்டிருக்கிறது!

கால் இன்றி... கை இன்றி... கண் இன்றி வாழும் பலரை விடவும், அன்பின்றி வாழ்ந்த இவர்களது

வாழ்க்கை எவ்வளவு நரகமாய் இருந்திருக்கும்? ஷ்... கடவுளே!

எங்கெங்கோ வாழ்ந்த இருவரையும் இணைத்து, ஒருவனை மடி தரும் தாயாகவும்... மற்றொருவனை அன்பு பொழியும் சேயாகவும் மாற்றியிருக்கிறது! என்ன விந்தை இது?

மைவிழி, நிஷாந்த்-கிருஷ்ணனின் உறவில் தன்னைத் தொலைத்திருக்க,

அந்த உறவில் அவளுக்கும் பங்கிருக்கிறது என்பதை உணர்த்தும் வண்ணம், ''ஹே... கீர்த்துவை குரு எப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டார்னா? அது உன்னால தான்!'' என்றான் நிஷாந்த், பூடகமாய்.

''என்னது?????'' - மைவிழிக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி!

இவர்களை எனக்கு, கடந்த சில நாட்களாக தானே தெரியும்? இது எப்படி சத்தியம்? என்று அவள் எண்ணம் ஓடிக் கொண்டிருக்க,

''ஹோ... உனக்குத் தெரியாதில்ல! உனக்கு ஒரு ஆக்சிடென்ட் நடந்துச்சே... ஞாபகம் இருக்கில்ல!?'' என்று வினவிய நிஷாந்த்,

மைவிழியின் அதிர்ந்த முகத்தைக் கவனிக்காதவன் போல் மேலே பேசினான்.

''அன்னைக்கு, குரு தலைமையில் எங்க காலேஜ் பசங்க நிறைய பேர்... உங்க காலேஜ்ல நடந்த சிம் போசியத்துக்கு வந்திருந்தோம்!''

''நானும் என்னோட ப்ரண்ட்ஸ் ரெண்டு பேரும், வெளிய இருக்க டீக்கடைக்கு வந்தப்போ தான்... உன்னைப் பார்த்தேன்... அவனையும் பார்த்தேன் அவனோட இண்டென்ஷன் புரிஞ்சதும், வேகமா வந்து உன்னைத் தட்டிவிட்டேன்... பட்... ப்ச்... உன் மேல ஆசிட் பட்டிருச்சு...''

''அதுக்கு அப்புறம் உனக்கு ஞாபகம் இருக்கா இல்லையான்னு தெரியல... நீ பயங்கரமா கத்தினே! அது வரைக்கும் தான் எனக்கும் ஞாபகம் இருக்கு!''

''ஏன் தெரியுமா? நான்... நீ மயங்குறதுக்கு ரெண்டு நிமிஷம் முன்னாடியே மயங்கி விழுந்துட்டேன்!''

''வாட்ட்ட்ட்ட்!'' - மைவிழிக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி!

''உங்க மேலையும் ஆ... ஆச... ஆசிட்...'' என்று முடிக்க முடியாமல் அவள் இழுக்க,

''ச்ச்சே... அதில்ல... நீ அலறினதும்... எனக்கு அம்மாவோட ஆக்சிடன்ட் ஞாபகம் வந்துடுச்சு! தட்ஸ் ஆல்! ஒரு வாரம் காய்ச்சல்... அப்புறம் ஒரு வெறிச்ச பார்வை... ஆல் தட்! ஹ்ம்ம்! அப்போ தான்... குரு வீட்டுக்கு வந்தார்! கீர்த்துவை பார்த்தார்! லவ்... கல்யாணம்... இப்போ பேபி! எல்லாமே!'' என்றான் சாதாரணமாய்.

ஒரு முழு கதையை எழுதியிருக்க வேண்டிய விஷயத்தை, வெறும் அரை மணி நேரத்தில் சொல்லி முடித்து விட்டு, ''குருவோட அப்பா-அம்மாவை நான் தான் மேரேஜ்க்கு இன்வைட் பண்ணினேன்... நா போய் வழியனுப்பி வச்சுட்டு வந்துடுறேன்!'' என்று அங்கிருந்து நகர்ந்தான்.

நிஷாந்த் எடுத்து வைத்த ஒரோர் அடிக்கும், மைவிழியின் இதயம் ஒரோர் அடியாய் அவன் பால் சறுக்கத் துவங்கியது!

''இவனா? இவனே தானா? இவனால் தான்... நா உயிர் வாழ்கிறேனா?!''

''எவ்வளவு பெரிய விஷயம்... அதை எவ்வளவு சாதாரணமாய்...!!!!! இவனால்... எப்படி முடிகிறது!?''

''முருகா... இது என் விளையாட்டா?!''

எவ்வளவு பெரிய காரியம்!?

கிட்டத்தட்ட எனக்கு மறுபிறவி கொடுத்திருக்கிறான்!

எமனிடம் செல்ல வேண்டிய உயிரை... அவன் (நிஷாந்த்) பால் சாய வைக்க, அவன் செய்த மாய வேலையோ!?

உடல் துடித்து... உயிர் கருகி, எமலோகம் சென்றிருக்க வேண்டியவளை, உடல் சிலிர்த்து... உயிர் உருக அவன் நெஞ்சத்தில் சாய்த்துக் கொண்டுவிட்டானே!

''இவன் எனக்கு உயிர் கொடுத்த கடவுளா? இல்லை காதலை அள்ளித் தரும் காதலனா? இல்லை என் வாழ்க்கையை இனிக்கச் செய்யப் போகும் கணவனா? இல்லை கடவுளே காதல் கணவனாய் வந்தது என் பாக்கியமா?''

ஓர் சொல்ல முடியா உணர்வுடன், மைவிழி நிஷாந்தையே இமைக்காது பார்த்திருந்தாள்!! கண்ணில், காதல் கண்ணீராய் வடிய!!

பூச்சரத்தில் சேரும் அடுத்த மலர் - நேசம்!!



16

நிஷாந்தைக் கண்ட நொடியை விடவும்,

அவன் காதல் சொன்ன நொடியை விடவும்,

அவனை விமானத்தில் கண்ட நொடியை விடவும்,

அவன் தான் கண்ணன் என்ற உண்மை தெரிந்த நொடியை விடவும்,

மங்கள நாண் பூட்டிய நிமிடத்தை விடவும்,

ஏன்... உயிர் ஊடுருவி உதிரம் பாய்ந்த அவனது முத்தம் விழுந்த நொடியை விடவும்,

தன் உயிர் காத்தவனே தன் கணவன் என்ற உண்மையை அறிந்த நொடியைத் தான், தன் வாழ்விலேயே மறக்க முடியாத... அற்புத நொடியாக எண்ணினாள் மைவிழி!

கண்கள் இரண்டும் பூரிப்பில் மிதக்க, அது தாங்க முடியாமல், கண்ணீர் தாரை தாரையாக ஊற்றத் தொடங்கியது!

கிருஷ்ணனின் பெற்றோரை வழியனுப்பச் சென்றிருந்த நிஷாந்த், அவளது கண்ணீரைக் கவனிப்பதற்கு முன்னர், கிருஷ்ணன் அதை கவனித்து விட்டு, விரைந்தோடி வந்தான்.

''என்ன மைய்யு இது? கண்ணைத் துடை... யாராவது பார்த்தா நல்லா இருக்காது...'' என்றான் கண்டிப்பு குரலில்.

''இல்ல அண்ணா... நா... நா... துக்கத்திலையோ... வருத்தத்திலையோ அழல! சந்தோஷத்தில... நன்றில...

ஹ்ம்ம் மனசு நிறைஞ்சு போய்... அதோட பாரம் தாங்க முடியாம அழறேண்ணா!'' என்றாள் மைவிழி, கண்ணில் வழிந்த நீரை துடைக்க மனமே இல்லாமல்.

கிருஷ்ணனின் புரியாத பார்வைக்கு விடையாக, 'இல்லண்ணா... அந்த ஆக்ஸிடென்ட்டப்போ... நிஷூ... தானாமே என்னைத் தள்ளிவிட்டான்!'' என்றாள் முகம் முழுக்க சிரிப்புடன்.

''ஹோ! எங்களையெல்லாம் சொல்லக் கூடாதுன்னு மிரட்டிட்டு இருந்தவன்... அவனாவே சொல்லிட்டானா? சரியான... டாம் வாயன்!'' எனக் கூறிய கிருஷ்ணன்,

''உனக்கு அந்த ஆக்ஸிடென்ட்டால ஏற்பட்ட பாதிப்புக்கு எதையுமே கம்பாரிசனுக்கு எடுத்துக்க முடியாது! ஆனா... நா சொல்லணும்... நிஷான் அந்த டைம்ல பட்ட கஷ்டம்... ஹோ காட்! இன்னும் ஒரு செகண்ட் முன்னாடி நான்... அந்தப் பொண்ணை தள்ளி விட்டிருந்தா அவளுக்கு இந்த பாதிப்பே வந்திருக்காதேன்னு அழுவான்! அச்சோ அப்பா... ஏற்கனவே அவங்கம்மாவோட ஆக்ஸிடென்ட்டால பாதிக்கப்பட்டிருந்தவனை... அப்போ தான் கொஞ்சம் கொஞ்சமா மாத்திட்டு இருந்தேன்... பட்... உன்னைப் பார்த்ததும்... பழைய நிலைமையை விட மோசமா போச்சு தெரியுமா? நா ஒரு செகண்ட் யோசிச்சதால தான்... அந்தப் பொண்ணு மேல... அதான் உன் மேல ஆசிட் ஊத்திடுச்சுன்னு ஒரேடியா அழுவான்... தன்னைத் தானே சுட்டுப் பான்... நீ வேணும்ன்னா அவனோட முழங்காலில பாரு... ஏகப்பட்ட சூடு இருக்கு! ஷ்... அப்பா... ரொம்பக்

கஷ்டப்பட்டு மீட்டுக் கொண்டு வந்தேன்!'' என்ற கிருஷ்ணனின் குரல், இப்போதும் அன்றைய நாளின் வேதனையை எண்ணி லேசாய் கலங்கியது!

மைவிழியைப் பற்றி சொல்லவும் வேண்டுமா?!

''யாரென்று தெரியாத போதே... எனக்காக என்னவெல்லாம் செய்திருக்கிறான்... அச்சோ... என் செல்ல நிஷூ...'' என்று உள்ளம் உருகித் தான் போனது!

கிருஷ்ணனின் வார்த்தைகள் உண்டாக்கிய நெகிழ்வா இல்லை ஏற்கனவே உருகிக் கரைந்திருந்த மனதின் ஈரமா... கிருஷ்ணனின் பெற்றோரை வழியனுப்பிவிட்டு, பிரவீனிடம் ஏதோ சொல்லியபடியே அவளருகே வந்த நிஷாந்தின் கை பற்றி இழுத்தவள், அவன் என்ன வென்று யோசிக்கும் முன்னரே, நச்சென்று ஒரு முத்தத்தை அவன் கன்னத்தில் குழி விழும் அளவிற்குப் பதித்தாள்! அந்தக் குழி... நிஷாந்தின் காதல் நெஞ்சத்தில் பெரும் பள்ளத்தை உண்டாக்கி, காம வெள்ளத்தை உள்ளே ஊற்றத் தொடங்கியது!

''ஹே ஒஜோ!!!!!'' என அவன் இன்பமாய் அதிர,

''அடிப்பாவி... குச்சி ஐஸ் திங்குறவ மாதிரி இருந் திட்டு... ஒரு முழு கசாட்டா ஐஸ்கிரீமை லபக்கிட் டியேடி!'' என்று இன்னுமொரு அதிர்ச்சி குரல் கேட்டது!

யாரென்று யூகித்தமையால், ''எவ... அவ?'' என்று கணவனும் மனைவியும் ஒரே கோரஸுடன் திரும்பிப் பார்க்க,

அங்கே இடுப்பில் கை வைத்து முறைத்தபடி நின் றிருந்தாள் நிர்மலா!

''ஆமா... நீ யாரு?'' என்று மைவிழி கேட்க,

''அட ஆமா... நீ யாரு?'' என்று சிரித்தான் நிஷாந்த்.

''என்ன புருஷனுக்கும் பொண்டாட்டிக்கும் நக்கலா? நேத்து எங்க பாட்டி அடிச்ச கூத்தில... கல்யாண நேரத்துக்கு வர முடியல... அதுக்கு போய் என்னைய யாருன்னு கேட்டுட்டீங்களே...'' என்று சிணுங்கினாள் நிர்மலா.

''என்ன செஞ்சாங்க... டென்ஷன் சுந்தரி?'' என்றான் நிஷாந்த் சுவாரஸ்யமாய்.

''நல்லா உருளைக்கிழங்கும்... வாழக்காயுமா சாப்பிட வேண்டியது! அதனால வாயுத் தொல்லை வந்தா மட்டும்... ஐயோ எனக்கு நெஞ்சு வலிக்குது... லங்கஸ் வெடிச்சிருச்சு... கிட்னி புட்டுக்குச்சு... அப்படி இப் படின்னு எல்லாரையும் பீதி ஆக்க வேண்டியது! அந்த குண்டம்மாவால தான் அம்மாவும் வர முடியல... நானும் டைம்க்கு வர முடியல! அம்மா சாரி சொல்லச் சொன் னாங்கடா மாமா...'' என்றாள் வருத்தமாய்.

''பரவாயில்லை சோப்புத் தூள்! சரி... பெரியம்மா எப்படி இருக்காங்க?'' என்று நிஷாந்த் கேட்க,

''இப்ப... ஐயோ... என் செல்லப் பையன் நிஷான் கல்யாணத்துக்குப் போக முடியாமப் போச்சேன்னு அழு துட்டு இருக்காம்! போய்... நாலு சாத்து நல்லா சாத்தப் போறேன்!'' என்று பல்லைக் கடித்தாள் நிர்மலா.

''சரி... சரி விடு! அவங்க அப்படித் தானே... விடு!'' என்ற நிஷாந்தைத் தொடர்ந்து, மைவிழி நிர்மலாவின் புறம் திரும்பினாள்.

தோழிகள் இருவரும் சண்டையிட்டு... பேசி முடித்து... ஒருவழியாக சமாதானம் ஆகும் நிலையில் இருக்க,

''ஏய்... சோப்புத் தூள்... நீ எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறே?'' என்றான் நிர்மலாவின் முடியைப் பற்றி இழுத்து.

''டேய்... மாமா வேணாம்! நானே... அந்த ஆயில்... இந்த ஆயில்ன்னு மண்டையில தேச்சு... போக வேண்டிய நாலு முடியையும் கெஞ்சிக் கூத்தாடி இழுத்து வச்சிருக்கேன்! அதை இழுத்து விடாத!'' என்று ''அதி'' முக்கியமாய் கவலை கொண்டவள்,

''என்னோட மாமு... செல்ல மாமு நீ தான் இவளைக் கட்டிக்கிட்டியே! அபபுறம்... நா என்ன பண்றது? வேற ஏதாவது கூமு...தான் மேன்... கூமுட்டை கிடைக்குதான்னு பாக்கணும்!'' என்றாள் உதட்டைச் சுளித்து.

''அடிங்க! என் புருஷனையா கூமுட்டை சொல்றே? அவரே... பெரிய வாத்து முட்டை... அவரைப் போய்... ப்ச்ச்...'' என்று சோகமாய் உச்சு கொட்டினாள் மைவிழி.

அவ்வளவு தான், நிஷாந்த் என்ன செய்தான் தெரியுமோ?

''ஆஆன்... ஆஆஆஆஆன்'' என்று அழத் தொடங்கி விட்டான்.

நிர்மலாவும் மைவிழியும் அதிர்ந்தே போய்விட்டனர்!

பின்னே, கல்யாண மாப்பிள்ளை இப்படி உச்ச ஸ்தாயியில் கத்தினால் அவர்களும் தான் என்ன செய்வார்கள்!

''நிஷான்... என்ன செய்றே? ஹய்யோ... நிஷான்'' என்று மைவிழி அடிக்குரலில் அடக்க,

நிர்மலாவோ ''டேய்... உன்னோட அலும்புக்கு அளவே இல்லையா? முதல... அந்த ஸ்பீக்கரை ஆஃப் பண்ணு!'' என்றாள் நிஷாந்தின் மண்டையில் தட்டி.

அதற்குள் அங்கு விரைந்து வந்தான் கிருஷ்ணன்.

அவன் என்ன தான் மின்னல் வேகமாய் செயல் பட்டபோதும், பலரது பார்வை நிஷாந்தின் புறம் திரும்பி இருந்தது.

அதை உணர்ந்தவனாய், ''டேய்... டேய்... இங்க என்ன டி.வி ஷோவா நடக்குது? ஓவர் ரியாலிட்டி காட்டிட்டு இருக்கே? வாயை மூடு!'' என்றான் மைத்துனனை அடக்கி.

''உங்களுக்கு தெரியாது குரு... இந்த ரெண்டு எலிக்குஞ்சும் என்னைய கேலி பண்ணுதுங்க! பாவம்... கிரீன் சான்ட் என்ன செய்வேன்... அதான் அழுதுட்டேன்... சரியான பாட் பீப்பிள்ஸ் குரு!'' என்று உதடு பிதுக்கி, மனைவியைப் பற்றி கோல் மூட்டினான் நிஷாந்த்.

''உனக்கு... இன்னைக்கு நைட் தர்ம அடி தான் காத்திருக்கு மவனே!'' என்று கூறிய கிருஷ்ணன்,

''மைய்யு... இனிமேல் இந்த கிரீன் பூச்சி உன்னோட கண்ட்ரோல்ல... என்ன வேணும்னாலும் செஞ்சுக்கோ!'' என்று அங்கிருந்து நகர்ந்தான்.

கிருஷ்ணன் நகர்ந்ததும், ''உங்களை... என்ன தான் செய்றது...'' என்று தலையில் அடித்துக் கொண்ட மைவிழியைத் தொடர்ந்து,

''நல்லவேளை... இந்த கிரீன் மண்ணை நான் தலையில அள்ளிப் போட்டுக்கலை... ஒரே நிமிஷத்தில பீதியை இல்ல அள்ளி விட்டுருச்சு!'' என்று அங்க லாய்த்தாள் நிர்மலா.

''ச்சே... அப்படியெல்லாம் சொல்லக்கூடாது சோப்பு! நா வேணும்ன்னா உன்னையும் கல்யாணம் பண்ணிக் கிறேன்... மைய்யுக்கு முருகன்னா ரொம்ப இஷ்டம்... அதனால் செகண்ட் மேரேஜ்க்கு அவளே அரேன்ஜ் செய்வா!'' என்று நிஷாந்த் கூற.

''டேய் மாமா... கல்யாணம் ஆன அன்னைக்கே உனக்கு டிவோர்ஸ் ஆகிடும் போலவே! சும்மா இரேன்டா!'' என்று சிரித்தாள் நிர்மலா.

மைவிழியோ ''நிம்மி... நீ கொஞ்சம் அந்தப் பக்கம் போ!'' என தோழியை சற்றேத் தள்ளி அனுப்பிவிட்டு,

நிஷாந்திடம் திரும்பி ''அய்யாவுக்கு அப்படியொரு நினைப்பு இருக்கோ? நீ என்னை ஏமாத்தினதுக்குத் தண்டனையா... உன்னைக் காயப்போடலாம்ங்கிற பிளான்ல தான் இருந்தேன்... ஆனா... நடுல கொஞ்சம் சென்டிமென்ட்ல என்னைச் சாச்சுப்புட்டே! எனக்கு என்னமோ... அந்தப் பிளானைத் திரும்ப அமல் படுத்த லாமான்னு தோணுது! என்ன நிஷூ சொல்றே? அமுல் பேபிக்கு... அல்வா கொடுக்கிறத் திட்டத்தை அமல் படுத்திடலாமா?'' என்றாள் ஒரு கேலிப் பார்வை யுடன்.

அதன் பின்னர், நிஷாந்த் வாயைத் திறந்திருப்பானா என்ன? ஆள் கப்சிப் என்று ஒரேயடியாய் அடங்கி விட்டான்!

மைவிழிக்கே, அவனது பாவமான முகத்தைப் பார்கையில் சிரிப்பு சிரிப்பாய் வந்தது!

இருந்தாலும், ஒரு கெத்துடனே மீதி நேரத்தையும் கழித்தாள் அவள். இடத்தைக் கொடுத்தால்... கொடுப் பவனின் கையிலிருக்கும் மோதிரத்தையும் உருவிக் கொள்ளும் ஜகஜாலக்கில்லாடி தன் கணவன் என்பதை அறிந்தவன் அல்லவோ!?

அடுத்து வந்த நேரம் யாவும், சடங்கு.. சம்பிரதாயம் என்று கழிய, மாலையில் வரவேற்பும் இனிதே நடந்து முடிந்தது!

கேலியும் சிரிப்புமாய் இருந்தாலும், சற்றே அடக்கி வாசிக்கும் நிஷாந்தை பார்த்துச் சிரிப்பு வந்த போதும், மைவிழிக்கு அவன் ஏதோ பெரிதாய்த் திட்டம் போடுவ தாகவேத் தோன்றியது!

''என்ன கோக்கு மாக்கு பண்றான்...'' என்று மைவிழி யின் யோசனையைப் பொய்யாக்காமல்.

இரவில் அனைத்து உறவுகளும் கிளம்பிச் சென்ற பின்னர், குடும்பத்தினர் மட்டுமே இருந்த நேரத்தில், ஓர் உள்நாட்டு மாநாட்டிற்கு அழைத்தான்.

முதலிரவுக்காக மைவிழியைத் தயார்ப் படுத்திக் கொண்டிருந்த சிவகாமியையும் அவன் விட்டு வைக்க வில்லை.

''அத்தே... முக்கியமான விஷயம்... வாங்க... வாங்க..'' என்று அவர் கைப்பிடித்து வேறு அழைத்துச் சென்றவன்.

தன்னை மறந்தும் அழைக்கவில்லை என்பதே மைவிழிக்குப் பெரும் சந்தேகத்தைக் கிளப்பியது!

''என்ன செய்றான்?'' என்ற சந்தேகத்துடனே, மைவிழி அந்த அறையிலிருந்து எழுந்து வர,

வரவேற்பறையில், அமுதம் பாட்டி... நடராஜன்... அரவாமுதன்... கிருஷ்ணன்... கீர்த்தி... சாண்டில்யன் என்று அனைவரும் குறுகுறுத்தப் பார்வையுடன் அமர்ந்திருந்தனர்.

''என்ன விஷயம் நிஷான்? எல்லாருமே ரொம்ப டயர்ட்டா இருக்கோம்... சீக்கிரம் சொல்லு'' என்று அரவாமுதன் விரட்ட,

''கீர்த்து... உனக்குக் காலு வலிக்குதா? ஏன் நிக்கிறே... இங்க உக்காரு'' என்று அக்காவின் கைப் பிடித்துச் சோபாவில் அமர வைத்தான்.

பிறகு. ''இது என்னோட வாழ்க்கைப் பிரச்சனை பத்தின டிஸ்கஷன் சரியா? சோ... எல்லாரும் தூங்கி வழியாம ஒழுங்காக் கேட்டு... நல்ல முடிவா சொல்லணும்! சரியா?'' என்றான் பீடிகையுடன்.

என்னவோ... ஏதோவென்று அனைவருமே பதறிப் போயினர்.

''என்ன மாப்பிள்ள... மைய்யுக்கு அந்த ஆக்ஸிடென்ட் விஜயம் தெரிஞ்சுடுச்சுன்னு கிருஷ்ணன் தம்பி சொன்

னாரு! நாங்க யாரும் அவகிட்டச் சொல்லலை... மாப்பிள்ளை...'' என்று நடராஜன் பதற,

''ஹய்யோ நீங்க வேற? நானே தான் அவகிட்ட உளறிட்டேன்... அதில்ல இது!'' என்று அவரை அடக்கினான் நிஷாந்த்.

''பிறகென்ன?'' என்று அனைவரும் யோசிக்கும் போதே,

''ஹய்யோ அத்தான்... இன்னைக்கு ஃபோர்த் டைம் பாயசம் கேட்டதுக்கு... நான் கோச்சுக்கிட்டேனே... அதுக்காக வேண்டியா இந்த மீட்டிங்?'' என்று வினவிய சாண்டியின் குரல். ''ஹய்யகோ!'' என்பது போல் ஒலித்தது.

''டேய் டேய்! நீ தரலைன்னா எனக்குக் கிடைக்காதாக்கும்? உங்கக்கா இலையில் இருந்த ரெண்டு கப்பு பாயசம் எங்கப் போச்சுன்னு நினைக்கிறே? இந்த வயித்துக்குள்ள தான்!'' என்று தன் வயிற்றைச் சுட்டிக் காட்டினான் நிஷாந்த்.

''அப்புறம் என்ன தான்டாப் பிரச்சனை! சொல்லித் தொலை!'' என்று பல்லைக் கடித்தான் கிருஷ்ணன்.

''இருங்க குரு!'' என்று கையமர்த்திய நிஷாந்த், ''எங்களுக்கு எங்க ஃபர்ஸ்ட் நைட் நடக்கப் போகுது?'' என்றான் கேள்வியாக.

''ஏன் மாப்பிள்ள... மேல் ரூம்ல தான்... மைய்யு ரூம்ல தான் ஏற்பாடு பண்ணியிருக்கோம்!'' என்றார் சிவகாமி அவசரமாய்.

''ஹ்ம்ம்! அந்த ரூம்ல சோபா இருக்கா?''

''ஹ்ம்ம் சோபாவா? ஹ்ம்ம்... இல்லையே... ரெண்டு சேர் தான் இருக்கு...

''ஹோ... பரவாயில்லை! பால்கனி?''

''பால்கனி... இருக்கு!''

''ஹய்யையோ! டேஞ்சர் ஆச்சே!''

''என்ன மாப்பிள்ளை சொல்றீங்க?'' என்று நடராஜன் குழம்ப, ''நிஷான்!'' என்று எச்சரிக்கை மணி அடித்தார் அரவாமுதன்.

''ஹ்ம்ம்... இப்ப என்ன செய்றது?'' என்று வெளிப் படையாகவே அவன் யோசிக்க, அனைவருமே ஒரு பீதியுடன் அவன் முகம் பார்த்திருந்தனர்! மைவிழி உட்பட!

''இல்ல... இந்த ஒஜோ... என்னைய வாழ்நாள் முழுசும் பாச்சுலரா இருக்க வைக்க ஒரு மெகா பிளான் போட்டிருக்கா... ஆனா பாருங்க... என்னால கல்யாணம் ஆகியும் பிரம்மச்சாரியா எல்லாம் வாழவே முடியாது! நோ சான்ஸ் அட் ஆல்... யூ நோ! அவ போட்டிருக்க பிளான் படி பார்த்தா... என்னை பால்கனியில தள்ளிக் கதவைச் சாத்திட்டு... அவ குப்புற அடிச்சுத் தூங்கிடு வான்னு நினைக்கிறேன்! பட்... அது நடக்கக் கூடாது... இந்த நிஷாந்த் இனிமேல் ஒரு நாள் கூட பாச்சலரா லைஃப் லீட் பண்ணவே மாட்டான்! சோ... ஒஜோட்ட... என்னை பத்தி நல்ல விதா எடுத்துச் சொல்லி.... எனக்கு குடும்பஸ்தன் அந்தஸ்தைக் கொடுக்கணும்ன்னு கிளாஸ் எடுத்து... பாச்சுலரோட பீலிங்க்ஸ் எல்லாத்தையும் நல்லா எப்பெக்ட்டோடச் சொல்லி... அனுப்பி வைங்க!

அதுக்குத் தான் இந்த மாநாடு!'' - மாநாட்டின் முக்கியக் கருத்தை சொல்லி முடித்தவன்.

''கம்...ஆன்! ஸ்டார்ட் மியூசிக்! என்றான் கைகளை உயர்த்தி.

அனைவரும் விழுந்து விழுந்து சிரிக்க, மைவிழியோ வெட்கத்தில் குறுகியே போனாள்.

''உன்னை...'' என்று அவள் துரத்திக் கொண்டு ஓட,


''மாப்பிள்ளையை மரியாதையா கூப்பிடணும் மைய்யு!'' என்ற சிவகாமியின் அதட்டல் பின்னால் தொடர்ந்தது.

''அதெல்லாம் வேணாம் மைய்யு! நல்லா நாயே... பேயேன்னுத் திட்டு... நாலு மொத்து மொத்து!'' என்று கிருஷ்ணனின் அறிவுரையுடன்.

நிஷாந்தைத் துரத்திக் கொண்டு படுக்கையறைக்குள் சென்றான் மைவிழி!

அதன் பின்னர், நிஷாந்த் ''பிரம்மச்சாரியாக'' வாழ்ந் திருப்பானா என்ன? மைவிழியின் அழகு தான் வாழ விட்டிருக்குமா?!!

பூச்சரத்தில் சேரும் அடுத்த பூ - கூடல்!



17

திருமணம் முடிந்து, நிஷாந்தின் பிரம்மச்சரிய விரதமும் முடிந்து, இந்தியப் பயணம் முடிந்து, விடுமுறையும் முடிந்து, மைவிழி கல்லூரியில் சேரும் தினம் அன்று!

காலை ஆறு மணி இருக்கும்!

கிருஷ்ணனும் மைவிழியும் சமையற்கட்டில் அந்த நாளுக்காகச் சமையலில் ஈடுபட்டிருந்தனர்.

என்றைக்கும் விடவும், கிருஷ்ணன் அன்று அமைதியாய் இருந்தது போலிருந்தது மைவிழிக்கு.

''அண்ணா... நேத்து அண்ணி சேமியா கிச்சடி கேட்டாங்க இல்ல... இட்லியோட அதுவும் கொஞ்சம் செஞ்சுடலாமா? காய் நறுக்கட்டுமா?'' என்று மைவிழி வினவ.

''ஹான்... சரி மைய்யு! ரெண்டு கத்திரிக்காயும்... நாலு வெண்டைக்காயும் நறுக்கி வை!'' என்றான் கிருஷ்ணன், சாதாரணமாய்.

''அண்ணா!'' - மைவிழியின் அதிர்ந்த குரலைக் கேட்டதும் தான், தான் ஏதோ உளறிவிட்டது கிருஷ்ணனுக்குப் புரிந்தது!

''என்ன மைய்யு! ஏதும் உளறிட்டேனா? என்ன சொன்னேன்?'' என்று கிருஷ்ணன் கேட்க.

அந்த நாளைய கிருஷ்ணன், வேறுபட்டுத் தெரிந்தான் மைவிழிக்கு!

''என்னாச்சு அண்ணா? ரொம்ப டிஸ்டர்ப்டா இருக்க மாதிரி இருக்கே...'' என அவள் வினவ,

''ப்ச்... ஒண்ணுமில்லை மைய்யு!'' என்று அவன் சலித்துக் கொண்டதிலேயே, ஏதோ விஷயமிருப்பது மைவிழிக்குப் புரிந்தது!

பெண்கள் ''ஒண்ணுமில்லை'' என்று சொன்னால் மட்டும் ''ஏதோ விஷயம் இருக்கிறது'' என்று அர்த்தமில்லை! அதே விதி, ஆண்களுக்கும் பொருந்தும் என்பதை உணர்ந்தவளாய்.

''இல்ல ஏதோ இருக்கு... சொல்லுங்க அண்ணா! யுவில் ஃபீல் பெட்டர்!'' என்றால் மைவிழி, சிறு வற்புறுத்தலுடன்.

''ஹ்ம்ம்... இன்னைக்கு எங்கம்மாவோட பர்த்டே!'' என்றான் கிருஷ்ணன், ஏக்கத்துடன்.

இந்தக் குடும்பத்தையே தலைமை வகித்து நடத்தும் பெரிய மனிதனா இவன் என்றிருந்தது மைவிழிக்கு!

ஓர் புகழ் பெற்ற பல்கலைக்கழகத்தில், முக்கிய வகுப்பின் பேராசிரியனா என்ற மலைப்பிலிருந்து அவளால் விடு பட முடியவில்லை!

நிஷானின் ''குரு'' தன் முதல் ''குரு''வான தாயைத் தேடுவது அவள் மனதைக் கரைத்தது!

உள்ளே எழுந்த வியப்பை மறைத்துக் கொண்டு ''விஷ் பண்ணினீங்களா அண்ணா?'' என்றாள் மைவிழி சாதாரணமாய்.

''பண்ணனும்! ஆனா... ஒரு மாதிரி இருக்கு...'' என்றான் அவன், சங்கோஜத்துடன்.

தாயுடன் பேசவே யோசிக்கிறான் என்றால் அவன் மனதளவில் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும்?

''என்னண்ணா இது? உடனே போன் போடுங்க... ஹ்ம்ம் போடுங்க...'' என அவள் கைப்பேசியைக் கொடுக்க.

''இல்ல மைய்யு வேணாம்... நான் செவன்த் படிக்கும் போது... என்னோட பர்த்டே வந்தப்போ எங்க வீட்டில இருந்து யாருமே விஷ் பண்ணல... அப்பா ஓகே... அம்மா கூடப் பண்ணலை! எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு மைய்யு... அடுத்து அவங்க போன் பண்ணும் போது, ஏன்மா பண்ணலைன்னு கேட்டேன்... அதுக்கு என்ன தெரியுமா சொன்னாங்க... தம்பிக்கு அன்னைக்கு ஏதோ ஃபான்சி டிரஸ்ஸாம்... அதில பிசியா இருந்துட்டாங்களாம்! நா பெரிய பையன்கிறதால... பர்த்டே விஷ் எல்லாம் எதிர்பார்க்கக் கூடாதுன்னு சொன்னாங்க! அதில இருந்து... என்னோட பர்த்டே அன்னைக்கு... அவங்க போன் பண்ணாக் கூட... நா பேசமாட்டேன்!'' என்றான் கிருஷ்ணன். கோபமும் வருத்தமுமாய்.

''ஒரு செவன்த் படிக்கிற பையன்... பெரிய பையன்னா... இவங்களுக்கு அறுபது வயசாகிடுச்சில்ல... அவங்களுக்கு ஏன் போன் பண்ணி விஷ் பண்ணனும்!?'' என்றான் அவன் நியாயவாதியாக.

அவன் பேசிய விதத்தில். மைவிழி வாய் விட்டுச் சிரித்தாள்.

''ஹே என்ன மைய்யு சிரிக்கிறே?''- இறுக்கம் தளர்ந்த கிருஷ்ணனின் முகத்தில் சிறு வெட்கம்.

''பின்னே... இதெல்லாம் நிஷாந்த் பேச வேண்டிய டயலாக் அண்ணா! நீங்க... அதுவும் அவனோட குருவான நீங்க பேசினா... கேட்க நல்லாவே இல்லை!'' என்ற மைவிழி.

''இதுவே... நிஷாந்த் இந்த நிலையில் இருந்தா நீங்க என்ன செய்வீங்க? அவங்க நம்மகிட்ட சரியா நடந்துக் கலைங்கிறதுக்காக நாமளும் அவங்க மாதிரியே இருக்கிறதா? அப்புறம்... நமக்கும் அவங்களுக்கும் என்ன வித்தியாசம்? அப்படி... இப்படின்னு கிளாஸ் எடுத்திருக்க மாட்டீங்க? அவனுக்கும்... நீங்க சொன்னதும் மண்டை மேல பல்ப் எரிஞ்சிருக்கும்! உடனே போனை போட்டிருப்பான்! சோ... இப்போ நீங்க போன் போட்டுப் பேசுங்க! பேசுங்க இல்லே... பேசுறீங்க அவ்வளவு தான்! இனிமேல்... நான் தான் உங்களுக்கு ''குரு!'''' என்றாள் மைவிழி அதிகாரமாய்.

கிருஷ்ணனின் முகம் அசடை ஏந்தி நின்றபோதும், தெளிவை தூக்கலாய் காட்டியது!

அடுத்த ஐந்தாவது நிமிடம், கிருஷ்ணனின் வீட்டு எண்ணிற்கு அழைப்பு பறந்தது!

மைவிழி ஆர்வமே உருவாய் நின்றிருக்க, ''ரிங் போகுது...'' என்றான் கிருஷ்ணன் மெதுவாய்.

''ஹ்ம்ம்... ஹ்ம்ம்...'' என்று மைவிழியும் அவன் முகத்தையே பார்த்திருந்தாள்.

மறுபுறம் போன் எடுக்கப்பட்ட சத்தம், மைவிழிக்கு கேட்டது!

அந்தப் பக்கம், ''ஹலோ!'' என்றொரு கட்டைக்குரல் கேட்க,

கிருஷ்ணனின் முகம் சட்டென வாடிப் போனது! அடுத்த நொடி, கைப்பேசியை அணைத்து கீழே வைத்தான் அவன்!

''ஹே, என்னண்ணா செய்றீங்க? போனை ஏன் வச்சீங்க?'' என்று மைவிழி பதற.

''அப்பா எடுத்தாங்க...'' என்றான் கிருஷ்ணன், கம்மிய குரலில்.

நிஷாந்தை விடவும் சிறு பையனாய்த் தெரிந்தான், கிருஷ்ணன்!

''அப்பா எடுத்தா என்ன? எப்படி இருக்கீங்கன்னு ரெண்டு வார்த்தைக் கேட்டுட்டு... அம்மாட்டப் பேச வேண்டியது தானே?'' என்றாள் மைவிழி, வேகமாய்.

''இல்ல மைய்யு! என்னால முடியாது! என்னால... அப்பாவை... ஹ்ம்ம்... வேணாம் மைய்யு...'' என்று அவன் தடுமாற.

''ப்ச்ச்... இங்கக் கொடுங்க போனை'' என்று அவன் கையிலிருந்து கைப்பேசியை வாங்கியவள், அவன் அழைத்த அதே எண்ணிற்கு மீண்டும் அழைத்தாள்.

உடனே எடுக்கப்பட்டது கைப்பேசி.

உடனே எடுக்கப்பட்டது என்பதை விடவும், ''கிருஷ்ணா... தம்பி...'' என்ற ஓர் நெகிழ்ந்த குரல், அதன் வழியே ஒலித்தது!

அது, கிருஷ்ணனின் தாயாருக்கு உரியது என்பது புரிய, வேகவேகமாய் அவனிடம் கைப்பேசியைக் கொடுத்த மைவிழி, ''அம்மா பேசுறாங்க... ஹ்ம்ம் பேசுங்க!'' என்றாள் அவசரமாய்.

கிருஷ்ணனின் முகத்தில்... சந்தோம்... பதட்டம்... ஆவல்... பயம் எல்லாமே கலந்திருந்தது!

கைப்பேசியைக் காதில் வைத்தவன், சற்று நேரம் ஒன்றும் பேசாமல் இருக்க,

அந்தப் பக்கம் ''கிருஷ்ணா... கிருஷ்ணா... தம்பி இருக்கியா? அம்மா பேசுறேன் தம்பி!'' என்று தாயின் குரல் படபடத்தது!

''அம்மா...'' - மெதுவாய் அழுத்தமாய் வெளிவந்த கிருஷ்ணனின் வார்த்தைகளில், மைவிழிக்கே விழி யோரம் நீர் சுரந்து விட்டது! ஓரோர் எழுத்தையும் அனு பவித்து, ''அம்மா...'' என்று அழுத்தமாய் உச்சரித்தான் அவன்.

''தம்பி... எப்படிப்பா இருக்கே?'' என்று அவர் நெகிழ,

''நா நல்லா இருக்கேன் மா... நீங்க... நீங்க நல்லா இருக்கீங்களா?'' என்றான் கிருஷ்ணன்.

மைவிழி இந்தப் பக்கமிருந்து ''பார்த்தே... பார்த்தே'' என்று குரல் கொடுக்க,

''ஹான்! பிறந்தநாள் வாழ்த்துக்கள் அம்மா!'' என்றான் அவன். ஒரு விதமான சங்கடத்துடன்.

''பிறந்தநாளா? ஹோ... இன்னைக்குத் தான் எனக்கு பிறந்தநாளா? ரொம்ப நன்றிப்பா...'' என்றார் அவர் ஆச்சரியமும், சந்தோஷமுமாய்.

அதன் பின்னர், என்ன பேசுவதென்று தெரியாமல் கிருஷ்ணன் வாளா இருக்க,

அவனது தாயே பேசினார். ''கீர்த்தி எப்படி இருக்கா தம்பி?'' என அவர் கேட்க,

''ஹ்ம்ம் நல்லா இருக்கா. தூங்கிட்டு இருக்கா!'' என்றான் அவன்.

"நா கேட்டதாச் சொல்லுப்பா..."

"ம்ம். சொல்றேன்."

"டாக்டர்கிட்ட செக்கப் போறீங்க தானே? எல்லாம் நல்லா இருக்கில்ல..."

"ம்ம். இருக்கு!"

அதன் பின், அங்கே பலத்த மௌனம்!

அந்த மௌனத்தைப் பொறுக்க முடியாமல், "சரிம்மா வச்சுடுறேன்!" என்று கிருஷ்ணன் கூற,

"ஏன் தம்பி... அம்மாட்ட பேசப் பிடிக்கலையா?" என்றார் அவர் வேதனையுடன்.

கிருஷ்ணன் பதிலேதும் சொல்லவில்லை! உண்மை அது தான் எனும் போது, "இல்லை..." என்று மறுத்துக் கூற அவனது மனம் ஒத்துக்கொள்ள வில்லை.

மகனின் அமைதியே அவனது மனநிலையைப் படம் பிடித்துக் காட்டிவிட, "சின்ன வயசில... நீ பேச வரும் போதெல்லாம், அந்த வேலை... இந்த வேலை... தம்பியைப் பார்க்கணும்ன்னு ஓடினவ தானே நானு? அப்படியிருக்கும் போது... இப்போ நீ பேசணும்ன்னு நான் எதிர்பார்க்கிறது தப்பு தான்!" என்றது அக்குரல்.

இத்தனை ஆண்டுகளில், முதல் முறையாகத் தான் செய்தது தவறென்று ஒப்புக் கொண்ட தாயின் பேச்சில், திகைத்து நின்றான் கிருஷ்ணன்.

அவனது திகைப்பை உணர்ந்தார் போல், "என்னோட தப்புன்னால தான் உன்னோட தம்பிக்கு... கை சின்னதா போச்சுன்கிற எண்ணத்தில்... என்னோட கவனம்

முழுசையும் அவன்ட்டையே வச்சுட்டேன் தம்பி! நீயும்... எனக்குப் பிறந்தவன் தான்... கை வளர்ந்திருந்தாலும்... மனசு சின்ன மனசுங்கிற எண்ணம் எனக்கு இல்லாம போச்சு!" என்றார் வேதனையுடன்.

இதென்ன புதிதாய் என்றிருந்தது கிருஷ்ணனுக்கு! இத்தனை ஆண்டுகளாய் இல்லாத ஞானோதயம். இப் போது எங்கிருந்து வந்தது எனத் தோன்றியது. மறையாது வெளியிட்டு விட்டான் கிருஷ்ணன்.

"இப்ப என்னம்மா புதுசாப் பாசம் பொங்குது!?" என அவன் நக்கலாய்க் கேட்க,

மைவிழியே பதறிவிட்டாள். பிறந்தநாள் அன்று அவரைச் சங்கடப்படுத்த வேண்டுமா என்றிருந்தது அவளுக்கு.

"என்னண்ணா... மெதுவாப் பேசுங்க..." என அவள் சொல்ல.

அவளைக் கையமர்த்தியவன். "என்னம்மா... திடீர்ன்னு பாசத்தைப் பொழியுறீங்க? என்ன உங்க ரெண்டாவது பையன்... எங்கேயாவது வெளிய போயிட்டானா?" என்றான் கோபமாய்.

அவ்வளவு தான், கிருஷ்ணனின் தாயார் "ஓ" வென்று அழத் தொடங்கினாள்.

"எதுக்கும்மா இப்ப அழறீங்க? நீங்க இப்ப அழற தால... சின்ன வயசில நா பட்டக் கஷ்டமெல்லாம் இல் லாமப் போய்டுமா? ஹாஸ்டல்ல விட்டீங்க சரி... லீவ்ல வீட்டுக்கு வந்தாலும்... ஒரு நாளாவது எனக்குப் பிடிச் சதைச் சமைச்சுக் கொடுத்திருக்கீங்களா? இல்ல எங்க

யாவது வெளியக் கூட்டிட்டுப் போயிருக்கீங்களா? தம்பிக்கு அது பிடிக்கும்... இது பிடிக்கும்ன்னு அவன் தான் உங்க கண்ணுக்குத் தெரிவான்! எங்கயாவது வெளியப் போனா... அவனை எல்லாரும் வித்தியாசமாப் பார்ப்பாங்கன்னு... எங்கேயும் கூட்டிட்டுப் போக மாட்டீங்க! சோ... இப்ப அவன் அங்க இல்ல... அதான் என் மேல பாசம் பொழியுது!'' என்றான் நிதர்சனத்தை எடுத்துரைக்கும் அழுத்தத்துடன்.

''நிஜமாவே அவன் இங்க இல்ல தம்பி! அவனோட கை சின்னதானத்துக்கு நான் தான் காரணமாம்... அதனால என் முகத்தில முழிக்க மாட்டானாம்... போய்ட்டான்!'' என்றார் அவர் விம்மலும் விக்கலுமாய்.

''ஹோ!!!'' - அதற்கு மேல் கிருஷ்ணன் எதுவும் பேசவில்லை.

சற்று நேர அமைதிக்குப் பின்னர், ''அவன் வந்ததும்... என்னை மறந்துடுவீங்க!'' என்றான் விட்டேறியாக.

''இல்ல தம்பி! இல்லவே இல்லை! உன் மச்சினன் கல்யாணத்தில பார்த்தேனே... உன் மாமனார்... உன் பொண்டாட்டி... உன் மச்சினன்... ஏன் அவனோட பொண்டாட்டி... அவங்க எல்லாரையும் நீ பார்த்துக் கிட்டே அழகை! உன் கண்ணிலேயே பாசம் தெரிஞ்சது தம்பி! ஆனா... எங்களைப் பார்க்கும் போது... அதில ஒரு ஒதுக்கம்... வெறுப்பு...'' என்றவரின் குரல், உடைந்து அழுதது!

''ஹ்ம்ம்... வாழ்க்கையில நடுல வந்து சேர்ந்த அவங்க கிட்டயே பாசமா இருக்க நீ... எங்க கிட்ட இன்னமும்

அதிக பாசமா இருந்திருப்பே இல்ல! இப்ப தான்... தம்பி உறைக்குது! உன் தம்பி எங்களை உதறிட்டு போனதும் தான் உறைக்குது! காலம் போன காலத்தில... கூட இருந்து பார்த்துக்க யாருமில்லாத நேரத்தில தான்... உன்னோட பாசம் தேவைப்படுது!'' என்று அழுதார் அவர்.

வருத்தமாய் இருந்த போதும், கிருஷ்ணன் எதுவும் பேசவில்லை.

''எனக்குப் புரியுதுப்பா... இவ்வளவு நாள் இல்லாம இப்ப என்னன்னு நீ நினைக்கிறது புரியுது!'' என்றவர்.

''என்ன செய்றது... இப்பவாவது எனக்கு உறைச்சதே!'' என்றார் மிகுந்த வருத்தத்துடன்.

''இனிமே... தினம் ஒரு வாட்டி நா உன்கிட்டப் பேசலாமா? ப்ளீஸ் தம்பி! அம்மாக்காக! உன் பொண்டாட்டி சொன்னா... உங்க பையன் தான், புழுவா இருந்த என்னையும் என் தம்பியையும் அழகான பட்டாம்பூச்சியா மாத்தினார்ன்னு! அம்மாவும் அப்படி தான்... சாகப் போற புழு... கொஞ்ச நாலு... உன்னோட ஈரத்தில உயிர் வாழ்ந்துக்கிறேன்?'' என்றார் கெஞ்சுதலாய்.

ஏனோ நெஞ்சம் கனத்துப் போனது!

''சரிம்மா... நானே தினம் இந்த நேரத்துக்குக் கூப்பிடுறேன்!'' என்ற கிருஷ்ணன்.

''ஹ்ம்ம்... ஹ்ம்ம்... அப்பாவைக் கேட்டதா சொல்லுங்க!'' என்று விட்டு அழைப்பை வைத்தான்.

அவன் வைத்ததும், ''ஹைய்யா!'' என்று மைவிழி குதிக்க.

அதைத் தொடர்ந்து, படபடவென்ற கைத் தட்டல் கேட்டது!

அதிர்ந்த கிருஷ்ணனும் மைவிழியும் திரும்பிப் பார்க்க, கீர்த்தியும் நிஷாந்தும் அங்கிருந்து வந்து கொண்டிருந்தனர்.

''ஹை சூப்பர்! என்ன குரு... ஒரே கொஞ்சல்ஸ்... குழாவல்ஸ் போல...'' என்று நிஷாந்த் கண்ணடிக்க.

கீர்த்தி வந்து கணவனின் மார்பில் தஞ்சம் புகுந்து கொண்டாள்.

நிஷாந்துக்குப் பதிலாய் ஒரு புன்னகையை உதிர்த்த கிருஷ்ணன், கீர்த்தியைத் தன்னுடன் இறுக அணைத்துக் கொண்டான்.

சில வினாடிகளுக்குப் பின்னர், அவளைப் பிரித்து எடுத்தவன், அவளது நெற்றியில் முத்தம் பதித்து நிமிர்ந்தான்.

''ஆஹா... இவரு பெரிய ரோமன்ஸ் இளவரசர்... இந்தம்மா காதல் இளவரசி! ஏழு கழுத வயசாகுது... நகருங்க ரெண்டு பேரும்!'' என்ற நிஷாந்த்.

''இந்த வேலையெல்லாம்... நானும் ஒஜோ பேபியும் தான் செய்யணும்! ஏன்னா... நாங்க தான் சின்ன வயசு கப்புள்!'' என்றான் பட்டிமன்ற நடுவரின் குரலில்.

''போடா... அந்தப் பக்கம்! நாங்க அறுபது வயசுல கூட... ஆறு புள்ள பெத்துக்கிற அளவுக்கு ரொமான்ஸ் பண்ணுவோம்... உனக்கென்ன வந்துச்சு!'' என்ற கிருஷ்ணன்.

''கீர்த்தும்மா... நீ வாடா செல்லம்... இவனுக்கு நம்மைப் பார்த்து பொறாமை! நம்ம குரு... நம்மள மாதிரி பொண்டாட்டிட்ட அடி வாங்காம ரொமான்ஸ் பண்றானேன்னு இந்த டாம் வாயனுக்குப் பொறாமை!'' என்று உதட்டைச் சுளித்து, மூக்கைச் சுருக்கி நிஷாந்திற்கு அழகு காண்பித்த படியே, கீர்த்தியின் கைப் பற்றி வெளியே கூட்டிச் சென்றான்.

''பாவம் கிருஷ்ப்பா அவன்... ரூம்ல நடக்கிற விஷயத்தை வெளிய சொல்லிட்டீங்கன்னு மைய்யு அவனை அடிக்கப் போறா!'' என்று கீர்த்தி சிரிக்க,

''கீர்த்திக்கா... ச்சே... கீர்த்தி அண்ணி... யூடூ... ஹ்ம்ம்... ஹ்ம்ம்...'' என்று சிணுங்கினாள் மைவிழி.

அவர்கள் இருவரும் வெளியே சென்றதும், ''கிழடு கட்டையே... ரூமைப் பார்த்துப் போகும் போது... நீ என்ன பண்றே இங்கே? வா ஒஜோ! நாமளும் போலாம்!'' என்று நிஷாந்த், கண் சிமிட்ட.

''கொன்னுடுவேன் கொன்னு! நேத்து நைட் போட்ட ஆட்டமெல்லாம் பத்தாதா? ஒழுங்கு மரியாதை... வேலைக்குக் கிளம்புற வழியைப் பாருங்க!'' என்றாள் அவள். கையிலிருந்த கத்தியை இப்படியும் அப்படியுமாய் ஆட்டி.

''வேலைக்கா? ஹோ...நோ! நா போக மாட்டேன்!'' என்று ஏகத்திற்கும் அதிர்ந்து நின்றாள் நிஷாந்த்.

''ஏன் போக மாட்டே? வேலைக்குப் போகாம... வீட்டில உக்காந்து வீடியோகேம் ஆடலாம்ங்கிற நினைப்பா? பிச்சுடுவேன் பிச்சு... அந்த வீடியோ கேம் பாக்கை

தூக்கி... டொனேட் பண்ணிடுறேன்!'' என்றாள் மைவிழி மீண்டும்.

''ஒஜோ! இதெல்லாம் பெருத்த அநியாயம் சொல்லிட்டேன்!'' என்றவன், ''சரி போ... நா வேலைக்குப் போறேன்... ஆனா... வீடியோ கேம் மேல கை வைக்கக் கூடாது!'' என்றான் ஒரு விரல் நீட்டி.

''ஹ்ம்ம்... ஹ்ம்ம்...'' என யோசித்த மைவிழி.

''இந்தக் காயை வெட்டி வச்சுட்டுப் போங்க... அப்புறம் பாக்கலாம்!'' என்றபடியே, கையிலிருந்தக் கத்தியையும்... அங்கிருந்த காரெட் மற்றும் பீன்ஸையும் அவனிடம் கொடுத்தாள்.

''ம்ம்... ம்ம்...'' என்று அழுது கொண்டே அவன் காய் நறுக்க.

''அங்க என்ன சத்தம்? சும்மா ஊழு... ஊளுன்னுட்டு இருந்தீங்கன்னா... பத்து வெங்காயம் உரிச்சு... பொடியா நறுக்கணும் சொல்லிட்டேன்!'' என்றாள் கட்டளையாக.

அதன் பின், அய்யா கப்-சிப் கந்தசாமி ஆகிவிட்டார்!

ஒருவழியாய், மைவிழி சமையலை முடித்து விட்டு, குளிப்பதற்காக அவர்களது அறைக்குள் நுழைய,

நம்பியாரைப் போல் கையைப் பிசைந்தவன், ''இருமவளே... என்னய்யா காய் நறுக்க வச்சே... வெயிட் டீஸ்..'' என்று கருவிக் கொண்டே கட்டிலில் அமர்ந்திருந்தான்.

குளித்து முடித்து வெளியே வந்த மைவிழி, கப்போர்டைத் திறந்ததும் அப்படியே அதிர்ந்து போய்விட்டாள்.

பின்னே... கப்போர்டிலிருந்த அவளது துணி முழுதிலும் வெங்காயத் தோல் போர்வை போர்த்தப்பட்டிருந்தது!

திறந்த வேகத்தில், அவையனைத்தும் பறந்து வர, ரூமே ஒரே வெங்காயத் தோல் மயம்!

''அச்சோ!... என்ன நிஷான் இது? உங்க வேலையா? ச்சை... ஏன் நிஷூ இப்படிச் செய்றீங்க? ஐயோ... ரோஜா செடிக்குப் போடுறதுக்காக எடுத்து வைச்சிருந்த தோலை எல்லாம் இங்க கொண்டு வந்து... உங்களை...'' என்று அவள் துரத்திக் கொண்டு ஓடி வர.

''நிஷாந்த்... நோ எஸ்கேப்!'' என்று கத்திய நிஷாந்த், மின்னல் வேகத்தில் மைவிழியை பின்னாலிருந்து தூக்கினான்.

''எஸ்கேப்...'' என்று கத்தாமல்,

''நோ எஸ்கேப்'' என்று அவன் கத்தியதிலேயே, அவன் செய்யப் போகும் காரியம் புரிய.

''நிஷான்... நோ! நான் குளிச்சுட்டேன்!'' என்று அவள் அலற, அவனோ தண்ணீர் எனும் பன்னீர் தெளித்த அவளது ரோஜா மேனியை ஆரத் தழுவி, கட்டிலில் சாய்த்தான்!

''நிஷூ... நோ... நீ பல்லு கூட விலக்கலை தானே...'' என்று மைவிழி முகத்தைத் திருப்ப.

''ஹே ஒஜோ! நீ தான் பல்லு விலக்கிட்டே இல்ல... அப்போ... நீ பிளஸ்... நா மைன்ஸ்... பினஸ் மைன்ஸ் ஒண்ணா சேர்ந்தா... பிளஸ்...''

"லூசு மைனஸ்..."

"ஹோ... ஆமா இல்ல... பரவாயில்லை... எப்படியும் நீ இன்னொரு வாட்டி குளிப்பே... அப்போ பல்லையும் சேர்த்துக் குளிக்க வச்சுடு..." என்ற நிஷாந்த், பிளஸை மைனஸாக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

இதற்கு மேல் ஒன்றும் சொல்வதற்கில்லை என்பதாலோ என்னவோ, மைவிழியின் கரங்கள் நிஷாந்தின் முதுகில் படர்ந்து அவனை இறுக அணைத்தன!

ஒரு நிமிடமோ... இரண்டு நிமிடமோ... நிமிடங்கள் எண்ணிக்கையின்றிக் கரைய.

"ஹே ஒஜோ! ஒரு முக்கியமான விஷயம்!" என்று நிமிர்ந்தான் நிஷாந்த்.

"ஹ்ம்ம்... என்ன..." என்ற மைவிழிக்கு, அந்த முத்தம் கொடுத்த மயக்கம் இன்னமும் தெளிந்த பாடில்லை. கைகள், தன்னை விட்டு அரையடியே விலகியிருந்த நிஷாந்தின் டி-ஷர்ட் காலரைப் பிடித்து இழுத்தன.

"ஹ்ம்ம்... சொல்றதைக் கேளு... பல்லைக் குளிக்க வைக்கும் போது... சோப்பெல்லாம் போடக்கூடாது சரியா? வேணும்ன்னா... சாமான் கிளீன் பண்ற டிடர்ஜென்ட் தரேன்... அதை யூஸ் பண்ணிக்கோ!" என்று நிஷாந்த் சொல்ல,

"உங்களை... என்ன நேரத்தில... எதைப் பேசுறீங்க..." என்று பல்லைக் கடித்த மைவிழி, அவனை இழுத்து வைத்து, ஒரு உம்மா கொடுத்தாள்! உண்மையாக!

அதன் பின், நேரம் நேரம் போல் செல்லாமல்... காற்றாய்க் கரைந்து போனது!

அவளுள் கரைந்து போன நிஷாந்த், மெல்ல அவளை விட்டு விலகி, அவளது வலப்பக்கம் படுக்க, அந்த நேரம் பார்த்து... ஓர் வெங்காயத் தோல் வந்து... அவளது வலது தோளில் அமர்ந்தது!

சட்டென, ஒருக்களித்துப் படுத்த நிஷாந்த், அவளது கழுத்து வளைவில் ஓர் முத்தத்தை வைத்த கையுடன், அதை அப்புறப்படுத்தினான்.

அவனது முத்தம் பதிந்த இடம், அவளது மேனியில் பட்டுப் போன இடம் அல்லவா?!

முத்தம் பதித்த அவனுக்கு எப்படி இருந்ததோ! மைவிழிக்கு... அருவெறுப்பாய் இருந்தது!

நொடிப்பொழுதில், அவனைத் தள்ளிவிட்டவள், "வேணாம் நிஷூ... எனக்கு ஒரு மாதிரி இருக்கு!" என்றாள் குரல் இறுக.

"ஹே என்ன ஒஜோ! ஏன்?" என்ற நிஷாந்தின் உதடுகள், வலுக்கட்டாயமாக அவளது வலது கை முழுதும் வலம் வந்தன.

"ப்ச்... விடு நிஷூ..." என அவள் தள்ளிவிட முயல, அவன் பிடிவாதமாய் தன் இதழ் ஒற்றலைத் தொடர்ந்தான்.

"உனக்கு ஒரு மாதிரி இல்லையா? எவ்வளவோ இடம் இருக்கையில... இங்க ஏன்... விடு..." என்றவள், அவன் கழுத்தைப் பற்றி மேலே இழுக்க முயன்றாள்.

அவனும் அவள் இழுப்புக்கு ஆட்பட்டு வந்தான். வந்தவனின் உதடுகள் அவள் நெற்றியை ஈரமாக்கியப் பின்னர், பேசத் துவங்கின.

"உனக்கு என்ன ஒஜோ... பிரச்சனை? ஜஸ்ட் லீவ் தட் ஒஜோ... நீ ஏன்... அதைப் பத்தின நினைப்போடவே இருக்கே? ஜஸ்ட் லீவ் இட்! மறந்திடு! மறந்திடு! மறந்திடு!" என்றவன், கைகளைச் சுற்றி சுற்றி அவளை வசியப்படுத்த முயன்றான்.

அறிவுரைப் பட்டியல் என்ற பெயரில் அவளை... இம்சை செய்யாமல், தன் தொடுகையாலேயே... அவளுக்கு ஒன்றுமில்லை என்பது போல் நடந்து கொண்டவன், தான் அவளுள் புதைந்து... அவளைத் தன்னுள் தேட வைத்தான்!

ஆம், நிஷாந்த் மைவிழியின் கருகிய பாகங்களின் மீது பரிதாபப் பார்வையும் வீசவில்லை... அதை சகித்துக் கொள்வதால் தான் பெரிய புத்தன் என்றும் பறை சாற்றவில்லை!

முகம் திருப்பாதப் பார்வை... கொஞ்சி மகிழும் உதடுகள்... அணைத்தே வைத்திருக்கும் கரங்கள்... காதல் பெருகும் கண்களுமாய்... அவளுக்கே அவள் குறை நினைவில் வராத படி மறக்கடித்தாள்!

அடுத்தக் கட்டக் கூடலுக்குப் பின்னர், மைவிழியின் மடி மீது தலை வைத்துப் படுத்துக் கொண்டவன், மல்லாக்கப் படுத்துக் கொண்டு மைவிழியின் முகத்தையே இமைக்காது பார்த்தான்.

"என்ன செல்ல நிஷூ பேபிக்கு என்ன வேணும்?" என அவள் கொஞ்ச,

"ஒஜோ... இன்னைக்கு... குரு அவரோட அம்மாட்ட பேசினதில இருந்து ஒரே பளிச்ன்னு இருக்கார் இல்ல... எனக்கும் எங்கம்மாவைச் சீக்கிரம் பார்க்கணும் போல இருக்கு?" என்றான் ஏக்கமாய்.

"என்ன நிஷூ இது? ஒரு நிமிஷம்... ரெமோ மாதிரி ஹீரோயிசம் காட்டிட்டு... அடுத்த நிமிசம் இப்படி அம்மு பாப்பா மாதிரிப் பேசுறீங்க..." என்று மைவிழி, சற்றே வருத்தத்துடன் கேட்க.

"ஹே நிஜமா?" என்றான் நிஷாந்த், உறுதியாக.

"ப்ச்... நிஷூ!" என மைவிழி ஏதோ சொல்லத் தொடங்க.

"இல்ல மைய்யு! கீரத்துக்கு கேர்ள் பேபி தானாம்... சோ அம்மா தான் வராங்க! அவங்க வந்ததும்... நான் ஒரே ஜாலி ஆகிடுவேன்!" என்றவனின் கண்களில் ஏகப்பட்ட கனவு!

அதில் மயங்கியவளாய், தன் மடியில் படுத்திருந்த வனின் முடியை அவள் களைத்து விளையாடியவள்.

"நாமளும் சீக்கிரமே பேபி பெத்துக்கலாம் நிஷூ..." என்றாள் மைவிழி, ஆசையாக.

"ஹோ... பெத்துக்கலாமே... அதுக்கு சில முன்னெச் சரிக்கை நடவடிக்கை எடுக்கணும்... இப்ப எடுக்க லாமா?" என்றவன் குறும்புடன் அவளது முகம் நோக்கி எழு.

"ஏய்... வேணாம்... ஓடிப் போ!" என்றாள் அவள் வேக மாய் அவனை விலக்கி!

வாழ்க்கை வேகமாய் செல்லத் தொடங்க, கீர்த்தியின் ஏழாம் மாசத்தில், மைவிழியின் வயிற்றில் ஓர் குழந்தை ஜனித்தது!

பூச்சரத்தில் கோர்க்கப்படும் அடுத்த பூ - ஜனனம்!



18

குடும்பமே சந்தோஷத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தது!

கீர்த்தியின் குழந்தை உதித்த நேரம். அடுத்தடுத்த நல்ல சேதிகளாய்க் கேட்கவும், அங்கே ஆனந்தத்திற்கு அளவே இல்லாமல் போனது!

அதிலும், நிஷாந்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்!

மருத்துவரிடம் சென்று உறுதி செய்து கொண்ட வந்த நாள் தொட்டு, மைவிழியை ஒரு வழி பண்ணிக் கொண்டிருந்தான்.

தமக்கையிடம் கேட்க முடியாத கேள்விகள் எல்லாம் தாரத்திடம் கேட்டார்கள்.

"ஏன்... ஒஜோ? நம்ம பாப்பாக்கு... என்ன மாதிரி சாக்கி பிடிக்குமா? உன்னை மாதிரி ஐஸ்கிரீம் பிடிக்குமா?" என்பதில் தொடங்கி.

"இன்னைக்கு... பாப்பாக்கு ஃபார்ட்டி டேஸ் ஆகிடுச்சு... இந்த ஃபார்ட்டி டேஸ்ல என்ன எல்லாம் வந்திருக்கும் தெரியுமா?" என்று பட்டியல் போட்டு,

"ஹ்ம்ம்... எப்பவுமே நாம பாப்பாவா இருக்கும் போது எவ்வளவு பெருசா கண்ணு இருந்துச்சோ... அதே அளவு

தான் எல்லா நாளும் இருக்குமாம்! நீ பிறந்தப்போ... உனக்கு முகமெல்லாம் கண்ணாவே இருந்துச்சா ஒஜோ? ஏன்... கேட்கிறேன்னா... ஓவர் சைஸ் முட்டைக்கண்ணா இருக்கே... அதான்!" என்று அவளிடம் அடி வாங்கி,

"பாப்பாக்கு... என்னை மாதிரி மூக்கு வந்தா நல்லா இருக்கும் இல்ல..." என்று சற்றே ஏங்கி,

"அப்புறம்... குரு மாதிரி நல்ல பெரிய நெத்தி..." என்று ஆரம்பித்து,

"ஹோ... குருவோட ஜீன்ஸ் வர சான்ஸ் இல்லையில்ல... சரி பரவாயில்லை... நம்ம பப்பி குட்டிக்கு, அப்படி வந்தா ஓகே!" என்று சமாதானம் அடைந்து,

"ஒஜோ! இனிமேல்... நீ நல்லா பாப் சாங்க்சா கேளு ஓகேவா? எனக்கு... நம்ம பாப்பாவைப் பாப் சிங்கர் ஆக்கணும்ன்னு ஒரே ஆசை!" எனத் தன் ஆசையை வெளியிட்டு என்று, மைவிழியைத் திணறடித்துக் கொண்டிருந்தான்.

"ஏன் ஒஜோ? பாப்பா வளர... வளர... உன்னோட வயிறு வளந்திடும் தானே? ஒரு வேளை... வளராமப் போச்சுன்னா என்ன ஒஜோ செய்றது?" என்று அவன் தீவிரமாய்க் கேட்கவும்.

"ஹான்... குழந்தையை எடுத்து உங்க வயத்துகுட்ரான்ஸ்பர் பண்ணிடுகிறேன்... நீங்க வளத்துக் கொடுங்க!" என்று அவனது குமட்டில் ஓங்கிக் குத்தினாள் மைவிழி.

"ச்சே... அப்படி மட்டுமிருந்தா நல்லா இருக்கும்ல... நீ மட்டும் எல்லா பெயினையும் எடுத்துக்க

வேண்டாமே...'' என்று அவன் ஆதங்கப்பட, மைவிழிக்கு உருகிவிட்டது.

''என் செல்ல நிஷூ... பையா! எனக்கு ஒண்ணும் கஷ்டமே இல்லைடா கண்ணா! என்னோட வாழ்க்கையில இப்படியொரு நாள் வருமான்னு நான் நினைச்சதுக்கு மாறா... என்னை எவ்வளவு சந்தோஷமா வச்சிருக்கே?!'' என்றவளின் குரல் அடைத்தது.

''ஒஜோ... லீவ் திஸ்...'' என்றவனைக் கையமர்த்தியவள்.

'இல்ல நிஷூ... நா சொல்லியே ஆகணும்! எனக்கு நடந்த ஆக்ஸிடென்டுக்கு அப்புறம்... எனக்கு ஒரு சாதாரணமான குடும்ப வாழ்க்கை அமையும்ன்னு நான் நினைச்சுக் கூடப் பார்த்ததில்ல... அப்படியே நடந்தாலும். எங்கப்பாக் கொடுக்கிற வரதட்சணைக்கு உட்பட்டு தான் நடக்கும்ன்னு தோணுச்சு! அப்படி நடக்கிற கல்யாணத்தில... ஒண்ணு என்னைக் கேலிப் பொருளா பார்த்துக் குத்திக் கிழிப்பாங்க... இல்லை என் மேல பரிதாபப்பட்டு வாழ்க்கை நடத்துவாங்கன்னு தான் நினைச்சேன்! என்ன செய்றது... நம்ம விதி அப்படின்னு மனசையும் தேத்திப்பேன்!'' என்றவளின் குரலில் அப்படியொரு வலி.

ஆனால் அந்த வலியெல்லாம் மாயம் என்பது போல், சட்டென முகம் பிரகாசிக்க ''பட் நிஷூ... நீ என் வாழ்க்கையை எவ்வளவு அழகா மாத்தி இருக்கே தெரியுமா? ஐ ஜஸ்ட் லவ் யூ... மேன்! என்னோட குறையை அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு... தியாகம் பண்றேன்னு உன்னோட லவ்வை நான் கொச்சைப் படுத்த விரும்பல!

என்னை ஒரு நார்மல் பெர்சனா ட்ரீட் பண்ற... உன்னோட லவ் சூப்பர் ஸ்பெஷல் தெரியுமா? ஐ லவ்... யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ!'' என்றவள், தன் வயிற்றில் உதிக்காத செல்லப் பிள்ளையை, தன் வயிற்றில் இருக்கும் முத்து பிள்ளையுடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள்.

அவளது கதகதப்பில் சற்று நேரம் மயங்கி இருந்தவன். ''சும்மா... ஐ லவ் யூ சொல்லி எஸ்கேப் ஆக முடியாது ஒஜோ பேபி!'' என்றான் அவளிடமிருந்து முகத்தை நிமிர்த்தி.

அவனது கன்னங்கள் இரண்டையும் இரு கைகளாலும் பிடித்துக் கிள்ளியவள் ''அப்புறம்... என்ன செய்யணும்?'' என்றாள் சிரிப்புடன்.

''நீ சொன்ன ஒரே ஒரு ஐ லவ் யூக்கும்... ஒரு உம்மா வேணும்! அதுவும்... ஆர்டினரி உம்மா எல்லாம் ஒத்துக்க முடியாது! ஸ்பெஷல்... வி.ஐ.பி உம்மா தான் வேணும்!'' என்றவனின் உதடுகள் குவிந்து நின்று, வி.ஐ.பி உம்மாவிற்குத் தயாராகின.

மைவிழியும், மறுக்காது அவனைச் சிறப்பு விருந்தினர் கவனிப்புக்கு உள்ளாக்கினாள்.

வாழ்வில் இதை விடவும் வேறென்ன வேண்டும் என்பது போல், மைவிழியின் சந்தோசம் விண்ணை முட்டியது!

ஒருவேளை, அந்த ரமேஷ் செய்த கொடூரச் செயல் கூட... தனக்கு இப்படியொரு நல்ல வாழ்வு கிடைப்பதற்கான கடவுளின் விளையாட்டு தானோ என்றெண்ணினாள் அவள்!

அன்பைப் பொழியும் உறவுகள்... காதலை அள்ளி வீசும் ஆனந்தக் கண்ணனாய்க் கணவன்.. வாரிசுக்கு ஒரு பிள்ளை... வளம் சேர்க்கப் படிப்பு... இதற்கு மேல் வாழ்வில் என்ன வேண்டும்?

நிம்மதியும் சந்தோஷமாய்... காலம் முழுதும் என் கணவனுடன் வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையைத் தவிர, அவளிடம் வேறெந்த வேண்டுதலும் இருக்கவே இல்லை! அக்குடும்பத்தின் சந்தோஷத்தின் மீது யார் கண் பட்டதோ? இல்லை, இன்னமும் உங்களது சோதனைக் காலம் முடியவில்லை என்ற கடவுளின் விளையாட்டோ? இல்லை... இதை விடவும் ஓர் மிகப் பெரிய சந்தோசம் உங்களுக்காய்க் காத்திருக்கிறது... அதற்கு உங்களைத் தயார் செய்வதற்கானப் பரிசோதனை என்ற விதியா? எதுவோ ஒன்று, பலித்தது!

ஒரு நாள், மதியம் மூன்று மணிக்கு... நியூஸ் நிஷாந்தின் கைப்பேசிக்கு ஓர் புது எண்ணிலிருந்து அழைப்பு வந்தது!

ஓர் முக்கியமான, டாக்ஸ் ஃபார்மேஷன் வேலையில் இருந்தவர், அதை முதலில் எடுக்கவில்லை. எதிரே ஓர் வாடிக்கையாளர் வேறு அமர்ந்திருந்தார்.

தொடர்ந்து இரண்டாம் முறையும் அந்த அழைப்பு வரவே, ''ஏதோ அவசரம்!'' என்று மனதில் பட, சட்டென அதை எடுத்து காதில் வைத்தான்.

''நிஷாந்த் ஸ்பீக்கிங்!'' என்ற அவனது அறிமுகத்தை முடிக்கும் முன்னர்.

''நிஷாந்த்... நான் மைவிழியுடைய நண்பன் பேசுகிறேன்!'' என்று ஆங்கிலத்தில் அறிமுகம் செய்தது ஒரு குரல், அவசரமாய்.

''ஹோ. சொல்லுங்க!'' என்ற நிஷாந்தின் தலையில் ஓர் இடி விழுந்தது!

நிஷாந்தால், அவன் கேட்டதை நம்பவே முடிய வில்லை!

ஆனால், பேசிய குரலில் தென்பட்ட பதட்டமே அவனை அசைத்துப் போட, தன் எதிரே அமர்ந்திருந்த வாடிக்கையாளரிடம், தன் நிலைமையை எடுத்துக் கூறியவன், முக்கால் வாசி முடிந்திருந்த வேலையை பிரவீனிடம் கொடுத்துவிட்டு, அரக்கப் பறக்க ஓடினான்.

போகும் வழியிலேயே, கிருஷ்ணனுக்கு அவன் அழைத்து விவரம் சொல்லிவிட, அவன் அங்கே போவ தாய் கூறி, கைப்பேசியை வைத்தான்!

நிஷாந்தின் கார் அடுத்து நின்றது. அங்கிருக்கும் ஓர் மருத்துவனையில்!

அங்கே கிருஷ்ணனைக் கண்டதும், ''என்னாச்சு குரு? ஒஜோ எங்க?'' என அவன் பதற,

''நிஷான்! பதறாதே! ஒண்ணுமில்லை... அவளுக்கு... அவளுக்கு ஒண்ணுமில்லை...'' என்றான் கிருஷ்ணன், எதையோ மென்று விழுங்கி.

''இல்லை... கிளாஸ் நடந்திட்டு இருக்கும் போது... பயங்கர வலி வந்து... கத்தினான்னு சொன்னாங்களே... உடனே மயங்கியும் விழுந்துட்டாளாம்... என்ன குரு... என்னன்னு சொல்லுங்க!'' என்று அவன் அவசரப்பட,

''நிஷான்... ஜஸ்ட் ரிலாக்ஸ்... அவளுக்கு... ஹ்ம்ம்... அபார்ட் ஆகிடுச்சு நிஷான்...'' என்றான் குரு. உள்ளே சென்றுவிட்ட குரலில்.

''வாட்ட்ட்ட்!!!!!!!!!!!!!!!!!!'' - அதிர்ந்து நின்ற நிஷாந்திற்கு, இதயம் தன் இயக்கத்தை நிறுத்தி விட்டது போல், காற்று உள்ளே செல்ல மறுத்தது!

''எப்படி குரு... அவ தேர்ட் மந்த் கிராஸ் பண்ணிட்டா தானே? அப்புறம் எப்படி? நாலாவது மாசம் ஸ்டார்ட் ஆகிடுச்சு எப்படி குரு... அபார்ட் ஆகும்? ஹோ காட்!'' என்று அவன் தன்னிலை மறந்து அரற்ற.

''தெரியலையே நிஷான்! வெயிட் பண்ணலாம்... டாக்டர் வரட்டும்!'' என்றான் கிருஷ்ணன். அவன் தோளைச் சுற்றிக் கைபோட்டு.

ஒரு நிமிடம் அமைதியாய் இருந்த நிஷாந்த், ''குரு... கீர்த்துட்டச் சொல்லலை தானே? அவ... இந்த நேரத்தில பதறக் கூடாதே... இந்த வீக்ல எப்பனாலும் டெலிவரி இருக்கலாமன்னு டாக்டர்ஸ் சொல்லியிருக்காங்க இல்ல... அவட்ட சொல்ல வேண்டாம் குரு!'' என்று தவிக்கவும், கிருஷ்ணனின் கண்கள் கலங்கிவிட்டன.

மலை போன்ற துன்பம், தன் முன்னே இருந்த போதும், அது... தன் தமைக்கையைப் பாதித்து விடக் கூடாது என்றெண்ணும் இவனது பாசத்திற்காகவேணும்... இந்த குழந்தை நன்றாக இருந்திருக்கக் கூடாதா? ஏன் கடவுளே! என அவனும் நெஞ்சை அடைத்தது!

அதை முயன்று சரி செய்து கொண்டவன், ''இல்ல நிஷான்... சொல்லலை! அப்பா... அவளோட இருக்கிறதால... அவங்ககிட்டயும் சொல்லலை...'' என்றான்.

''ஹ்ம்ம்... ஆனா... ஏன் குரு? ச்சை... நானும் ஒஜோவும் எவ்வளவு சந்தோஷமா இருந்தோம் தெரியுமா?

பச்ச்...!!!'' என்றவனின் கண்களில் நீர் கோர்த்து விட்டது.

''ஷ்... நிஷான்! என்ன கண்ணா...'' என்று கிருஷ்ணன் அதட்டியதற்கு மாறாய்.

''என்னால முடியலையே குரு... இங்க வலிக்குதே...'' என்று நெஞ்சை அழுத்திவிட்டுக் கொண்டவன். சட்டெனக் கிருஷ்ணனை கட்டிப் பிடித்து அழத் தொடங்கி விட்டான்.

''டேய்... கண்ணா! என்னடா இது... உனக்கும் மைவிழிக்கும் இன்னும் காலமிருக்குடா! இந்தக் குழந்தை இல்லைன்னா என்ன? கூடிய சீக்கிரமே... இன்னொண்ணு! ஜஸ்ட் ரிலாக்ஸ்... நிஷான்!'' என்று அவனை ஆறுதல் படுத்திய கிருஷ்ணன்.

''நீயே இப்படி அழுதா... மைய்யு ரொம்ப ஒடைஞ்சு போய்டுவா நிஷான்... ப்ளீஸ்... கண்ணா...'' என்று அவனைச் சமாதானம் செய்தான்.

''எனக்கு அவளை நினைச்சா தான் குரு... அழுகையே அதிகமாகுது! அவ எப்படி... இதைத் தாங்குவாளோ!'' என்று அரற்றினான் நிஷாந்த்.

''மைய்யுக்கு மனவலிமை ரொம்ப ஜாஸ்தி... நிஷான்! கவலைப்படாதே...'' என்று தேற்றிய கிருஷ்ணனுக்கு. ஓர் தாயின் உணர்வுகளைக் கணிக்கும் திறன் இருக்க வில்லை போலும்!

மருத்துவர்கள் வந்து, மைவிழி கண் விழித்து விட்டதாகச் சொன்னதும். நிஷாந்தை உள்ளே அனுப்பிவிட்டு, வெளியே காத்திருந்தான் கிருஷ்ணன்.

கால்கள் தன் உயிராகிப் போனவளைப் பார்க்க ஓடியபோதும், மனம் அவளைப் பார்க்கும் திராணியில்லாமல் திணறிப் போனது!

மனம் பின்னே செல் என்று பயமுறுத்த, காதலோ வேக எட்டுக்கள் வைத்து அவனை வழி நடத்திச் சென்றது!

உள்ளே சென்றவனை, ''நிஷூஷூஷூஷூஷூ... என்னால முடியலையே! ஐயோ... ஐயோ!'' என்ற வேதனை அரற்றல் புரட்டிப் போட்டது!

''ஒஜோ!'' என இவனும் ஓட,

கட்டிலில் படுத்திருந்த மைவிழி, இரு கரம் நீட்டி அவனை எட்டிப் பிடித்தாள்.

''ஏன்... நிஷூ... ஏன் இப்படி ஆகிடுச்சு? எனக்கு அழுகையா வருதே!'' என்றவள், விக்கி வெதும்பி அழத் தொடங்கினாள்.

''ப்ளீஸ் ஒஜோ! ஒண்ணுமில்லைடா... எதுக்கு இப்படி அழறே? வேணாம் கண்ணம்மா!'' என்று தேற்றிய நிஷாந்தின் கண்களிலும் கண்ணீர் நிரம்பி வழிந்து கொண்டே இருந்தது.

''நிஷூ... ஏன் நிஷூ... ஏன் இப்படி? காலையில நல்லா தான் இருந்தேன்... திடீர்ன்னு... எப்படி... ஹய்யோ... முடியலையே! நிஷூ! எனக்கு என்னோட குழந்தை வேணும்!

எனக்கு... என்னோடக் குட்டி நிஷான் வேணும்! என்னோடச் செல்லக் கண்ணன் வேணும்! வேணும்! வேணும்!'' என்று வெறி கொண்டு கத்தினாள் மைவிழி.

நிஷாந்தால் பதிலே பேச முடியவில்லை!

ஒன்றும் சொல்லாமல், அவளையே அவன் கண்ணீருடன் பார்த்திருக்க,

''என்னால முடியல... நிஷூ!'' என மீண்டும் தேம்பினாள் மைவிழி.

''நாம... இந்தக் குழந்தையை எவ்வளவு ஆசையா எதிர்பார்த்தோம்! ஏன் நிஷூ... இப்படி ஆச்சு?'' என்றாள். தனக்கு நடந்த விபத்தை ஜீரணிக்க முடியாமல்.

அதற்குள் அங்கு வந்த செவிலியப் பெண்மணி, ''உங்களுக்கு ஏற்கனவே அதிகமான உதிரப்போக்கு இருக்கிறது. அதனால்... பேசாமல் படுத்துத் தூங்குங்கள். மிசஸ். நிஷாந்த்!'' என்றார் கனிவாய்.

வேதனையை முழுங்கிக் கொண்டு ''சரி'' என்று தலையசைத்த மைவிழியால், என்ன முயன்றும் கண்ணீரை அடக்க முடியவில்லை.

கண்ணில் இடமில்லாமல், கன்னம் தாண்டி, கழுத்தில் ஓடிக் கொண்டிருந்த கண்ணீரை மெல்லத் துடைத்த நிஷாந்த், ''வலிக்குதா... ஒஜோ?'' என்றான் அவன் வேதனையே வடிவாய்.

''ம்ம்ம்... ரொம்ப...'' என்று அவள் கூறியபோதே, உதடு பிதுங்கி, வலியில் முகம் வெளுத்தது.

அந்தக் குரலுக்குச் சமாதானம் சொல்லும் தைரியம் சிறிதுமில்லாமல் போக. அவளது முகத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்ட நிஷாந்த். அவள் உச்சியில் இதழ் ஒற்றி நிமிர்ந்தான்.

பல நிமிட அணைப்பிற்குப் பின்னர், அவளை விடுவித்த நிஷாந்த் அதிர்ந்து போனான்!

அவளது முகத்தை ஏந்தி நின்ற அவனது கைகளில், அவளது முகம் சிலையென இருந்தது!

அதில் எந்த அசைவுமில்லை!

கண்ணில் கண்மணிகளின் ஓட்டமில்லை!


"ஒஜோ!!!!" என்ற அவனது அழைப்பிற்கு பதிலுமில்லை!

"ஒஜோ! என்னம்மா... என்ன செய்யுது? கண்ணைத் திறந்து பாரு!" என்று அவன் பதறியதற்கு, அங்கே அசைவுமில்லை!

சட்டென, அவளை நெஞ்சோடு இறுக்கிக் கொண்டவன், "ஒஜோ!!!!" என்று அலறியதற்கும் அங்கே எதிரொலியில்லை!

நிஷாந்தின் உயிரோட்டம் அங்கே நின்றது!

பூச்சரத்தில் சேரும் அடுத்த பூ - வலி!



19

நிஷாந்தின் இதயம், தன் இயக்கத்தை நிறுத்தி, "ஒஜோ!!!!!!!!" என்று அலறிய நொடி.

மைவிழியின் தலை மெல்லச் சரியத் தொடங்கியது!

"மைய்யு... என்னடா... ஒஜோ... என்னம்மா... என்னைப் பாரு..." என அவன் பதற.

கிருஷ்ணன் உள்ளே ஓடி வந்தான்.

வந்தவனின் கண்களில், மைவிழியின் விழிகள் மேலே சொருகிக் கிடப்பது... அவள் பேச்சு மூச்சின்றி... மயங்கிக் கிடப்பதும் பட, வேகமாய் மருத்துவ உதவிக்கு ஓடினான்.

நிஷாந்திற்கு... அவளிடம் அசைவில்லை என்பதிலேயே பாதி உயிர் போய்விட, அவனால் அதற்கு மேல் என்னவென்று சிந்திக்கவே முடியவில்லை!

"ஹய்யோ... ஹய்யோ..." என்று மனம். அதிலேயே பதறிக் கொண்டு நின்றது!

மருத்துவரை அழைத்துக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் சிறிதுமில்லாமல், மைவிழியின் முகத்தைக் கையில் ஏந்திக் கொண்டு, "ஒஜோ... என்ன ஒஜோ... எழுந்திரு! என்னை விட்டுப் போயிராத ஒஜோ... ப்ளீஸ்... கெட் அப்..." என்று கத்திக் கொண்டிருந்தான் அவன்.

அவனைச் சொல்லியும் ஓர் புண்ணியமும் இல்லை! அவன் வளர்ந்த விதம் அப்படி!

சிறு வயது முதல்... துன்பம் என ஒன்று வந்தால்... அதற்கு விடிவென்று ஒன்றை தர அவனுக்கு யாரேனும் வேண்டும்! சரியாக செல்ல வேண்டும் என்றால்... அவனை வழி நடத்திக் கூட்டிச் செல்ல கிருஷ்ணன் வேண்டும்!

தானாய் ஓர் பாதை அமைத்துக் கொண்டு நடக்கத் தெரியாத சிறு பிள்ளை அவன்! அவன் கையைப் பிடித்து... யாரேனும் கூட்டிச் செல்ல வேண்டும்! இல்லையேல்... "இதுதான் பாதை... நட!" என வழியாவது காட்டிக் கொடுக்க வேண்டும்!

மனிதர்கள் பலவிதம் என்கையில்... ஆண்கள் அனை வரும் மட்டும் தீர்க்கமான முடிவெடுக்கும் சீமான்களாய் இருக்க வேண்டும் என்று அர்த்தமில்லையே! பிறரது வழிகாட்டலில் வாழும் ஆண்களும் இருக்கின்றனரே! நிஷாந்த் போல!

அது தான், இப்போதும் நடந்தது!

மைவிழியின் பேச்சு மூச்சற்ற நிலை... அவனைக் கலங்கடித்தது!

என்ன செய்வது... எது செய்வது என்ற யோசனைக்கே மூளை செல்லாமல், ''ஐயோ... நடந்து விட்டதே!'' என்பதிலேயே கலங்கி நின்றது!

ஆனால், நிலைமையைக் கையில் எடுத்துக் கொண்ட கிருஷ்ணன். மருத்துவரை அழைத்து வந்தான்.

மின்னல் வேகத்தில் உள்ளே நுழைந்த மருத்துவர்கள். மைவிழியை நிஷாந்திடம் இருந்து பிரித்து எடுத்தனர்.

''நீங்கள் இருவரும் வெளியே இருங்கள்!'' என்று செவிலியப் பெண் சொல்ல.

நிஷாந்தின் கால்கள் அங்கிருந்து நகர மறுத்தன.

கிருஷ்ணன் தான், ''நிஷான்... வா...'' என்று அவனை வலுக்கட்டாயமாக வெளியே அழைத்துச் சென்றான்.

''குரு... என்ன குரு... ஒஜோ என் இப்படி இருக்கா... ஐயோ விடுங்க குரு! எனக்கு அவ வேணும்... அவ இல்லாம என்னால... ஐயோ... விடுங்க குரு!'' என்று நிஷாந்த், கிருஷ்ணனின் பிடியிலிருந்த கையை வெளியே எடுத்துக் கொள்ள முயற்சி செய்ய.

''அவளுக்கு ஒண்ணுமில்லை. சும்மா இரு!'' என்று ஓங்கி ஓர் அதட்டல் போட்டான் கிருஷ்ணன்.

அதில் திகைத்த நிஷாந்த், ''என்ன குரு... அவ... அவ... மூச்சே வர மாதிரி...'' என்றான் கலங்கிய விழி களால், மைவிழி இருந்த அறையைத் துலாவி!

ஆழ மூச்செடுத்துக் கொண்டு, தன்னை நிதானப் படுத்திய கிருஷ்ணன். ''நிஷான்!!!!!!! ப்ளீஸ்! சும்மா இரு!!!'' என்றான் கோபமாக.

நிஷாந்த் அதிர்ந்து நோக்கும் போதே, ''நீ பதறப் பதற... அவளுக்கு சரியாகிடும்ன்னு நினைக்கிறியா என்ன? நீ பதறி... நிலைமையை இன்னமும் காம்ப்ளிகேட் ஆக் குறே! புரிஞ்சதா?'' என்றான் கிருஷ்ணன். அடக்கிய கோபத்துடன்.

''குரு!!!!!!!''

''ஆமா... நிஷான்! உன்னோட பலவீனத்தை அவ கிட்ட காட்டக் காட்ட... அவ அழத் தான் செய்வாள்! ஐயோ... இவனுக்காக அட்லீஸ்ட் குழந்தை இருந்திருக்கக் கூடாதான்னு மனசு கிடந்துத் தவிக்கும்! அதுவே... அவளைச் சீக்கிரம் ரிகவர் ஆகவிடாது! சோ... ப்ளீஸ் நிஷான்! அவளை... இன்னமும் பலவீனம் ஆக்காதே!'' என்றான் கெஞ்சுதலாய்.

''என்ன குரு... இப்படிச் சொல்றீங்க...'' என வினவிய நிஷாந்தின் முகத்தில்... வருத்த ரேகைகள் அழுத்தமாய்ப் படிந்து, அவனது அழகு முகத்தை அலங்கோலமாக்கின.

கூடவே, ''நா அவளை... எதுவுமே சொல்லலை குரு...'' என்றான் வேதனைப் படிந்த குரலில்.

"ப்ச்... நா அதைச் சொல்லலை நிஷான்! நீ... ஏன் முன்னாடி அழறே? உன்னோட அழுகை... நீ இந்த விஷயத்தால எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கேங் கிறதை அப்படியேக் காட்டும் தானே? ஏற்கனவே வேத னைப் படரவ... இப்ப நீயும் அழுதா... அதுக்கும் கவலைப் பட மாட்டாளா?" என்றான் கிருஷ்ணன், கண்டிப்புடன்.

"ஹான்... நா இப்படி யோசிக்கவே இல்லையே! குரு!" - அப்போது தான் நிஷாந்திற்கு உறைத்தது!

"ஹய்யோ... பாவம் குரு..." என அவன் தொடர்ந்து வருத்தம் கொள்ள,

"சரி விடு... இனிமேல் பாத்து நடந்துக்கோ..." எனத் தேற்றினான் கிருஷ்ணன்.

"ஆனா... குரு... ஒஜோக்கு என்ன... அப்படியே அன் - கான்சியசஸ் ஆகிட்டாளே... எனக்குப் பயமா இருக்கே..." என்றான் அவள் மீண்டும், அரற்றலாய்.

"ஒண்ணும் ஆகியிருக்காது... பயப்படாதே!" என்ற கிருஷ்ணனின் வாக்குப்படி, மைவிழியின் உயிருக்கு எதுவும் ஆபத்து இருக்கவில்லை!

ஆனால், உயிரை விடவும் மேலாகப் போற்றப்படும் தாய்மைக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டிருந்தது!

அரை மணி நேரம் கழித்து வெளியே வந்த மருத் துவர்கள், "அவங்களுக்கு அளவுக்கு அதிகமான ரத்தப் போக்கு ஏற்பட்டிருக்கிறது! அதனால் தான்... மயக்கம்!" என்றனர்.

கூடுதல் தகவலாய், "வெளியான ரத்தத்தின் அள விற்கு ஏற்ப... உடலில் ரத்தம் உற்பத்தி ஆவது கடினம்

என்பதால்... தானமாய்க் கொடுக்கப்பட்ட ரத்தமும்... உடல் பலம் பெறுவதற்குத் தூக்க மருந்து கலந்த க்ளுகோஸும் ஏற்றியிருக்கிறோம்! அதனால்... இன்னும் ஓர் மூன்று முதல் நான்கு மணி நேரத்திற்கு, அவங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம்!" எனக் கூறிச் சென்றனர்.

சற்று நேரம் மருத்துவமனையிலேயே அமர்ந்திருந் தனர் கிருஷ்ணனும்.. நிஷாந்தும்.

ஒரு மணி நேரம் கடந்த பின்னர், "குரு... நீங்க வீட் டுக்குப் போங்க... நா ஒஜோ கூட இருக்கேன்!" என்றான் நிஷாந்த்.

"இல்ல நிஷான்... நா இருக்கேன்..." என்ற கிருஷ்ண னின் கையில் தட்டிய நிஷாந்த்.

"கவலைப்படாதீங்க குரு... உங்க தங்கச்சி முன்னாடி இனிமேல் அழ மாட்டேன்!" என அவன் லேசாய்ச் சிரிக்க.

அவனது வார்த்தையில் தெறித்தச் சிரிப்பை விடவும்... அதில் பொதிந்திருந்த வருத்தம் நெஞ்சைப் பிசைந்தது கிருஷ்ணனுக்கு.

சட்டென அவனை இழுத்து இறுக அணைத்துக் கொண்ட கிருஷ்ணன், "ச்சே... உன்னோடக் கஷ்டத்தை நான் குறைச்சுச் சொல்லவே இல்ல நிஷான்! எனக்கு... புரியுது! இது... இந்த வேதனை எப்படியிருக்கும்னு அனுபவிச்சு வந்தவன் தானே நான்...! பட்... நாம வருத்தப்பட... வருத்தப்பட... அது அவங்க மனசை இன்னமும் கஷ்டப்படுத்தும்! அதான் சொல்றேன்!" என்றான் அனுபவஸ்தனாய்.

"ஹய்யோ... எனக்குப் புரியுது, குரு! நீங்க இவ்வளவு விளக்கம் சொல்லலைன்னாலும்... நீங்க சொன்னீங்க

அப்படிங்கிற ஒரே காரணத்துக்காக... நா அழமாட்டேன் குரு!'' என்றான் நிஷாந்த், சிறுவனாய்.

கல்லூரியில் பார்த்த நிஷாந்த் போல் தோற்றமளித்த வனை, தனியே விட்டுச் செல்லவே கிருஷ்ணனுக்கு மனதில்லை!

ஆனால், இது உடனிருக்கும் நேரமும் இல்லையே! கணவனும்... மனைவியுமாய் ஆறுதலாய் இருக்க வேண்டிய நேரத்தில்... தான் உடன் இருப்பது சரி யில்லை என்று தோன்றியது அவனுக்கு!

மேலும், நிஷாந்திற்கு மனப் பக்குவம் வரவேண்டு மெனில்... இப்படிப்பட்ட சூழல்களைத் தனியே சமா ளிக்கும் திறனும் தேவை என்று தோன்றியது!

எல்லா நேரமும்... எல்லா முடிவுகளையும்... நிஷாந் திற்காக அவனே எடுக்க முடியாதல்லவா?!

கஷ்டத்தைப் பழகட்டும்... அப்போது தான் நீந்தி வர முடியும் என்றெண்ணியவனாய், நிஷாந்தை மருத்துவ மனையில் விட்டுவிட்டு வீடு சென்றான்.

ஆனால், போன மூன்று மணி நேரத்திலேயே... திரும் பவும் மருத்துவமனைக்கு வர வேண்டும் என அவன் எண்ணிக் கூடப் பார்க்கவில்லை!

கிருஷ்ணன் சென்ற சில மணி நேரத்திற்கெல்லாம், மைவிழி கண் விழித்தாள்.

மைவிழியின் விழிகளில் அழகாய் தீட்டப்பட்டிருந்த தாய்மையெனும் கண்மை... முற்றிலுமாய்க் களைந்து... இங்கும் அங்குமாய் பரவி... அவளை அலங்கோலமாய்ப் படுக்க வைத்திருந்தது.

நிஷாந்தைக் கண்டதும், ''நிஷூ...'' என்று அவள் அழ எத்தனிக்க.

''ஷ்... ஒஜோ! அழக் கூடாது...!'' என்று அதட்டினான் அவன்.

அதில் அடக்கி விடாமல், ''நிஷான்... என்னால முடிய லையே...'' என அவள் முகம் சுருக்கி அழ.

நிஷாந்திற்கும் கண்ணோரம் நீர் துளிர்த்து நின்றது!

ஆனால், அதை முயன்று அடக்கியவன், ''ப்ளீஸ் ஒஜோ! சும்மா... நடந்ததை நினைச்சு... நினைச்சு அழு துட்டே இருக்கிறதில என்ன பிரயோஜனம் சொல்லு! ஜஸ்ட் லீவ் இட் மா!'' என்றான் [illegible] கைகளை அழுந்தப் பிடித்து.

அவளோ, அக்கைகளை எடுத்துக் கன்னத்தில் வைத்துக் கொண்டு ''ஏன் நிஷான்? ஏன்... இப்படி?'' என்றான் மீண்டும் பரிதாபமாய்.

இந்தப் பார்வைக்கு என்ன பதில் சொல்வது?

''ஹ்ம்ம்... ஏன்ன்னு கேட்டா என்ன சொல்றது... எங் கம்மா இறந்து போனதுக்கு எப்படி ஒரு ரீசன் கிடை யாதோ... அது மாதிரி இதுக்கும் ரீசன் இல்லைடா...'' என்றான் அவன், மறு கையால் கலைந்திருந்த அவளது கூந்தலை ஒதுக்கிவிட்டு.

''ஆனா... ஆனா... எனக்கு மட்டும் ஏன் நிஷூ... திரும்பத் திரும்பக் கெட்டதே நடக்குது...'' என்றாள் மைவிழி, ஏக்கமாய்.

நிஷாந்தால் பதில் சொல்ல முடியவில்லை.

அவனது மௌனம், அவளை எந்த விதத்தில் பாதித்ததோ... மைவிழி மீண்டும் பேசினாள்.

''நா... எனக்கு யூ எஸ்ல பி.ஜி. கிடைச்சப்போ... நம்ம கல்யாணம் நடந்தப்போ... குழந்தை உண்டானப்போ... எல்லாம் நினைச்சேன்! நமக்கு... கெட்டது நடந்த வேகத்தை விட... நல்லது படு வேகமாக நடக்குதேன்னு நானே ஒரு நிமிஷம் நினைச்சிருக்கேன்! அப்புறம்... நானே... நமக்கு ரொம்பப் பயங்கரமான கெட்டதை கொடுத்துட்டோம்ன்னு பரிதாபப்பட்டு... இனிமேல் உனக்கு நல்லதே நடக்கட்டும்ன்னு முருகன் முடிவு பண்ணிட்டார் போலன்னு நினைச்சு... சந்தோஷப் பட்டுப்பேன்! ஆனா... இப்ப... எல்லாத்துக்கும் சேர்த்து... ஒரே அடியா கொடுத்துட்டார் கடவுள்!'' என்றவளின் அழுகை அதிகமானது!

''ஷ்... ஒஜோ! ப்ளீஸ்!'' என்பதைத் தவிர, நிஷாந்திற்கு வேறென்ன சொல்வது என்றும் புரியவில்லை.

அவளோ... பேசிக் கொண்டே போனாள்!

''வாழ்க்கையில... எல்லா நல்லதும் படு வேகமா நடக்கும் போதே... நான் சுதாரிச்சு இருக்கணும்!! பார்த்ததும் காதல்... படு வேகமாக் கல்யாணம்... தினம் தினம் ஹனி மூன்... மூனே மாசத்தில குழந்தை... இது எல்லாமே ஒரு பெரிய பள்ளத்தில என்னைக் கொண்டு போய் தள்ளுறதுக்கான முன்னேற்பாடுன்னு எனக்குத் தோணாம போச்சு!''

''கதை மாதிரி... சினிமா மாதிரி... லவ் பண்றவங்க கல்யாணம் பண்ணிக்கிறதிலயும்... ஃபர்ஸ்ட் நைட் கொண்டாடுறதிலயும்... எல்லா சந்தோஷமும் வந்துட்

டதா நினைச்சிட்டேன்... நிஷூ! அதுக்கு... அப்புறம் தான் லைஃபே ஸ்டார்ட் ஆகுதுங்கிறதை மறந்தே போயிட்டேன்...'' - மைவிழி விடாமல் புலம்பிக் கொண்டே போக.

''ஒஜோ! ப்ளீஸ்! ஜஸ்ட் லீவ் திஸ்... நமக்கு இன்னும் டைம் இருக்கு ஒஜோ! லைஃப் ரொம்பப் பெருசு... சரியா... யாரு கண்டா... இனி வர நாளில் நமக்கு ரெட்டைக் குழந்தை என்ன... நாலு குழந்தை கூடப் பிறக்கலாம்! அதுக்காகத் தான்... இந்த சடன் பிரேக் போல!'' என்றான் நிஷாந்த், சாதாரணமாகி விட்ட குரலில்.

அப்போதும், மைவிழி பேசாமலிருக்க, ''ரொம்ப சமத்துப் பையனா இருக்க என்னையே நீ... திட்டுறே இல்லை! இவனை விட வாலுங்களா... நாலு பசங்களை உனக்குத் தரேன்னு... அவங்களோடப் போராடிப் பார்த்தா தான்... நிஷான் எவ்வளவு நல்லவன்னு உனக்குப் புரியும்ன்னு கடவுள் நினைச்சிருப்பாரா இருக்கும்! அதான்... கேம் ப்ளே பண்றார்!'' என்றான் அவன், வேதனையை மறைத்த சிறு சிரிப்புடன்.

அதற்கு எதிரொலியாய்... மைவிழியின் முகத்திலும் சிறு சிரிப்பு உதயமாக, நிஷாந்திற்கு கிருஷ்ணனின் கோபத்திற்கான காரணம் நன்றாகப் புரிந்தது!

தனது வேதனையை விடவும்... கணவனின் வேதனை ஓர் பெண்ணை எந்தளவுக்கு பாதிக்கிறது என்பதை அந்த நொடியில், அவனால் உணர முடிந்தது!

கணவனின் வேதனை ஓர் பெண்ணை பாதிக்கும் அதே அளவு... அவனது சந்தோசம் அவளை எந்தள

விற்கு மாற்றும் என்பதையும் அந்த நொடி, அவனுக்கு உணர்த்தியது!

இனி ஒரு தரம்... எனது வேதனையின் காரணமாய் அவள் வாடிவிடக் கூடாது என்ற எண்ணம்... உள்ளே வேரூன்றத் தொடங்கியது!

மனிதனின் மனதில் என்ன விதைந்து என்ன பயன்? கடவுள் அல்லவோ... அதை அறுவடை செய்ய வேண்டும்!

கடவுள் வந்தான்... மருத்துவர் ரூபத்தில்! ஓர் பெரிய அணுகுண்டுடன்!

மைவிழி கண் விழித்துவிட்டான் என்பது அறிந்ததும். அவளுக்கு சில பல பரிசோதனைகளைச் செய்தனர் மருத்துவர்கள்.

அதன் முடிவுகளுடன், கணவன் மனைவி இரு வரையும் சந்தித்த மகப்பேறு மருத்துவர். ஆரம்பிக்கும் போதே "ஐ அம் சாரி டூ சே திஸ்!" என்றபடியே தான் ஆரம்பித்தார்.

மைவிழியின் கலங்கிய முகம், அருகே நின்றிருந்த கணவனை ஏறிட்டுப் பாத்த பார்வையில், நிஷாந்திற்கு நெஞ்சத்தின் அடி வரை வலித்தது!

அவனுக்குமே... என்ன வரப் போகிறதோ என்று பயமாக தான் இருந்தது! ஆனால்... தன் பயம்... அவளது பலவீனம் என்பதை உணர்ந்தவனாய்... அவளது கரங்கள் இறுகப் பற்றியவன், "ரிலாக்ஸ்" என்றான் மெல்ல.

மைவிழியின் தலை மெல்ல... அருகே நின்றிருந்த கணவனின் வயிற்றில் சாய்ந்தது!

அவளது தலையை மெல்ல வருடிவிட்டபடியே, மருத்துவரின் முகம் பார்த்தவனுக்கு... தன் இதயம் துடிப் பது ரயில் ஓடுவது போன்ற உணர்வைக் கொடுத்தது! அவ்வளவு படபடப்பு!

அவர்களை அதிகம் சோதிக்காமல், மருத்துவர் நேரடி யாக விஷயத்திற்கு வந்தார்.

அதாவது, உடல் முழுக்கப் படவில்லை என்றாலும்... வலப்பக்கம் பட்டிருந்த அமிலம்... அவளது கையை மட்டும் பாதிக்கவில்லை! வலப்பக்க இடுப்பில் பட்ட அமிலம்... கர்ப்பப்பையிலிருந்து இதயத்திற்குச் செல்லும் ஓர் நரம்பை வலுவிழக்கச் செய்திருந்தது! அதன் விளைவே இந்தக் கருக்கலைப்பு! ஓர் நிலைக்கு மேல்... மைவிழியின் கர்ப்பப்பையால்... விரிவடைய முடியாத அளவிற்கு... அந்த நரம்பு பாதிக்கப்பட்டிருந்தது என்பதே அவர்களது பரிசோதனைகளின் முடிவு!

இதை அவர் ஓர் உணர்ச்சி துடைத்த முகத்துடன் சொல்லி முடிக்க.

"நோ!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!" என்று அலறினாள் மைவிழி.

தனது சந்ததியை அவள் மூலமாய் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றெண்ணிய ரமேஷ்... அவ ளுக்கு ஒரு சந்ததியே உருவாக முடியாதபடி செய்து விட்டுப் போயிருந்தான்!

பூவில் தேன் குடிக்க நினைத்தவன்... அப்பூவுக்குள் தேனே உற்பத்தியாகா வண்ணம் கருக்கிவிட்டுச் சென்று விட்டான்!

தான் குடிக்க முடியாத தேனை... ஒருவரும் குடிக்கக் கூடாது என்ற எண்ணத்தில்... அவளை பட்டமரமாக்கி விட்டு... அவன் போய்விட்டான்!

பூச்சரத்தில் சேரும் அடுத்த மலர் - பேரதிர்ச்சி!



20

மைவிழியால், அந்த அதிர்ச்சியைத் தாங்கவே முடியவில்லை!

நெஞ்சம் தாறுமாறாய் அடிக்க, ''இல்ல...இல்ல... இது பொய்! எனக்கு குழந்தை வேணும்... வேணும்... வேணும்!'' என்று வீறிட்டு அலறத் தொடங்கினாள்.

நிஷாந்திற்கு, மருத்துவர் கூறிய செய்தி பேரதிர்ச்சியே என்ற போதும், அவனுக்கு மைவிழிகள் அதிர்ந்த முகம் காட்டுமே மனதில் நிலைத்து நின்றது!

தான் இந்த இன்னலை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்பதை விடவும், தன் உயிருக்கு உயிரான ஒஜோ... இந்த இன்னலை எப்படிக் கடந்து வரப் போகிறாள் என்பதே அவன் மனதை நிறைத்தது!

சொல்லப் போனால்... குழந்தை குழந்தை என்று குத்தாட்டம் போட்ட அவனுக்குத் தான் வருத்தம் அதிகமாய் இருந்திருக்க வேண்டும்! ஆனால்... நிஷாந்திற்கு மைவிழி மட்டுமே... மைவிழியின் மனம் மட்டுமே பிரதானமாய் முன்னே நின்றது!

தங்களுக்குக் குழந்தைப் பிறக்க வாய்ப்பே இல்லை என்பதை விடவும், மைவிழியின் கண்களில் தென்பட்ட மரணவலி அவனை இம்சை செய்தது!

''ஒஜோ! ரிலாக்ஸ்! ப்ளீஸ்!'' என்றவனின் கரங்கள், அவளை இறுக அணைத்துக் கொண்டன.

''எப்படி நிஷாந்த்... எப்படி ரிலாக்ஸா இருக்க முடியும்? நமக்கு... நமக்கு... குழந்தை...'' எனத் திக்கியது மைவிழிக்கு.

''ஷ்... இட்ஸ் ஓகே, ஒஜோ! கடவுள் நமக்குன்னு வேற ஏதாவது வச்சிருப்பார்!'' என்றான் நிஷாந்த், சமாதானம் என்ற போர்வையில்.

''இல்ல... கடவுளே இல்லை! இந்த உலகத்தில கடவுளே இல்லை! இட்ஸ் ஆல் ஹம்பக்! நா... என்ன பாவம் பண்ணினேன்னு... எனக்கு இப்படி ஒரு தண்டனை! சரி... என்னை விடு... நீ என்ன பாவம் பண்ணினேன்னு... உனக்கு இப்படி ஒரு தண்டனை? ப்ச்... என்னால முடியலையே! ஹய்யோ... இதுக்கு அவன் என் வயுத்தில குழந்தையை விதைக்காமலே இருந்திருக்கலாம்... குழந்தையையும் கொடுத்திட்டு... இதை சுமக்கிற தகுதி உனக்கில்லைன்னு முகத்தில ஓங்கி அறைஞ்சுட்டானே! அய்யோ... ஐயோ!!!!!!!!!!!!!'' - மைவிழியால் அந்த வேதனையைத் தாங்க முடியவில்லை.

உயிர் ஊடுருவிச் சென்ற அந்த அழுகையை அடக்கும் வழி தெரியவில்லை, நிஷாந்திற்கு!

''உடம்பை மட்டும் தான் கருக்கிக்கிட்டுப் போனான்னு நினைச்சேன்... ஆனா... என்னோட உயிரையேச் சிதைச்சிட்டுப் போயிட்டானே... பாவி பாவி!''

''அவனுக்கு என்ன... பொட்டுன்னு ஒரே நிமிசத்தில செத்துப் போய்த் தொலைஞ்சுட்டான்! இங்க... நானில்ல... சாகாம சாகுறேன்...''

''ஹய்யோ... வாழ்க்கை முழுசும் என்னைய ரணப்பட வச்சுட்டுப் போயிட்டானே! பாவி... பாவி!!!!!''

இல்ல... அவன் பாவி இல்ல... நான் தான் பாவி... எந்த ஜென்மத்தில என்ன பாவம் பண்ணினேனோ... இப்படி கர்ப்பப்பை திறந்திருந்தும்... அது விரிய முடியாத அளவு பாவியாப் போனேன்!''

''இருக்குன்னு சந்தோஷப்பட முடியாம... இல்லைன்னும் அழ முடியாம... இப்படி திரிசங்கு நிலமையில என்னைத் தள்ளிட்டானே!!! பொறுக்கி நாய்!''

மைவிழியால், ''தாய்மை விந்திக்கப்பட்ட'' தன் துர்பாக்கிய நிலையைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை!

நெஞ்சமெல்லாம் ரணமாய் வலித்தது!

பெண்மைக்கு உரித்தான அழகு பறிபோனபோது கூட... அதைத் துச்சமாய் தூக்கி எறிந்து, மின் மினியாய் வெளியே வந்தவளின் தைரியமும் மனஉறுதியும், தன் தாய்மையே கேள்விக் குறியாய் நிற்கும் இந்த நிலையில் கண் காணாமல் ஓடிப் போயின.

அம்பு பட்ட புறாவாய், சிறகெல்லாம் வெட்டப் பட்டது போல் அவள் துடிக்கவும். நிஷாந்த் செய்வதறியாது தவித்தான்.

அவனது எந்த சமாதானமும் அவளது அழுகையை நிறுத்துவதாய் இல்லை!

ஒரு கட்டத்தில்... அவளது கண்கள் தலைக்காவேரி என கண்ணீரைத் தாரை வார்த்துக் கொண்டே இருக்க,

''ஒஜோ! தயவு செஞ்சு அழுகையை நிறுத்து!'' என்று லேசாய் குரல் உயர்த்திக் கூறியவன்.

''இப்ப என்ன குழந்தை இருந்தா தான்... லைஃப் நல்லா இருக்குமா என்ன? நமக்கு தான்... கீர்த்துவோட பாப்பா இருக்காளே... அதுவும் அம்மாவே வராங்களே... அப்புறம் என்ன? ஒரு குழந்தைக்கு... ஒரு அப்பா - அம்மா தான் இருக்கணும்ன்னு ஏதாவது சட்டமா என்ன? நாமளும்... அந்தக் குழந்தைக்கு அப்பா - அம்மாவா இருக்கலாம்!'' என்றான் திடமாய்.

''இல்ல... நிஷூ... நமக்குன்னு...''

''ப்ளீஸ் ஒஜோ! எனக்கு உன்னோடக் கஷ்டம் புரியுது... பட்... என்ன செய்ய முடியும் சொல்லு? இட்ஸ் ஆல் ஃபேட்! அதை நினைச்சு... நீ அழுதுட்டே இருந்தா... எல்லாம் சரியாகிடுமா?'' சொல்லு?'' எனக் கேட்டவன்.

''குரு... அடிக்கடி சொல்லுவார்! என்ன நடந்தாலும் சரி... வாழ்க்கை யாருக்காகவும் வெயிட் பண்ணாது... அது பாட்டுக்குப் போயிட்டே இருக்கும்ன்னு! அப்படி போற வாழ்க்கை நம்மளையும் அதோடவே இழுத்திட்டுப் போகும், ஒஜோ! எப்படியும்... வாழ்க்கை நகரப் போகுது... அப்புறம் எதுக்கு அழுதுட்டே அதோட போணும்? லெட்ஸ் பீ ஹாப்பி... ஒஜோ! ப்ளீஸ்!'' என்றான் கெஞ்சுதலாய்.

மைவிழியின் கண்ணீர் அப்போதைக்கு நின்றபோதும், அவள் மனதில் ஏற்பட்ட வேதனை அணு அளவும் குறையவில்லை!

மைவிழியை துன்பத்திலேயே உழல விடக் கூடாது என்பதற்காகவோ என்னவோ, கீர்த்துவுக்குப் பிரசவ வலி எடுத்தது!

கிருஷ்ணனிடமிருந்து அழைப்பு வந்ததுமே, ''குரு கூப்பிடுகிறார்... பேசிட்டு வரேன்...'' என அவன் நகர.

''இல்ல... நிஷூ... இங்கேயே இரு... என் பக்கத்தி லேயே இரு... ப்ளீஸ்...'' என்று இறைஞ்சினாள் மைவிழி.

அமெரிக்காவில் அவளை முதன்முதலில் பார்த்த போது. அவளிடம் தென்பட்ட மன உறுதி... முற்றிலு மாய் காணாமல் போயிருக்க. பாதுகாப்பு வேண்டி நிற்கும் பச்சைக் குழந்தையாய் மைவிழி மாறிப் போயி ருக்க, நிஷாந்தால் அந்த இடத்தை விட்டு நகர முடிய வில்லை.

அவளை நெஞ்சோடு சாய்த்துக் கொண்டே, கைப்பேசியை எடுத்து காதில் வைத்தவன், ''ஹோ அப் படியா?'' என்ற ஒரே வார்த்தையை மட்டுமே உதிர்த்தான்.

அவன் கைப்பேசியை வைக்கும் முன்னரே, ''என் னாச்சு நிஷூ... என்ன சொல்றாங்க அண்ணா? அண் ணிட்ட சொல்லிட்டாங்களா? ஐயோ... அண்ணி பயந் திருப்பாங்களே!'' என்று மைவிழி பதட்டம் கொள்ள,

''கீரத்துக்கு... டெலிவரி பெயின் வந்துடுச்சாம்! ஹாஸ்பிடலுக்கு வந்துட்டு இருக்காங்களாம்!'' என்றான் நிஷாந்த், யோசனையுடன்.

''ஹோ!!!!!!!!'' என்ற மைவிழி, தன் துன்பத்தை தற் காலிகமாய் ஒதுக்கி வைத்துவிட்டு, கீர்த்தியை எண்ணி கவலை கொள்ளத் தொடங்கினாள்.

ஆனாலும், மனது கேட்காமல் 'ச்சை... இந்த நேரத்தில போய்... எனக்கு இப்படி ஆகிடுச்சே... அண்ணி கூட இருக்க முடியாமப் போச்சே...'' என அவள் புலம்ப.

''ஷ்... உனக்கு ஒண்ணும் ஆகலை... ஓகே?! டாக்டர் இன்னும் சிக்ஸ் டேஸ்ல வீட்டுக்குப் போயிடலாம்ன்னு சொல்லியிருக்காங்க இல்லை... அதுக்குள்ளே கீர்த்துக் கும் பாப்பாப் பிறந்திடுவா... சோ... வீட்டுக்குப் போனதும் நீ கீர்த்துவைப் பார்த்துக்கோ!'' என்று சிறு பிள்ளைக்குச் சொல்வது போல் சமாதானம் கூறியவன்.

''இந்நேரம்... குரு கீர்த்துவைக் கூட்டிட்டு வந்திருப் பாரு... நா போய்ப் பார்த்திட்டு வரவா?'' என்று அவளிடம் அனுமதி கேட்டான்.

''ம்ம்ம்...'' என்று மைவிழி, அரை மனதாய்த் தலை யாட்ட,

நிஷாந்த் சட்டென அங்கிருந்து பறந்தே போனாள்!

''இவனைப் போன்ற ஒரு சிட்டுக் குருவி... என் வயிற்றில் உதிக்கவேச் செய்யாதா?'' என்ற ஏக்கம், மைவிழியின் நெஞ்சை அடைத்தது!

கண்கள் முழுக்க கண்ணீரைச் சுமந்து நின்று, அந்தக் கனவைக் கலங்க வைத்தன!

ஆனால்... மைவிழியை அதிலேயே கரைந்து போய் விடாமல் காப்பது போல், கீர்த்தி அதே மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டாள்.

மறு உயிர் கொடுக்கும், பிரசவ வலியுடன் வந்த போதும், பிடிவாதமாய் மைவிழியின் அறைக்குள் தான் முதலில் வந்தாள் கீர்த்தி.

''மைய்யு கண்ணா...'' என்றவளின் கண்களில், அவளது வலியையும் மீறி, வேதனை பொங்கி வழிந்தது!

மைவிழியாலும், கண்ணீரை அடக்க முடியவில்லை.

''அண்ணிணிணிணிணிணி!'' என்றவளின் கைகள், கீர்த்தியை இறுகப் பிடித்துக் கொண்டன.

''அழாதே கண்ணம்மா!'' என்று அவள் கண்ணீரைத் துடைத்து விட்ட கீர்த்திக்கு, இதே மைவிழி... தான் குழந்தையைப் பறிகொடுத்துவிட்டு நின்றபோது, எப்படி தன்னைத் தேற்றினாள் என்பது நினைவு வந்தது!

மருத்துவர் கூறியதை அறியாததால், ''விடு மைய்யு... எனக்கு மாதிரி உனக்கும் இரண்டாவது உருவாகுற குழந்தை... நல்லபடியாப் பிறக்கும் பாரேன்!?'' என்று கீர்த்தி சொல்ல,

மைவிழி வீறிட்டு அழத் தொடங்கினாள்.

அவளது பலத்த அழுகையின் பின்னணியில் ஏதோ பெரும் விபரீதம் இருப்பது புரிந்த போதும், அது என்னவென்று தெரியாததால் கிருஷ்ணனும் கீர்த்தியும் திகைத்து நின்றனர்.

மைவிழியின் அழுகை அதிகமாவதையும்... கீர்த்தி யின் திகைப்புக் கூடிக்கொண்டே செல்வதையும் உணர்ந்த நிஷாந்த்.

''குரு... நீங்க கீர்த்துவைக் கூட்டிட்டுக் கிளம்புங்க! நா அப்புறமா விவரம் சொல்றேன்!'' என அவர்களை அங்கிருந்துக் கிளப்பினான்.

''என்ன நிஷான்... என்ன விஷயம்? என்னன்னு சொல்லுடா...'' - தனது வலியையும் மீறிக் கொண்டு கீர்த்தி பதற.

''ஒண்ணுமில்லை கீர்த்தி! எங்களுக்கு... இனிமேல் குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லைன்னு டாக்டர்

சொல்லிட்டார்! அவ்வளவு தான்! நீ முதல்ல போ...'' என்று அவள் தோள் பிடித்து, வெளிப்பக்கமாய் தள்ளினான் நிஷாந்த்.

''என்னது!????'' - கணவன் மனைவி இருவருமே அதிர்ந்து நிற்க,

''ப்ளீஸ் குரு! அதுக்கு வருத்தப்பட... வாழ்க்கை முழுசும் இருக்கு, குரு!! விடுங்க! இப்ப.... அதை விடவும் முக்கியமான கீர்த்தியை டாக்டர்கிட்ட காட்டுற வேலையிருக்கு இல்ல... அதை கவனிப்போம் முதல்ல...'' என்றவன், கீர்த்தியை வலுக்கட்டாயமாக வெளியே அழைத்து வந்தான்.

மைவிழி, வாயைப் பொத்திக் கொண்டு குலுங்கி அழுதாள்!

பிறப்பும் இறப்பும் யாருக்காகவும்... எதற்காகவும் காத்திருப்பது இல்லையே! அந்த உலக நியதிப்படி, அடுத்த ஒரு மணி நேரத்தில், கீர்த்தியின் செல்லக் குமாரி... பூவுலகை கண்விரித்துப் பார்த்தாள்!

குடும்பமே சந்தோஷத்தில் மிதந்தது! மைவிழி உட்பட!

தங்களை விட்டுப் போன வாரிசுக்காக வருத்தப்படுவதா இல்லை தங்களுக்குக் கிடைத்த பொக்கிஷத்தைக் கொண்டாடுவதா என்று அனைவரும் குழம்பிப் போயிருந்த வேளையில், நிஷாந்த் மட்டுமே தெளிவாக இருந்தான்!

''ஒஜோ! நா சொல்லலை... அம்மா தான் பிறப்பாங் கன்னு... அந்தக் குட்டி ஏஞ்சல் அப்படியே அம்மா

மாதிரியே இருக்கா ஒஜோ! அம்மா மாதிரியே நல்ல பெரிய கண்ணு... ஷார்ப் நோஸ்... ஷி இஸ் சோ கியூட்!'' என்றான் கண்களை அகல விரித்து.

மைவிழி லேசாய் புன்னகைக்க முயலவும்.

''நா கூட சொன்னேனே... குரு மாதிரி பெரிய நெத்தி இருந்தா சூப்பரா இருக்கும்ன்னு... அதே மாதிரி ஏஞ்சல் குட்டிக்கு நல்ல பெரிய நெத்தி! ஏற் நெத்தியா இருந்தா... பாப்பா நல்லாப் படிக்குமாம்! அப்பா சொன்னாங்க!'' என்றான் அவன். குதூகலத்திற்குக் குறைவே இல்லாமல்.

அவள் சின்னதாய்... காலை அசைத்தால் கூட, ஓடி வந்து மைவிழியிடம் பகிர்ந்து கொண்டான்.

''எவ்ளோ குட்டிக் காலு தெரியுமா ஒஜோ! என்னோட உள்ளங்கையில... பாதி தான் இருக்கு... ஆனா.... ஒரே டான்ஸ் தெரியுமா? சும்மா... ஆட்டி... ஆட்டி... அழகா அபிநயம் பிடிக்கிறா...'' பிறந்து சில மணி நேரமே ஆனா சின்னக் குழந்தைக்கு... பாரதநாட்டியம் கற்றுக் கொடுத்தான் அவன்!

மைவிழிக்கு... அவனது சந்தோசம் சந்தோசத்தைக் கொடுப்பதற்கு மாறாக, பெரும் வலியையே கொடுத்தது!

இப்படியொரு சந்தோஷத்தை... என்னால் அவனுக்குக் கொடுக்க முடியவில்லையே என்று மனம் கிடந்து தவித்தது!

அதற்காக, கீர்த்தியின் குழந்தை மேல் அவளுக்கு எந்த விதமான பொறாமையும் இல்லை! மாறாக, தனக்கும் இப்படியொரு குழந்தை இருந்திருக்கக் கூடாதா என்று ஏக்கமாக தான் இருந்தது!

ஆனால், அந்த ஏக்கமோ... வருத்தமோ... ஏன் சிறு கண்ணீரோ கூட அவளை சிந்த விடக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டவர்கள் போல், நிஷாந்த்... கிருஷ்ணன்... அரவாமுதன்... ஏன் சுகப்பிரசவத்தில் குழந்தையைப் பிரசவித்த கீர்த்தி... அந்தக் குட்டி ஏஞ்சல் பத்மாசினி என எல்லாருமே அவளைக் குழந்தை போல் தாங்கினர்.

ஒருவர் மாற்றி ஒருவர்... மைவிழிக்குத் துணை இருந்தனர்.

நேரம் தவறாமல், அவளுக்கு ஆகாரம்... மருந்து... மாத்திரை என்று பொத்திப் பொத்திப் பார்த்துக் கொண்டனர்.

உறவுகளின் முக்கியத்துவம், சந்தோஷத்தில் திக்கு முக்காடுகையில் தேவைப்படுவதை விடவும்... கண்ணீரில் தத்தளித்துத் தவிக்கையில் தான் அதிகம் தேவைப்படும் என்று உணர்ந்தவர்கள் போல், மைவிழியை கண்ணுக்குள் வைத்துக் கவனித்துக் கொண்டனர் அனைவருமே!

வீட்டின் இரு பெண்களும் படுக்கையில் படுத்திருந்த இந்த நேரத்தில், இந்தியாவிலிருந்து ஓர் பெண் துணை வந்தால் நன்றாக இருக்கும் என்று அனைவரும் கருத.

வரப்போகும் உறவு... கிருஷ்ணனின் தாயாரா இல்லை மைவிழியின் பாட்டியா என்பதில் சிறு சலனம் உண்டானது.

இவரா... அவரா... என்று அனைவருமே தவித்துக் கொண்டிருக்கையில், ''அம்மா வந்தா... கீர்த்திக்கும்

மாமியார்ங்கிற தயக்கம் இருக்கும்! மைய்யுக்கும்... வேற ஆள்ங்கிற ஒதுக்கம் இருக்கும்! அதுக்கு... அமுதம் பாட்டி வந்தா... மைய்யு அவங்ககிட்ட கம்ஃபோர்ட்டபிளாஃபீல் பண்ணுவா... நானும் அவங்களோட கைடன்ஸ்ல கீர்த்துவைப் பார்த்துப்பேன்! சோ... அமுதம் பாட்டியே வரட்டும்!'' என்று கிருஷ்ணன் தீர்க்கமாய் முடிவெடுத்த போது, அவனது நாலையும் யோசிக்கும் திறனையும், கூடவே தன் மனைவியை மட்டுமே முன்னிறுத்தாமல்... மைவிழியின் உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுக்கும் குணத்தையும் எண்ணி மைவிழியின் விழிகளில் ஈரம் படிந்தன!

மைவிழியே ஒரு கட்டத்தில், உடனிருந்த அரவாமுத னின் கையைப் பிடித்துக் கொண்டு அழுதுவிட்டாள்.

''உங்களுக்கு... கீர்த்து அண்ணியை எவ்வளவு பிடிக்கும்ன்னு எனக்குத் தெரியும் மாமா... ஆனா... அவங்களை விட்டுட்டு... எந்நேரமும் என்னோடவே இருக்கீங்களே மாமா? என்னால... இந்தப் பாசத்தைத் தாங்கிக்கவே முடியலையே! இந்தப் பாசத்துக்கு... ஈடா... இந்தக் குடும்பத்துக்கு ஒரு வாரிசை என்னால் கொடுக்க முடியாதுன்னு நினைக்கும் போது... நெஞ்செல்லாம் வலிக்குது...'' என அவள் கலங்க.

''மைவிழிம்மா! உன்கிட்ட இருந்து... இப்படியொரு மூடத்தனத்தை நான் எதிர்பார்க்கவே இல்லை!'' என்றார் அவர் கடுமையாக.

''மாமா!'' என மைவிழி திகைத்து விழிக்க.

''ஆமாம்மா! இதென்ன... பழைய காலம் மாதிரி... குடும்பத்துக்கு வாரிசு கொண்டு வர்றவ தான்

மருமகங்கிற மாதிரி பேசறே? இதேப் பிரச்சனை... நிஷான்க்கு இருந்திருந்தா... என்ன செய்ய முடியும்... சொல்லு? அவனால... இந்தக் குடும்பத்துக்கு வாரிசு வராதுன்னு தெரிஞ்சதும்... அவனைத் தவுட்டுக்கு விலை பேசி வித்திட்டு... வேற பையனையா வாங்கிக்க முடியும்?'' என்றார் காட்டமாக.

கண்ணீர் பொங்கி வழிந்த அந்த நேரத்திலும், அடக்க மாட்டாமல் சிரித்தாள் மைவிழி!

''என்னம்மா சிரிக்கிறே? உன் புருஷன்... தவுட்டுக்கு கூட விலை போக மாட்டான்னு உனக்கு தெரிஞ்சு போச்சா?'' என்று அவர் சிரிக்க.

''ச்சை... போங்க மாமா! பாவம்... நிஷூ குட்டி!'' என்று பரிதாபப்பட்ட மைவிழியின் முகத்தில் சிரிப்பின் ரேகைகள்.

''இதோ... இந்த பாசமும்... அவன் மேல நீ வச்சிருக்க ஆசையுமே... வாழ்க்கைக்குப் போதும்மா!'' என்று நா தழுதழுக்கக் கூறியவர்.

''நீயும் அவனும் சந்தோஷமா இருக்கணும்... மைய்யு! அதான் எனக்கு வேணும்!'' என்றார் அவளது தலையில் கை வைத்து.

''குழந்தை தான் கல்யாணத்தோட சந்தோசம்ன்னு நினைச்சின்னா... அது தப்பும்மா! குழந்தைங்க பிறந்த பிறகு... வாழ்க்கை சூன்யமாகலாம் - என்னை மாதிரி! அதனால... இது தான் சந்தோசம்... அது தான் சந் தோசம்ன்னு உன்னையே ஒரு வட்டத்துக்குள்ள போட்டு வச்சுக்காம... இப்ப வாழற நொடியைச் சந்தோஷமா

வாழும்மா! நிஷான் அந்த சந்தோஷத்தை... இரட்டிப் பாக்குவான்!'' என்றார் அவர் அனுபவஸ்தராய்!

இம்முறை பூச்சரத்தில் இரு பூக்கள் இணைகின்றன! முதல் பூ - பத்மாசினி! அடுத்த மலர் - அன்பு!



21

குட்டி பத்மாசினி... இந்தப் பூவுலகைப் பார்த்து நாட்கள் ஏழாகி இருந்தன!

கீர்த்தியும் மருத்துவமனையி லிருந்து வீடு வந்து சேர்ந்திருக்க, மைவிழியும் வீட்டிற்கு அழைத்து வரப்பட்டான்!

ஜலதோஷம்... மருந்து சாப்பிட்டால் ஒரு வாரத்தில் குணமாகும். சாப்பிடாவிட்டால் ஏழே நாளில் சரியாகி விடும் எனக் கூறுவார்களே! அது போல், இன்பம் மய மான பத்மாசினியின் வரவு...''ஒரு வாரமாய்'' இனிக்க, மைவிழியின் துன்பமோ ''ஏழு'' நாட்களாய் நீண்டு கொண்டிருந்தது.

மைவிழியைத் தவிர, வேறு யாருமே மைவிழியின் குழந்தையைப் பற்றி ஜாடையாகக் கூடப் பேசவில்லை! முக்கியமாய் நிஷாந்த்!

குழந்தை உருவானபோது, எவ்வளவுக்கு எவ்வளவு சந்தோஷப்பட்டானோ... இப்போது அது இல்லை யென்று ஆனபின்னர், அவ்வளவுக்கு அவ்வளவு அக் குழந்தையைப் பற்றி மறந்தே போனான்!

மறந்தும், அவர்களுக்கு ஒரு குழந்தை உருவான தையோ... அது பாதியில் தங்களை விட்டுச் சென்ற தையோ அவன் நினைவு படுத்தவே இல்லை!

தான் கருத்தரிக்கவே இல்லையோ என்று மைவிழி எண்ணும் அளவிற்கு, நிஷாந்த் அவளிடம் அந்த விஷயத்தைப் பற்றி பேசுவதே இல்லை!

அவளாக, ''நிஷூ... எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கே...'' என்று ஆரம்பித்தாலும்.

''ஹே ஒஜோ! நா சொல்லணும்ன்னு நினைச்சிட்டே இருந்தேன்... நம்ம பிரவீன் இருக்கான் இல்ல... அவன் லவ் பண்றானாம் பேபி! அதுவும் நாலு வருஷமா? எனக்கே தெரியாம லவ் பண்ணியிருக்கான்... ராஸ்கல்! அவனோட நல்லா சண்டை போட்டுட்டு வந்துட்டேன்...'' என்று கோபத்தில் பொங்கினான்.

கோபம் என்ற சொல்லுக்கு அர்த்தம் கூட தெரியாத நிஷாந்தின் முகத்தில் கடுப்பின் ரேகைகள் தெரி யவும், ''அச்சச்சோ... ஏன் நிஷூ... இவளோ கோபம்? வேணாம்டா... நீ கோபப்பட்டால் நல்லாவே இல்ல...'' என்று கொஞ்சலில் இறங்கிய மைவிழிக்கு, பழைய விஷயம் மறந்தே போயிற்று!

நிஷாந்தோ... அதை மேலும் மறக்க வைப்பது போல், ''பின்ன... நாலு வருஷம் ஒஜோ! எல்லா நாளும்... என்னை ஏமாத்திட்டான்! நா... அவன் கூட டூ விட்டுட் டேன்... ஸ்டுப்பிட் பாய்!'' என அவன் மீண்டும் பொங்க

''ஹஹ்ஹஹா!'' என்று சிரித்தாள் மைவிழி.

''ஏன் சிரிக்கிறே? அந்த லூசும் அப்படித் தான் சிரிச் சான்... அதுவும் என்ன தெரியுமா சொல்றான்... இவ் வளவு பெரிய கண்ணும்... அதை விட அண்டா மாதிரி வாயும் இருந்தா பத்தாது மேன்... கண்ணைத் தொறந்து என்ன நடக்குதுன்னு பார்க்கணும்ன்னு என்னைக்

கிண்டல் பண்றான்! ஸ்டுப்பிட்! நா என்ன பண்றது... இந்தக் கண்ணு... என்னோட ஒஜோவை விட்டு அங்க இங்க நகர மாட்டேங்குதே! இது... அந்த கூசுக்கு புரிய மாட்டேங்குதே!'' என அங்கலாய்த்த நிஷாந்த், தன் இனிய ஒஜோவிடம் இன்பத் தேடல் நடத்தத் துவங்கினான்!

''ச்சு... போ நிஷூ...'' என்று அவளும், அவன் தேடிய முத்த புதையலை அள்ளிக் கொடுத்தாள்.

அவன் காட்டியக் காதலிலும், வீட்டினர் காட்டிய அன்பிலும், மருத்துவமனையை விட்டு வருகையில் ''உங்களது கருப்பை... மிகவும் வலுவிழந்து உள்ளது. ஆகையால்... இனி ஒரு தடம் கருத்தரிப்போ... கருக் கலைப்போ நடக்காத படி பார்த்துக் கொள்ளுங்கள்! அப்படி ஏதும் நடந்தால், உங்கள் உயிருக்கே ஆபத்தாக முடியும்!'' என்று மருத்துவர் கூறியபோது கூட, மைவிழிக்கு கஷ்டமாய்த் தெரியவில்லை.

உருவாகி உருக்குலைந்து போவதற்கு, உருவம் கொள்ளாமலே இருப்பது மேலல்லவோ என்ற எண்ணம் வருத்தத்தைக் கொடுத்த போதும், அவள் கண்ணீர் விட வில்லை! சொல்லப் போனால், ''மிகவும் மோசமான நிலையில் இருக்கிறதென்றால்... கருப்பையை நீக்கி விடலாமே?'' என்று கேட்கும் அளவிற்கு, மைவிழியால் அந்தச் சூழ்நிலையை நிதர்சனமாக எடுத்துக் கொள்ள முடிந்தது!

முகத்தில் மரணவலியைக் காட்டி அவள் கேட்கவும், அவளது கன்னத்தில் லேசாய் தட்டிய அந்த முதிய மருத்துவர், ''கருப்பையை எடுப்பது... சாதாரண விஷயமல்ல

மகளே! கருப்பையை... வெறுமனே கரு வளர்வதற்கான இடமாக நினைத்து... பலரும் அதைச் செய்கின்றனர். ஆனால், கடவுள் பெண்களுக்கு என்று கருப்பை என ஒன்றை பிரத்யேகமாகப் படைத்தது குழந்தை பெறுவதற்கு மட்டுமல்ல, நம் உடலில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களைச் சமாளிக்கவும் தான்! அதை உணராமல், கருப்பையை நீக்கிவிட்டு... ரத்த அழுத்தம்... இதய நோய் என்று வேறு விதமாய் அவதிப்படும் பலரை நான் கண்டிருக்கிறேன்! வேண்டாம் மகளே! குழந்தை இல்லையென்றாலும்... நீ நீடூழி வாழ வேண்டும்!'' என்று வாழ்த்தி அனுப்பினார்.

அவரது வார்த்தைகளில், கண்ணீர் சுரந்துவிட்டது மைவிழிக்கு!

உலகில், பாசம் காட்டத் தான் எத்தனைபேர்! அப்பா... அம்மா... தம்பி என்று ரத்த உறவுகளின் பாசத்தை விட, இப்படி அன்னியர் காட்டும் பாசம் நெஞ்சை நெகிழ்த்தித் தான் போடுகிறது என எண்ணினாள் மைவிழி! ஆனந்தமாய் வழிந்த கண்ணீரைச் சிரிப்புடன் துடைத்த படி!

அவள் கண்ணிலிருந்து, அடுத்து வரும் நீர் துளிகள் யாவும் மித மிஞ்சிய ஆனந்தத்தின் வெளிப்பாடாகவே இருக்கட்டும் என்று சபதம் பூண்டவர்கள் போல், அவளது புகுந்த வீட்டினர் அவளை உள்ளங்கையில் தாங்கினர்.

முதலில் கீர்த்தி!

பிள்ளை பெற்ற பச்சை உடம்புக்காரி என்ற பலவீனம் அவளை சோர்ந்து போய்ப் படுக்க வைத்தாலும்,

விழித்திருக்கும் நேரமெல்லாம் மைவிழியுடனே இருந்தாள்.

அதற்காக, பரிதாபப் பார்வை பார்த்து... அவளிடம் பரிவு காட்டவில்லை.

"மைய்யு... பப்பி ஈரம் பண்ணிட்டா... துணி மாத்தி விடுறியா?"

"பப்பியைப் பாரேன்... நீ ரூமுக்குள்ள வந்ததும்... கழுத்தை திருப்பிட்டு உன்னையேப் பார்க்கிறா! அவங்க மாமா மாதிரி... அத்தையையே சைட் அடிக்கிறா!!"

"இந்தா... நேத்து பப்பிப்பா பொன்னியின் செல்வன் புக் வாங்கிட்டு வந்தாங்க... நீ முதல்ல படிச்சிட்டுத் தா... அப்புறம் நான் படிக்கிறேன்..."

"அப்பாட்ட நம்ம ரெண்டு பேருக்கும் ஆரஞ்சு ஜூஸ் வாங்கிட்டு வரியா?"

"இந்த வாரம்... நாம எல்லோரும் கோவிலுக்குப் போலாமா? பப்பியை முதன் முதலா... கோவிலுக்குத் தான் கூட்டிட்டுப் போகணும்ன்னு நினைச்சேன்!"

"ஹ்ம்ம்... அப்புறம்... நம்ம பிரியா (அவர்கள் வீட்டின் அருகே வசிக்கும் இந்தியப் பெண்மணி) கொடுத்த பட்டு பாவாடையைப் போட்டுப் போலாமா? ப்ரியா... சூப்பரா டிரஸ் வாங்கி இருக்காங்க இல்ல... அவங்ககிட்ட எங்க வாங்கினாங்கன்னு கேட்கணும்... இங்க ஃபிலடெல்ஃபியால இவ்வளவு அழகா இந்தியன் எத்னிக் டிரஸ் கிடைக்குமா என்ன? ஒரு வேளை... ஆன்லைன்ல வாங்கியிருப்பாங்களோ?"

இப்படி அவளை சின்னச் சின்ன விஷயத்தில் கலந்து கொள்ள வைத்தாள். மறந்தும், மைவிழியைத் தனியாக விடவில்லை கீர்த்தி!

கிருஷ்ணனையும்... அரவாமுதனையும் பற்றி கேட்கவே வேண்டாம்! இரண்டு பேருமே... புரிதலின் சிகரங்கள்! கண்ணசைவில் கூட, மைவிழியைக் கலங்க விடாது பார்த்துக் கொண்டனர்!

அதற்கு மேலாய், நிஷாந்த்!

வீட்டிற்கு வந்தால், முக்கால் வாசி பொழுது குழந்தை யோடு கழிப்பவன், அதில் மைவிழியையும் இணைத்துக் கொண்டான்!

இந்தச் சின்னக் குட்டியும், பிறந்த ஒரே மாதத்தில் மாமனைக் கண்டால், பொக்கை வாய் திறந்து, தன் அழகு வாயைக் காட்டும்!

அவள் சிரிக்கும் ஓர் ஓர் சிரிப்புக்கும், நிஷாந்தின் முகம் அப்படியே பெருமிதத்தில் ஜொலிக்கும்!

அன்றைக்கும் அப்படித் தான்!

மாலை ஆறு மணி இருக்கும்! கையில் ஓர் பெரிய பார்சலுடன் வீடு வந்து சேர்ந்தான். நிஷாந்த்!

அதுவும், கிப்ட் ராப் செய்யப்பட்ட பார்சல்!

அவனுக்குக் கதவு திறந்துவிட்ட மைவிழிக்கு, அந்தப் பெரிய பார்சல் மட்டுமே தெரியும் அளவிற்கு, மிகவும் பெரிதாய் இருந்தது!

கண்டிப்பாக, இதை வாங்கி வந்த "பிரகஸ்பதி" தன் கணவனாய் நான் இருக்கும் என்ற முடிவுக்கு வந்தவளாய்,

"என்ன நிஷூ? இவ்வளவு பெரிய பார்சல்?" என்றாள் கேள்வியாக,

"தள்ளு... தள்ளு... நா முதல்ல உள்ள வரேன்..." என்று அவளை விலகச் சொல்லிவிட்டு, வீட்டினுள் வந்தவன்.

"ஏய்... பப்பி குட்டி... இங்க வா... மாமா என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பாரு..." என்று உற்சாகமாய்க் குரல் கொடுத்தான்!

"ஆமா... நீங்கக் கூப்பிட்டதும் ஓடி வரதுக்கு அவ பத்து வயதுப் பச்சைக் கிளியாக்கும்? பொறந்து ஒரு மாசமே ஆனா புள்ளையை... இங்க வா... அங்க வான்னு ஏலம் விட்டுட்டு இருக்கீங்க?" என அவனைக் கடிந்த மைவிழி.

"மகாராணி... சேவகனைப் பார்க்க வெளிய வரமாட்டாங்க! சேவகன் தான் மகாராணியைப் பார்க்க உள்ள போகணும்!" என்றாள் அதிகாரமாய்.

"சரிங்க... பெரிய ராணி!" என இடை வரை குனிந்து, அவளிடம் வம்பு செய்தவன், பார்சலைத் தூக்கிக் கொண்டு கீர்த்தியின் அறைக்குள் சென்றான்.

"வாலு பையன்..." என்று தலையில் அடித்துக் கொண்ட படியே, மைவிழியும் அவனைத் தொடர்ந்தாள்.

அறையினுள் சென்றவன், "ஹே... பேபி! பப்பி பேபி! இங்க பாரு... இங்க பாரு... மாமா என்ன வாங்கிட்டு வந்திருக்கேன்..." என்று ஆர்ப்பரித்தபடியே செல்ல.

அந்த ஒரு மாசக் குழந்தையோ, தன் மாமனின் குரல் கேட்டதும் கழுத்தை லேசாய், திருப்பி.... அவன் வருகையைக் கவனித்தது!

"குச்சுலு குட்டி... மாமா வந்திருக்கேன்டா ச்சிங்கிலி!" என்று அவன் கொஞ்ச.

அந்த இளம் தேவதையோ... பொக்கை வாய் திறந்து சிரித்தாள்! அழகாய்!

"இப்பவே... மாமாவுக்கு மஸ்கா போடுறியா? சரியான... ஆளுடி நீ..." என்று மைவிழி, குழந்தையின் கன்னத்தை லேசாய் நிமிண்டி விட,

"ஹே... கிள்ளாத... பப்பிக்கு வலிக்கும்!" என்று கேபாம் கொண்ட நிஷாந்த்.

"நீ அழுவாதடா குட்டிலி! மாமா... இவளை அச்சுப் போடுறேன்!" என்றான். சின்னவளின் தாடையைத் தொட்டுக் கொஞ்சியபடியே.

"அடிப்பீங்க... அடிப்பீங்க! மாமாவையும் மருமகளையும்... நானும் எங்க அண்ணாவும் பழி வாங்குற விதத்தில் பழி வாங்கிடுவோம்!" என்றாள் மைவிழி, கண்ணை உருட்டி.

"பெரிய இது... என்ன சாப்பாட்டில் கை வைப்பீங்களாக்கும்? இதெல்லாம் ஒரு மேட்டரா? எங்களுக்கு ருசியா... சுவையா... மணமா சமைச்சுப் போடத் தான்... எங்களோட பேபி டார்லிங் வராங்களே! நாங்க... அவங்கிட்ட எங்களுக்கு வேணும்ங்கிறதை வாங்கிக்கிறோம்! இல்லடா.... பப்ச்சு குட்டி!" என்றவன், குழந்தையை லாவகமாய் இரு கைகளிலும் ஏந்தி இருந்தான்!

"நிஷூ... அவளுக்கு எவ்வளவு அழகா பத்மாசினின்னு பேரு வச்சிருக்கு! நீ என்னடான்னா... குட்டிலி.... பப்ப்ச்சு... சிங்கிலின்னு...! ? ஹ்ம்ம்... என்ன பேரு இதெல்

லாம்...'' என்றாள் மைவிழி நிஷாந்தின் காதைத் திருகி!

அவ்வளவு தான்! ''ஆஆஆஆஆஆஆஆஆஆஆ...'' என்று நிஷாந்த் வீரிட்டு அலற, குட்டி பத்மாசினிக்கோ அவனது அழுகை அழகாய் தெரிந்தது போலும்! காலை வேகமாய் ஆட்டி... ஆட்டி... அவனது அழுகை ரசித்தாள், அந்த வீட்டின் செல்வமகள்!

பொய் அழுகையே என்றாலும்... பெரிய அழுகை அல்லவா? அடித்துப் பிடித்து ஓடி வந்தனர் அரவாமுதனும்... கிருஷ்ணனும்!

வரும் போதே, ''என்னம்மா? என்ன என்ன? நிஷான் தானே? என்ன செஞ்சான்? பிள்ளையைக் கீழே போட்டானா? அதுக்காக அடிச்சியா? அதான் கத்துறானா?'' என்று கேள்விகளை அடுக்கிக் கொண்டு, அரவாமுதன் வர.

மைவிழிக்கும் கீர்த்திக்கும் சிரிப்பை அடக்க முடிய வில்லை!

''ப்ப்ப்பூஊஒ....ப்பூஊ'' என வாயில் கை வைத்து இருவரும் சிரிக்க, நிஷாந்தோ அந்தக் கேலியில் அசடு வழியும் மனநிலையிலோ... தந்தையிடம் எதிர்வாதம் செய்யும் நிலையிலோ இல்லை! முற்று முதலாய்... தன் மருமகளிடம் மனதைப் பறி கொடுத்திருந்தான்!

''நா... அழுதா உனக்குச் சிரிப்பு வருதாடா குட்டி... இன்னும் அழவா? இன்னும் கொஞ்சம் அழவா?'' என்று கேட்டுக் கேட்டு, ''ஆஆஆஆஆஆஆஆஆ'' என்று அழுதவன், அவள் சிரிப்பைக் கண்ணில் ரசனையுடன் பார்த்திருந்தான்!

அதைக் கண்ட அனைவருக்குமே... கண்ணில் அன்பின் சாரம்!

சிரிப்பு... கோபம்... கேலி... என அனைத்தையும் ஒதுக்கிவிட்டு, மாமனும் மருமகளும் உறவாடிய அழகில்... லயித்து நின்றனர் அனைவருமே!

அதுவும், ''நீ சிரிச்சிட்டேப் பிறக்கணும்ன்னு தான்... நீ பிறக்கும் போது... நா அழுதேன் போல!'' என்ற நிஷாந்த்,

''உன்னோட சிரிப்புக்கு... அதான் விலைன்னா... நா எவ்வளவுக் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லையடா ராஜாத்தி!'' எனக் கூறி, குழந்தையின் உச்சி முகர்ந்த போது, அங்கிருந்தோரின் கண்களில் ஈரத்தின் சாயல்!

சிரிப்பும் கேலியுமாய்ப் போய்க் கொண்டிருந்த அந்த நேரம், உணர்ச்சிப் பூர்வமாய் மாறிப் போனதும், அங்கே பலத்த அமைதி நிலவியது!

அதை உண்டாக்கிய நிஷாந்தே, அதைக் கலைக்கவும் செய்தான்!

''ஏய்... குட்டி... இதென்ன பாசமலர் படம் மாதிரி போயிட்டு இருக்கு! நோ... பப்பு... நோ! சியர் அப்! ஹான்... மாமா உனக்கு என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பாப்போமா?'' சட்டென தனது இறுக்கத்திலிருந்து வெளியே வந்தவன்.

''ஏய்... ஒஜோ! இந்தா பாப்ப்லி குட்டியைப் பிடி!'' என்று அவளிடம் குழந்தையைக் கொடுத்தான்.

''ஹ்ம்ம்... இங்க வந்து நில்லு! ஹ்ம்ம்... இங்க... பார்சல் பிரிக்கிறது அவளுக்குத் தெரியணும்... ம்... இப்படி.வா...'' என்று அவளை இப்படியும் அப்படியும் நகற்றி, ஒரு இடத்தில் நிற்க வைத்தவன்.

கைகளைத் தூசி தட்டிக் கொண்டு, பார்சலைப் பிரிக்க ஆரம்பித்தான்!

"டொட்... ட...டொய்ங்க..." என்று சவுண்ட் விட்ட படியே, பார்சலைப் பிரித்தவன்,

"குட்டி... இங்க பாரு... இங்க பாருடா..." என்று பத்மாசினியை அழைக்க.

அவள் என்ன "ஹய்யா... சூப்பர்!" என்று கத்தி ஆர்ப் பரிக்கவாச் செய்வாள்!

அந்த ஒரு மாதக் குழந்தையின் பார்வை, அவள் மாமனை விட்டு, விட்டதில் இருந்த ஒளி விளக்கின் மீது போய்விட்டது!

"ஏய்... குட்டி... பாரு..." என அவன் கெஞ்ச,

"லூசா நிஷூ நீ? பாருன்னா... அவளுக்குப் புரியுமா என்ன? நீ முதல்ல பிரி" என்று மைவிழி தான், அவனைத் திசை திருப்ப வேண்டியதாய் இருந்தது!

ஆனாலும், நிஷாந்திற்கு தன் மருமகள் தான் வாங்கி வந்ததைக் கண் கொண்டு பார்க்கவில்லை என்பதில் ஏகப்பட்ட வருத்தம்!

"பப்பி டார்லிங்... இங்க பாருடா... மாமா என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பாரேன்... வாக்கர் வாங்கிட்டு வந்திருக்கேன்டா..." என்று அவன் கெஞ்ச.

அனைவரும் வாய் விட்டுச் சிரித்தனர்.

மைவிழியோ "அவ என்ன தெரியுமா நினைக்கிறா... டேய் மாமா.. எனக்கு இன்னும் தலையே நிக்கலை... முதல்ல எனக்கு தலை நிக்கணும்... அப்புறம் நான் குப்புற விழணும்... அப்புறம் தவக்கணும்... அப்புறம் தான்

நடக்க முடியும்! இப்பவே ஏன்டா வாக்கரை வாங்கிட்டு வந்தேன்னு தலையில அடிச்சுக்கிறா.. இல்லைடா பப்பி!?" எனக் கேலி செய்தாள்!

கூடவே, "என்ன தெரியும்... உங்க மாமாவுக்கு?" என்று அவள் தலையில் அடித்துக் கொள்ள, வீடே சிரிப்பில் அதிர்ந்தது.

ஆனால், அதெல்லாம் நிஷாந்தின் மனதில் பதியவே இல்லை!

தன் மருமகள்... தான் வாங்கி வந்த பொருளைக் கண் ணால் கூடப் பார்க்கவில்லை என்பதே அவனது பெரிய வருத்தமாய் இருந்தது! இரவு வரையிலும் கூட!

அதுவும், "ஏன் ஒஜோ... அந்த வாக்கர் நல்லா இல் லையா ஒஜோ? பிங்க் கலர் தான் பாப்பாக்குப் பிடிக் கும்ன்னு... அந்த கலர் வாங்கினேன்! முன்னாடி... யானை... டான்சிங் டால் எல்லாம் இருக்கு ஒஜோ! அப்புறம் ஏன்... குட்டி பார்க்கவே இல்லை!" என அவன் பாவமாய்க் கேட்க, மைவிழிக்கு உருகிவிட்டது!

அவளால், அவனுக்கு எந்தவிதமானச் சமாதானமும் சொல்ல முடியவில்லை!

ஏனெனில், ஒரு சின்னப் பொருளை, தன் மருமகள் ஏறிட்டு பார்க்கவில்லை என்பதற்கே இவ்வளவு வருந்து பவன், தான் உயிர் கொடுத்து உருவாக்கிய குழந்தை, கருவிலேயே காணாமல் போய்விட்டது என்பதை எங்கனம் ஜீரணித்துக் கொண்டான் என்ற கேள்வியும்.

உள்ளுக்குள் எவ்வளவு வலி இருந்தாலும்... அதை புன்னகையெனும் முகமூடிப் போட்டு மறைத்து, தனக்

காக... தன்னுடைய சந்தோஷத்திற்காக என்று ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து செய்யும் இவன் எனது கணவனாக அமைய என்ன தவம் செய்தேன் என்ற உணர்ச்சி துடிப்பும்.

மைவிழியைக் கட்டிப் போட்டன! நிஷாந்தையும் கட்டிக் கொள்ள செய்தன!

காற்றுக்குக் கூட இடம் இல்லாதபடி, அவனை இறுக அணைத்தவள்,

''என்னோட செல்ல நிஷூ...'' என்றபடியே அவனுக்கு முத்தமழை பொழிந்தாள்.

''ஹே ஒஜோ! என்ன செய்றே? ஐயோ... நா ஒரு கன்னிப் பையன்... என்னை விட்டுடு...'' என்று நிஷாந்த் அலற.

''அடிங்க... கன்னிப்பையனா? அதுவும் நீயி! ப்ளே பாய் ரேன்ஜ்க்கு வேலை செய்யவேண்டியது... இவரு கன்னிப் பையனாம்?'' என அவனது கன்னம் கடித்தாள் மைவிழி.

''ஹே ஒஜோ! இது வன்முறை! கடிக்காதே!'' என்று அவன் வேண்டுமென்றே அலற,

அதற்கு பதில் போல், ''இது வன்முறை இல்லை... இதான் வன்முறை!'' என்ற மைவிழி, கன்னத்தை விட்டு உதட்டைச் சிறை செய்தாள்!

வினாடிகள் அப்படியே உறைந்து போயின!

உறை பனியென உறைந்து நின்ற வினாடிகள்... நிமிடங்களாய்க் கரையக் கரைய...

மைவிழியின் தாமரை மேனி, நிஷாந்தின் கதிர் கரங்களால் மலரத் தொடங்கியது!

இடுப்பில் படர்ந்த அவனது கரங்கள், மெல்ல மெல்ல முன்னேறி... முதுகில் பதிந்து, அவளைத் தன்னோடு மேலும் இறுக்கின!

அவளும், தன் இரு கரங்களையும் அவன் பின்னங் கழுத்தில் கொடுத்து, அவனது அடர்ந்த கேசத்தை இறுகப் பிடித்து, அவனது முகத்தைத் தன் இதழ் நோக்கியே இருக்கும்படி செய்தாள்!

பல நிமிடங்கள் தொடர்ந்த இத்தேடல், நிஷாந்தின் கெஞ்சலில் படுக்கைக்கு இடம் மாறியது.

மைவிழியும், அவன் தேடலுக்குப் பாதை வகுத்துக் கொடுத்தாள்.

கட்டிலில் சாய்ந்த இரு காதல் உள்ளங்களும், உடலால் ஒன்று படுவதற்கான வேலைகளில் மும்முரமாய் இறங்கின!

''நிஷூ... ஏன் இவ்வளவு அவசரம்... மெதுவா...'' என்று மைவிழி கிசுகிசுக்க.

நிஷாந்திற்கு பதில் பேசக் கூட நேரமிருக்கவில்லை! அவனது வேலை அப்படி!

மைவிழியின் உதடுகள் ''மெதுவா...'' என்று கூறிய போதும், அவளது இளமையும்... நிஷாந்தின் மீது அவள் கொண்ட காதலும் ''ஹ்ம்ம்... சீக்கிரம்'' என்று அவனது தேடலை ரசிக்கவே செய்தன!

தேடலை நிறைவு செய்ய வினாடிகளே எஞ்சியிருந்த வேளையில், நிஷாந்த் சட்டென அவளிடமிருந்து விலகினான்!

அதுவும், ''ஹோ... காட்!'' என்ற அதிர்ச்சியுடன்!

மைவிழிக்கு அவனைக் காட்டிலும் அதிர்ச்சி!

உணர்ச்சியின் உச்சக்கட்டத்திற்குச் சென்று கொண்டிருந்த வேளையில், அவன் சட்டென விலகவும், மைவிழி ஏமாற்றத்தின் உச்சத்திற்குச் சென்று விட்டாள்! உடலால் மட்டுமல்ல! மனதாலும்!

"என்ன நிஷூ... என்னாச்சு..." எனறவளின் உடல், அவனது அருகாமைக்காக மிகவும் ஏங்கியது.

தன்னை விட்டு விலகியவனின் கைப்பிடித்து, தன் மேல் போட்டுக் கொள்ள முயன்றபடி,

"என்ன நிஷூ... ப்ளீஸ் நிஷூ..." என்றாள் இறைஞ்சலாய்!

சட்டென குனிந்து, அவள் நெற்றியில் முத்தம் வைத்தான் நிஷாந்த்!

முத்தம் வைக்கக் குனிந்த அவனது முகத்தை இழுத்து, அவன் உதட்டோடு உதடு பொருத்தி, பாதியில் விட்ட தேடலை முழுதாய் முடிக்கச் சொல்லி அவள் அழைப்பு விடுக்க,

"ப்ளீஸ் ஒஜோ... வேணாம்..." என்று அவளிடமிருந்து விலகினான் நிஷாந்த்!

"ஹே...நிஷூஷூஷூஷூஷூஷூஷூ... என்னப்பா...." என்ற மைவிழியின் குரலில் ஏகப்பட்ட தாபம்!

"சாரி ஒஜோ! வேணாம்..." என்றவன், கட்டிலை விட்டிறங்க, உடைகளை மாற்ற ஆரம்பிக்கவும்.

மைவிழி சட்டெனக் கட்டிலை விட்டு இறங்கினாள்.

"என்னடா... என்ன பிரச்சனை... ஏன்டா இப்படி செய்றே? ஐயோ... எனக்கு நீ வேணும் நிஷூ... நீ வேணும்!" என்றபடியே கணவனைப் பிடித்து உலுக்கினாள் மைவிழி!

"எனக்கும் நீ வேணும் ஒஜோ! உயிரோட வேணும்! என்னோட... அஞ்சு நிமிஷ சந்தோஷத்திற்காக... உன்னோட உயிரை என்னால பணயம் வைக்க முடியாது! எனக்கு நீ வேணும் ஒஜோ! நீ வேணும்! வாழ்நாள் முழுசும் வேணும்!" என்ற நிஷாந்தின் குரல் உடைந்து போயிருக்க, அவனது கரங்களோ, மனைவியின் நெஞ்சோடு அணைத்துக் கொண்டன! மிகவும் இறுக்கமாய்!

மைவிழிக்கு... "இனி ஒரு தடம் கருத்தரிப்போ... கருக்கலைப்போ நடக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்!" என்ற மருத்துவரின் வார்த்தைகள் நினைவிலாடின! கண்களில் இரண்டு வகையான கண்ணீர் வழியத் தொடங்கியது! ஒன்று ஆனந்தக் கண்ணீர்! அடுத்தது ஓர் மனைவியின் வலி!

பூச்சரத்தில் சேரும் அடுத்த பூ - ஏக்கம்!



22

மைவிழியால் கண்ணீரை அடக்க முடியவில்லை!

நெஞ்சமெல்லாம் நிஷாந்தின் மீதான காதலில் கசிந்துருகி கொண்டிருக்க, உடம்போ ஏக்கத்தில் துவண்டு கொண்டிருந்தது!

நிஷாந்தின் உடம்பும்... தன் தேகப்பசிக்கு இரை தேடி துவண்டு கொண்டிருந்த போதும், மனைவியின் மீது

அவன் கொண்ட இணையில்லா நேசம் அவனைக் கட்டுக்குள் வைத்திருந்தது!

''ஓஜோ! ப்ளீஸ்... உன்னோட கஷ்டம் எனக்குப் புரியுது பேபி! ப்ளீஸ்... ஆனா...'' என அவன் இழுக்க,

''எனக்கு மட்டுமா கஷ்டம்? உனக்கும் தானே?'' என்றபோது மைவிழிக்கு, தொண்டைக்குள் பெரிய பாறாங்கல் இருப்பது போன்ற உணர்வு?

அவனது தேடல்களும்... சீண்டல்களும்... வேகமும்.. ஆக்கிரமிப்பும் அவள் அறிந்ததே அல்லவோ!

எவ்வளவு ஆசையும்... தாபமுமாய் அணைப்பான்!

அவன் கொடுக்கும் ஒரோர் முத்தத்திலும்... காதலும் தாபமும் சரி பங்காய் கலந்திருக்க, அவளது ஒரோர் அணுவிலும் அந்த முத்தத்தைத் தவிர... பரவ விடுவானே!

அவனது ஒவ்வொரு அணைப்பு, அவளது தேகத்தில் இன்பக் கவிதை வாசிக்குமே!

அவளுள் அவன் கலக்கும் அற்புத நொடிகளுக்கு இணையாய், இந்த உலகில் வேறேதும் உண்டோ!

இன்ப நொடிகளாய்க் கழிந்த நேரங்கள், ஒரே இரவில் துன்ப நிமிடங்களாய் மாறிப் போய்விட்டனவே!

பகலின்றி இரவே பகலாக இருக்கக் கூடாதா என ஏங்கிய நாட்கள் காணாமல் போய், இரவே என்னிடம் வராதே என்று விரக்தி ராகம் பாடும் நிலை வந்து விட்டதே!

மைவிழியால் அந்த ஏமாற்றத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை!

தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை விடவும், தன்னால் கணவனுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை எண்ணியே மனம் துவண்டு போகத் தொடங்கியது!

''உனக்குக் கஷ்டமா இல்லையா... நிஷூ?'' என அவள் மீண்டும் கேட்க,

''இல்ல! ஒஜோ! கண்டிப்பா இல்ல!'' என்றான் அவன் திடமாய்.

''நிஜமா?'' என அவள் விழி உயர்த்திக் கேட்க,

அவள் உச்சியில் இதழ் பதித்தவன், ''என்னோட ஒரு சின்னத் தப்பால தான்... எங்கம்மா... இப்ப எங்களோட இல்லை! அதே மாதிரி... என்னோட ஆசைக்காக... என்னோட பிடிவாதத்துக்காகன்னு ஒரு தப்பை செஞ்சிட்டு... அதனால் நீ கஷ்டப்படுவின்னா... ஹ்ம்ம்...நோ ... நான் பண்ண மாட்டேன்!'' என்றான் உறுதி படிந்த குரலில்.

அவனது விளக்கத்தில் அதிர்ந்து நின்றவள், ''நிஷூ!!!'' என்றான் திகைப்புடன்.

''ஆமா ஒஜோ! நீ எனக்கு வேணும்... வாழ்நாள் முழுசும் வேணும்! என்னோட அம்மாவா... என்னோட பிரண்டா... என்னோட எனிமியா... என்னோட கைடா... நீ எனக்கு வேணும்! இந்த ரோல் எல்லாம் ப்ளே பண்றதுக்கு... நீ என்னோட வைஃப்பா இருக்கணும்ன்னு அவசியமில்லை! முக்கியமா... படுக்கையில எனக்கு வைஃப்பா இருக்கணும்ன்னு அவசியமே இல்லை!'' என்றான் அவன், உணர்ச்சிகளை மறைக்காமல் வெளிக்காட்டி!

அவனது குரலில் தென்பட்ட பாசமும்... அதை அவன் வெளிப்படுத்திய வகையும்... மைவிழியைப் புரட்டிப் போட்டன!

''நிஷூ... நிஷூ... நிஷூ... நிஷூ... - இதைத் தவிர மைவிழியால் வேறெதையும் சொல்லவும் முடியவில்லை! அவனைத் தாண்டி வேறெதையும் யோசிக்கவும் முடியவில்லை!

உடலில் ஓடும் உதிரம் யாவும் அவனே வியாபித்திருந்தான்!

உதிரத்தில் இருக்கும் ஒரோர் அணுவிலும் அவனே கலந்திருந்தான்!

அவள் உள் இழுக்கும் சுவாசம் முழுதும் அவனே நிறைந்திருந்தான்!

அவளை இயக்கும் உயிரின் நாதமாய் அவனே இருந்தான்!

தன் மீது படர்ந்திருந்த மனைவியை மென்மையாய் அணைத்தபடியே கட்டிலில் சாய்ந்த நிஷாந்த், மெல்ல அவள் முடி கோதி விட்டதில், அவளும் உறக்கத்தைத் தழுவினாள்! அவனும்... கண் உறங்கினான்!

காலை பொழுது இனிமையாய் விடிய, நிஷாந்தின் பழைய உற்சாகம் வீட்டையே களேபரப்படுத்தியது!

ஆனால், மைவிழியால் தான் உற்சாகமாய் இருக்க முடியவில்லை!

அவளால்... முந்தைய இரவு நடந்த எதையுமே மறக்க முடியவில்லை!

காலை உணவு வேளை வரையிலும், ஏதோ யோசனையாகவே இருந்தவன், நிஷாந்த் அலுவலகம் கிளம்பும் நேரத்தில் ''நிஷூ... இன்னைக்கு டாக்டர் அப்பாயிண்ட்மென்ட் கிடைக்குமான்னு பார்க்கிறியா?'' என்றாள், கேள்வியாக.

''டாக்டர் அப்பாயிண்ட்மென்ட்டா? ஏன்? உடம்பு எதுவும் செய்யுதா? அதான்... காலையில் இருந்து மைசூர் போண்டா சாப்பிட்ட மந்தி மாதிரி இருந்தியா?'' என அவன், அவளது தாடை தொட்டு கேட்க,

''ப்ச்ச்! விளையாடாதே நிஷூ... கேட்கிறியா இல்லையா?'' என்றாள் அவள் கறாராக.

''சும்மா எல்லாம் அவரைப் போய் பார்க்க முடியாது. ஒஜோ குட்டி! என்ன காரணம்ன்னு சொன்னா தான்... அப்பாயிண்ட்மென்ட் வாங்க முடியும்? நினைச்ச நேரத்துக்கு எல்லாம், டேய் தம்பி... ஊசியைப் போடுடான்னு ஏவி விடுறதுக்கு... டாக்டர் என்ன... உன்னோட சித்தப்பா பையனா? ஹ்ம்ம்...?!!'' என அவன் கேலி பேச,

''உன்கிட்ட போய் சொன்னேன் பாரு... என்னை...''

''அச்சச்சோ... என்னோட ஷூ ரொம்ப புதுசு ஒஜோ! அதையெல்லாம் தரவே மாட்டேன்!'' என்றான் நிஷாந்த், கிண்டலாக.

''ஹய்யோ! கொஞ்சம் சீரியஸா பேசு... நிஷான்!'' என்று மைவிழி பல்லைக் கடிக்க.

''வேணும்னா ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆகிட்டுப் பேசவா?'' என்றான் நிஷாந்த், மீண்டும் கிண்டல் குரலிலேயே.

''ச்சீ... போ... நானே டாக்டர் ஆபீஸுக்கு போன் பண்ணிப் பேசிக்கிறேன்!'' என்று நகர்ந்த மைவழி, ''நா மட்டும் போறதா இருந்தா... உன்கிட்ட வந்து கேட்டிருக்கவே மாட்டேன்! நீயும் வரணும்னே தான்... உன்னை அப்பாயிண்ட்மென்ட் வாங்கச் சொன்னேன்...

ஆனா... நீ இருக்கியே...'' என்று தலையில் அடித்துக் கொண்டாள்.

''ஆஹா! என்னை பைத்தியம்ன்னு முடிவு பண்ணி... பைத்தியத்திற்கு வைத்தியம் பாக்கிற பைத்தியக்கார வைத்தியர்கிட்ட கூட்டிட்டுப் போகப் போறியா?'' என அவன் அதிர,

மைவிழியால் அதற்கு மேல் பொறுமையாக இருக்க முடியவில்லை!

பட்...பட்... என்று அவன் முதுகிலும் தோள்களிலும் சரமாரியா அடித்தவள்.

''மரியாதையா... ஆபீஸுக்கு ஓடிப்போயிரு!'' என்றாள் ஒரு விரல் நீட்டி!

''ஹிஹி...ஹிஹி...'' என்று சிரித்தபடியே கார் அருகே சென்றவனை, ''டேய் நிஷூ... அப்பாயிண்ட்மென்ட் வாங்கினதும் போன் பண்றேன்... ஹாஸ்பிடல் வந்து சேரு!'' என்றாள் அதிகாரமாய்.

இடை வரை குனிந்து, ''ஆகட்டும் அரசே!'' என அவன் சலாம் போட,

மைவிழியின் இதழ் ஓரத்தில் சிரிப்பு!

''ஐயோ... இவனோட! ஒரு நேரம் சின்னக் கண்ணனா மாறிச் சிரிக்க வைக்கிறான்... ஒரு நேரம் மகாபாரதக் கண்ணனாக மாறி அபயம் கொடுக்கிறானே!'' என்று மனமும், இதழுடன் சேர்ந்து சிரித்தது!

மெல்லக் கையாட்டி அவனை வழியனுப்பி வைத்தவன், மருத்துவரின் அலுவலகத்திற்கு அழைத்து, அவரைப் பார்ப்பதற்கான அனுமதியைப் பெற்றாள்.

ஒருவழியாக, நிஷாந்தை உருட்டிக் கொண்டு இரு வருமாய் மருத்துவமனை சென்றடைந்தனர்.

''ஒஜோ! எனக்கு ஒரு டவுட்டு...'' என அவன் ஆரம்பிக்கும் போதே.

ஏதோ வில்லங்கம் என்பது புரிய, ''என்ன?'' என்றாள் மைவிழி கெத்தாக.

''இல்ல... ஐயோ... கிரீன் சாண்டோ உடம்பு ரெட் கலர்ல மாறிப் போற அளவுக்கு... அந்தப் புள்ளையை அடிச்சிட்டோமேன்னு வருத்தப்பட்டு தானே... இப்ப என்ன டாக்டர் வீட்டுக்குக் கூட்டிப் போறே?'' என்று அவன் இழுக்க,

''ஆமா!'' என்றாள் ஒஜோ, எதிர்த்து எதுவும் பேசாமல்.

அவள் அடிப்பாள்... திட்டுவாள்... இல்லை மண்டை மேல் கொட்டுவாள் என்று ஏதேதோ எதிர்பார்த்திருந்த நிஷாந்திற்கு அவளது ஆமோதிப்பு, பெரும் வியப்பைக் கொடுத்தது!

''ஹே என்ன ஒஜோ... உடனே ஆமான்னு சொல்லிட்டே!'' என அவன் வியக்க,

''பின்னே... லூசோட பேசி என்னையும் லூசாக சொல்றியா?'' என்றாள் மைவிழி பட்டென.

''ஹான்... பாத்தியா... பாத்தியா... நீயும் என்னை லூசு சொல்றே... அப்போ பைத்தியத்துக்கு வைத்தியம் பார்க்கிற...'' என்று நிஷாந்த் மீண்டும் தொடங்க,

''நானே செம காண்டுல இருக்கேன்... சும்மா டென்ஷன் பண்ணாத நிஷான்! பேசாம வா!'' என்றாள் அவள், குரல் உயர்த்தி.

"ஏன் ஒஜோ... டென்ஷன்!?" என நிஷான். அவள் கை பற்றி கேட்க.

"தெரியல நிஷூ... பட்... எனக்கு ஒரு மாதிரி... பயமா இருக்கு... நீ கொஞ்ச நேரம் விளையாடாம சும்மா இரு!" என்றாள் கண்டிப்புடன்.

"ஓகே! நிஷான்... இனிமேல் சாப்பிடும் போது தான் வாயே திறப்பான்!" என்ற அறிவிப்புடன், வலது கையை உடம்பின் குறுக்கே வைத்து... இடது கையை நிமிர்த்தி வைத்து... இடது கை பெரு விரலை உதட்டில் வைத்து... எல்.கே.ஜி பையன் போல் அமர்ந்து கொண்டான் நிஷாந்த்.

போவோர்... வருவோர் எல்லாம் அவனையே சுவாரஸ்யத்துடன் பார்த்துச் செல்லவே.

கண்ணை உருட்டி, மைவிழியை சுட்டிக் காட்டினான் அக்கள்வன்!

அனைவரது பார்வையும் அவளை சிரிப்புடன் எதிர் கொண்டன!

சில நிமிடங்களுக்கு மேல் பொறுக்க முடியாமல் "ஹய்யோ... மானத்தை வாங்காத நிஷூ!" என்று அவன் கையைத் தட்டிவிட்டாள் மைவிழி.

நல்லவேளையாக, அவர்களது முறை வந்துவிட, இருவரும் மருத்துவரின் அறைக்குள் சென்றனர்.

அவளது உடல் நிலை பற்றிய விசாரிப்புக்குப் பின்னர், நேரடியாகவே மைவிழி விஷயத்திற்கு வந்தாள்.

"என் கருப்பை வீக்கா இருக்குன்னு தெரியும்... ஆனா... அது... அது... ஹ்ம்ம்... எப்படி சொல்றது? இந்தப்

பிரச்சனையால, நானும் என் கணவரும்... ஹ்ம்ம்... அது... செக்ஸ் வைத்துக் கொள்ளவே முடியாதா டாக்டர்? ப்ரெக்னன்சியை தவிர்க்கிறதுக்கு... நிறைய வழி இருக்கே... அதில ஏதாவது சேஃப்டி மேஷர்ஸ் எடுத்துக்கிட்டு... நாங்க நார்மல் லவ் லைஃப் வாழ முடியாதா?" என அவள் கேட்டுவிட,

மருத்துவர் மெலிதாய் சிரித்தார்.

"இதை உங்க கணவர் ஏற்கனவே கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டாரே... மைவிழி! உங்களுக்குத் தெரியாதா?" எனக் கேட்டவர்.

"உங்களுடைய பரிசோதனை முடிவுகளைப் பொறுத்த வரையிலும், உங்களது கருப்பைக்கு ஏற்படும் ஒரோர் மாற்றமும் அதை பாதிக்கும்... அது மாத்திரை மூலமாக என்றாலும் சரி... ஏதும் கருத்தடை சாதனம் மூலமாக என்றாலும் சரி! மாத்திரை என்கையில், அது வெளியிடும் ஹார்மோன்கள்... உங்களது கருப்பையின் இயக்கத்தைப் பாதிக்கலாம். கருத்தடை சாதனம் என்கையில்... அது கொடுக்கும் அழுத்தம்... ஏற்கனவே வலுவிழந்திருக்கும் கருப்பையை மேலும் வலுவிழக்கச் செய்யலாம்!" என்றார் விளக்கமாக.

அகத்தினுள் ஏற்பட்ட வலி, முகத்திலும் தெரிய, "எனக்கு தான் சேஃப்டி மேஷர்ஸ் எதுவும் ஒத்து வராது... பட்... நிஷானுக்கு?" என்றாள் அவள், வேதனையை அப்பட்டமாய் வெளிக்காட்டி!

"ஹ்ம்ம்... அது சரி வரலாம்! ஆனால்... நூற்றில் பத்து சதவீதமாய் நீங்கள் கருவுற்று விடும் வாய்ப்பும் உள்ளது!" என்றார் அவர். நிதர்சனத்தை எடுத்துரைத்து.

அந்த "பத்து" சதவீதத்தை மனதில் வைத்து தான், நிஷாந்த் தன்னை விட்டு விலகியிருக்கிறான் என்று புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு, மைவிழி அறிவிலி அல்லவே!

அதற்கு மேல் என்ன கேட்பது என்ன தெரியாமல், மருத்துவரிடம் விடை பெற்றுக் கொண்டு, வெளியே வந்தாள் மைவிழி.

காரில் ஏறி அமர்ந்து, கார் வீடு நோக்கி செல்லத் தொடங்கிய பின்னரும் கூட, அங்கே அமைதியே நிலவியது!

ஐந்து நிமிடங்களுக்கு மேல், அந்த அமைதி மைவிழியை பொறுமையிழக்கச் செய்தது!

அவனது பேச்சு அவளது அமைதியைக் கெடுப்ப தாய் நினைத்தவளால், இப்போது அவனது அமைதியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

"ஏன் நிஷூ... இவ என்னடா இவ்வளவு அலையுறான்னு நினைக்கிறியா?" என்று கேட்டபோது, கண்ணோரம் நீர் கரித்துக் கொண்டு வந்துவிட்டது, மைவிழிக்கு!

தன் மீது... சிறிது அருவெறுப்பு வருவது போல், உடம்பும் மனமும் கூசியது!

'செக்ஸ்' என்ற சொல்லையே கெட்ட வார்த்தையாக எண்ணும் நாட்டில் வளர்ந்தவளுக்கு, தான் ஏதோ பெரும் குற்றம் புரிந்து விட்டது போல் மேனி கூசியது!

மருத்துவரிடம் போவதற்கு முன்னர், கணவனின் தாம்பத்திய தேவையை தீர்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் மட்டுமே மேலோங்கி இருந்தது!

ஆனால், அவரிடம் சென்று வந்த பின்னரோ... அதுவும் தன் கணவன் இந்த விஷயமாய் ஏற்கனவே அவரிடம் பேசிவிட்டான் என்ற விஷயம் தெரிந்த பின்னரோ... மனம் தன்னைத் தானே தாழ்த்தி எடை போட்டது!

என்னவோ மகா பாதகம் செய்து விட்டது போல், உணர்ச்சிகளை அடக்கத் தெரியாத பெரும் அற்ப சதை பதராய் மாறிப் போய்விட்டது போல் மனம் தவித்தது!

அதை முழுதாய் வார்த்தையில் வெளியிட்டு "ரொம்ப அலையுறேனா?" என அவள் திக்க,

"உனக்கு என்னை விட.. மன உறுதி ஜாஸ்தின்னு நினைச்சேன்! ஆனா... இவ்வளவு லூசு தனமா பேசு வேன்னு நான் நினைக்கவே இல்லை!" என்ற நிஷாந்த், அவளது தலையை லேசாய் கலைத்து விட்டான்.

"பச்ச்... போ நிஷூ... எனக்கு... எனக்கு... ஐ ஃபீல் சோ கில்ட்டி!" என்றாள் மைவிழி, அவன் கையைத் தட்டி விட்டபடி.

"எதுக்கு கில்ட்டி? ஹஸ்பெண்ட்... வைஃப்புக்குள்ள செக்ஸ்ங்கிறது ஒரு முக்கியமான விஷயம்... அதை ஹஸ்பெண்ட் பேசினா அவனுக்கு வைஃப் மேல ஆசை... அதுவே வைஃப் பேசினா தப்பா என்ன? ஏதோ நாட்டுப்புறத்தில பிறந்து வளர்ந்தவ மாதிரி பேசாதே.... ஓஜோ!" என்றான் கண்டிப்பாக.

அவன் கூற்றிலிருந்த நியாயத்தை உணர்ந்த போதும், அவளால் அதை ஒத்துக் கொள்ள முடியவில்லை.

ஒரு புறம், தாம்பத்தியம் பற்றிய தனது பேச்சு அவளைக் குன்ற வைத்துக் கொண்டிருக்க, மறுபுறமோ

தாம்பத்தியத்திற்கான வழிகள் யாவும் அடைந்துவிட்டதில் மனம் துன்புற்றது!

''ப்ச்ச்...'' - அனைத்துமே மைவிழிக்கு சலிப்பை உண்டு பண்ணியது!

இனி வாழ்வே ஒன்றுமில்லாமல் போய்விடுமோ எனக் கூட பயம் வந்தது!

இருவருக்கு நடுவேயும் காதல் இருக்கிறது தான்! ஆனால்... காமமில்லா காதல் இனிக்குமா என்பதில் தான் அவளுக்கு சந்தேகமே!

இப்போது, அவளைத் தீண்டாமல் விலகிப் போகும் நிஷாந்தால், வாழ்க்கை முழுதும் அப்படியே இருக்க முடியுமா என்று கேள்வி வேற அவளைக் குடைந்தது!

தன் மீது அவன் கொண்ட காதல், உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அவனை வாழ வைக்கும் தான்! ஆனால்... தன் நிஷாந்திற்கு.. தன்னால் ஓர் வேதனை வருவதை தன்னால் பொறுக்க முடியுமா?

ஆயிரம் ஆயிரம் கேள்விகள்!

பதிலில்லா கேள்விகள்!

மனதைக் குடையும் கேள்விகள்!

வாழ்வைக் கேள்வி குறியாக்கும் கேள்விகள்!

வாழ்வே விடியாதோ என்று எண்ண வைக்கும் கேள்விகள்!

மைவிழிக்கு தலையே வெடித்து விடும் அளவிற்கு மண்டையை இடித்தது!

இருகைகளாலும் தலையை தாங்கிப் பிடித்துக் கொண்டவள், ''ஹய்யோ!!!'' என்றாள். உள்ளிருக்கும் வேதனை தாள முடியாமல்.

கார் ஓட்டிக் கொண்டிருந்த நிஷாந்தோ, ''ஒஜோ! எதுக்கு இப்ப டென்ஷன் ஆகுறே? ஜஸ்ட் பீ கூல்!'' என்றான் சாதாரணமாய்.

ஆனால் மைவிழியை இயல்பாய் இருக்க முடியவில்லை!

''ப்ச்ச்'' என மீண்டும் சலித்துக் கொண்டவள், கண்களை இறுக்கமாய் மூடிக் கொண்டாள்.

ஐந்து நிமிடமோ... பத்து நிமிடமோ... அப்பயண நேரம் அமைதியாய் கழிய,

விலுக்கென விழிகளை மலர்த்தியவள், ''ஹே நிஷான்... நீ என்னை டைவர்ஸ் பண்ணிட்டு... நிம்மியைக் கல்யாணம் பண்ணிக்கோ!'' என்றாள், பிரச்னைக்கு விடிவு கண்டுவிட்ட தொனியில்!

நிஷாந்த் எதுவுமே பேசவில்லை!

அவன் முகத்தில் அதிர்ச்சியில்லை!

திகைப்பில்லை!

வருத்தமில்லை!

கோபமில்லை!

கொதிப்பில்லை!

வியப்பில்லை!

பேச்சுமில்லை!

மாறாய், அவன் லேசாய் சிரித்தான்! மாயக் கண்ணனாய் புன்னகை புரிந்தான்! எதையோ புரிந்து கொண்டவன் போல், உதடு பிரிந்து மென்மை உதிர்த்தான்!

அவன் முகத்தில் தெரிந்த உணர்ச்சிகளை ஆராயும் பொறுமையயெல்லாம் மைவிழிக்கு இருக்கவில்லை.

''என்ன நிஷான்... சொல்றே?'' என்று பரபரத்தவளை,

''உன்னோட கேள்விக்கான பதிலை... இன்னும் ரெண்டு நாளில சொல்றேன்!'' என்றவன், சாலையைப் பார்த்திருந்த அவனது விழிகளை, அவள் புறமாய் திருப்பவில்லை!

பூச்சரத்தில் சேரும் அடுத்த மலர் - விட்டுக் கொடுத்தல்!



23

மைவிழி, நிஷாந்தின் சிரிப்பையோ... ''இரண்டு நாள் கழிச்சு பதில் சொல்றேன்'' என்ற பதிலையே சுத்தமாய் எதிர்பார்க்கவில்லை.

அவனது பதிலை தான் எதிர்பார்க்கவில்லை என்பது புரிந்த போதும், தான் அவனிடம் என்ன எதிர்பார்க்கிறோம் என்றும் அவளுக்குப் புரியவில்லை.

காதல் கொண்ட மனமோ... அவன் கோபப்பட வேண்டும்!'' என்னைப் பத்தி என்ன நினைச்சிட்டு இருக்கே நீ?'' என்று ஆத்திரப்பட வேண்டும்!'' கேவலம்... செக்ஸுக்காக நா இன்னொரு கல்யாணம் பண்ணிப் பேன்னு நினைச்சியா?'' என்று ஏளனம் செய்ய வேண்டும்!'' என்னை நீ புரிஞ்சுக்கிட்டது இவ்வளவு தானா?'' என்று ஆதங்கப்பட வேண்டும்!'' என்னை... என்ன உன்னோட முருகன் மாதிரின்னு நினைச்சியா?'' என்று

கேலி செய்ய வேண்டும்!'' உன்னை டைவர்ஸ் பண்ற துக்காக தான்... முருகனோட முட்டுச் சந்தில நின்னு சண்டை போட்டேனாக்கும்?'' என்று நொடித்துக் கொள்ள வேண்டும்! - என என்னென்னவோ எதிர் பார்த்தது!

ஆனால், வாழ்வின் நிதர்சனத்தை உணர்ந்த மூளையோ, ''இருபத்தியாறு... இருபத்தியேழு வயசில.... அவனால சாமியாரா வாழ முடியுமா என்னா? அதுவும்.... பிரம்மச்சாரியாவே வாழ்க்கை முழுசும் இருக்கிறது வேற... கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரியா வாழ்க்கையை ஓட்டுறது வேற! அவனோட உணர்ச்சிகளை... உனக்காக.... உன் மேல இருக்க காதலுக்காக அடக்கி வச்சுக் கணும்ன்னு எதிர்பார்க்கிறது தப்பில்லையா?'' என்று எதிர்வாதம் செய்து, அவளது எதிர்பார்ப்பை வேறாக மாற்றிப் போட்டது!

மனதின் எதிர்பார்ப்பும்... மூளையின் கட்டளையும் முற்றிலும் வேறாக இருக்க, ''நிஷான்... எஸ் ஆர் நோ... ஏதாவது ஒண்ணு சொல்லு!'' என்று இரண்டுக்கும் நடுவே கபடி ஆடியது உதடு.

''அதான்... ரெண்டு நாள் கழிச்சு சொல்றேன்னு சொன்னேனே...'' என்ற நிஷாந்தின் இதழோரம், அடக்கப் பட்ட சிரிப்பில் துடித்தது.

''என்ன இளிப்பு வேண்டிக்கிடங்கு...இங்க என்ன பல்பொடி விளம்பரமா எடுக்கிறாங்க?'' அதற்கும் எரிந்து விழுந்தாள் மைவிழி.

''ஹே ஒஜோ! ஏன் டென்ஷன்... கூல் ஒஜோ கூல்!''

''ஆமா... கூல்... நீ நா கேட்டதுக்கு பதில் சொன்ன... மாரியாத்தாவுக்கு கூழ் ஊத்துறேன்னு வேணும்ன்னா வேண்டிக்கலாம்! ஆனா... கூவா இருக்க முடியாது!'' என்று பல்லைக் கடித்தாள் மனைவி.

''ஹையா கூழ் ஊத்தப் போறியா? சூப்பர்! கூழ் ஊத்தும் போது... நல்ல எல்லோ கலர் சாரி கட்டிக்கோ சரியா? நானும் எல்லோ ஷர்ட் போட்டுக்கிறேன்... நம்ம பப் பிக்கும் எல்லோ பாவாடை வாங்கலாம்! நானும் அவளும் செம் பின்ச் சொல்லி... சாக்கி சாப்பிடுவோம்!'' என்றான் அவன், ரசனையுடன்.

''உன்னை...!!!'' - பற்கள் நறநறவென கடிபட, அவனை ஒரு விரல் நீட்டி எச்சரித்தவள்,

''வேணாம்... சும்மா இரு!'' என்றாள் அடக்கப்பட்ட கோபத்துடன்.

''அதைத் தான் நானும் சொல்றேன்... நீ தான் கேட்க மாட்டேங்கிறே?'' என்றான் நிஷாந்த் சிரிப்புடன்.

வந்த எரிச்சலை முகத்தில் அப்பட்டமாய் காட்டி யவள், ''உன்ட்ட போய் பேச வந்தேன்... பாரு'' என்று சலித்துக் கொண்டு, ஜன்னல் பக்கமாய் திரும்பிக் கொண்டாள்.

சாலையோரம் இருந்த மரங்களின் மீதே பார்வை நிலைத்திருக்க, எண்ணமோ நிஷாந்தை சுற்றியே வந்தது!

''ஏன்... ஏன் இப்படி பதில் சொல்லாம நழுவுறான்? எதுவும் பிளான் பண்றானோ?'' என்று பற்பல கேள் விகள் எழுந்தபோதும்.

''என்ன பிளான் பண்ணாலும் சரி... நம்ம பிளான் படி தான் எல்லாம் நடக்கணும்!'' என்று சூளுரைத்த மூளை, நிஷாந்தை வேறு வகையில் தாக்கியது!

''ஹே நிஷான்... எனக்கு இதுக்கு மட்டும் பதில் சொல்லு...'' என ஆரம்பித்து,

''உனக்கு நிம்மியைப் பிடிக்குமா?'' என்றாள் நேரடி யாக.

அவனிடம் வியப்போ... திகைப்போ இல்லை! மாறாய், மாயக் கண்ணனாய் புன்னகை சேய்தவன், ''ஹோ... யாரு... சோப்புத் தூளையா?'' என்றான் சிரிப்புடன்.

மைவிழிக்கு ஆத்திரமாய் வந்தது.

''ஆமா... செருப்புத் தூளு!'' என அவள் பல்லைக் கடிக்க,

''ஹையா... சூப்பர்... சோப்பி... உனக்கு இன்னொரு பேரு வச்சாச்சு... செருப்புத் தூள்! சூப்பர்!'' என்று நகைத் தான் நிஷாந்த்.

''நிஷான்!!!!!!!!!!!!'' - மைவிழிக்கு தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல் இருந்தது!

''ஹே... ஏன் டென்ஷன் ஒஜோ! இட்ஸ் அ ஜோக்!'' என்றான் நிஷாந்த், பெரிதாய் வியந்தபடி.

''உன்னோட மொக்கை ஜோக் எல்லாம்... உன் னோடவே இருக்கட்டும்!'' என்று அதற்கும் அவனைக் காய்ச்சினாள் மைவிழி.

ஆனால், மனம் அந்தக் கேள்விக்கான பதிலை அறிந்து கொள்ளச் சொல்லி, வேகமாய் துடித்தது!

''சொல்லு நிஷான்... நிர்மலாவைப் பிடிக்குமா?'' என்றாள் மீண்டும்.

''ஹே! பிடிக்குமே!'' - என்றாள் அவன் சாதாரணமாய்.

''ஹ்ம்ம்ம்ம்!!!!!!!!!!!!!'' - அவனது ''பிடிக்கும்''க்கிற்கு அவளிடம் தகுந்த பதில் இருக்கவில்லை.

மனம் ஏனோ வாடி விட, முகம் களையிழந்து போயிற்று.

தான் என்ன நினைக்கிறேன்... எப்படி உணர்கிறோம் என்றே மைவிழியால் கணிக்க முடியவில்லை.

அவனுக்கு நிர்மலாவைப் பிடிக்க வேண்டும் என்று தானே கேள்வியே கேட்டோம் என்று சமாதானம் செய்தாலும், ''ஹய்யோ... பிடிக்குமாமே?'' என்று மனம் கிடந்து அடித்துக் கொண்டது!

கேட்கக் கூடாது... கேட்கக் கூடாது என்று மூளை அறிவுறுத்தியபோதும், தன்னையும் மீறி ''என்னை விடவா?'' என்ற கேள்வியை அவளது உதடுகள் உதிர்த்து விட்டன!

''ஏன் கேட்டாய்?'' என மூளை சாட, மனமோ இந்தக் கேள்விக்கு எனக்குப் பதில் தெரிந்தே ஆகவேண்டும் என்று சண்டித் தனம் செய்தது!

மனதின் எதிர்பார்ப்பு முகத்தில் பிரதிபலிக்க, ''சொல்லு நிஷான்!'' என்று கணவனை ஊக்கினாள் மைவிழி.

''பலாப்பழம் பிடிக்குமா? மாம்பழம் பிடிக்குமான்னு கேட்டா நா என்ன பதில் சொல்றது? ரெண்டு பழமுமே

ரொம்ப டேஸ்ட்... ஒண்ணை விட்டுட்டு இன்னொண்ணை எப்படி சாப்பிடுறது?'' என்று நிஷாந்த் கண்ணடிக்க,

மைவிழிக்கு வந்த ஆத்திரத்திற்கு அளவே இல்லை!

''இதில யாரு பலா பழம்? யாரு மாம்பழம்?'' என்று எகிறியவள், அவனை பதில் பேச விடாமல் தானே பொரியத் துவங்கினாள்.

''ஹோ! சாருக்கு ரெண்டு பழம் கேட்குதே?'' என்ற வளின் கைகள், அவனது காதுகளை வலிக்கத் திருகின.

''ஓஹோ... உனக்கு முருகன்னு நினைப்பாக்கும்.. அதான், மாம்பழத்து மேல ஆசை வருதோ? மவனே கொன்னுடுவேன்!'' என்றவள், அவனை சகட்டு மேனிக்கு அடிக்கத் தொடங்கினாள்.

''ஹஹ்ஹா! வலிக்குது... ஓஜோ! விடு! நீ... இப்படி அடிச்சிட்டே இருக்கேன்னு வைய்யு... எமன் சார் வந்து நம்ம காரை அடிச்சு இழுத்துட்டுப் போய்டுவார்'' என அவளது கைகளை விலக்கி விட்ட நிஷாந்த்,

ரெண்டு பழத்துக்கே இந்த மொத்து மொத்துறியே? எனக்கு... பிடிச்ச பழ லிஸ்ட்ல ஏகப்பட்ட பழம் இருக்கு.. ஆப்பிள்... பைன்ஆப்பிள்... ஆரஞ்சு... கிரேப்ஸ்... கொய்யா பழம்... பப்பாளி... சப்போட்டா... சீதா பழம்...'' என அவள் சொல்லிக் கொண்டே போக.

மைவிழி அவனை அடித்துக் கொண்டே வந்தாள்.

''போடா... போடா... போடா...'' என்று அவனை அடித்தபடியே வந்தவள்.

''என்னை ஏன்டா இப்படி இம்சை பண்றே?'' என்றாள் கையாலாகத்தனத்துடன்.

"ஹே... இதெல்லாம் அநியாயம் ஒஜோ! நீ தான்... இன்னைக்கு முழுசும் என்னை அடிச்சிட்டே இருக்கே! நா ஒரு வாட்டி கூட உன்னை அடிக்கவே இல்லை!" என்று அவன் பாவமாய் சொல்ல,

"அடியையும் வாங்கிட்டு... இப்படி சொரணை இல்லாம இருக்கியே? அதான் எரிச்சலா வருது!" என்றாள் மைவிழி, சலிப்புடன்.

ஆம், அவளுக்கு சலிப்பாய் தான் இருந்தது! இந்தப் பச்சைப் புள்ளையை வைத்துக் கொண்டு, ஒரு கல்யாணம் கூட பண்ண முடியாது போலவே என்று ஆயாசமாய் வந்தது!

அதற்குள்ளாக வீடு வந்து சேர்ந்துவிட, வண்டியை விட்டு முதலில் இறங்கி மைவிழி, வேகமாய் நிஷாந்த் அமர்ந்திருந்த பக்கம் வந்தாள்.

"நிஷூ... ப்ளீஸ் சொல்லேன்... என்னை டைவர்ஸ் பண்ணிட்டு... நிம்மியைக் கல்யாணம் பண்ணிக்கிறியா? ப்ளீஸ்! ப்ளீஸ்! ப்ளீஸ்!" என்று கெஞ்ச,

"எனக்கு ஒரு ரெண்டு நாள் டைம் கொடு, ஒஜோ! கண்டிப்பா... சொல்றேன்!" என்றான் அவன், அவள் தலை மீது கை வைத்து.

"அதென்ன ரெண்டு நாளு? இப்பவே சொல்லு!" என்று மைவிழி அடம் பிடிக்க.

"ரெண்டு நாள் எதுக்கு தெரியுமா? நமக்கு டைவர்ஸ் ஈஸியா கிடைக்குமான்னு வக்கீல்கிட்ட கேட்கத் தான்!" என்ற நிஷாந்த், அவளை விலக்கிவிட்டு வீட்டினுள் விரைந்தான்.

மைவிழி அந்த இடத்திலேயே உறைந்து நின்றாள்.

"ஆக... அவனுக்கு ரெண்டாம் திருமணம் புரிவது சம்மதம்! அப்படித் தானே?" என்று கேள்வி எழுப்ப,

"அதைத் தான்... மறைமுகமா சொல்லிட்டுப் போறானே? இன்னும் புரியல?" என்று மூளை ஏளனம் செய்ய,

மனமோ "இல்ல... இல்ல... என்னோட நிஷூ என்னை டைவர்ஸ் பண்ண மாட்டான்! பண்ணவே மாட்டான்!" என்று கூவியது!

"அப்போ... அவன் வாழ்நாள் முழுசும் பிரம்மச்சாரியா இருக்கணுமா?" என்று மூளை கோபமாய் கேட்க,

"இல்ல வேணாம்..." என்று முணுமுணுத்தது மனம்.

"அப்போ... சந்தோஷமா இரு!" என சிந்திக்கும் திறன் அறிவுறுத்த,

"முடியலையே!" என்று துவண்டு போனது மனம்.

"முடியணும்! கண்டிப்பா முடியணும்!" என்று மூளை அழுத்திச் சொல்ல.

"ஹ்ம்ம்...ஹ்ம்ம்...ம்ஹூம்..." என்று சிணுங்கியது மனம்.

அவளது போராட்டங்களுக்கு தற்காலிக ஓய்வு கொடுப்பது போல் "ஹே மைய்யு! அங்க என்ன பண்றே? வா உள்ளே" என்றழைத்தாள் கீர்த்து.

மனமே இல்லாமல், வீட்டினுள் சென்ற மைவிழிக்கு வாழ்வே சூனியம் பிடித்து விட்டது போல் கசந்தது! சொல்லப் போனால்... கசந்து கன்னப் பிடுங்கியது! எந்நேரமும்... கண்ணீர் வரவா வேண்டாமா என்று சடுகுடு ஆடியபடி, அவளைத் துரத்திக் கொண்டிருந்தது!

கிருஷ்ணன், அரவாமுதன், கீர்த்தனா என அனை வருமே ''என்ன மைய்யு ஒரு மாதிரி இருக்கே?'' என்று கேட்க, ''ஒண்ணுமில்லை. கொஞ்சம் டையர்டா இருக்கு!'' என்று சொல்லி மழுப்பினாள் மைவிழி.

ஆனால், உள்மனமோ ''கேட்க வேண்டியவள் கேட்க வில்லையே!!'' என்று தவித்து, தண்ணீர் குடிதத்து!

அவளது கண்ணீருக்குக் காரணமானவனோ, பத்மா சினியுடன் ஆனந்தமாய் விளையாடிக் கொண்டிருந் தான்.

''சரி... எப்படியும் இரவு அறைக்கு வருவான் தானே?'' என்று ைமவிழி காத்துக் கொண்டிருக்க,

அவனோ ''நானும் பிரவீனும் இன்னைக்கு நைட் ஃபிளைட்ல சியாட்டல் போறோம்! நாளைக்கு வந்து லீகல் பேப்பர்ஸ் வாங்கிக்கச் சொல்லி ஈமெயில் வந் திருக்கு!'' என்ற அறிவிப்புடன், வீட்டை விட்டு மட்டு மல்ல... ஊரை விட்டுமே பறந்து போனான்!

மைவிழி தவித்துப் போனாள்!

அவன் வர இரண்டு நாட்களாகும் என்று தெரிந்த பின்னர், மனம் இன்னமும் சோர்ந்து போனது!

ஊரிலிருந்து வந்ததும், ''வக்கீலிடம் பேசிவிட்டேன்... உனக்கு குழந்தை பிறக்காது என்ற காரணத்தை முன்னிறுத்தி... சுலபமாய் விவாகரத்து வாங்கிவிடலாம்'' என்று சொல்லி விடுவானோ என்று பயமாய் இருந்தது அவளுக்கு!

ஒரு நாளின் பாதி பொழுது, ''வாழ்நாள் முழுதும் நிஷாந்தோடு வாழ வேண்டும்'' என ஜபம் செய்வதில்

கழிய... மீதி பொழுதோ ''இல்ல... அவன் என்னை டைவர்ஸ் பண்ணிட்டு... நிம்மியோட சந்தோஷமா வாழணும்? எனக்காக அவன் ஏன்... கஷ்டப்படணும்!'' என்று தன்னைத் தானே சமாதானம் செய்வதில் கழிந்தது!

அந்த இரு நாட்களும், நிஷாந்த் அவளிடம் பேசாதது வேறு அவளை ஒரு மாதிரி வருத்தியது!

''தன்னைத் தவிர்க்கிறானோ?'' என்று மனம் தவித்தது.

''நீ எனக்குத் தேவையில்லை'' என்று சொல்லாமல் சொல்கிறானோ என்று நெஞ்சம் படபடத்தது!

''நான் இல்லாமல் அவனால் இருக்க முடியுமா?'' என்ற கேள்வியும், ''அது தான் இருக்கிறானே'' என்ற பதிலும், மனதைப் புண்படுத்தியது!

ஒரு கட்டத்திற்கு மேல், தன் மனம் படும் பாட்டை பொறுக்க முடியாமல், அவளாகவே நிஷாந்தின் எண் ணிற்கு அழைத்தாள்.

''ஒஜோ! ஒஜோ! குட்டி!'' என்ற அழைப்பிற்காக அவள் ஏங்கி இருக்க.

மறுமுனையில் ''ஹலோ!'' என்ற பிரவீனின் குரல் கேட்டது.

எதிர்பார்ப்பெல்லாம் வடிந்துவிட, ''நிஷூ... நிஷாந்த் இல்லையா?'' என்றாள் மைவிழி மெல்ல.

''அவன் கொஞ்சம் வேலையாக இருக்கான்... மைவிழி! அப்புறம் பேசுறேன்னு சொல்லச் சொன்னான்!'' என்ற

பிரவீன், அவள் பதிலைப் பெரும் முன்னர் கைப்பேசியை வைத்து விட்டான்.

பிரவீனிடம் சொல்வதை, தன்னிடமே நேரடியாக சொல்லியிருக்க வேண்டியது தானே என்று மனம் கிடந்து குமுறியது!

''ரொம்பப் பண்றான்... லூசு!'' என்று ஆத்திரம் பொங்கியது! வெளிக்காட்ட முடியாத ஆத்திரம்... அவளை மேலும் மேலும் சோர்வுறச் செய்தது!

இது போதாதென்று, ''அப்பா... நிஷான் பேசினான்! நாளைக்கு... பக்கத்து வீட்டு... மைக்குக்கு பர்த்டேவாம்! போன வாரமே இன்வைட் பண்ணாங்க போல... அதுக்கு போயிட்டு வரச் சொன்னான்! கிப்ட்.. அவன் ரூம் வார்டுரோப்ல இருக்காம்!'' என்று கீர்த்தி அறிவித்த போது.

''பக்கத்து வீட்டு பையன் பர்த்டே எல்லாம் ஞாபகம் இருக்கு... ஆனா... சொந்தப் பொண்டாட்டியோட மனசில என்ன இருக்குன்னு சாருக்குத் தெரியாது!'' என்று மனம் பொருமித் தள்ளியது!

மைவிழியை முடியுமட்டும் அலைக்கழித்துவிட்டு, இரண்டாம் நாள் இரவு வீடு வந்து சேர்ந்தான் நிஷாந்த்.

வீட்டினுள் வந்தவனை ''வா'' என்று கூடச் சொல்ல வில்லை மைவிழி!

கண்ணை உருட்டி... உருட்டி... அவனை முறைத்துக் கொண்டே இருந்தவள்.

அவன் அறைக்குள் நுழைந்த மறுவினாடி, அவனது சட்டையைக் கொத்தாய் பிடித்தாள்.

''டேய்... சொல்லுடா... என்னமோ ரெண்டு நாள் கழிச்சு சொல்றேன்... வக்கீலைப் பார்த்துட்டு சொல் றேன்னு கதை விட்டே... இப்ப சொல்லுடா... சொல் லுடா...'' என்று அவள் ஆவேசமாய் கத்த,

அவளை சுவாரஸ்யமாய் பார்த்த நிஷாந்த், அவளை இடுப்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

''விடு...விடு...விடுன்னு சொல்றேன் இல்ல...'' எனத் திமிறியவள்,

''முதல்ல சொல்லு! வக்கீலைப் பார்த்தியா? டை...'' என அவள் ஆரம்பிக்க,

நிஷாந்தின் உதடுகள் அவளது உதடுகளுக்கு பூட்டுப் போட்டன!

''ஹ...ஹ்ம்ம்...க்ஹ்ஹ்ஹ்ம்ம்..'' - மைவிழியால் பேசவே முடியவில்லை!

உதடுகளில் தொடங்கிய முத்தம், முகமெங்கும் தன் ஊர்வலத்தை நடத்த, கைகளோ மைவிழியை ஆரத் தழுவின!

அவனது அணைப்பில் கிறங்கி நின்றபோதும், ''நிஷான் என்ன செய்றே? டாக்டர்... ப்ரெக்னன்சி..'' என்று திக்கினாள் மைவிழி.

ஆனால், நிஷாந்த் அதை கவனித்ததாய் தெரியவில்லை!

அவன் கைகளும் உதடுகளும், அவளை வசியம் செய்து கொண்டே இருந்தன!

அணைத்த நிலையிலேயே, அவளது இடுப்பை ஒரு கையால் வளைத்து, படுக்கையருகே சென்றவன், அவளை படுக்கையில் விட்டான்.

அவள் படுக்கையில் விழுந்த நொடி, அவனும் அவள் மீது படர்ந்தான்!

மைவிழிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

''விலகிப் போ'' என்று சொல்வது சுயநலமாய் பட்டது!

அதே நேரம், ''அணைத்துக் கொள்'' என்றும் சொல்ல முடியவில்லை! இரு தினங்களுக்கு முன்னர், அவன் தவித்த தவிப்பைக் கண்டவள் அல்லவோ!

இரு தலைக்கொள்ளியாய் மனம் தடுமாற, ''நிஷான்... நா...நா...எனக்கு...நா...நா...நாம செக்ஸ்...'' என் தடுமாறினாள்.

அப்போதும் அவன் விலகவில்லை.

மாறாக அவனது வேகம் கூடியது! அதற்கு எதிரொலி போல், மைவிழியின் கர்ங்கள், அவனது முதுகில் படரத் தொடங்கின!

இரு தேகங்களும் உரசிக் கொண்டதில் உண்டான சூடு, வெளியே வீசிக் கொண்டிருந்த கூதல் காற்றுக்கு இதமாய் இருந்தது!

இதோ... இதோ என்று எதிர்பார்த்த கூடல் நடந்தேறி விடுவதற்கு சில வினாடிகள் முன்னர், ''நிஷான்...'' என அவனை விலக்கினாள் மைவிழி.

''டாக்டர் எனக்கு இன்னொரு குழந்தை உருவானா பிரச்சனைன்னு சொல்லியிருக்காங்களே!'' என்று கூறிய போது, குரல் மிகவும் தாழ்ந்து போயிருந்தது! கண்ணின் ஓரம் கண்ணீர் வேறு துளிர்த்துக் கொண்டு நின்றது!

''ஹய்யோ... பாவம்... ஆசையா தொட்டானே? இப்போ... பொக்குன்னு போச்சே... ஐயோ... வருத்தப்படு வானே.... ஐயோ... ஐயோ...'' என்று நெஞ்சம் பொறும.

அவனோ ''ஒஜோ! ஒஜோ! இன்புட் போனா தான் பேபி... ஒளட்புட் வரும்! நான் தான் இன்புட்டை ஸ்டாப் பண்ணிட்டு வந்துட்டேனே!'' என்றான் சாதாரண மாய்.

அத்தோடு, அவளது கவலைக்கான விடையைச் சொல்லிவிட்டவன் போல, தன் வேலையை பார்க்கத் தொடங்கினான் நிஷாந்த்!

கைகள் அவளது கழுத்து வளைவில் பயணிக்க ஆரம் பித்து, அவளது அபாயகரமான இடங்களை நெருங்கும் போது தான், மைவிழிக்கு அவன் கூறியதன் அர்த்தத்தை ஆராயத் தொடங்கினான்.

அவன் கூறியதற்கு என்ன அர்த்தம்? என்ன அர்த்தம்? என்று பரபரத்த மனதிற்கு,

தன் ஆண்மையைத் தொலைத்துவிட்டு வந்திருக் கிறான் என்ற ஒரே அர்த்தம் மட்டுமே புலப்பட்டது!

ஆண்மையை... பெண்மைக்காக துறந்திருக்கிறான்!

எவ்வளவு பெரிய விஷயம்?!

எந்தவொரு ஆண் மகனும் செய்யத் தயங்கும் விஷ யத்தை... ஒரு ஆர்ப்பாட்டமில்லாமல்... ஒரு அலட்டல் இல்லாமல்... ஏன்? ஏன்?ஏன்?

என் மனதை... என் மனதின் தவிப்பை... என் உடலின் ஏக்கத்தை... என் வயதின் தாபத்தை... என் காதலை...

எந்தளவிற்கு புரிந்து வைத்திருந்தால், இப்படியொரு முடிவு எடுத்திருப்பான்! அதுவும், குடும்பத்தாரிடம் கலந்தாலோசிக்காமல்! முருகா! என்ன தவம் செய்தேன்... இவனைப் பெற!

எல்லாம்... எனக்காகவா? என் உயிருக்காகவா? என் மேல் கொண்ட காதலுக்காகவா? எப்படி முடிந்தது இவனால்?

எவ்வளவு காதல்! எவ்வளவு நேசம்! அளவிட முடியாத புரிதல்!

மைவிழியின் விழிகளில் கண்ணீர் நிற்காது ஓடத் துவங்கியது! அதன் ஒவ்வோர் துளியிலும், நிஷாந்த் நிரம்பியிருந்தான்! என்றென்றும்!

பூச்சரத்தில் சேரும் அடுத்த மலரின் பெயரும் - விட்டுக்கொடுத்தல் தான்!



24

மைவிழி... நிஷாந்தின் காதலில் தன்னையே தொலைத்துக் கொண்டிருந்தாள்.

தன் மீது சாய்ந்திருந்த கணவனை விலக்கியவள், "ஏன் நிஷூ... ஏன் நிஷூ இப்படி செஞ்சே?" என்றாள் ஆற்றாமையும் கண்ணீருமாய்.

"உனக்காகத் தான்!" என்றவன், அவள் நெற்றியில் முத்தம் வைத்தான்.

"ஹய்யோ... உன்னோட இந்தக் காதலை என்னால் தாங்கிக்க முடியலையே! ஏன்டா... ஏன்டா... ஏன்... என்னை இவ்வளவு தூரம் லவ் பண்றே? இந்த லவ்க்கு...

நா என்ன திருப்பி தரப் போறேன்" என்று புலம்பினாள் மைவிழி.

இன்னமும் அவளால், அவனது செயலை ஏற்றுக் கொள்ள முடியவில்லை!

நிஷாந்தோ, தன் உதடுகளால் அவளது வாய் மூடினான். "லவ்ங்கிறத... கொடுக்கலும் வாங்கலும் இல்ல ஒஜோ! நான் உனக்காக இதை பண்ணியிருக்கேன்... சோ... எனக்காக நீ இதை விட்டுக்கொடுக்கணும்ன்னு கேட்கிறது... சுத்த ஹம்பக்! அப்படின்னா... அதுக்கு பேர் காதல் இல்ல ஒஜோ... பேரம்! நாம பேரம் பேசல ஒஜோ... வி ஆர் இன் லவ்! ஆல் இஸ் ஃபேர் இன் லவ் அண்ட் வார்ன்னு சொல்லியிருக்காங்களே!" என்றான் அவன், அவள் மூக்கைப் பிடித்து ஆட்டி.

"என்ட்ட என்ன நிஷூ இருக்கு? எதுக்கு... மேன்... எனக்காக உன்னோட லைஃப்பையே... ஹய்யோ... ஏன் நிஷூ..." - மைவிழியால் அவனது வாதங்களில் சமாதானம் அடைய முடியவில்லை.

நெஞ்சு அவனது காதலால் கனத்துப் போயிருந்தது!

"லைஃப்... வெறுமனே செக்ஸ் மட்டும் தான்னு யாரு ஒஜோ சொன்னா?" என அவன் கேட்க,

"இல்ல நிஷூ... நா அதை சொல்லலை... பட்... நாம ஒரு சரோகேட் மதர் மூலமா கூட..." என்று இழுத்து மைவிழியின் முகத்தில் வேதனையின் சுருக்கங்கள்.

அந்த சுருக்கங்களை மெல்ல நீவி விட்டான் நிஷாந்த்.

"எனக்கு... இந்த சரோகேட் மதர் கான்செப்ட் பிடிச்சதே இல்ல ஒஜோ! பட்... அதை பண்றவங்களை நான்

தப்பு சொல்லலை... இட்ஸ் மை பர்சனல் தாட்! ஒரு குழந்தை உருவாக அப்பாவோட ஜீன்ஸ் மட்டுமே போதும்ன்னு நினைக்கிற அந்த கான்சப்ட் எனக்கு பிடிச்சதே இல்லை! அப்படி குழந்தை உருவாகும் போது... அந்த அம்மாவுக்கு... ஏதோ ஒரு பாயிண்ட்ல... இந்தக் குழந்தையோட உயிர்ல நம்ம ஹஸ்பண்டோட உயிர் மட்டும் தானே இருக்கு... நம்மளோட பங்கு இல்லையேங்கிற ஏக்கம் வரும் ஒஜோ! அது... உனக்கு வர வேணாம்!'' என்றான், அவளது வேதனையின் அர்த்தம் புரிந்தவனாய்.

அவன் தன் மீது வைத்திருக்கும் காதல், உள்ளத்தை வெதும்ப வைத்தப் போதும்.

''ஆனா... இப்போ... ரெண்டு பேரோட உயிருமே இல்லையே...'' என்று மைவிழி அழ.

''அதான் ஒஜோ... நான் சொல்றேன்! சரோகேட் மதர் ப்ராசஸ்ல... என்னோட பங்கு இருக்கும்... உன்னோட பங்கு சுத்தமா இருக்காது! பட்... இப்போ... என்னோட பங்கும் இல்லை... உன்னோட பங்கும் இல்லை! ரெண்டு பேருமே சமமா ஆகிட்டோம்! அதைத் தான் நான் எதிர்பார்த்தேன்!'' என்றான் அவன், சாதாரணமாய்.

''நிஷான்!!!'' என்று மைவிழி அதிர,

''எஸ் ஒஜோ! நமக்கு குழந்தை இல்லாம போனதுக்கு... நீ மட்டுமே ரீசன்னு நீ வருத்தப்படுறது... எனக்கு கஷ்டமா இருந்துச்சு! ஏதோ... லைஃப்ல நீ தாழ்ந்துட்ட மாதிரியும்... நா உயர்ந்துட்ட மாதிரியும்... எனக்கு பிடிக்கவே இல்லை. ஒஜோ! ஐ வான்ட் யூ டூ பீ ஹையர் தான் மீ... ஃபுல்வேஸ்!'' என்றான் ஆத்மார்த்தமாய்.

''ஏன் நிஷூ...?'' என்றாள் மைவிழி, ஒற்றை கேள்வியாய்.

''தெரியலை... உன்கிட்ட எனக்குப் பிடிச்சதே... உன்னோட மன உறுதியும்... நிமிர்வும் தான்! ஆனா... இந்த பேபி! மேட்டருக்கு அப்புறம்... நீ எதுக்கு எடுத்தாலும் அழற மாதிரி எனக்கு இருந்துச்சு! அதான்... இப்படி செஞ்சேன்!'' என்றான் அவன். தன் மனதை வெளிப்படையாய் காட்டி.

மைவிழியால் எதுவுமே பேச முடியவில்லை.

கண்களில் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டே இருக்க, அவனை இறுக்கமாய் அணைத்தவள், முத்தமழை பொழியத் துவங்கினாள்.

''எனக்கு இவனைக் கொடுத்ததுக்கு... ரொம்ப ரொம்ப ரொம்ப நன்றி... முருகா!'' - உள்ளம் முத்துக்குமரனை மனதாரத் துதி பாடியது!

''ஐ அம் சோ... லக்கி, நிஷூ!!'' என அவள் நிற்க,

''ஹே ஒஜோ! ஓவர் செண்டி ஆகாத... ஒஜோ!'' என்று சிரித்த நிஷாந்த்.

''நா எப்போ தெரியுமா கிரேட்... வாசெக்டமி பண்ணாமலே... லைஃப் ஃபுல்லா உன்னை நல்லா வச்சிருந்தேன்னு வையய்யு... அப்போ நான் கிரேட்! பட்... இப்போ... லைஃப்ல ஒரு பாயிண்ட்ல.. ஹய்யோ... நம்மளால நார்மல் ஹஸ்பண்ட் மாதிரி வாழ முடியலையேங்கிற ஃபிரஸ்டேஷன் வந்து... அதை உன்ட்ட காட்டிருவேனோங்கிற பயத்தில தான்... ஓடிப் போய் பண்ணிட்டு வந்தேன்!'' என்றான் நிதர்சனத்தை

எடுத்துக் காட்டும் குரலில். அவனது கூற்றிலிருந்த நியாயம் அவளையும் கட்டிப் போட்டது!

வாய் வார்த்தையாக... நான் உன்னைக் காதலிக்கிறேன்... உன் மேல் உள்ள காதலுக்காக காமத்தை துறந்துவிட்டு வாழ்கிறேன் என்று சொல்லலாம். ஆனால், நடைமுறை வாழ்க்கை என்று வருகையில்... ஏதோ ஒரு நாள்... ஏதோ ஒரு நொடி... ''ஹய்யோ!!!!'' என்ற ஆற்றாமை வருமே! அதை அவனால் சகித்துக் கொள்ள முடியுமா?! இல்லை... தன்னால் தான் முடியுமா?

''நீ இவ்வளவு மச்சூர்ட்டுன்னு நா நினைக்கவே இல்லையே... நிஷூ...'' என்று மைவிழி வியப்பு மாறாமல் சொல்ல,

''நீ என்னை விட சைல்டிஷ்ஷா மாறிட்டு இருந்தே ஒஜோ! அதான்... நா மச்சூர்ட் ஆன மாதிரி ஃபீல் பண்றே! பட்...ஐ அம் தி சேம் நிஷான்!'' என்றான் அவன், சிரிப்புடன்.

''இல்ல நிஷூ... நீ மச்சூர்ட் தான்...'' என மைவிழி விவாதம் செய்ய.

''நெவர் ஒஜோ! எனக்கு... நீ வேணும்! உயிரோட வேணும்! எந்தவிதமான கில்டி ஃபீலிங்கும் இல்லாம நீ வேணும்! அதே சமயம். நாம ஹாப்பியாவும் இருக்கணும்! அதுக்கு... இதான் ஒரே வழி மாதிரி தெரிஞ்சது! சோ... ஐ டூக் திஸ்! நா ரொம்ப எல்லாம் யோசிக்கலை ஒஜோ! எல்லா வழியையும் ஒரு பேப்பர்ல எழுதி... இது சரி வருமா... வராதுன்னு பாசிடிவ் நெகடிவ் எழுதி,

கடைசியா இருந்த இந்த வழிக்கு வந்தேன்! காலேஜ்ல படிக்கும் போது... குரு சொல்லிக் கொடுத்திருக்கார்... உன் முன்னாடி ஒரு ப்ரோப்ளம் இருந்தா.... அதுக்கு ஹண்ட்ரட் சொல்யூஷன் கூட இருக்கலாம்... அந்த ஹண்ட்ரட்ல ஒண்ணை சூஸ் பண்றதுக்கு... பாசிடிவ் நெகடிவ் எழுதி... ஸ்ட்ரைக் அவுட் பண்ணிட்டே வா... ஏது லாஸ்ட்ல ஸ்ட்ரைக் ஆகாம இருக்கோ... அதான் பெர்பெக்ட் சொல்யூஷன்னு சொல்லியிருக்கார்! அதைத் தான் இப்பவும் ஃபாலோ பண்ணினேன்! ஐ டிட்ன்ட் யூஸ் மை பிரைன்... யூ நோ!'' என்று நிஷாந்த் கண் சிமிட்ட.

''மூளையை யூஸ் பண்ணல... ஆனா... மனசை யூஸ் பண்ணியிருக்கே...'' என்ற மைவிழி, அவன் நெஞ்சத்தில் தஞ்சம் புகுந்தாள்!

தனக்காய் சிந்திக்கும் அந்த மனதின் சூடு, உடலைக் குளிர்விக்க, மைவிழி எனும் மஞ்சள் மலர், நிஷாந்தின் கதிர் கரங்களில் மலர்ந்தது!

அவன் காட்டிய காதலுக்கு ஈடாய்... இல்லையில்லை அதை விடவும் மேலாய் அவன் மீது காதலை காட்டியே ஆகவேண்டும் என்ற எண்ணம், மைவிழிகள் ஓர் வெறியையே உருவாக்கியது!

அந்த வெறி... ஏற்கனவே வீசிக் கொண்டிருந்த காதலெனும் இளம் தென்றலை... வேகப் புயலாய் வீச வைக்க, நிஷாந்த் அதில் திக்குமுக்காடி போனான்!

காதலும் காதலும் போட்டிபோட, காதலுக்கு காதலே வெற்றி வாகை சூட்டி விட்டது! யார் காதல்... யாரது காதலுக்கு சூட்டியது என்பது அவர்கள் மட்டுமே அறிந்த விஷயம்!!!

அமுதை விட தித்திப்பாய் செல்லத் துவங்கியது வாழ்க்கை!

பத்மாசினி எனும் பிஞ்சின் பாசமும், மைவிழி எனும் மலரின் நேசமும் நிஷாந்தின் காலத்தை வெகு வேகமாய் சுழற்றி சென்றது!

கணவனும் குழந்தையும் அவனே என்ற எண்ணத் துடன், காதலையும் பாசத்தையும் சரி பங்காய் கலந்து, அவன் சிறு வயதில் தொலைத்த சந்தோஷங்கள் முழு தையும் அவனுக்கு ஒரு தாயாய் கொடுத்தவள், தாரத்தின் காதலையும் தெவிட்டாமல் அளித்தாள்!

அன்றொரு நாள், இரவுப் பொழுதில், ''உன்னை மாதிரி... வைஃப்புக்காக... எதுவும் செய்ற ஆளுங்க... இந்த உலகத்தில ரொம்ப கம்மி இல்ல... நிஷூ...'' என்று மைவிழி கேட்க.

''ஹே... ஏன் இல்ல... எங்கப்பா இல்லையா? எங்கம்மா இறந்து போனதும்... அவர் நினைச்சிருந்தா இன்னொரு மேரேஜ் பண்ணியிருக்கலாமே! ஆனா... அவர்?'' என்றவனின் கண்களில் சிறிதாய் கண்ணீர்.

பின்னர், ''குரு... குரு இல்லையா? அவர்... கீர்த்துக் காக என்ன வேணும்னாலும் செய்வார்... ஒஜோ!'' என்றான், நெகிழ்ந்த குரலில்.

''எங்களை விடு... நாங்க மூணு பேருமே... அன்புக் காக ஏங்கினவங்க! சோ... எங்க கேஸ் வேற! பட்... உங்கப்பாவையே எடுத்துக்கோ!'' என நிஷான் ஆரம் பிக்க.

''ஹே... எங்கப்பா என்ன செஞ்சார்?' என்றாள் மைவிழி வியப்பாக.

''பொண்டாட்டிக்காக... எதையும் விட்டுக் கொடுத்தா தான்.... நல்ல ஹஸ்பண்ட்ன்னு இல்லை ஒஜோ! பொண்டாட்டியை மதிச்சா கூட... நல்ல ஹஸ்பண்ட் தான்! நீயே நல்லா யோசிச்சு பாரு... ஒரு சின்ன முடிவு கூட... உங்கம்மாவை கன்சல்ட் பண்ணாம... உங்கப் பாவா எடுத்திருக்காரா? அதை விடு... உங்கம்மாவை கன்சல்ட் பண்றது ஒரு பக்கம் இருக்கட்டும்... உங்க பாட்டி... அவங்க அவரோட மாமியார் தானே? ஆனா... அவங்களுக்கு அவர் எவ்வளவு ரெஸ்பெக்ட் கொடுக் கிறார்? நல்ல மனுஷங்க இருக்காங்க ஒஜோ! ஒரோருத் தங்களுக்கு... அதை வெளிக்காட்ட சான்ஸ் கிடைக்குது... ஒரோருத்தங்களுக்கு கிடைக்கிறதில்லை!'' என்றான் நிஷாந்த், தெளிவாய்.

''டேய்... நிஷூ... இதென்ன சொற்பொழிவு நடத் துறே?'' என்ற மைவிழி சிரிக்க.

''இன்னைக்கு மார்னிங்... டி.வி. போட்டாங்க ஒஜோ! எப்படி... அய்யா... அதை அப்படியே மக் அடிச்சு... உன் கிட்ட கக்கிட்டேனா?'' என்றான் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு.

''ச்சை... அதானே பார்த்தேன்...'' என அவனை அடித்த மைவிழி.

''ஆமா... நீ அதெல்லாம் பாக்க மாட்டியே... எப்ப பாரு வீடியோ கேம்ஸும் கையுமா தானே அலைவே?'' என்றாள் சந்தேகக் குரலில்.

''அந்தக் கொடுமையை ஏன் கேட்கிறே? நம்ம பப்பி குட்டி இருக்கா இல்ல... அவ கீர்த்துட்ட இருக்கும் போதே அழுதுட்டே இருந்தாளா... சரின்னு வாங்கிட்டு

வந்ததும் டக்குன்னு அழுகையை நிறுத்திட்டா... சரி... உள்ள போய் கீர்த்துட்ட கொடுக்கலாமன்னு பார்த்தா... குரு பொண்டாட்டியோட குஜால் பண்ண ரூம்குள்ள போய்ட்டார்... அப்புறம் என்ன செய்றது... சோபாலேயே உக்காந்து இருந்தேனா... அப்பா வந்து இதைப் போட்டு விட்டுட்டார்...'' என்றான், கவலையே வடிவாய்.

''அச்சோ... பாவம் புள்ள...'' என்ற மைவிழி, அவனுக்குத் திருஷ்டி கழிக்க.

''இந்தப் பாவப்பட்ட புள்ளையை கொஞ்சம் கவனிக்கிறது...'' என்று அவளை நெருங்கி அமர்ந்தான் நிஷாந்த்.

''அதானே... சைக்கிள் கேப்பில... ஆட்டோ ஒட்டிருவியே...'' என்று அங்கலாய்த்த போதும், மைவிழியின் கால்கள் கணவனின் கன்னங்களை லேசாய் வருடி விட்டு, ஓர் இன்ப விடியலுக்கு வழிவகுத்தன!

பத்மாசினிக்கு ஆறு மாதம் முடிந்திருந்தது!

அவளது ஆறாம் மாத பிறந்தநாளை கொண்டாட வேண்டும் என்று அடம் பிடித்த நிஷாந்தை, படாத பாடுபட்டு சமாதானம் செய்து கொண்டிருந்தனர் அனைவரும்.

ஆனால், அவனோ ''அதென்ன ஒரு வருஷம் முடிஞ்சதா தான் பர்த்டே கொண்டாடணுமா? ஒரு மந்த் முடிஞ்சதும் கூட கொண்டாடணும்... அதான் செய்யலை... அட்லீஸ்ட் சிக்ஸ் மந்த்ஸ்ல செய்ங்க...'' என்று பிடிவாதமாய் பேசிக் கொண்டிருந்தான்.

இந்த விவாதம் வீட்டில் நடந்து கொண்டிருந்த தினங்களில், ஒரு நாள் மாலை வீடு வந்த நிஷாந்த்.

''எல்லாரும்... ஹாலுக்கு வாங்க! ஒரு முக்கியமான விஷயம் பேசணும்!'' என்று அழைத்தான்.

பிறந்த நாள் விஷயம் தான் என்ற எண்ணத்தில் அனைவரும் அங்கே குழுமி நிற்க.

ஒரு பத்திரிகையை எடுத்து, டீப்பாய் மீது போட்டான்!

''என்னடா... நியூஸ்ல தினம் தினம் பர்த்டே கொண்டாடின பேபி பத்தி... ஏதாவது வந்திருக்கா என்ன?'' என்று குரு சிரிக்க.

''இல்ல... நீங்க பாருங்க...'' என்றவனின் குரலில் விளையாட்டு இல்லை.

கீழே போட்ட பத்திரிகையை கிருஷ்ணன் கையில் எடுக்க, அரவாமுதன்... மைவிழி... கீர்த்தி என்று அனைவரிடமும் ஒரு பத்திரிகையை நீட்டினான்.

கூடவே, பத்மாசினியிடமும் நீட்டியவன், ''பப்பிகுட்டி... நீங்களும் படிங்கடா... படிச்சிட்டு மாமாக்கு ஓகே சொல்லுங்க'' என்றான் பிள்ளையைக் கையில் ஏந்திக் கொண்டு.

பத்திரிகையைப் படித்த அனைவருமே, திகைத்து நின்றனர்! திகைத்து என்பதை விடவும், அதிர்ந்து நின்றனர்!

அந்த அதிர்ச்சியை முதலில் கலைத்தது கிருஷ்ணனே!

''நிஷான்... '' என்ற அவனது அழைப்பே அவன் கொண்ட மலைப்பிற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது!

''ஆமா.... குரு! நீங்க என்ன சொல்றீங்க?'' என்று நிஷாந்த் கேட்டு முடிப்பதற்குள்.

அரவாமுதன் அவனை வந்து ஆரத் தழுவிக் கொண்டார்.

தழுவிய அதே வேகத்தில், அவனை விடுவித்தவர். அவன் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார்.

''மைவிழிக்கு இதில சம்மதமான்னு கேட்டுக்கோ'' என அவர் கூற.

கிருஷ்ணனோ ''எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல நிஷான்! ஐ ரெஸ்பெக்ட் யூ மேன்!'' என்றபடி மச்சினனைத் தழுவினான். ஆத்மார்த்தமாய்.

கீர்த்தனா, தன் பங்கிற்கு ''நீ இவ்வளவு வளந்துட்டேன்னு நான் நினைக்கவே இல்ல... நிஷான்!'' என்றாள் கண்ணில் கண்ணீருடன்.

அனைவரும் தத்தம் உணர்வுகளை வெளிப்படுத்தி விட, மைவிழி மட்டும் அந்த செய்தித் தாளை மட்டும் பார்த்திருந்தாள்! கண்ணில்... கண்ணீர் வழிய வழிய!

''ஒஜோ!'' என மெல்ல அழைத்த நிஷான், அவளருகே வந்தான்.

கையில் குழந்தையுடன் வந்தவனின் சட்டையைக் கொத்தாக பிடித்தவள், ''ஏன் நிஷான்... ஏன்... எனக்காக எனக்காகன்னு இவ்வளவு செய்றே? என்னால உன்னோட காதலோட தாக்கத்தை தாங்கிக்க முடியலயே!'' என்ற குமுறலுடன், அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

அவளை ஒரு கையில் அணைத்துக் கொண்டவன், ''உனக்கு சம்மதமா... ஒஜோ?'' என்றான், அவளின் கண்ணையே ஊடுருவி.

''எப்படி இல்லைன்னு சொல்லுவேன்?'' என்று அவள் மறுகேள்வி கேட்க, அந்தக் குடும்பமே கண்ணீர் கடலில் தத்தளித்தது! சந்தோஷமாய்!

''அதை... ஏன் இப்படி அழுதுட்டே சொல்றே? என்னோட பப்பிம்மா பயந்துட்டா இல்ல...'' என்று மைவிழியை மூக்கைப் பிடித்து நிஷாந்த் ஆட்ட, நிஷாந்தின் மூக்கை பத்மாசினி ஆட்டினாள்!

* * *

இரு தினங்களுக்குப் பின்னர்

இந்தியா - சென்னை- ஸ்டான்லி அரசு மருத்துவமனை!

கிருஷ்ணனின் தந்தையும் தாயும், மகனது ''எனக்கு ஏதாவது நல்லது செய்யணும்ன்னு நினைச்சீங்கன்னா... நிஷாந்துக்கு என்ன வேணுமோ அதை செஞ்சு கொடுங்க'' என்ற வார்த்தைக்கு இணங்க, நிஷாந்த் மற்றும் மைவிழியுடன் அங்கே வந்திருந்தனர்.

அங்கிருந்த வார்டுபாயிடம் ''இங்க... விமலான்னு...'' என்று பெரியவர் இழுக்க.

''ஹோ... அந்த ஆசிட் கேசா...'' எனக் கேட்டவன்.

''சோத்தாங்கை பக்கமா போனீன்னா... ரெண்டாம் நம்பர் ரூம் வரும்... அங்க தான் இருக்கும்!'' என வழி காட்டினான்.

அவன் கேட்ட விதத்திலேயே. மைவிழிக்கு கண்ணீர் கரித்துக் கொண்டு வந்து விட்டது!

''ஷ்...ஒஜோ!'' என அவள் கையைப் பிடித்து அழுத்திய நிஷாந்த். முன்னே நடந்தான்.

ஆம், விமலா என்ற நிறைமாதக் கர்ப்பிணி மேல் அவளது குடிகாரக் கணவன் ஆசிடை ஊற்றிவிட, ஆசிடின் தாக்கத்தால் வெந்து போயிருந்த மேனியி லிருந்து பிள்ளையை காப்பாற்றியிருந்த மருத்துவர்கள், தாயின் உயிருக்கு உத்திரவாதம் கொடுக்கவில்லை.

அந்தத் தாயோ ''என்னோட குழந்தையை அனாதை ஆசிரமத்தில சேர்த்துடுங்க!'' என்று கதறி அழ, அது தமிழ்நாடு தாண்டி... இந்தியா எங்கும் பரவி... அமெரிக்கா மாகாணத்தில் இந்திய செய்திகள் வரும் நாளிதழ்களில் வந்திருந்தது!

அதைக் கண்டு தான். அக்குழந்தையை தங்கள் குழந்தையாய் மாற்றிக் கொள்ள, நிஷாந்தும் மைவிழியும் இங்கே வந்திருந்தனர்!

வார்டுபாய் கை காட்டிய அறைக்குள் சென்றவர்கள், உறைந்து நின்றனர்!

உடல் முழுக்க தீக்காயங்களுடன் ஒரு பெண்மணி படுத்திருக்க, அவளருகே ஓர் பச்சிளம் சிசு படுத் திருந்தது! இல்லையில்லை, அலறிக் கொண்டிருந்தது!

அவளைக் கண்ட நொடி, ''ஹய்யோ... '' என்ற அதிர்ச்சியுடன், முகத்தை மூடிக் கொண்டு கிருஷ்ண னின் தாயும் தந்தையும் வெளியேறி விட, நிஷாந்தும் மைவிழியும் மட்டுமே அங்கே இருந்தனர்!

மைவிழியின் கண்கள், அந்தப் பெண்மணி மீதே இருக்க,

நிஷாந்தின் கண்களோ, அந்த சிசுவின் மீதே இருந்தது!

உடல் முழுக்க... வெந்து போயிருக்க...பார்க்கவே கோரமாய்... அகோரமாய்... ''ஐயோ... எரியுதே... எரியுதே...எரியுதே...'' என்று அரற்றிக் கொண்டு, அவள் படுத்திருந்த விதம் மைவிழியை உலுக்கிப் போட்டது!

தான் இருந்த அதே நிலை... தான் பட்ட அதே வலி... தான் துடித்த அதே துடிப்பு... தனக்கு ஏற்பட்ட அதே காயங்கள்... ஆனால்... தனக்கு நிஷாந்த் இருந்தான்! ஆனால்... இவளுக்கு!

''ஹய்யோ!!!!!!!!!!!!!!!!!!!!!! பாவமே! ஏன் கடவுளே... ஏன்? இந்தப் பெண்ணை ஏன் இப்படி படுத்துகிறாய்?'' - மைவிழியின் மேனி நடுங்கியது!

அவள் மேனியில் இருந்த ஓரோர் ஆரா தழும்பு, அவளது பழைய காலத்தை நினைவு படுத்த, மெல்ல அவளருகே சென்றவள் ''விமலா... '' என்றாள் மெல்ல.

அப்பெண்மணி வேறெதுவும் பேசவில்லை.

''எரியுது... எரியுது... ஐயோ எரியுது... என்னைக் கொன்னு போட்டிருங்க... அய்யயோ... ஐயோ...'' என்று அரற்றியவள்.

''எம் புள்ளையை... அநாதை விடுதில சேர்த்துடுங்க... என்னைய கொன்னுடுங்க...'' என்றார் அழுகையுடன்.

கண்ணில் இருந்து வழிந்த கண்ணீர் கூட, உடலில் எரிச்சலை உண்டு பண்ண, ''எரியுது... எரியுது... எரியுது...'' என்று துடிக்க ஆரம்பித்தாள் அவள்.

மைவிழிக்கு அழுகை நெஞ்சை அடைத்தது!

அந்த வேதனையை அனுபவித்தவள் அல்லவா? முருகா!!!! - நெஞ்சே பிளவுறும் போல் வலித்தது!

''கவலைப்படாதீங்க... உங்க புள்ளையை நாங்க பாத்துக்கிறோம்!'' என மைவிழி சொல்ல.

அத்தாயின் கண்களில் ஓர் மின்னல்!

''நீ... நீங்க...'' என அவர் இழுக்க,

''நாங்க... உங்களைப் பத்தின நியூசை படுச்சிட்டு அமெரிக்கால இருந்து வந்திருக்கோம்!'' என்றாள் கண்ணீரை அடக்கிக் கொண்டு.

''அப்படியா... ரொ... ரொம்பப... நன்றிம்மா...'' என அவள் தன் துன்பம் மறந்து, நன்றியை நவில.

''எனக்கு சொல்லாதீங்க... இந்த நியூசை... கேட்டதும், இந்தக் குழந்தையை...'' என்று இழுத்தவளின் பார்வை, அக்குழந்தை மேலும்.. அதையே பார்த்தபடி நின்ற நிஷாந்தின் மீதும் படிந்தது!

நிஷாந்தின் பார்வை ஒரு கணம் கூட அக்குழந்தை யிடம் இருந்து விலகவில்லை.

கண்ணில் அதிர்ச்சியும்... கன்னம் முழுக்க கண்ணீரு மாய்... அக்குழந்தையின் சிறு கைகளை மெல்ல பிடித்திருந்த அவனது உடல் நடுங்குவது மைவிழிக்குப் புரிந்தது!

சட்டென, அப்பெண்ணை விட்டுட்டு கணவனிடம் ஓடியவள், ''என்ன நிஷூ... என்னாச்சு...'' எனப் பதற.

''ஒஜோ!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!'' என்று அலறிக் கொண்டு, அவளை இறுக அணைத்துக் கொண்டான் நிஷாந்த்.

''என்ன நிஷான்... என்ன என்ன...'' என மைவிழி பதற,

''அந்தக் குழந்தை... அந்தக் குழந்தை... என்னை மாதிரியே... நா அம்மாவை இழந்திட்டு அழுத மாதிரியே இருக்கு... அய்யோ... அவனை... அவனை நாம எடுத்துக் கலாம் ஒஜோ! அவன் நம்ம பையன்...'' என்றான் அவன் குரலும் உடம்பும் உதற,

''கண்டிப்பா...'' என்று மைவிழி சொல்லும் போதே.

''நன்றியப்பா... முருகா!!!!!!!!!!!!!!!!!!!!!!'' என்ற வார்த்தையோடு, ஊசலாடிக் கொண்டிருந்த அந்தத் தாயின் உயிர் பிரிந்தது!

உயிரை விட்ட அந்தத் தாய்க்காக உள்ளம் அழ, கைகளோ அந்த இளம் பிஞ்சை வாரி எடுத்துக் கொண்டது!

விமலாவின் இறுதி காரியங்கள் வேகமாய் நடந்தேற. நிஷாந்த் - மைவிழி இருவரும் முறைப்படி பிள்ளையின் பெற்றோர் ஆவதற்கு... பற்பல சட்டரீதியான நடவடிக் கைகள் எடுக்க வேண்டியிருந்தது! அவை முடிய, எப் படியும் மாதக் கணக்கில் ஆகும் என்றாலும், நிஷாந்தும் மைவிழியும் அச்சின்னக் கண்ணனை தங்கள் மகனா கவே எண்ணத் தொடங்கி விட்டனர்.

''இவன் நம்ம பையன்... ஒஜோ!'' என நிஷான் உணர்ச்சி வசப்பட,

''ஆமா... குட்டி நிஷான்...'' என்றாள் மைவிழி, அந்தச் சின்னக் கண்ணனுக்கு பால் புகட்டியபடி.

அந்த குட்டி நிஷான். தன் கால்களை உதைத்து, ''தான் நிஷாந்தே'' என நிரூபிக்க.

''பாத்தியா... அப்பா மாதிரின்னு நிரூபிக்கிறான்... அம்மாவை இன்னும் ஒரு உதை விடுடா... பையா'' என்ற நிஷாந்த், அந்தச் சின்னக் கால்களை சுண்டி விட்டான்.

''ஷ்... சும்மா இரு நிஷூ! குழந்தைக்கு வலிக்கும்!'' என்ற மைவிழி, நிஷாந்த் சுண்டிய இடத்தில் லேசாய் தடவி விட்டாள்.

தொடர்ந்து, ''என்ன தெரியும் உங்கப்பாக்கு!'' எனக் கூறி, தலையில் அவள் அடித்துக் கொள்ள, அந்தக் கண்ணன் குட்டி ''ங்கா...ங்கா...'' என்று பொக்கை வாய் திறந்து, அவர்களது உலகத்தை அழகுற காட்டியது!

பூச்சரத்தில் பூச்செண்டாய் சேரும் பூமலர் - ''நிஷாந்த் - மைவிழியின் அன்பில் விளைந்த ''பிரஷாந்த்''!''



25

சில வருடங்களுக்குப் பின்னர்

''டேய் மாமு...''

''ஏய்... பாப் கார்ன்... எங்க அப்பாவை மாமு சொல்லாத!''

''போடா... அப்பித் தான் சொல்லுவேன்! நா அவனோட அம்மு!''

''போடி... நீ அம்மு! அப்பு மாமுவா? அதெல்லாம் முடியாது! சொல்லுவாத!''

''ஹிஹிஹி... சொல்லுவாதயா... சொல்லாத சொல்லுடா...''

''போடி... நீ சிச்சிட்டே இருந்தா... நா கிஷ் மாமாட்ட சொல்லுவே...''

''சொல்லிக்கோ... நா மாமுட்ட சொல்லுவே! என்னோட மாமு தான் சூப்பர்....!!!!''

''போடி... என்னோட மாமா தா சூப்பர்... உன்னோட மாமு என்னோட மாமா பாத்தா பயப்பதுவா!''

''அய்யே... போடா... அப்பி எல்லாம் இல்ல...''

''அப்பித்தான்... அப்பித் தான்... உன்னோட மாமுவை என்னோட மாமாட்ட சொல்லி நல்லா திட்ட வைக்குரன்... பாரு...''

''என்னோட மாமுவா? அப்ப... அவன் உன்னோட அப்பு இல்லையா...''

''ஹான்!!! ஆமா... அப்பு தான்...''

''அப்போ... அப்பு அடிச்சா ஒகேவா?''

''ம்ஹூம்! ஒகே இல்ல! பாவம் அப்பு!''

பத்மாசினியும், பிரஷாந்தும் தங்கள் ''மாமா'', ''அப்பா'' வைப் பற்றிய சண்டையில் ஆரம்பித்து, சமாதானத்தில் முடித்தனர்.

அவர்களது உரையாடலுக்கு எந்தவித இடையூறும் செய்யாமல், பார்வையாளர்களாக இருந்து கவனித்துக் கொண்டிருந்த மைவிழியும் கீர்த்தியும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டனர்.

''எல்லாரையும் நல்லா மஸ்கா போட்டுருறான் அண்ணி... உங்க தம்பி!'' என்று மைவிழி சிரிக்க.

''உனக்கு கண்ணுல மை... அவனுக்கு பேச்சில மை!'' என்று சிரித்தாள் கீர்த்தனா!

''வர வர... நீங்களும் உங்க தம்பி மாதிரியே பேச ஆரம்பிச்சிட்டீங்க...'' என்று ஒரு விரல் நீட்டி மிரட்டினாள் மைவிழி.

கீர்த்தியோ ''இது சுட பேசலைன்னா... என் பொண்ணை சமாளிக்க முடியுமா என்ன? அவ பேச்சுக்கு ஈடு கொடுக்கலைன்னாலும்... அட்லீஸ்ட் ஒரு ட்வென்டி பெர்சென்ட்டாவது பேச வேண்டாமோ?'' எனக் கூறிக் கொண்டிருக்கும் போதே.

''என்னம்மா ட்வென்டி பெர்சென்ட்?'' என்று அங்கே வந்து சேர்ந்தாள் பத்மாசினி.

''அதுவா... என்னோட மூளை... '' என்று கீர்த்தி சொல்ல.

''ஐயோ... மூளை ட்வென்டி பெர்சென்ட் தான் இருக்குமா? அவ்வூண்டு தானா? ஏன் ட்வென்டி பெர்சென்ட் தா இருக்கு? மீதி எங்க?'' என்று தன் கேள்விகளால் தாயைத் திணறடிக்கத் தொடங்கினான் பத்மாசினி.

''பாத்தியா...'' என்பது (போல் மைவிழியை ஒரு பார்வை பார்த்த கீர்த்தி) ''மீதியை உங்க மாமா எடுத்துக்கிட்டான்!'' என்றாள் பாவமாய்.

''ஹோ... மாமுவா? சூப்பர் சூப்பர்!'' என்று ஒத்துக் கொண்ட பத்மாசினியைத் தொடர்ந்து,

''ஏய்... எங்க அப்புவை மாமு சொல்லாத!'' என்ற படியே வந்த பிரஷாந்த், அவளது போனி டெயிலை இழுத்து விட்டான்.

''ப்ரஷான்... என்ன வேலை இது? அடி வேணுமா?'' என்று மைவிழி அவன் கையைப் பிடித்து இழத்து.

''ப்ரஷான்... நிஷான் சொல்லிக் கொடுத்ததை தா செஞ்சேன்... அடி போட்ட நிஷானை தா போடணும்!'' என்று கண்ணை உருட்டினான் சின்னக் கண்ணன்.

''அடிங்க!'' என்று நாக்கைத் துருத்தினாள் மைவிழி.

''வேவேவே...'' என்று அவளுக்கு அழகு காண்பித்த மைந்தன்.

''ஹே பாப் கார்ன்...வா... அப்புவைப் போய் பாக்காம்!'' என்று பத்மாசினியிடம் ரகசியம் பேசிய கையோடு, அவளை அழைத்துக் கொண்டு அடுக்களைக்குள் சென்றனர்.

அடுக்களை பக்கம் செல்லும் இரு வாண்டுகளையும் பார்த்திருந்த இரு பெண்களும், ''என்ன அண்ணி... மூணு வாலுமா சேர்ந்து அடுப்படியை ரெண்டு பண்ணிட்டு இருக்குங்களே... என்ன விஷயம்!?'' எனக் கீர்த்தியின் காதைக் கடித்தாள் மைவிழி.

''அந்த மூணு வாலுங்களோட குரங்காட்டியே நீயும் உங்க அண்ணனும் தான்! என்னை கேட்டா?'' என்று உதடு பிதுக்கி, கண் சிமிட்டினாள் கீர்த்தி.

''ஏன் அண்ணி... ஏன் இந்த குரங்குவெறி?'' என்று சிரித்த மைவிழியின் முகத்தில் பெருமிதம்.

''கொழுப்புடி உனக்கு?'' என அவள் கன்னத்தில் தட்டிய கீர்த்தனா.

உள்ளே எழுந்து போகத் துடித்த மைவிழியின் கையைப் பற்றி தடுத்தாள்.

''ஏதோ சர்ப்ரைசாம்... ப்ளீஸ் போகாதே!'' என்று கெஞ்சிய கீர்த்தியை கிண்டலாய் பார்த்த மைவிழி,

''என்னவோ... நா தான் குரங்காட்டி! எங்கண்ணா தான் சிம்பான்சி ஆட்டின்னு பேசினீங்க! இப்ப பார்த்தா... நீங்க தான் உராங்குட்டான் ஆட்டியா இருக்கீங்க?'' என்றாள் புருவத்தை உயர்த்தி.

''இப்ப... உனக்குத் தான் குரங்குவெறி ஆகிடுச்சு!'' என்று சிரித்த கீர்த்தியின் கண்களில், கையில் கூடை யுடன் அரவாமுதன் சமையற்கட்டினுள் செல்வது பட்டது.

''அப்பா... அப்பா... இன்னும் ஒரு அரை மணி நேரத்துக்கு உள்ள யாரையும் விடக் கூடாதுன்னு எனக்கு ஆர்டர்!'' என்று அவரைத் தடுத்தாள் மகள்.

''யாரோட ஆர்டர்?''

''வேற யாரு? பப்பி அண்ட் ப்ரஷான் தான்! நிஷா னுக்காக!'' என்றாள் கீர்த்தி சிரிப்புடன்.

''அதானே பார்த்தேன்... என்னடா கீர்த்து அண்ணி... கதை படிக்காம நம்மட்ட வெட்டி அரட்டை அடிச்சிட்டு இருக்காங்களேன்னு யோசிச்சேன்!'' என்று வியந்த மைவிழி.

''அப்பா... அப்போ கண்டிப்பா உள்ள போகலாம்! வாங்கப்பா!'' - அரவாமுதனின் கைகளைப் பிடித்து அழைத்துச் செல்ல.

''ஐயோ... பாவம் ம்மா... என்னமோ செய்றாங்க.. செய்யட்டும்!'' என்று போரன் - பேத்திகளுக்கு வக் காலத்து வாங்கினார் அரவாமுதன்.

''ரொம்பத் தான்...'' என்று சலித்துக் கொண்ட மைவிழிக்குப் பொறுமை பத்தவில்லை.

''என்ன என்ன என்ன'' என்று மண்டை குடைய, கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து வெளியே வந்தனர் மூன்று வாண்டுகளும்.

மூவர் முகத்திலும், அதீத கவனம் வெளிப்படை யாகவே தென்பட்டது.

''சொல்லிராத...''

''சொல்லிராத...''

''ஷ்.... நா சொல்ல மாட்டேன் பா...''

''நானும் சொல்லவே மாட்டேன்.''

''ஆமா... ஆமா... சொல்லாத! அப்புறம் எல்லாரும் அடிப்பாங்க!'' - இப்படிப்பட்ட பேச்சுக்களுடன், மூவரும் தோட்டத்து பக்கம் வெளியேற, ''என்ன அண்ணி நடக்குது இங்க?'' என்றாள் மைவிழி, குழப்பத்துடன்.

''எனக்கும் தெரியாது மைவிழி! கிச்சனுக்குள்ள யாரையும் விடக்கூடாதுங்கிறது மட்டும் தான் எனக்கு கொடுக்கப்பட்ட ஆர்டர்!'' என்று கீர்த்தி பாவமாய் சொல்ல.

''அப்படி ஆர்டர் போடுறவங்ககிட்ட... என்ன விஷ யம்ன்னு சொன்னா தான் நீங்க சொன்னதைக் கேட் பேன்னு சொல்லி விஷயத்தை வாங்க வேண்டியது தானே?'' என்றாள் மைவிழி, ஆர்வத்தை அடக்க முடி யாமல்.

"அப்படி அவங்களை மடக்கி மடக்கி கேள்வி கேட்கக் கூடாதுன்னு தான்... உன்கிட்ட அந்த ஆர்டரை போடாம... என்கிட்டே போட்டிருக்காங்க!" என்று உதடு பிதுக்கினாள்.

"ஆனாலும்.. உங்களுக்கு ரொம்ப அண்ணி!" என்று சிரித்த மைவிழி, அடுப்படிக்குள் வேகமாய் நுழைந்தாள்.

ஆனால், அங்கே எந்த தில்லு முல்லுக்குமான அடையாளம் இல்லை!

"என்னடா செஞ்சீங்க?" என்று மண்டை குடைச்சலாக இருந்தது அவளுக்கு!

சிறிது நேரம் யோசித்தவள், சட்டென மூன்று கப்களை எடுத்து, மூன்றிலும் கொஞ்சம் மாங்கோ புட்டிங்கை நிரப்பி, அவற்றை ட்ரேயில் வைத்து எடுத்துச் சென்றாள்.

வேகமாய் தோட்டத்துக்கு சென்றவள், "ஹலோ! மூணு பேரும் என்ன செய்றீங்க?" என்றபடியே அவர்களிடம் ட்ரேயை நீட்டினாள்.

"ஹைய்யா... மாங்கோ புட்டிங்?" என்று கத்திய ப்ரஷானின் கையை பிடித்து தடுத்த நிஷான்.

"ப்ரஷூ.. இது மாங்கோ புட்டிங் இல்லடா... நமக்கு விரிக்கிற வலை!" என்றான் பூடகமாய்.

"வலையா? அப்பின்னா என்ன அப்பு?" என்று ப்ரஷான் வினவ,

"நாம கிச்சென்ல என்ன செஞ்ஜோம்ன்னு தெரிஞ்சுக்க... அம்மா மாங்கோ புட்டிங் மூலமாக ஐஸ் வைக்கிராடா ப்ரஷான்! சும்மா நாளில... நாம எவ்வளவு வாட்டி

மாங்கோ புட்டிங் வேணும்... புட்டிங் வேணும்ன்னு கேட்டிருப்போம்... தந்தாளா? இப்ப மட்டும்... அவளா தரா பாரு... ஏதோ சூழ்ச்சி இருக்கு?" என்று கண்ணை உருட்டினான் நிஷாந்த்.

"அச்சச்சோ... பாட் அம்மா..." என்று வாய் மீதி கை வைத்து ஆச்சரியம் கொண்ட பிஷாந்த்.

"போம்மா... உன்னோட சூப்பி எங்களுக்கு வேணாம்..." என்று தாயின் கையைத் தட்டிவிட்டான்.

"ஹிஹி..... டேய் ப்ரஷான்..... அது சூப்பி இல்லடா சொஜ்ஜி!" என்று "சூழ்ச்சியை" இரண்டு வாண்டுகளும் கிண்டல் செய்து கொண்டிருக்க.

மைவிழியோ நிஷாந்தைப் பார்த்து முறைத்துக் கொண்டிருந்தாள்.

இரு பிள்ளைகளும் "சூழ்ச்சி" பற்றிய விவாதத்தில் இருக்க, நிஷாந்த் மனைவியிடம் நெருங்கி வந்தான்.

"ஹே ஒஜோ! என்ன முறைக்கிற? நாங்க என்ன பிளான் பண்றோம்ன்னு தெரியணுமா? அது ரொம்ப சிம்பிள்... என்னை கவனிக்கிற விதத்தில் கவனிச்சா... விஷயம் தானா வெளிய வரும்!" என்றான் மைவிழியின் உதடுகளில் கையை வைத்து அளந்தபடி.

"வேணாம் சாமி... எனக்கு சிம்பிளான வழியே வேணாம். நா அப்புறமே தெரிஞ்சுக்கிறேன்!" என்று அங்கிருந்து நகர்ந்தாள் மைவிழி.

"மசிய மாட்டியே!" என்று நிஷாந்த் சலித்துக் கொள்ள,

''ஆமா ஆமா... மஸ்கா மன்னன் பேசற பேச்சைப் பாரு!'' என்று அவனுக்கு அழகு காண்பித்தபடியே உள்ளே சென்றாள் மைவிழி.

அதன் பிறகும், மகனுக்கு உணவு கொடுக்கையில் ''டேய் ப்ரஷூ... நீ அம்மாவோட செல்லப் பையன் தானே? என்னடா சர்ப்ரைஸ் சொல்லுங்கடா...'' என்று அவள் கேட்க,

''ம்ஹூம்! நீ சூப்பி செய்றே! நா சொல்லவே மாட்டேன்!'' என்று மண்டையை ஆட்டி மறுத்தான் மகன்.

''ஆமா... சூப்பி செய்றாங்க சூப்பி! தக்காளி சூப்பி!'' என்று மைவிழி தான், தலையில் அடித்துக் கொள்ள வேண்டியதாய் இருந்தது!

வீட்டில் உள்ள வாலுகளைத் தவிர, மற்ற நால்வருமே என்ன என்ன என்று மண்டையை உடைத்துக் கொண்டிருந்தனர்.

யாருக்கேனும் பிறந்தநாளா என்றால் அதுவுமில்லை.

வருடப் பிறந்தநாளை விடுங்கள்! வீட்டுக் குழந்தைகளின் மாதப் பிறந்தநாள் கூட இல்லை! பிறகென்ன?

மைவிழி மட்டுமல்லாது கிருஷ்ணனுக்குமே என்ன விஷயம் என்று தெரியவில்லை.

அனைவரையும் குழம்ப விட்ட அந்த சஸ்பென்ஸ், இரவு ஒன்பது மணி அளவில் உடைந்தது!

ஏழு மணிக்கே ''நாங்க மூணு பேரும்... பார்க் போறோம்!'' என்று அறிவித்து விட்டு, மூணு வாலுகளும் வீட்டை விட்டு வெளியேற.

அடுப்படியையே புரட்டிப் போட்டு ஆராய்ந்தனர் அண்ணனும் தங்கையும்! ஆனால் ஒன்றும் அகப்படத் தான் இல்லை!

''ஏதாவது கேக் தான் செஞ்சிருப்பாங்க மைய்யு! அந்தக் கொடுமையை வெட்டச் சொல்லி... அதை சாப்பிட வேற சொல்லுவாங்க! அதான் கொடுமையிலும் கொடுமை!'' என்று பீதியைக் கிளப்பியபடியே வீட்டைச் சுற்றி வலை வீசினான் கிருஷ்ணன்.

நிஷாந்த் போடும் ப்ளான் டீயையே குடிக்க முடியாது என் கையில், கேக் வேறா என்று அரவாமுதனும் வீட்டை அலசினார்.

ம்ஹூம்! எலி சிக்கவில்லை! ச்சே எலிகளிடம் கேக் சிக்கவில்லை!

ஒருவழியாக, ஒன்பது மணிக்கு வீடு வந்து சேர்ந்தனர் மூவரும்.

ம்ஹூம்! மூவர் அல்ல! இரு மூவர்! அதாவது ஆறு பேர்! வந்தவர்கள் - கிருஷ்ணனின் பெற்றோர் மற்றும் சகோதர்கள்.

''ஹே அப்பா - அம்மா - ஆனந்த் வாடா...'' என்று கிருஷ்ணன் விரைய, அனைவருமே முகத்தில் திகைப்புடன் வாயிலை நோக்கிச் சென்றனர்.

''கிருஷ்ணா...'' என மகனை அணைத்துக் கொண்டார் தாயார்.

அவனது தந்தையோ ''நல்லா இருக்கியா கிருஷ்ணன்?'' என்றார் கடுமை சிறிதுமில்லாத குரலில்.

தம்பியோ, ''அண்ணா... எப்படின்னா இருக்கே?'' என்றான் பாசத்துடன்.

''நா நல்லா இருக்கேன்... நீங்க எப்படி இங்க?'' என்ற கிருஷ்ணனுக்கு, தாய் - தந்தையைக் கண்டதை விடவும், தன் தம்பியை அங்கே கண்டதில் மிகுந்த சந்தோசம்.

அதிலும், அவன் குரலில் தென்பட்ட பாசம் அவனை இளக்கியது!

வேகமாய் அவனை அணைத்தவன், ''எப்படி இருக்கே... ஆனந்த்? கொஞ்சம் மெலிஞ்ச மாதிரி இருக்கியே?'' என்றான் சகோதரப் பாசத்துடன்.

''ஹும்ம்... குட்! கொஞ்ச நாளா அம்மா சாப்பாடு இல்லையில்ல... அதான்...'' எனக் கூறிய ஆனந்த்.

''நீ ரொம்ப சூப்பரா சமைப்பியாமே... பத்மா குட்டி சொன்னா... அவங்க மாமுவுக்கு நீ செய்ற வெங்காய தோசை தான் பிடிக்குமாம்... அவளுக்கு காரட் அல்வா தான் பிடிக்குமாம்'' என்றான் பெரமை பொங்க.

அப்போது தான் நினைவு வந்தவனாய், ''நீங்க எப்படி இங்க? நிஷாந்த் வேலையா?'' என்றான் கிருஷ்ணன், திகைப்புடன்.

''ஆமா... கிருஷ்ணா! உங்கம்மாவுக்கு... உன்னையும் உன் குடும்பத்தையும் பார்க்கணும்ன்னு ரொம்ப ஆசை... ஆனா... நாங்க சின்ன வயசில பண்ணின தப்பை மனசில வச்சிட்டு... கொஞ்சம் தயங்கினே! அதை நாங்க தப்பு சொல்லலை! உன்னோட நிலைமையில வேற யாரும் இருந்திருந்தா எங்ககிட்ட பேசியிருக்கவே மாட்டாங்க!''

என்றார் கிருஷ்ணனின் தந்தை, நிஜத்தை உணர்த்தும் வலி மிகுந்த குரலில்.

''அப்பா... அது வந்து...'' என்று கிருஷ்ணன் தயங்க,

''ஷ்... என்ன இது... ஒரே ஓவர் செண்டியா இருக்கு? எங்க கீர்த்து பேபி எந்தப் பக்கம் பேசுறதுன்னு தெரியாம ஞேன்னு முழிக்குது இல்ல... சீனைப் பாக் பண்ணுங்க! போய் சாப்பிடலாம்!'' என்று அங்கே அரங்கேறிய பாசப் பிணைப்பை சமூகமாக்கினான்.

''டேய் நிஷான்... தேங்க்ஸ்டா...'' என்று கிருஷ்ணன் அவன் கையைப் பிடிக்க,

''ஹே குரு! எதுனாலும்... பேச்சு பேச்சா இருக்கணும்! கையைப் பிடிக்கிற சாக்கில முறுக்கி விட்டுற போறீங்க!'' என நிஷாந்த் அலற,

அங்கே ஓர் சிரிப்பலை எழுந்து அடங்கியது!

''அண்ணன் என்ன முறுக்கிறது? நானே முறுக்கிறேன்! இவங்க வராது தான் சர்ப்ரைஸ்ன்னா... எதுக்கு கிட்சென்ல மூணு மணி நேரம் கும்மாளம் போட்டீங்க... என்று மைவிழி இடுப்பில் கை வைத்து முறைக்க.

''உங்களை சுத்த விடத் தான்!'' என்றனர் மூவரும் கோரசாய்.

''அடிங்க!'' என்று மைவிழி துரத்த.

''வீடு ஒரே யக்கியா இருந்துச்சு அத்தை... அதான் கிளீன் பண்ண வைக்கலாம்ன்னு பிளான் பண்ணோம்!'' என்று அவளுக்கு அழகு காண்பித்தாள் பத்மாசினி!

ப்ரஷாந்தோ ஒரு படி மேலே போய், ''அம்மா... என் னோட ஷெல்ப்ல... த்ரீ டேஸ் முன்னாடி நீ கொடுத்து விட்ட இட்லி இருக்கு... அது நல்லாவே இல்லை... அதை கண்டுபிடிச்சு கிளீன் பண்ணிட்டியா?'' என்று கேட்க.

''இவன் அடி வாங்காம தப்பிக்கப் போறதில்லை!'' என்று அறிவித்த நிஷாந்த், இரு குழந்தைகளையும் கையில் தூக்கிக் கொண்டு ஓட்டம் எடுத்தான்!

மைவிழியும் தன் வாழ்வின் செல்வங்களைத் துரத்திக் கொண்டு ஓடினாள்! சந்தோஷமாய்!

பூங்காவனத்தில் பூக்கும் மலர்கள் எப்போதும் மாலையாவது உண்டு! ஆனால், பாலைவனத்தில் மலரும் பூக்கள் மாலையாகி, சூடப் படுவது அரிதே! பாலைவன மலர்களை கோடியில் ஒருவரே சூடுவர்! இந்தப் பூச்சரம் என்னும் வாடா ரோஜா மலர்ச்சரம்!